கணபதி துணை

திருவெண்ணெயநல்லூர்

# மெய்கண்டதேவர்

அருளிச்செய்த

# சிவஞானபோதமும்,

வார்த்திகமென்னும் பொழிப்புரையும்

---

இவை,

திருவாவடுதுறைச்

## சிவஞானசுவாமிகள்

அருளிச்செய்த சிற்றுரையோடு,

யாழ்ப்பாணத்து நல்லூர்

## ஆறுமுகநாவலரவர்களால்

பரிசோதித்து,

மேற்படியூர்

சதாசிவப்பிள்ளையால்

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டன

இதன்விலை ரூபா - கவு

பார்த்திவ௵ வைகாசி

(Copyright Reserved.)

# ஞானக்கொத்து.

## முதற்சூத்திரம்.

க—சகம் பிறப்பிறுப்பிறப்பாகிய முத்தொழிலையுடையது

உ—அது அரனாலே உடையது

ங—மற்றிருவரும் முத்தொழிற்படுவோர்கள்.

## இரண்டாஞ்சூத்திரம்.

க—அரன் உயிர்களின் இரண்டற நிற்பன்

உ—உயிர்களுக்குக் கன்மபலனை அரனே கொடுப்பன்

ங—உயிர்கள் அச்சு மாறியே பிறக்கும்

ச—அரன் சருவ வியாபகன்

## மூன்றாஞ்சூத்திரம்.

க.—இல்லையென்கிற அறிவுடனே சொல்லுகையினாலே அறிவுயிர் உண்டு.

உ—எனது உடல் என்று பொருட்பிறிதினக்கிழமையாகச் சொல்லுகையினாலே, உடற்கு வேறாய் உயிருண்டு.

ங.—ஐந்தையும் ஒருவனே அறிதலின்; ஒவ்வொன்றைமாத்திரம் அறிகிற ஐந்திற்கு வேறாய உயிர் உண்டு.

ச —கனவுடலை விட்டு நனவுடலே வருகையினாலே, அக்கனவுடற்கு வேறாய உயிர் உண்டு.

ரு —நித்திரையிலும் பிராணவாயுத் தொழில் பண்ணவுஞ் சரீரத்துக்குப் புசிப்புத் தொழிலும் இல்லாதபடியினாலே, பிராணவாயுவுக்கு வேறாய உயிர் உண்டு.

சா —மறந்து மறந்து நினைக்கிறபடியினாலே மறவாமல் இருக்கிற அரனுக்கு வேறாய உயிர் உண்டு

எ —எல்லாத்தத்துவங்களுக்கும் வேறு வேறு பெயர் இருக்கையினாலே, அந்தந்தத் தத்துவங்களுக்கு வேறாய உயிர் உண்டு.

## நான்காஞ்சூத்திரம்.

க —அந்தக்கரணங்களுக்கு உயிர் உடன் கூடினலன்றித் தொழில் இல்லாதபடியினாலே, அந்தக்கரணங்களுக்கு வேறாய் உயிர் உண்டு

உ —மலமறைப்பால உயிருக்கு அறிவு இல்லை.

ந —உயிர் மூன்றவத்தைப்படும்.

## ஐந்தாஞ்சூத்திரம்.

க.—உயிராலே தத்துவங்களெல்லாந் தொழில் செய்யும்.

உ.—அரனாலே உயிர்களெல்லாம் அறியும்.

## ஆறாஞ்சூத்திரம்.

க.—உயிரறிவினாலே அறியப்பட்டதெல்லாம் அழியும்.

உ.—அப்பிரமேயமாக அறியப்பட்டவனே அரன்.

## ஏழாஞ்சூத்திரம்.

க.—அரன் பாசத்தை அநுபவியான்.

உ.—பாசம் அரனை அநுபவியாது.

ங.—உயிர் அவ்வரனை அடையும், அநுபவிக்கும்.

## எட்டாஞ்சூத்திரம்.

க.—உயிருக்கு நல்லறிவு தவத்தினாலேயே வரும்.

உ.—உயிருக்குச் சற்குருவாய் வருவது அரனே.

ங.—உயிர் பஞ்சேந்திரியங்களைப் பற்றுகையினாலே தன்னையும் அறியமாட்டாது.

ச.—உயிர் பஞ்சேந்திரியங்களிலே பற்றற்றால் தன்னையும் அறியும்.

## ஒன்பதாஞ்சூத்திரம்.

க.—உயிர் அரன் ஞானத்தினாலேயே அரனைக் காணும்.

உ.—உயிர் பாசத்திலே பற்றற்றால், அரன் வெளிப்படுவன்.

ங.—பஞ்சாக்ஷரசெபம் பண்ணினால், வாசனாமலம் போம்.

## பத்தாஞ்சூத்திரம்.

க.—அரனுடன் ஒன்றாகி நில்.

உ.—உனதொழிலெல்லாம அரன் பணி என்று கொள்

## பதினொராஞ்சூத்திரம்.

க —ஞானிக்கு வருகிற விடயங்களை அரனே அநுட விபயன்.

உ.—அரனை மறவாமல் அன்பு இருந்தால் அவனிடத் திலே ஐக்கமாய்ப் போவன.

## பன்னிரண்டாஞ்சூத்திரம்.

க.—மும்மலங்களையுங் களைக.

உ.—சிவஞானிகளுடனே கூடுக.

ந.—சிவஞானிகளையுஞ் சிவலிங்கத்தையுஞ் சிவனெ னவே தேறி வழிபடுக.

ச.—வழிபடாமையை ஒழிக.

ஆ சூத்திரம் கஉ -க்குச் சூர்ணிக்கொத்து. கக.

முற்றுப்பெறறது.

# சூசிபத்திரம்.

| | பக்கம் |
|---|---|
| பாயிரம் ... | க |
| கடவுள்வணக்கம் ... | சு |
| அவையடக்கம் ... | எ |

## க. பொதுவியல்பு.

### க. பிரமாணவியல்


| | |
|---|---|
| முதற்சூத்திரம் ... | கக |
| முதலதிகரணம் ... | கச |
| இரண்டாமதிகரணம் ... | கஎ |
| மூன்றாமதிகரணம் ... | உகூ |
| இரண்டாஞ்சூத்திரம் ... | ௩க |
| முதலதிகரணம் ... | ௩௩ |
| இரண்டாமதிகரணம் ... | ச௦ |
| மூன்றாமதிகரணம் ... | சஎ |
| நான்காமதிகரணம் ... | ருச |
| மூன்றாஞ்சூத்திரம் ... | சு௦ |
| முதலதிகரணம் ... | சுக |
| இரண்டாமதிகரணம் ... | சுச |
| மூன்றாமதிகரணம் ... | சுஎ |
| நான்காமதிகரணம் ... | சுகூ |
| ஐந்தாமதிகரணம் ... | எக |
| ஆறாமதிகரணம் ... | எரு |
| ஏழாமதிகரணம் ... | எஅ |


### உ. இலக்கணவியல்.


| | |
|---|---|
| நான்காஞ்சூத்திரம் ... | அஉ |
| முதலதிகரணம் ... | அரு |

| | |
|---|---|
| இரண்டாமதிகரணம ... ... ... | ௯ |
| மூன்றாமதிகரணம் ... ... ... | ௯௬ |
| ஐந்தாஞ்சூத்திரம் ... ... ... ... | ௧௦ |
| முதலதிகரணம ... ... ... | ௧௦௪ |
| இரண்டாமதிகரணம ... ... ... | ௧௦ |
| ஆறாஞ்சூத்திரம ... | ௧௧ |
| முதலதிகரணம் ... ... ... | ௧௧ |
| இரண்டாமதிகரணம் ... ... ... | ௧௨ |


## ௨. சிறப்பியல்பு.

### ௩. சாதனவியல்.


| | |
|---|---|
| ஏழாஞ்சூத்திரம ... ... ... ... | ௧௩ |
| முதலதிகரணம் ... ... ... | ௧௩௫ |
| இரண்டாமதிகரணம ... ... | ௧௩ |
| மூன்றாமதிகரணம ... ... ... | ௧௪ |
| எட்டாஞ்சூத்திரம ... ... ... ... | ௧௪௧ |
| முதலதிகரணம ... ... ... | ௧௫௨ |
| இரண்டாமதிகரணம ... ... ... | ௧௫ |
| மூன்றாமதிகரணம் ... ... ... | ௧௬௩ |
| நான்காமதிகரணம ... ... | ௧௬௧ |
| ஒன்பதாஞ்சூத்திரம் ... ... ... | ௧௭௨ |
| முதலதிகரணம் ... ... ... ... | ௧௭௫ |
| இரண்டாமதிகரணம் ... ... | ௧௭௧ |
| மூன்றாமதிகரணம ... ... ... | ௧௮௫ |


### ௪. பயனியல்.


| | |
|---|---|
| பத்தாஞ்சூத்திரம் ... ... ... ... | ௧௯ |
| முதலதிகரணம் ... ... ... | ௧௯௧ |
| இரண்டாமதிகரணம் ... ... ... | ௨௦௨ |

பதினொராஞ்சூத்திரம் ... ... ... ௨௧௧
முதலதிகரணம ... ... ... ... ௨௧௭
இரண்டாமதிகரணம் ... ... ... ௨௨௩
பன்னிரண்டாஞ்சூத்திரம் ... ... ... ௨௩௧
முதலதிகரணம் ... ... ... ௨௩௩
இரண்டாமதிகரணம் ... ... ... ௨௩௬
மூன்றாமதிகரணம் ... ... ... ௨௩௯
நாலகாமதிகரணம ... ... ... ௨௪௩

ஆ சூத்திரம் ௧௨ - க்கு அதிகரணம் ௩௯.

## வெண்பாத்தொகை.

அவையடக்கம் ... ... ... ௧
முதற்சூத்திரம் ... ... ... ௫
இரண்டாஞ்சூத்திரம் ... ... ௧௦
மூன்றாஞ்சூத்திரம் ... ... ... ௭
நான்காஞ்சூத்திரம் ... ... ௭
ஐந்தாஞ்சூத்திரம் ... ... ... ௪
ஆறாஞ்சூத்திரம் ... ... ... ௬
ஏழாஞ்சூத்திரம் ... ... ... ௫
எட்டாஞ்சூத்திரம் ... ... ... ௯
ஒன்பதாஞ்சூத்திரம் ... ... ௮
பத்தாஞ்சூத்திரம் ... ... ... ௬
பதினொராஞ்சூத்திரம் ... ... ௬
பன்னிரண்டாஞ்சூத்திரம் ... ... ௮

ஆ திருவெண்பா ௮௨.

உ

கணபதி துணை.

# சிவஞானபோதம்

## மூலமுஞ் சிற்றுரையும்.

---

## பாயிரம்.

சைவாகமங்களினுள்ளவாகிய நாற்பாதங்களுள் வைத்து ஞானபாதத்தோதிய பொருள்களை யாராயும் ஆராய்ச்சி இந்நூலின்கணெடுத்துக்கொள்ளப்பட்டது. இது கேட்டலுறுவார்க்கு இதனாற்போந்த பயன் யாதோவெனவும், இது கேட்டற்குரியார் யாவரெனவும், இதனானுதலப்படும் பொருள் யாதெனவும், இதனைப் பயப்பிக்குங் கருவியாய இதற்குமுன் ஒருதலையானுணாதற்பால தியாதெனவும், இதனை வழங்குதற்கிட்ட பெயர் யாதெனவும், இஃதியாண்டு வழங்குவதெனவும், இதன் முதனூல் யாதெனவும், இந்நூல் செய்தார் யாவரெனவும், பலவாற்றானுஞ்சங்கை நிகழுமன்றே; அவ்வாசங்கை நீங்கி மனவெழுச்சி சேறற்பொருட்டு இந்நூன்முகத்துரைக்கப்படுவதாகிய சிறப்புப்பாயிரம்:—

மலர்தலை யுலகின் மாயிருந் துமியப
பலர்புகழ் ஞாயிறு படரி னல்லதைக்
காண்டல் செல்லாக் கண்போ லீண்டிய
பெரும்பெயர்க் கடவுளிற கண்டுகண் ணிருடீர்ந
தருந்துயர்க் குரம்பையி னான்மா நாடி
மயர்வற நந்தி முனிகணத் தளித்த
வுயர்சிவ ஞான போத முரைத்தோன்
பெண்ணைப் புனல்சூழ் வெண்ணைச் சுவேதவனன்
பொய்கண் டகன்ற மெய்கண்ட தேவன
பவநனி வன்பகை கடந்த
தவரடி புனைந்த தலைமை யோனே.

என வரும்.

இ-ள். மலர் தலை உலகின் மா இருள் துமியப் பலர் புகழ் ஞாயிறு படரின் அல்லதைக் காண்டல் செல்லாக் கண் போல். எ-து. விரிந்தவிடத்தையுடைய ஞாலத்தின்கண்ணே துன்னிய பெரிய புறவிருள் கெடும்படி பலசமயத்தாராலும் புகழப்படுகின்ற பரிதியங்கடவுள் உதயகிரியினின்றும் போந்தாலன்றிக் காட்சியெய்தமாட்டாத கண்ணொளிபோல,— அருந்துயர்க் குரம்பையின் ஆன்மா நாடி. எ-து. பொறுத்தற்கரிய துயரங்களுக்கெல்லாம் ஒருநிலைக்களமாய்ச் சத்ததாதுக்களாற்பொதிந்த குரம்பையாகிய காணப்பட்ட உடம்பானே காணப்படாத ஆன்மாவையும் பரமான்மாவையும் அனுமானவளவையான் வைத்தாராய்ந்து அவற்றது தடத்தலக்கணமெய்ப்படும் பொதுவியல்புணர்ந்து,—கண் இருள் தீர்ந்து. எ-து. அவ்வுணர்ச்சியானே கருதியுணரப்படும் அகவிருளாகிய ஆணவத்தினின்று நீங்கி,—ஈண்டிய பெரும் பெயர்க் கடவுளிற் டு. எ-து. அது நீங்கிய வழி எல்லாநூல்களுந் தன்பொரு

ளேயாகத் திரண்டு கூடிய பெரும்பெயரெனப்படும் ஒருவார்த்தையாகிய மகாவாக்கியத்தான் எடுத்தோதப்படும் முதற்கடவுளது திருவருளானே அப்பொருள்களது சொரூபலக்கணமெனப்படுஞ் சிறப்பியல்பை அநுபூதியிற் கண்டுணர்ந்து,—மயர்வு அற. எ-து. இம்முறையானே மயக்கவாசனையற்றுச் சிவாநுபவம் பெறுதற்பொருட்டு,—நந்தி முனி கணத்து அளித்த. எ-து. சீகண்டதேவர்பாற் கேட்டருளிய நந்திபெருமான் சனற்குமாரமுனிவன் முதலிய முனிவர்கணங்கட்கு முறையானே அளித்தருளப்பட்ட,—உயர் சிவஞானபோதம். எ-து சரியை முதலிய மூன்று பாதப்பொருள்களை ஆராயுநூல்களின் மேற்பட்ட சிவஞானபோதமென்னும் வடநூலை,—உரைத்தோன் எ-து. மொழிபெயர்த்துக் கூறி வார்த்திகமெனப்படும் பொழிப்புரை செய்தோன்—பெண்ணைப் புனல் சூழ் வெண்ணைச் சுவேதவனன். எ-து பெண்ணையாற்றுநீராலே சூழப்பட்ட திருவெண்ணெய்நல்லூரின் அவதரித்தருளிய சுவேதவனப்பெருமாளென்னும் பிள்ளைத்திருநாமமுடையான்—பொய் கண்டு அகன்ற மெய்கண்டதேவன் எ-து. பொய்ச்சமயங்களின் பொருள் இதுவிதுவென்று கண்டு கழிபித்த காரணத்தாற் பெற்ற மெய்கண்டதேவனென்னுஞ் சிறப்புத்திருநாமமுடையான்—பவம் நனி வன்பகை கடந்த தவர் அடி புனைந்த தலைமையோன், எ-து பிறவியாகிய மிக்க வலிய பகையினை வென்ற தவத்தோர் தமது திருவடியைப் புனைந்துகோடற்கேதுவாகிய தலைமைப்பாட்டினையுடையோன் என்றவாறு.

படரிற் காண்டல்செல்லுங் கண்ணென்றற்பாலதனை எதிர்மறைமுகத்தாற் கூறினார், இன்றியமையாமை விளக்குதற்கு. இப்பொருள்பற்றிக் கண்மேல வைத்துக் கூறினரேனும,

உவமேயப்பொருட்கேற்பக காண்டல்சேறற்குப் படர்ந்த ஞாயிறுபோலெனபது கருத்தாகக் கொள்க.

இருட்கேட்டிற்கும் நிருவிகற்பஞ் சவிகற்பமென்னும இருவகைக்காட்சிக்கும ஞாயிறு இனறியமையாச் சிறப்பிற் றாயவாறுபோல, மலத்திரவிற்கும் ஆராயச்சி அநுபூதியென னும் இருவகையுணர்விற்கும் இனறியமையாச சிறப்பிற்றா யது இநநூலென்பார், தமியப படரினலலதைக் காண்டல செலலாக கணபோ னாடித நீர்கது கணடு மயர்வறவளிதத சிவஞானபோதமென்றார்.

தலைமைபற்றி அருந்துயாக்குரமபையினென்றாரேனும், இனம்பற்றிக கரணம் புவனமுதலியனவும உடன கொள ளப்படும.

அருந்துயாக்குரம்பையி னுடப்படுவதாகிய பொதுவிய லபு முன்னாறு சூத்திரத்தானும, பெரும்பெயர்ப்பொருளிற் காணப்படுவதாகிய சிறப்பியல்பு பின்னாறுசூத்திரத்தானு மோதுப.

நாடியெனவே அநுமானவளவையானென்பதூஉம், கண டெனவே அநுபூதியிலென்பதூஉம், தாமே போதரும்.

பொதுவியல்பு அளவைமுகத்தானும் இலக்கணமுகத்தா னுங் கூறப்பட்டுக் கேட்டல சிந்தித்தல் என்னும் இருதிறத் தானுணரப்படும், சிறப்பியல்பு சாதனமுகத்தானும் பயன்மு கத்தானுங் கூறப்பட்டுக் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட் டையென்னு நான்குதிறத்தானுணரப்படும்.

இஃதென்சொல்லியவாறோவெனின்:— இவ்விருவகை யியல்பும் வேறு வேறு கூறும ஆகமங்களின் பொருளொ ருமை உணரமாட்டாது ஒரோவொன்றேபற்றி ஐக்கவாதமு தல பலதிறத்தான் வேறுபட்டுத் தம்முண்மாறுகொண்டு மயங்

குவோர்க்கு அங்ஙனமயங்காது அவற்றின்பொருளொருமையுணர்தற்கு எழுந்தது இந்நூலென்றவாறாயிற்று சிவஞானபோதமென்பதூஉம் இக்காரணத்தாற்பெற்ற பெயரென்பது வடமொழிச்சிவஞானபோதத் திறுதிச் சூத்திரத்தோதியவாறு பற்றி யுணர்க.

சரியைமுதலிய மூன்றுபாதப்பொருளை ஆராயுநூல்களாவன சோமசம்புபத்ததி முதலாயின. அந்நூல்களின் மேற்பட்ட சிவஞானபோதமெனவே, அந்நூல்களுணர்ந்தபின்னர் இந்நூல் கேட்கற்பாற்றென்பது பெறப்பட்டது; படவே, முன்னர்த் தீக்கையுற்றுச் சிவாகமங்களையோதி அதனபின்னர்ச் சரியாபாதமுதலியவற்றை ஆராயுநூல்களை முறையே கேட்டு அவ்வாறொழுகி மனந்தூயராய் நித்தியாநித்தியவுணர்வு தோன்றிப் பிறவிக்கஞ்சி வீடுபேற்றின் அவாமிகவுடையராய் வந்த அதிகாரிகளுக்கு இந்நூலுணர்த்துகவென்பது போந்ததெனக் கொள்க.

உயர் சிவஞானபோதமெனவே யாப்பும், கேட்போரும், முதலிய பொருளும், நூற்பெயரும், நாடித் தேர்ந்து கண்டு மயாவறவெனவே முதலிய பொருளினவகையும், பயனும், நந்தி முனிகணத்தளித்தவெனவே வழியும், வெண்ணெய்ச்சுவேதவனன் மெய்கண்டதேவனெனவே ஆக்கியோன் பெயரும், தமிழ் வழங்குநிலமே இந்நூல் வழங்குநிலமென எல்லையும் போந்தவாறுணர்க. வடநூலார் யாப்பை ஆனந்தரியமென்றும், முதலிய பொருளை விடயமென்றும், கேட்போரை அதிகாரிகளென்றும், பயனைப் பிரயோசனமென்றுங் கூறுப. யாப்புச் சம்பந்தமென்பாருமுளர்.

பாயிரமுடிந்தது.

திருச்சிற்றம்பலம்.

# கடவுள் வணக்கம்.

காமிகமுதலிய சைவாகமங்களுண் ஞானபாதத்தினுளதாகிய ஆசங்கை நீக்கி அவற்றின் பொருளுண்மை பொதுவியல்பு சிறப்பியல்பென்று இருவேறுவகைப்படுத்துக் காட்டிப் போதித்தற்கு இரௌரவாகமத்தினெழுந்த சிவஞானபோதநூலினைத் தமிழுலகமுய்தற்பொருட்டு மொழிபெயர்த்துச் செய்து பொழிப்புரைப்பானெடுத்துக்கொண்ட வாசிரியா, சாக்கிரததே அதீதத்தைதைப் புரியுந்தமக்கு இடையூறு சிறிதுமணுகாமை அறிந்தாராயினும், ஆன்றோராசாரம் பாதுகாத்தற்பொருட்டும், மாணாக்கர்க்கறிவுறுத்தற்பொருட்டுமே, முதற்கண் இடையூறு நீக்குதற்குரிய விநாயககடவுளை வாழ்த்துவதாகிய மங்கலவாழ்த்துக் கூறுகின்றார்.

கலலா னிழன்மலை
வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர்
நலலார் புனைவரே.

இ - ள். கல்லால் நிழல். எ-து. அருள்வடிவாகிய கல்லானிழலின்கண்ணே எழுந்தருளியிருந்து—மலைவு இல்லார். எ-து நந்திபெருமானுக்கு இந்நூலான் மலைவு தீர்த்தருளிய முதலாசிரியர்—அருளிய எ-து. மேன்மேற் கருணைகூர்ந்தருளுதற்பொருட்டு,—பொல்லார் இணை மலர். எ-து. பொல்லாதவிள்ளையாருடைய ஞானசத்தி கிரியாசத்தியென்னும் இரண்டு திருவடித்தாமரைகளை—நல்லார். எ-து. கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த மெய்யன்பர்—புனைவரே. எ-து. தம்முடைய ஞானசத்தி கிரியாசத்திகட்கு வியாபகமாகக் கொண்டு நாடலைபோல் அடங்கி நிற்பர். எ - று.

* நல்லார் புனைவரெனவே, ஏனையோர்க்கு அது கூடா தென்றவாறாயிற்று.

** மூவகைவாழ்த்துள் இது பொருளியல்புரைத்ததெனக் கொள்க.

அருளியவென்பது செய்யியவென்னும் வாய்பாட்டுவி னையெச்சம். அது புனைவரென்னும் பிறவினை கொண்டது.

இல்லார் இல்லாகச் செய்தாரெனப் பணபடியிற பிறந்த வினைப்பெயர்.

அருளிய பொல்லாரெனப் பெயரெச்சமுடிபாக வைத்து ரைப்பினுமமையும்.

மலைவில்லாரருளப் பொல்லார்தாள் புனைவரெனவே, அவ்விருவருந் தம்முள வேற்றுமையின்மை பெற்றாம். உலக த்துப் புதல்வர்கண்மாட்டுச் செய்யும் வழிபாடு தந்தையாக்குக் களிபேருவகை பயப்பிக்குமாகலின், அந்நயம் பற்றி அங்ஙன ங்கூறியதூஉமாம்.

திருச்சிற்றம்பலம்.

## அவையடக்கம்.

தமமை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வா
ரெம்மை யுடைமை யெமையிகழா—தம்மை
யுணரா ருணரா ருடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்.

இஃது அவையடக்கங் கூறுமுகத்தானே நன்டெடுத் துக்கொண்ட சித்தாந்தசைவத்தினுயர்வும் ஏனைச்சமயத்தார்க ளிழிபுங் கூறுகின்றது. இ - ள். தம்மை உணர்ந்து தமை

உடைய தன் உணர்வார். எ-து. உடைப்பொருளாகிய தம்மியல்பினை உணர்ந்து தம்மையுடையானாகிய தலைவனையுணருஞ் சித்தாந்தசைவர்—எம்மை உடைமை எமை இகழார். எ-து. தமக்குடைப்பொருளாகிய எம்மையுடையராகலின் எம்மைக் குற்றங்கணீக்கிக் குணங்கொண்டு கோதாட்டுவதன்றி இகழ்தல்செய்யார், ஆகலான் எம்மாற் செய்யப்படுநூலையும் அவ்வாறு கைக்கொள்வர்.—தம்மை உணரார் உணரார். எ-து. அங்ஙனந் தம்மை யுணராதார் தம்மையுடையானாகிய தலைவனையுமுணரார் ஆகலான்—உடங்கு இயைந்து தமமிற் புணராமை. எ-து. அவர் ஒருங்கே குழீஇக்கொண்டு தமமிறனுமே சேராது முரணுதலால,—புறன் கேளாம். எ-து. அவர் எம்மையும் எம்மாறசெய்யப்படுநூலையும் இகழ்ந்துரைகருமொழியை யாம் பொருளாகக் கொள்ளாம். எ - று.

ஆகலான் எம்மாற்செய்யப்படுநூலையும் அவ்வாறு கைக்கொள்வரென்பது குறிப்பெச்சம்.

தன்னையென்னும் இரண்டனுருபு விகாரத்தாற்றொக்கது

உடைமை புணராமை என்புழி இன்னுருபு விரித்துரைக்க.

தம்மையுணராரெனப் பொதுப்படக் கூறுதலானே, தாமொருபொருளுண்டென்பதே உணராத உலோகாயதரும, தம்மைக் குணிப்பொருளென்றுணராத புத்தர் சாங்கியமாயாவாதிகளும், தம்மை முதல்வனுக்கு உடைப்பொருளென்றுணராத ஏனைச்சமயத்தாரும் அடங்குவர். பாஞ்சராத்திரிகளும் சிவாத்துவிதசைவரும், தம்மை உடைப்பொருளெனக்கொள்ளினும், அவருட் பாஞ்சராத்திரிகள் உடைப்பொருளாகிய தமக்கு அணுப்பரிமாணங்கோடலானும், உடையானுக்குப்

பரிணாமங்கூறுதலானும், உடையானல்லாதானை உடையானென்ன மயங்கிக்கோடலானும், சிவாத்துவிதசைவர் உடையானது சிற்சத்திக்குப் பரிணாமங்கூறுதலானும், பிறவாற்றானும், அவருந் தம்மை உணராரேயென்பது.

புறன் புறச்சமயம்பற்றி இகழ்ந்துரைக்குமொழியும் புறங்கூற்றுமொழியுமென்பது இரட்டுறமொழிதலென்னுமுத்தியாற் கொள்க. புறங்கூற்றுமொழியாவது முகங்கூற்றுப் புறச்சமயங்களின் வேறான பாடாணவாதசைவர் முதலியோர் முன்னன்றிப் புறத்தே இகழ்ந்து கூறுமொழியென்க.

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

# பொதுவியல்பு.

## பிரமாணவியல்.

## முதற்சூத்திரம்.

ஈண்டு ஆசிரியர், முதனூலிற் கூறியவாறே சிவாகமங்களின்ஞானபாதப்பொருளெல்லாவற்றையும் பொது உண்மையென்று இரண்டாகத்தொகுத்து, பிரமாணவியல் இலக்கணவியல் சாதனவியல் பயனியலென நான்குவகைப்படுத்து, பிரமாணவியல் மூன்றுபாதத்தாற் கூறுவான்றொடங்கி, முதற்கண் உலகிற்கு முதற்கடவுள் சிறப்புவகையானுண்டென்னும் ஆகமப்பிரமாணத்தை வலியுறுத்துவதாய அநுமானப்பிரமாணங் கூறுகின்றார்

அவனவ ளதுவெனு மவைமூ வினைமையிற்
றோற்றிய திதியே யொடுங்கிமலத் துளதா
மந்த மாதி யென்மனார் புலவர்.

எ-து சூ-ம். எ-னின். சங்காரகாரணனாயுள்ள முதலையே முதலாகவுடைத்து இவ்வுலகம் என்பதுணர்த்துதனுதலிற்று.

இது சூத்திரக்கருத்துரைக்கின்றது. இ-ள் நிவிர்த்தி கலை முதலிய பஞ்சகலைகளுட்பட்ட ஐவகைச்சங்காரத்துள்

இறுதிக்கண்ணதாகிய மாசங்காரத்தைச் செய்யும் வினைமுதலாயுள்ள முதலவனையே தனக்கு முதற்கடவுளாக வுடைத்து அவனவளதுவென்று இவ்வாறு சுட்டியுணரப்படுவதாய உலகம் என வேதாகமங்களுட் கூறப்படுவதனை அநுமானவளவையானுணர்த்துதலைக் கருதிற்று இச்சூத்திரம் எ - று.

ஏகாரம், இயைபின்மை நீக்குதற்கும், பிறிதினியைபு நீக்குதற்கும் பொதுவாய்நின்ற பிரிநிலை.

இதன்பொழிப்பு உரைத்துக்கொள்க

இஃது இவ்வுரைமுகத்துக் கேட்போரால் உரைவகைபற்றிச் செய்துகோடற்பாலதொன்றனை அறிவுறுத்துகின்றது. இ - ள். இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு முன்னாக் கண்ணழித்துரைக்கும் பொழிப்புரைபற்றி உரைத்துக்கொள்க எ - று.

எனவே, இங்ஙனம் இருவகைப்படும் பொழிப்புரையுட் கண்ணழித்துக் கடாவிடைகளானுரைக்கும் வார்த்திகமாய பொழிப்புரைமாத்திரையே யாமீண்டுரைக்கின்றாம்; பிண்டமாகக் கொண்டுரைப்பதாய பொழிப்புரை இதுபற்றி யுணர்ந்துகோடல் எளிதாகலின், அஃதியாமுரைக்கின்றிலம் என உரைமுகத்து மாணாக்கர்க்கு அறிவுறுத்தவாறாயிற்று.

இஃது, ஏனைச்சூத்திரங்களினும் உய்த்துக்கொண்டுணர்தற்பொருட்டு, முதற்கண் வைக்கப்பட்டது.

இவ்வாறு ஆசிரியர் ஆணைதந்தமையின், கண்ணழித்துரைபற்றிச் சூத்திரத்திற்குப் பதப்பொருள் கூறுதும். அவன் அவள் அது எனும் அவை-புலவர். எ-து. அவனென்றும் அவளென்றும் அதுவென்றும் இவ்வாறு பகுத்துப் பலவாயச் சுட்டியுணரப்படுஞ் சொல்லும் பொருளுமாய இருகூற்றுப் பிரப

ஞசுத்தொகுதி, தோற்றம் நிலை இறுதியென்னும் முத்தொழி லுடைமையால், ஒருவனுற் றோற்றப்பட்டதாய உள்பொருளேயாம். அது, தோன்றுங்கால், தானொடுங்குதற்கு ஏதுவாய நின்ற கடவுளினின்றும், சகசமலநீங்காமையால், அது நீங்குதற்பொருட்டு மீளத் தோன்றுவதாம். இவ்வாறாகலின், சங்காரத்தொழிலைச்செய்யுங் கடவுளே உலகிற்கு முதற்கடவுள், ஏனையோர் அன்னரல்லர் என்கக் கூறுவர் அளவைநூலுணர்ந்தோர் எ-று.

அவை தொகுதி, சுட்டுப்பெயரெனக்கொள்ளின், உளவெனப் பிரித்துப், பயனிலையாக்கித், தாமென்பதனை அசைநிலையாக வைத்துரைத்து, ஆக்கச்சொல் வருவித்துக்கொள்க

வினைமை வினையுடைமை.

தோன்றியவென்றது தோற்றியவெனப் பிறவினைவாய் பாட்டாளேறுதலின், அதற்குரிய வினைமுதல் அவாய்நிலையான் வந்தது. தோற்றியவென்னும் பெயரெச்சந் திதியென்னுஞ் செயப்படுபொருட்பெயர் கொண்டது. திதியா யொருவனுற் றோற்றப்பட்டதென்பார் தோற்றிய திதியென்றார். திதியென்றது ஈண்டு உள்பொருளென்னுந் துணையாய் நின்றது

மூவினையுடைமையால் உள்பொருளாதலும், அவ்விரண்டுமுடைமையால் நிமித்தகாரணனையுடைத்தாதலுந் துணியப்படுமென்பார், மூவினைமையிற் றோற்றிய திதியென்றார்

ஏகாரந் தேற்றம். ஒடுங்கியென்பது பெயர் உருபுகள் தொக்குநின்றன.

அந்தத்தைச்செய்யுங் கடவுளை அந்தமென்றது உபசாரம்

காணப்பட்டவுலகாற் காணப்படாத கடவுட்குண்மை கூறவேண்டுதலின், தோற்றிய திதியேயெனவும், ஒடுங்கியுளதா

மெனவும், உலகின்மேல்வைத்துக் கூறினார். கருத்துரையுட் கூறியதும் அது நோக்கி.

இச்சூத்திரத்துள் அவனவளதுவெனு மவை மூவினைமையின் என்பது ஓரதிகரணம், தோற்றிய திதியே யொடுங்கியுளதாம் என்பது மூன்றதிகரணத்தை யுள்ளடக்கி நிற்பதோரதிகரணம், அந்தமாதி யென்மனார் புலவர் என்பது ஓரதிகரணம், ஆக முக்கூற்றது இச்சூத்திரமென்றுணர்க. இம்மூன்றும் முறையே ஒன்றற்கொன் றேதுவும் பயனுமாய் ஒரு பொருண்மேல் வருதலின், ஒருசூத்திரத்தாற் கூறினார். தன்னாற் கூறப்படும் பொருளும், அதன்கணையப்பாடும், அதற்குப் பிறர் கூறும் பக்கமும், அதனை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிவும், இயைபுமென்னும் இவற்றது நிலைக்களம் ஈண்டதிகரணமெனப்படும்.

## முதலதிகரணம்.

ஈண்டு உளதாய் ஒருவன் ஒருத்தி ஒன்று என்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் உற்பத்தி திதி நாசமுடைத்து என்றது

எ-து மே-ள் எ-னின் மூவினையுடைத்தோ அன்றோ வென்னும் ஐயப்பாட்டின்கண் நித்தமாய்க் காணப்படும் பிரபஞ்சத்தை மூவினையுடைத்தென்றல் பொருந்தாது என மீமாஞ்சகரும் உலோகாயதருங் கூறுங்கடாவையாசங்கித்துச் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இ-ள். வெ-டை.

ஒருவனென்றும் ஒருத்தியென்றும் ஒன்றென்றும் இவ்வாறு அவயவப்பகுப்புடைத்தாயும் பலவேறுவகைத்தாய்ச் சடமாயுஞ் சுட்டியறியப்படுவதாயுமிருத்தலின் இம்மூன்றேதுவானும் பிரபஞ்சந்தோன்றிநின்றழியுமென்பது துணியப்ப

மென்பார், உளதாயொருவனொருத்தி யொன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்சமென உடம்பொடு புணர்த்தோதினார்.

உளதாய்ச்சுட்டப்பட்டவெனவியையும். உளதாகச் சுட்டப்படுதல் முயற்கோடு முதலியனபோலத் திரிவையங்களானன்றி மெய்யாகச் சுட்டப்படுதல்.

தோற்றமும் ஈறும் உள்ளதன்பாலே கிடத்தலின்.

எ-து ஏது எ-னின். காட்சியளவைக்கு எய்தாதுரைப்பனவெல்லாம் பிரமாணமாகாவென உலோகாயதர் கூறுங்காலை யாசங்கித்துக் காட்சியளவைபற்றியும் மேற்கோளைச் சாதித்தனுதலிற்று இ-ள் உற்பத்தியும் நாசமுங் காணப்பட்ட திதியின் பக்கத்தே காணக் கிடத்தலின் உளதாயொருவனொருத்தியொன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் உற்பத்தி திதி நாசமுடைத்து என மேற்கொண்டது எ-று

பூதாதி யீறு முதலுந் துணையாகப்
பேதாய திதியாகும் பெற்றிமையி—னோதாரே
வொன்றொன்றிற் றோன்றி யுளதா யிறக்கக்கண்டு
மன்றென்று முண்டென்ன வாய்ந்து.

எ-து உ-ம் எ-னின். உள்ளதன்பால அவ்விரண்டுங் கிடத்தல் யாங்ஙனம் என்னுங் கடாவையாசங்கித்து ஏதுவை வலியுறுத்துத னுதலிற்று இ-ள் பேதாய எ-து காட்சியளவைகளானும் அறியப்படாத மடவோனே—பூதாதி எ-து பூதமுதற்காரணமாகவுடைய பிரபஞ்சத்திற்கு—திதி ஈறும் முதலும் துணை ஆக ஆகும் எ-து. திதி, நிகழ்வழி, நாசமும் உற்பத்தியுந் தனக்குத் துணைக்காரணமாகக்கொண்டே நிகழாநிற்கும். அற்றாயினும் ஒன்று தோன்ற ஒன்று நிற்ப ஒன்றழிவதன்றி ஒருங்கே தோன்றி ஒருங்கே நின்று ஒருங்கேயழியக் கண்டிலமாலெனின்;—ஒன்று ஒன்றின்பெற்றிமையின

தோன்றி உளதாய் இறக் கண்டும். எ-து ஒவ்வொரு காலவிசேடத்திற் சாதிபற்றி ஒருங்கே தோன்றி ஒருங்கே நின்று ஒருங்கேயழிவதனைக் கண்டுவைத்தும—என்றும் அன்று உண்டு என்ன ஆய்ந்து ஓதாரோ. எ-து. என்றாயினும் அதற்குரிய காலம் வருமென்று உலகத்திறக்கும் அங்ஙனமாதலுண்டென்று அக்காட்சிபற்றி ஆராயாது சொல்லார்களோ உன்னைப் போலும் மடமையில்லாதோர். எ-று.

பூதாதி அன்மொழித்தொகை. பூதத்துக்கு மேலுள்ளவாய தத்துவங்கள் உலோகாயதருக்கு உடம்பாடன்மையின், பூதமுதலாய தத்துவங்களெனவுரைத்தல் ஈண்டைக்கேலாமையறிக.

பூதாதிகளென நான்கனுருபு விரித்துரைக்க, அது பின்னருஞ் சென்றியையும். ஆகுமென்பது முற்றுவினை.

ஈண்டுப் பெற்றிமை என்றது சாதியை.

ஓகாரம் எதிர்மறை.

ஒன்றொன்றினென்பது "ஒன்றொன்றுப் பார்த்துணர்வதுள்ளமே" என்றாற்போல அடுக்குமொழி, அது காலவிசேடமாதல் என்று மன்றெனப் பின்வருதலாற் பெறுதும்.

ஒருங்கேயென்பது சொல்லெச்சம்.

ஒன்றொன்றிற்றோன்றியுளதாயிறுதலாவது "*பயில்வித்தெல்லாம்-காரிடமதனிற் காட்டுமங்குரங் கழியும் வேனில்" என்பதனானறிக.

"கண்டும்" உம்மை சிறப்பு.

முதலதிகரண முடிந்தது.

* சிவஞானசித்தி, சுபக்கம், முதற்சூத்திரம். கூ. ஓரிடமழிய.

## இரண்டாமதிகரணம்.

இனி இல்லதற்குத் தோற்றமின்மையின் உள்ளதற்குச் செய்வோரின்றிச் செயவினையின்மையின் ஒடுங்கின சங்கார நதி னலலது உற்பத்தியில்லையென்றது என விங்ஙனஞ் சொற்பலகாமைப்பொருட்டுத் துணிந்ததாக வைத்துரைத்தாராயினும், பொருளியைபிற்கேற்ப இதனை மூன்றதிகரணமாக வைத்துரைப்பது ஆசிரியர் கருத்தெனக் கொள்க, அஃதாமாறு காட்டுதும் —

இனி உலகமுள்ளது என்றது

எ-து மே-ள். எ-னின் உலகம் இல்பொருளாய்த் தத்தரு சார்பிலே தோன்றியழிதல் இயல்பென்றலே அமைவுடைமையின், அது முவினையுடைத்தாயினும் தோற்றுவாரொருவனையுடைத்தாதல் செல்லாது எனப் புத்தநூலார் சொல்லுங் கடாவையாசங்கித்துத் திதியென்னுஞ் சூத்திரக்கூற்றைக் கணஞ்சிதத்துரைத்து மேற்கோட்டுணுதலிற்று இ-ள். வெ-டை

இல்லதற்குத் தோற்றமின்மையின்.

எ-து ஏது எ-னின். உள்ளதாதல் யாங்ஙனம் என்னுங் கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று இ-ள் இல்பொருளாகிய முயற்கோட்டிற்கு முக்காலத்துமுற்பத்தியின்மையின் ஈண்டுற்பத்தி காணப்படுதலான உலகமுள்ளது என மேற்கொண்டது எ-று

இனி உலகஞ் செயவோனையுடைத்து என்றது.

எ-து மே-ள். எ-னின். உள்பொருளெனப்பட்ட பிரபஞ்சம் தத்தமுதற்காரணத்தினின்றுந் தானே தோன்றியழியும் இதற்கொருநிமித்தகாரணமாய ஒருகருத்தா வேண்டாம் எனச் சாங்கியர்கூறுங் கடாவையாசங்கித்துத் தோற்றியவெ

ன்னுஞ் சூத்திரக்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட ணுதலிற்று இ-ள் வெ-டை.

உள்ளதற்குச் செயவோரின்றிச் செய்வினையின்மையின்

எ-து ஏது எ-னின் அதற்குப் பிரமாணமெனனை என்னுங்கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று இ-ள. மண்முதலியவற்றினுள்ளதாகிய கடமுதலிய பொருட்குக் குயவன்முதலிய செயவோரையின்றி வனைதன்முதலிய செயதொழில நிகழாமையின, உலகம இவ்வியலபிற்றாகலான் இனியிவ்வுலகஞ்செயவோனையுடைத்து என மேற்கொண்டது எ-று.

இனி ஒடுங்கின சங்காரத்தினல்லது உற்பத்தியில்லையென்றது.

எ-து. மே-ள் எ-னின். இத்துணையுங் கூறியவாற்றான உலகத்தைத் தோற்றுவிப்பான உண்டெனப்பட்ட கருத்தாத் திதிகருத்தா சிருட்டிகருத்தா முதலியோரில ஒருவனேயாதலமையும் எனப பாஞ்சராத்திரிமுதலியோர் கூறுங்கடாவை யாசங்கித்து ஒடுங்கியுள்ளதாமெனனுஞ் சூத்திரக்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடணுதலிற்று இ-ள உலகம தானொடுங்குதற்கு நிலைக்களமான சங்காரகருத்தாவினின்றன்றி உளதாகாது. எ-று.

ஒடுங்கினவென்னும் பெயரெச்சஞ் சங்காரமென்னும் இடப்பெயரொடு முடிந்தது சங்காரம ஆகுபெயர்.

அல்லதில்லை என்று எதிர்மறைமுகத்தாற்கூறியது, வினைக்கடவுளரின உளதாகாமை யாப்புறுத்தற்பொருட்டு

இதனுள் ஒடுங்கின என்பதனாற் போந்த குறிப்பேதுவைப புலப்படக்காணுமாறு.

ஆண்டு ஒடுங்குதலின்.

எ-து. ஏது எ-னின். அதற்குப் பிரமாணமென்னை என்றுங் கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று. இ-ள. யாது யாண்டொடுங்கும் அஃதத்தனினுற்பத்தியாம் மண்ணிற்குடம்போலும் என்னும் அவினுபாவத்தாற் பிரபஞ்சஞ் சங்காரகாரணனமாட்டொடுங்குதலின் மீளத் தோன்றுங்கால் ஆண்டுநின்றுந் தோன்றுதலே பொருத்தமுடைமையின் அவ்வாறு மேற்கொண்டது எ-று.

இவ்வாறு மூன்றதிகரணப்பொருளும் இதனகட்போந்தவாறும் இவ்வாறுரையாக்காற் பொருளியைபுபடாமையும் நுண்ணுணர்வாற்கண்டுகொள்க.

இலயித்த தன்னிலில யித்ததாம லத்தா
லிலயித்த வாறுளதா வேண்டும

எ-து உ-ம். எ-னின். உலகம் உள்ளதாயின் உள்ளதற்கு உண்டாகவேண்டுவதில்லையாகலாற் சற்காரியவாதம் அடாது எனப் புத்தர் கூறுங்கடாவையாசங்கித்து இல்லதற்குந்தோற்றமின்மையினென்றவேதுவை வலியுறுத்தனுதலிற்று. இ-ள இலயித்தது இலயித்த தன்னில் ஆம் எ-து உள்ளதாயினுஞ் சங்காரகாலத்தினொடுங்கிய தாகலான் அவ்வொடுங்கியவுலகம் தானொடுங்குதற்கு நிலைக்களமான சங்காரகர்த்தாவினின்றும் படைப்புக்காலத்தின் மீளவுளதாம். அன்றேல் ஒடுங்கியது ஒடுங்கியவாறே யொழியாது மீளவுண்டாக வேண்டாம். வேண்டுமோயின, முன்னொடுங்காது நிலைபெறவே யமையும்: அவ்வாறன்றி ஒடுங்கி மீளவுளதாவது எற்றுக்கெனின்,—மலத்தால். எ-து. உள்ளதாகிய உலகம் கீறும மலம் பரிபாகமாதற்பொருட்டு ஒடுங்கி ஆணவமலம் பரிபாகமாதற்பொருட்டு மீளவுமுண்டாம் அற்றேல் முன்னின்ற பிரபஞ்சம் நாசமாக வேறு தோன்றுமெனனுமில்ல அதுவே ஒடு

ஙகி நின்று மீளவுளதாமென்றறகுப் பிரமாணம என்னையெ னின,—இலயிததவாறு உளது ஆவேணடும் எ-து எஃதெ வவாறு நின்றொடுஙகிறறு அஃதவவொடுஙகியவாறே உளதா தல எலலாராலும விருமபப்படும் எ-று

எனவே அநநியமிலலையாயின் நெறகமுகாய் நீளாது நெலலாய் நீளுதறகு ஏதுவெனனையென்னுந தருககமே அத னையறிவுறுததுமெனறவாறாயிறறு சறகாரியவாதத்தினியலபு "நநதுமுதலகாரகம"* என்னும் ஞானாமிர்ததினுங காணக

இதனானே, இலலதுமுளளதுமலலாத பொருடோன்று மெனனுஞ் சூனியவாதிகளும, இலலதுமுளளதுமாய பொரு டொனறுமெனனும அநேகாநதவாதிகளும மறுககப்படட வாறறிக

இலயிநது

நநதிதியி லெனனி னழியா தவையழிவ
தநதிதிபு மாதியுமா மஙகு

எ-து உ-ம். எ-னின். இனிச சற்காரியவாததகின் அவவககாரியஙகள தததமுதறகாரணததொடுஙகுமெனவே கோடலின உலகிறகு முதற்காரணமாகிய மூலபபகுதி வாசு தேவனுருவாகலான் உலகம அவன்மாட்டொடுஙகுமென் றலே அமைவுடைததன்றி முதறகாரணத்தின வேறாய நிமித தகாரணமெனக கொணட சங்காரகருத்தாவின்மாட்டொடுங குமெனறல பொருந்தாதெனப் பாஞ்சராததிரிகள் கூறுஙக டாவை யாசஙகித்து ஒடுஙகின சஙகாரத்தின எனவும இலயி த்ததனனில எனவுங் கூறிப் போந்த குறிப்பேதுவை வலியுறு ததுதனுதலிறறு இ-ள். இலயித்தது அததிதியில எனனின எ-து உலகமொடுங்கியது அநதமூலப்பகுதிவடிவாய திதிக

---

* ஞானாமிர்தம

ருத்தாவின்கண்ணென்பையாயின்,—அவை அழியாது. எ-து. நீ அங்ஙனங்கொள்ளினும் மூலப்பகுதிக்கு மேலுள்ள புவனங்கள் அதனால் வியாபிக்கப்படாமையிற் கீழுள்ள ஏகதேசமாத்திரையே ஆண்டொடுங்குவதன்றி மாயாகாரியத்தொகுதி முழுவதும் ஆண்டொடுங்காது அற்றேல், மாயாகாரியத்தொகுதி முழுவதும் யாண்டொடுங்குவதெனின்,—அந்தியும் ஆதியும் ஆம் அங்கு அழிவது எ-து அந்தத் திதிக்கடவுளும் படைப்புக்கடவுளும் தோன்றுதற்குக் காரணமாகிய அச்சங்காரக்கடவுளிடத்தே அவ்விருவரோடுங்கூட அழிவதாம் அத்தொகுதி எ-று.

இவ்வெண்பாவினைச் "செய்யுட்க ளோசை சிதையுங்கா லீரளபு—மையப்பா டின்றி யமையுமா—மைதீரொற் றின்றியுஞ் செய்யுட் கெடினொற்றை யுண்டாக்கு—குன்றுமே லொற் றளபுங் கொள்" என்பதுபோல இரண்டதிகரணப்பொருள்படுமாறு இருதொடராக வைத்துரையாக்காற் பொருளியைபுபடாமையறிக.

இலயித்த வென்னும் பெயரெச்சம் தன்னென்னும் இ-ப்பெயரோடு முடிந்தது

இலயித்ததென்றது ஏதுப்பொருண்மையுணர்நின்ற பெயர். இலயித்ததெனச் சற்காரியவாதங் கூறவே இலயித்தவத்தையின் அவ்வக்காரியசத்தி சமூகமாய்ச் சூக்குமமாய் நிற்பதொன்றுண்டு. அதுவே முதற்காரணமெனப் பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாகிய மாயையுண்மையும் பெறப்பட்டது.

ஆவென்பது முதனிலைத்தொழிற்பெயர்: வேண்டுமெனச் செயப்படுபொருளைச் செய்ததுபோலக் கூறினார்.

அவை தொகுதி, அஃறிணைப்பன்மைப்பெயரென்பார்க்கு அழியாது அழிவதெனனும் ஒருமைகளோடியையாமையும் உத்தரமாகாமையுமுணர்க.

திதியும் ஆதியும் ஆகுபெயர். ஆமங்கு பெயரெச்சமுடிபு. இரணியகருப்பமதத்தையும் மறுத்தற்பொருட்டுப் படைப்புக்கடவுளையும் உடன்கூறினார்.

நிமித்தகாரணனாகிய முதல்வன் உலகிற்கு முதற்காரணனல்லனாயினும் முதற்காரணமாகிய மாயைக்கு ஆதாரமாய் நிற்றலின், உலகம் ஆண்டொடுங்கி ஆண்டுநின்று தோன்றுதல் அமையுமென்பது வருகின்ற வெண்பாவிற் பெறப்படும்.

வித்துண்டா மூல முளைத்தவா தாரகமா
மத்தனரு ணிற்ற லவர்வினையால்—வித்தகமாம்
வேட்டுவனா மப்புழுப்போல் வேண்டுருவைத் தானே
கூட்டானே மண்போற் குளிர்ந்து. [கொடுத்துக

எ-து உ-ம். எ-னின். உலகந் தனக்கு முதற்காரணமாகிய மாயையினொடுங்குவதன்றி நிமித்தகாரணன் ஒருவனுண்டெனக் கொள்ளினும் அவன்மாட்டொடுங்குமென்றல் பொருந்தாமையின், யாது யாண்டொடுங்கும் அஃதங்கணின்றுற்பத்தியாம் என்னும் அவிநாபாவத்தான் மாயையினொடுங்கிய உலகத்தை மாயையே தோற்றுவிக்கும் இதற்கோரிறைவன் வேண்டா எனச் சாங்கியநூலார் மதம்பற்றி நிகழுங் கடாவை யாசங்கித்து உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்மையின் என்னுமேதுவை வலியுறுத்துதனுதலிற்று. இ-ள். மண்போல் குளிர்ந்து வித்து உண்டா மூலம் முளைத்தவா தாரகம் ஆம் அத்தன் தாள் நிற்றல் அவர் வினையால் வித்தகம் ஆம். எ-து. மாயையும் உலகமும் வித்தும் அங்குரமும் போலுமாகலின் வித்துக்கு ஆதாரமாகிய நிலங் குளிர்ந்தவழி அதன்கண் வித்துள்ளதாக அதனினின்றும் அங்குரந்தோன்றியவாறுபோல மேல்வெண்பாவின் இலயித்தது என்றதனாற் பெறப்பட்ட மாயை தனக்காதாரமாய் நின்று தோற்று

விசகும் இறைவனது சத்தியின்கணுள்ளதாய் நிற்றலால் அச்சத்தி சங்கற்பித்தவழி அவரவர் வினைக்கீடாக அவ்வக்காரியங்களை அவ்வவ்வியல்பிற் பிறழாமற் பயக்குஞ் சத்தாப்பாடுடைத்தாம் அலனுழி உடைத்தன்று நிலங் குளிர்ந்தவழி அதன்கட் கிடந்தன்றி வித்து முளையைத் தோற்றுதவாறுபோலும் ஆகலான் மாயையினொடுங்கித் தோன்றிய உலகம் அதற்காதாரமாய் நின்ற இறைவன்சத்தியினொடுங்கித் தோன்றியதேயாம் எ-று.

ஆகலானென்பது முதல குறிப்பெச்சம் இது கிழங்கினின்றுந்தோன்றிய தாமரையைப் பங்கயமென்பதனோடும் மறிக. வழிநூலாசிரியர்* "உயிரவை யொடுங்கிப் பின்னு முகிப் பதெனரன்பால" எ-ம். "உலகவ னுருவிற்றோன்றி யொடுங்கிடும்" எ-ம். ஓதியதூஉம், உலகவனுருவிற்றோன்றியொடுங்குமாறு வாதுளாகமத்தில் வகுத்தோதியதூஉம் இவ்வியப்பு நோக்கியெனக. இஃதறியாதார் இனன்றோரன்னவாறறைந்து தத்தமக்கு வேண்டியவாறேயுரைப்ப.

உவமவினை பொருளினும் பொருளடை உவமையினுஞ் சென்றியையும்.

உண்டாகவெனச் சற்காரியத்தை வலியுறுத்துதல், வித்தில்வழி நிலத்தினின்றும் அங்குரந் தோன்றுதவாறுபோல மாயையில்வழிப் பிரமத்தினின்றும் உலகந்தோன்றுமெனப் பரிணாமவாதிகளையும், மாயை அநிர்வசனமென்னும் மாயாவாதிகளையும், வித்துநிலனும்போலென்றதனான் மாயை முதல்வனின் வேறுபொருளன்றென்னுஞ் சிவாத்துவிதசைவர் பாஞ்சராத்திரிகளையும், மறுத்தவாறாயிற்று.

---

* சிவஞானசித்தி, சுபக்கம், முதற்சூத்திரம். ௩உ. உயிரவை யொடுங்கிச் சஅ உலகினையிறந்து.

முதல்வன் பலவேறுவகைப்படச் சங்கற்பித்தவாறென்னை என்னுங்கடாவை யாசங்கித்து, அவர்வினையாலென்றா

விதத்தகம விசித்திரமென்றுரைப்பினுமமையும்.

அற்றேல், தன்வயத்தானன்றி வினைவயத்தாற்றோற்று விப்பான் இறைவனாகானெனின்

வேட்டுவன் ஆம அப்புழுப்போல் வேண்டு உருவைத் தான் கொடுத்துக் கூட்டானே எ-து வேட்டுவனாதலை விரும்பும் புழுவிற்கு வேட்டுவன் விரும்பிய வடிவினைக் கொடுக்குமாறுபோல இறைவனும் அவரவர் வேண்டுமுருவினைக் கொடுத்து அவ்வினைக்குத் தக்க பயன்களையுங் கூட்டுவனாகலான் அதுகொண்டு சுதந்திரத்திற்கிழுக்கென்னை. எ-று.

ஆகலான் அதுகொண்டு சுதந்திரத்திற்கிழுக்கென்னையென்பது குறிப்பெச்சம்.

போல அசை. குளிர்ந்தவழியென்பது குளிர்ந்தெனத் திரிந்து நின்றது.

நிற்றலினென்னும் ஐந்தாவது விகாரத்தாற்றொக்கது ஏகாரம் எதிர்மறை.

நோக்காது நோக்கி நொடித்தன்றே காலத்திற்
றாக்காது நின்றுளத்திற் கண்டிறைவ—னாக்காதே
கண்ட நனவுணர்விற் கண்ட கனவுணரக்
கண்டவனி லிற்றினருங் கட்டு.

எ-து. உ-ம் எ-னின். மேலையுதாரணத்திற்கூறியவாற்றான் உலகிற்கு முதற்கடவுள் உண்டெனக்கொள்ளினும் அவன் படைப்பு முதலியன தொழில் செய்வானாயின் விகாரமெய்தி அதனிற்பந்தமுறுவானென்னுமவர்மதம்பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்து ஏதுவை வலியுறுத்துதனுதலிற்று

இ - ள். இறைவன். எ-து. முதல்வன—காலததில் தாக்காது நினறு. எ-து இறபபு நிகழவு எதிாவு முதலியனவாய வேறு பட்டு எலலாததொழிலுஞசெயதுந தனககு விகாரமினறி நிற குங்காலமபோல விகாரபபடாது நின்று,—ஆககாதே கண்டு எ-து. பிரபஞசத்தைக கரணததாறபடையாது சஙகறபமாத திரத்தானே படைதது,—நோககாது நோககி நொடிதது. எ-து அவவாறே காவாது காதது அழியாதழிததலால,—இனறு ஆம கட்டு எ-து இவவமலனுககுப பநதமினறுதல்—உளததில கணடநனவு உணாவில கணட கனவு உணரக கணடவனில இறறு எ-து கறறநூற சொல்லும பொருளும் உளளத்திற் றோனறுஙகால உளளம அவறறிறறொடககுண ஞதவாறுபோலும கனவின்கட் கணடவறறைப புறதது விட யஙகளையறிநது வநத நனவுணாவினகணணே விளஙகவறிந தவன அபபொழுது அவறறிறறொடககுணஞதவாறுபோ றிததன்மைதது. எ - று.

எனவே இஃதிவவாறுகவென்றெண்ணுதலாகிய சஙகற பமாததிரையாற செயவதூஉம கரணததாறசெய்வதூஉமென வினைமுதல இருவகைப்படுமெனபதூஉம் கரணததானறிச செயயமாட்டாத குயவன் முதலியோா சங்கறபமாததிரை யாறசெய்யுமுதலவனுககு வினைமுதலாதற் பொதுமைபறறி ஒருபுடையுவமையாதலன்றி முறறுவமையாதல செல்லாமை யானும் சங்கறபமாததிரையாற செயயுஞ செய்திகருத கட்டு ணடனமுதலிய குறறஙகள் பகைபபொருளாதலானும் அவை பாணடுளவாதறகோரியைப் பினறென்பதூஉம் கூறி ஏதுவை வலியுறுததவாறு காணக.

ஆககுதல் படைத்தல், காண்டலும் அது. நோக்குதல் காத்தல. நொடிததல அழிததல, அது "நொடிததான்மலை" என்பதனுனுமறிக.

ஆக்காது போக்காது என்றமையால் நொடியாமென்பது வருவித்துரைக்கப்பட்டது. நொடித்தலாமென்பது நொடித்தெனத்திரிந்தது.

அன்றே அசை, அநாதியேயெனினுமமையும்.

இம்மூன்றும் உவமவுருபுகள்.

உளதெனினென்பதற்குச் சங்கற்பத்தாலென்றுரைப்பினுமமையும்.

இன்றுங்கட்டு என்பது "அருங்கேடன்" என்பதுபோல நின்றது.

இரண்டாமதிகரண முடிந்தது.

## மூன்றாமதிகரணம்.

இனிச் சங்காரமே முதலென்றது

எ-து மே-ள். எ-னின். 'ஒடுங்கினசங்காரத்தினல்லதுற்பத்தியில்லை' எனவே சங்காரகருத்தா உலகிற்கு முதற்கடவுளென்பது போந்ததாயினும் தேர்முதலாயின பலர் கூடிச் செய்யக் காண்டலின் அவற்றினும அதிவிசித்திரமான உலகத்திற்கு மற்றுமத்தன்மையராய முதற்கடவுளர் உண்டெனக் கோடும் என்னும் அநேகேசுரவாதிகண்முதலியோர் மதம்பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்து 'அந்தமாதி' என்னுஞ் சூத்திரக்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இ-ள் சங்காரகருத்தா ஒருவனே உலகிற்கு முதற்கடவுளென்றது எ-று.

சங்காரம ஆகுபெயர். ஏனையோர் முதல்வராகாரெனப் பிரித்தமையின் ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது.

சுட்டுணர்வாகிய பிரபஞ்சஞ்சுட்டுணர்வின்றி 'நின்ற சங்காரத்தின்வழி'யல்லது சுதந்திரமின்றி நிற்றலான.

எ-து. எது எ-னின் அதற்குப் பிரமாணமென்னையென்னுங் கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று. இ-ள். ஒன்றொன்றாய்ச் சுட்டியறிவதாகிய உருவும் அருவுமென்றிருவேறு வகைப்பட்ட பிரபஞ்சம் அவ்வாறு சுட்டியறிதலின்றி எவ்வுலகும் ஒன்றாயறிந்து நின்ற சங்காரகருத்தாவின்வழிப் பரதந்திரமாய் நிற்பதல்லது தனக்கெனச் சுதந்திரமுடைத்தாய் நிற்பதன்றாகலாற் சங்காரகாரணனொருவனே உலகிற்கு முதற்கடவுளன்றி ஏனையோர் முதற்கடவுள ரல்லரென மேற்கொண்டது. எ-று. பிரபஞ்சத்திற்குச் சுதந்திரமின்மையுஞ் சங்காரகாரணனுக்குச் சுதந்திரமுண்மையும் ஏதுமுகத்தாற் காட்டுவார் சுட்டுணர்வாகியபிரபஞ்சமெனவும் சுட்டுணர்வின்றிநின்றசங்காரமெனவுமா ரிடத்தும் உடம்பொடுபுணர்த்தோதினார். சுட்டுணர்வுடையதனைச் சுட்டுணர்வென்றது உபசாரம்.

ஈண்டுப் பிரபஞ்சமென்றது சேதனப்பிரபஞ்சத்தை, பிரிநிலையேகாரத்தான் விலக்குதற்குரியது அதுவேயாகலின்.

தோமுதலாயின பலரால்செய்யப்படினும் அப்பலரும் ஒருவனேவலவழி நின்றேசெய்ப வாகலானும், வேதத்துக் காரணவாக்கியங்களிற் சுட்டுணர்வினராகிய நாராயணன் இரணியகருப்பன் இந்திரன் அங்கி சூரியன் முதலியோரைக் காரணமென்றது குயவனைப்போல அவாந்தரகாரணமாதல்பற்றியேயாகலின் அவையெல்லாம் ஆகுபெயராற் சங்காரகாரணனாகிய முதற்கடவுளையே யுணர்த்திநிற்குமாகலானும், செய்துஞ் செய்வித்தும் எல்லாத்தொழிற்கும் வினைமுதலாய் நிற்கு முதற்கடவுள் சங்காரகருத்தாவொருவனேயென்பது கருத்து.

ஒன்றலா வொன்று ளுளதாகி நின்றவா
றொன்றலா வொன்றிலவை யீறுத—லொன்றலா

வீறே முதலதனி னீறலா வொன்றுபல
வாறே தொழும்பாகு மங்கு

எ-து. உ-ம். எ-னின். அங்ஙனமாயினும் சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் பலவாயினாற்போலச் சுட்டுணர்வின்றிநின்ற சங்காரமும் பலவுளவெனக் கோடுமே ஒன்றேயென்றற்குப் பிரமாணமென்னையென்னுங் கடாவை யாசங்கித்து ஏதுவை வலியுறுத்துதனுதலிற்று. இ-ள் அவை. எ-து. சேதனப்பிரபஞ்சத்தொகுதி—ஒன்று அலா ஒன்றால். எ-து உருவும் அருவுமென்னும் அவ்விருகூற்றுப் பிரபஞ்சத்துள் ஒன்றல்லாத ஒப்பற்ற பரம்பொருளாலே—உளது ஆகி நின்றவாறு. எ-து. சிருட்டிப்பட்டுத் திதிப்பட்டவாறே—ஒன்று அலா ஒன்றில் ஈறுதல். எ-து. அந்தப்பரம்பொருளின்கண்ணே சங்காரப்படுதலால—ஒன்று அலா ஈறே முதல் எ-து அச்சங்காரக்கடவுளொருவனே உலகிற்கு முதற்கடவுள். அற்றேல், இவ்வாறு முத்தொழிற்படுஞ்சேதனப்பிரபஞ்சம் வீடுபெற்றவழிச் சுட்டுணர்வின்றிச் சிவசமமாமென வேதத்தும் ஆகமத்தும் ஓதுதலின் அவ்வழி அவையும் முதற்கடவுளாமென்றற்கு இழுக்கென்னையெனின்,—அதனில் ஈறு அலா ஒன்று. எ-து. அப்பரம்பொருள்போல அழிவின்றி நித்தமாயுசேதனப்பிரபஞ்சம்—அங்கு. எ-து. வீடுபேற்றின்கண்ணும்—பலவாறே தொழும்பு ஆகும். எ-து. பலவாற்றானும் பரம்பொருளுக்கு அடிமையாம். எ-று.

இது சொற்பொருட்பின்வருநிலை

காரியப்பிரபஞ்சஞ் சடமாகலானும், சேதனப்பிரபஞ்சம் அவிச்சையாற் கட்டுற்றுச் சுட்டுணர்வினதாய் நிற்றலானும், இவற்றைத் தொழிற்படுத்தற்கு இவற்றின் வேறாய் ஒருமுதற்கடவுளுண்டென்பது பெற்றாம். பெறவே, பிரபஞ்சம் "விசித்திர காரியமாய்க், கீர்ணப்படுதலின் இவ்வாறு நடாத்தும் முதற்க

டவுள் முற்றுணர்வும் அளவிலாற்றலும் பேரருளுஞ் சுதந்திரமும் முதலிய நிரதிசயகுணங்களுடையனென்பதூஉம் பெறப்பட்டது. படவே, இத்தன்மையனாகிய முதற்கடவுளொருவனே அமையுமாகலின் வேறுமத்தன்மையருண்டெனக் கொள்ளின் மிகையென்னுங் குற்றமாம் அல்லதூஉம், இலக்கணத்துள் ஒருவாற்றானும் வேற்றுமையில்வழி இலக்கியம் பலவாதல் செல்லாதென்னுங் கருத்தால், ஒன்றலவொன்று என வரையறுத்தோதினார்.

ஏறே முதலென்றது முடிந்தது முடித்தல். ஏறு ஆகு பெயர்.

இறந்ததுதழீஇயவெச்சவும்மை விகாரத்தாற்றொக்கது.

பலவாருவன, இருணீங்கியவழியுங் கண்ணுக்குக் காட்சி ஞாயிற்றையின்றியமையாதவாறுபோல, மலநீங்கிய முத்திநிலையினும் ஆன்மாவுக்கு அறிவு வியஞ்சகமாய உடனின்றறிவிக்கு முதல்வனையின்றியமையாதவாறும் கண் படிகம் ஆகாயம்போலச் சார்ந்ததன்வண்ணமாயன்றி முதல்வன்போலத் தனித்துநிற்குமியல்பில்லாதவாறும் முதல்வன்போல ஐந்தொழிற்கும் வினைமுதலாமுரிமையின்றிச் சிவாநுபவமொன்றினுக்கேயுரித்தாயவாறும், சுழுவியாபகமாயினும் முதல்வனை நோக்கத் தூலவறிவாகலான் விளக்கொளியுட் கண்ணொளிபோல முதல்வனின் வியாப்பியமாயன்றி நில்லாதவாறும் முதலாயின. அற்றேல், முத்திநிலையின் ஆன்மாச் சிவமாமென்னுஞ் சுருதிக்குப் பொருளென்னையெனின், அஃது உண்மையதிகாரத்துட் பெறப்படும். இதனானே சிவசமவாதி சங்கிராந்தவாதி உற்பத்திவாதி ஆவேசவாதி மதங்களும் மறுக்கப்பட்டன.

பதியுண்மைக்குப் பிரமாணங்கூறுவார் 'மலத்துளதாம்' எனப் புனருற்பத்திக்கேதுக் கூறுமுகத்தான் மலத்துண்மைக்குப் பிரமாணமும் உடன்கூறினார். அதனை ஈண்டு வேறே

ரதிகரணமாக வைத்துரையாராயினர், அதிகரணத்திற்குரிய ஐயப்பாடு முதலியனவெல்லாஞ் சகசமலத்துணராதென அத னிலக்கணங்கூறும் வழிப் பெறப்படுதலால், ஈண்டு மிகைபட வேறோதல் வேண்டாமையின்.

இச்சூத்திரத்ததிகரணங்களாற்போந்த தொகைப்பொரு ளாவது:—தோற்றக்கேடுகளுடைமை காட்சி முதலிய அள வைகளான் அறியவாராமையிற் பிரபஞ்சம் நித்தப்பொருளே யாம் அன்றித் தோன்றியழியுமெனக் கொள்ளினும், இல் பொருள் தத்தஞ்சாதியிற்றோன்றி நின்றழிதல் இயற்கையென வமையும், செயற்கையென்றற்கு ஓரேதுவின்மையின். மற்று ள்பொருளாயின், அதுவேயமையும் இறைவன் வேண்டா, இரண்டன்பொருள்கோடல் மிகையாகலின் வேண்டுமாயி னும், மாயோன் முதலிய கடவுளரில் ஒருவனேயமையும் அவ ரையொழித்துச் சங்காரகருத்தா முதற்கடவுளென்றதற்குப் பிரமாணமென்னை! பிரமாணமுண்டாயினும், அவ்விசித்திர மாய பிரபஞ்சம் ஒருவனாற்செய்தல்கூடாமையின், மற்றும் அவ்வியல்பினராய முதற்கடவுளர் உளராதல்வேண்டுமெ என உலோகாயதர் மீமாஞ்சகர் புத்தர் சமணர் சாங்கியர் பாஞ்ச ராத்திரிகள் அநேகேசுரவாதிகள் மதம்பற்றிப் பூருவபக்கங்க ழந்தவழி அவரை மறுத்துச் சித்தாந்தஞ்செய்து முதற்கடவுள துண்மை பொதுவகையானுஞ் சிறப்புவகையானுங் கருதலள வையின் வைத்துணர்த்தியவாறென உணர்க. இவ்வாறு சூத் திரந்தோறும் உணர்ந்துரைத்துக்கொள்க.

மூன்றாமதிகரணமுடிந்தது.

முதற்சூத்திரமுடிந்தது.

திருச்சிற்றம்பலம்.

# இரண்டாஞ்சூத்திரம்.

அவையே தானே யாயிரு வினையிற்
போக்கு வரவு புரிய வாணையி
னீக்க மின்றி நிற்கு மன்றே.

எ-து சூ-ம். எ-னின். புனருற்பவம் வருமாறுணர்த்துதனுதலிற்று.

எ-து க-ரை எ-னின் சூத்திரக்கருத்துணர்த்துதனுதலிற்று இ-ள். உலகம் ஒடுங்கியினின்றும் மீளவுளதாமாற்றை வகுத்துணர்த்துமுகத்தானே துணைக்காரணமுதலியன இல்வழி இறைவன் உலகிற்கு நிமித்தகாரணனாதல் சாலுமாறு யாங்ஙனம் என்னுங்கடாவை யாசங்கித்து அவற்றுண்மைக்குப் பிரமாணமுணர்த்துதனுதலிற்று இச்சூத்திரம் எ-று.

சூத்திரவியைபும் இதனானே விளங்கும்.

ஒடுங்கியுளதாமென்றவழி ஒடுங்கியினின்றும் மீளவுளதாவது எவ்வாறென்று அவாய் நிற்றலின், அவ்வவாய்நிலைபற்றிப் புனருற்பவமே ஈண்டுக் கூறப்பட்டது.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு மேலைச்சூத்திரத்து எடுத்துக்கொண்ட சங்காரகாரணனாகிய முதல்வன் கலப்பினால் உடலின் உயிர்போல அவ்வுயிர்களேயாய்ப் பொருட்டன்மையாற் கண்ணின் அருக்கன்போல் அவற்றின் வேறுமாய், உயிர்க்கு உயிராதற்றன்மையாற் கண்ணொளியின் ஆன்மபோதம்போல உடனுமாய் நின்று, ஆணையென்னும் பரியாயப்பெயருடைய தனது சிற்சத்தியான் வரும் இருவினைகளான் அவை இறத்தல் பிறத்தல்களைப் புரியும் வண்ணம் அவ்வாணையிற்பிரிப்பின்றிச் சமவேதமாய் நிற்பன். எ-று.

அவையேதானே யாயென்பதனை இரட்டுற மொழிந்து கொண்டுரைக்க இக்கருத்தேபற்றி * "உலகெலா மாகி வேறா யுடனுமாய" என்றார் வழிநூலாசிரியரும்.

மேலைச்சூத்திரத்தின் 'அந்தமாதி' என்புழி விகாரத்தாற் றொக்க பிரிநிலையேகாரத்தான் விலக்கப்பட்டு நின்ற சேதனப்பிரபஞ்சத்தை ஈண்டு அவையெனச் சுட்டிக்கூறினா

'ஒடுங்கியுளதாம்' என்றதற்கேற்ப ஈண்டு போக்கினை முறைகூறினார்.

புரிதல் எப்பொழுதும் மேற்கோடல்

ஆணையினென்பது சிங்கநோக்காய இருவினையென்பதனோடும் நீக்கமின்றியென்பதனோடும் இயைந்து பொருடந்து நின்றது ஆண்டு இன்னுருபு, முன்னர் ஏதுப்பொருட்கண்ணும், பின்னர் நீக்கப்பொருட்கண்ணுமாய், நின்றது. இன்னென்பது சாரியையெனக் கொண்டு ஈரிடத்தும் ஏழனுருபுகள் விரித்துரைத்தலுமொன்று.

அன்றே அசை, அநாதியே இவ்வாறு நிற்குமெனினும மையம ஆயப புரியநிற்குமெனவே, அச்செயல்களெல்லாம் முதல்வன் காரணத்தானன்றிச் சங்கற்பமாத்திரத்தாற் செய்வனென்பது பெறப்பட்டது.

இங்ஙனே மேல் 'அந்தம்' என்று உத்தேசமாயெடுத்துக் கொண்ட முதல்வனுக்கு இலக்கணங் கூறியவாறுமாயிற்று. இது தடத்தலக்கணமெனப்படும் பொதுவியல்பு.

ஆணையினிருவினையினெனவே, தனது சிற்சத்தி துணைக்காரணம், இருவினையும் அதன்வழித்தாய துணைக்காரணம். இருவினையினெனவே அதற்குப் பற்றுக்கோடுண்டென்பதூஉம் பெற்றாமாகலின், அது முதற்காரணமென்பதூஉம்

---

* சிவஞானசித்தி, சுபக்கம், இரண்டாஞ்சூத்திரம். க.

இருவினையிற போக்குவரவுபுரியவெனவே ஒடுங்கியின் மீள வுளதாங்கால இருவினைகட்கேற்பப் பலவேறுவகைப்பட்டு விரியுமெனபதூஉம போந்தவாறு காணக.

இதனுள் அவையேதானேயாய என்பதோரதிகரணம், ஆணையினிருவினையின என்பதோரதிகரணம, போககுவரவு புரிய எனபதோரதிகரணம, ஆணையினீககமினறிநிறகும னறே என்பதோரதிகரணம, ஆக நாறகூறறது இசசூததிர மெனக கொளக.

## முதலதிகரணம்.

ஈணடு இவவானமாககள் பலவும முதலவன்றானேயாய நிறகும் எனறது.

எ-து மே-ள எ-னின். மேன் முதறகடவுளலலவென விலக்கப்பட்டு நினற சேதனபபிரபஞசமும முதலவனும பொன்னும பணியும்போல அபேதமோ இருளும வெளியும் போற பேதமோ சொலலுமபொருளும்போற பேதாபேதமோ எனனுமையப்பாட்டினகண அமமூனறனுள ஒரோவொனறே பறறி அவவமமதத்தார கூறும கடாவை யாசங்கிததுச சூததிரததின் முதறகூறறைக கணணழிநதுரைநது மேறகோ டனுதலிறறு. இ - ள. வெ-டை

ஈண்டும் இரட்டுறமொழிநதுகொளக

இதனானே, ஒருவிடயத்தைக காணுங்கால ஆன்மபோ தம் கணணொளியெனத் தானென வேறினறி உடனாய நினறு காணுமாறுபோல, முதல்வன் புனருறபவஞசெயயுங்கால உயிரகளோடு உடனாய நின்று செயவனென்பதூஉம், பெறப் பட்டது

அத்துவிதமென்ற சொல்லானே ஏகமென்னில் ஏகமென்று சுட்டுவேதுண்மையின் அத்துவிதமென்ற சொல்லே அந்நியநாத்தியை யுணர்த்துமாயிடும்.

இ-து எது எ-னின். முதல்வன் அவ்வாறு மூவகையுமாய் நிற்பனென்றற்குப் பிரமாணமென்னை என்னுங்கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று. இ-ள். அத்துவிதமென்ற சொல்லின் நகரம் இன்மை அன்மை மறுதலை என்னு முப்பொருளுணர்த்துமன்றே அவற்றுள் இன்மைப் பொருள்பற்றி அத்துவிதமென்ற மொழிமாத்திரையானே ஒருபொருளென்றல் பொருத்தமுடைத்தெனின்,—தானே தன்னையொன்றெனக் கருதல்வேண்டாமையின் அவ்வாறு கருதும் பொருள் வேறுண்டென்பது பெறப்படுதலானும், எண்ணுப்பெயர்மேல் வந்த நகரம் அன்மைப்பொருண்மாத்திரையே யுணர்த்திப் பொதுமையினிற்பதன்றி ஏனைச்சொற்களின்மேல் வந்த நகரம்போல இன்மை மறுதலைப்பொருள்களையுணர்த்துதல் வழக்கினுக்கின்மையின் அத்துவிதமென்கின்ற மொழிதானே பிறிதுகாரணம் வேண்டாது வேற்றின்மையையுணர்த்தி நிற்குமாகலானும், ஈண்டிவ்வான்மாக்கள் பலவும் முதல்வனொருவனேயாய் நிற்குமென மேற்கொண்டது எ-று.

ஆகலானென்பதற்கு ஆயிட்டென்பது அக்காலவழக்குப் போலும், அற்றாகலினன்றே *"நீயோ செய்யாய் நின்மலனாயிடு" என்றார் வழிநூலாசிரியரும், இனி "மழைபெய்து குளிர்நிறைந்தது" என்புழிப்போல ஆயிடலாலென்பது ஆயிட்டெனத் திரிந்ததென்றலுமொன்று

எண்ணும்மை விரித்துரைக்க.

---

* இருபாவிருபது. ௪. கூறியமூன்று

வேறின்றி உடனாதல் பெறப்படவே, பொருண்மையால் பேதமென்பதூஉம் கலப்பினால் அபேதமென்பதூஉந் தாமே போதருமென்பது கருத்து.

கட்டு முறுப்புங் கரணமுங் கொண்டுள்ள
மிட்டதொரு பேரழைக்க வென்னென்னுங்—கொட்ட
யவனுள்ளா னில்லா னுளமவனு மாட்டா [டி
தவனுள்ளா னல்லனுமா மங்கு.

எ-து உ-ம் எ-லின் ஒருபொருள் மூவகையியல்பை யுடைத்தாதல் யாங்ஙனம் என்னுங்கடாவை யாசங்கித்து அவற்றுள் அவையேயாதலை உவமைமுகத்தான் வலியுறுத்துதனுதலிற்று. இ-ள். உள்ளம் கட்டும் உறுப்பும் கரணமுங் கொண்டு எ-து உயிர் நரப்பு முதலியவற்றாற் பிணிக்கப்பட்டும் உடம்பினையும் ஐம்பொறி முதலிய கருவிகளையுங் கைக்கொண்டு நின்று,—இட்டது ஒருபேர் அழைக்க என் என்னுங்கு. எ-து. சாத்தா கொற்றா என உடம்பிற் கிட்ட பெயரால் பிறரழைத்தவழித் தான் என்னையென வந்து நிற்றல் காண்டுமன்றே இருவர்க் கோத்து நின்றுழியும் அவருள் அழைக்கப்பட்டோனேயன்றி ஏனோன் என்னையென்றல் உலகத்தின்மையின் அவ்வாறன்றி உடம்பின் பெயரான் அழைத்தவழி உயிர் என்னென்றற்குக் காரணம் பிறிதோராற்றாற் பெறப்படாமையின் அருத்தாபத்தியளவையானே அவ்வுயிர் உடம்பினைத் தானென வேற்றுமையின்றி அபேதமாய் நிற்றல் பெற்றும் அதுபோல—ஒட்டி எ-து. முதல்வன் உயிர்களின் அபேதமாய் ஒட்டி நிற்போனும்—அங்கு அவன் உளம் ஆகிலான் உளம் அவனுமாட்டாது அவன் உளம் ஆய் அல்லனும் ஆம். எ-து அவ்வாறொட்டியவழி உயிர் உயிரே, உடம்பு உடம்பே, உயிர் உடம்பாயொழியாது உடம்பு உயிராகமாட்

டாது. அவ்வாறாயினும் உயிர் உடம்பாயும் அதனின் வேறாய் நிற்கும் உடம்பு அங்ஙனமில்லாது அதுபோல முதல்வன் முதல்வனே உயிர் உயிரே முதல்வன் உயிராயொழியான உயிர் முதல்வனாகமாட்டாது அவ்வாறாயினும் முதல்வன் உயிராயும் அதனின் வேறாய் நிற்பன். உயிர் அங்ஙனமில்லாது எ-று.

அவனுளமாகிலலாறுளமவனுமாட்டாதவனுளமாயலல ஞமாமங்கு என்றது ஒன்றாயும் ஒன்றன்மைக்கு அநுபவங்காட்டியவாறு

உற்பபு ஆகுபெயர். எவனென்பது என்னென மரீஇயிற்று. ஒட்டியெனபது பெயர், வினையெச்சமாகக் கொள்ளிற சிறப்புமமை விரிததுரைகக

ஒட்டுதல் பொருந்துதல். அங்கு அதுபோல.

ஒன்றென்ற தொன்றேகா ணொன்றே பதிபசுவா
மொன்றென்ற நீபாசந் தோடுளேகா—ணொன்றினா
லக்கரங்க ளின்றா மகர வுயிரின்றே
லிக்கிரமத் தென்னு மிருக்கு.

எ-து உ-ம். எ-னின். வேதத்துள் அத்துவிதமென்ற நூஉமன்றி ஏகமெனவுமோதுதலின் அதற்கு மறுதலையாய உயிர்களோடொட்டி நிற்பனெனப் பேதப்படக் கூறுவதெஙனே என்னுங்கடாவை யாசங்கித்து அச்சொற்குத் தாற்பரியங்கூறுமுகத்தால் தானேயாதலை வலியுறுத்துதனுதலிற்று. இ-ள். இருக்கு ஒன்று என்றது ஒன்றே காண.எ-து வேதம் ஒன்றென்றதற்குப் பொருள் ஒன்றென்பதேயாம்; வேறு பொருள்படாது.—ஒன்றே பதி. எ-து. அதற்குத் தாற்பரியம் பதிப்பொருளொன்றே, இரண்டில்லையென்பதாம்—ஒன்று என்ற நீ பசுவாம். எ-து இஃதறியாது ஒன்றென்று சொலலுகின்ற நீ அப்பதிப்பொருளின் வேறாய பசுவென்றறிவா

யாக பதியுஞ் சேதனமாக யானுஞ்சேதனமாக என்னைப் பசு வென்றதென்னையெனின்—பாசத்தோடு உளேகாண. எ-து. நீ மலத்தோடு கட்டுற்று நின்றுயாகலிற பசுவெனப்பட்டனை அற்றேல இவ்வாறு வேற்றுமைகூறிற பிரமமில்லையாயின ஒருபொருளுமில்லையென்னும வேதாந்திறகுத தாற்பரியமென் னையெனின—அகரவுயிர இனறேல் அககரஙகள இனறு ஆம் இககிரமததது ஒனறு இன்று எனனும எ-து அகரவுயிரில்லை யாயின் அககரஙகளில்லையாமெனனும இமமுறைபற்றி வே தம பிரமபொருள இல்லையாயின ஒருபொருளுமில்லையென றுரைதும் அததனை எ - று

ஒன்றின்றுலககரஙகளின்றுமகரவுயிரின்றேலிககிரமத் தென்னும எனறது வேருகியும வேறனமைககு அநுபவங்கா ட்டியவாறு.

இக்கிரமத்தாலென உருபு விரிததுரைகக. இன்றெ னுமொருமை அப்பணபினமேனினறது. காணெனபதனை மேலேகூட்டுக. ஆம அசை

பண்ணையு மோசையும போலப் பழமதுவு
மெண்ணுஞ் சுவையுமபோ லெஙகுமா—யணணறு
ளத்துவித மாத மருமறைக ளொனறெனனு
ததது விதமெனறறையு மாங்கு.

எ-து. உ-ம். எ-னிஞ் வேதம் ஏகமாய பிரமத்தை ஏக மென்றெழியாது பிரமம அததுவிதமெனவும, ஓரோரிடங்க ளின ஓதுதலின அததுவிதம இருபொருட் கணணதெனபார் ககு ஏகமாய பிரமததை அத்துவிதமெனறல பொருந்தாதாய முடியும என்னுஙகடாவை யாசஙகிததனுதனை நீககுமுகத் தானே அவையே தானேயாதலை வலியுறததுதனுதலிற்று இ - ள். பணணையும் ஓசையும் போலப பழமதுவும எண்ணும்

சுவையும்போல எங்கும் ஆம அண்ணல் தாள் அத்துவிதம் ஆதல எ-து. பண்ணும அதனின வேறனறுயெண்ணப்படும இசையுமபோலவும பழமும அதனின வேறனறுயெணணப் படுஞ்சுவையுமபோலவும யாஙகணும வியாபகமாய முதலவன திருவருள உயிர்களின வேற்றுமையின்றி நிறபதாகலான— அரு மறைகள ஒன்று என்றது அததுவிதம என்று ஆஙகு அறையும எ-து வேதஙகள ஏகமென்றது பிரமம அததுவி தம என்று அவவிடஙகளிற கூறும எ-று

ஆண்டு பிரமம அததுவிதமென்றது பிரமம உயிர்களின வேற்றுமையின்றி நிறகுமெனனும பொருட்டாகலான, அஃது ஏகமெனபதோடு முரணுமாறிலலையெனபதாம

பண்ணையென்னும ஐகாரம பகுதிப்பொருளவிகுதி. பண பாலைபபண முதலாயின.

எஙகுமாமணணலுளென விசேடித்தது, குண குணிகள் போல உடனுமும அவவாறுடனாகாமைககு அநுபவஙகாட்டிய வாறு. வியாபபிய வியாபகமாதலொபபுமைமாததிரையேப றறிக குண குணிகளை உவமை கூறினரெனபது

அரககொடு சோததி யணைநதவக் கறபோ
லுருககி யுடனகியைநது நின்று—பிரிபபினறித
தானே யுலகாந தமியே னுளமபுகுதல
யானே யுலகெனப னின்று

எ-து உ-ம எ-னின் இஙஙனம வெவ்வேறுவமையெ டுத்துக்காட்டின அநேகாந்தவாதமாமெனனுஙகடாவை யாச ஙகிததது அஃதாகாமை உவமைமுகததான விளககி மூன்றனை யும ஒருஙகே வலியுறுத்துதனுதலிறறு. இ-ள உருககி அர ககொடு சேர்ததி அணைத்த அக்கறபோல உடஙகு இயைநது நின்று பிரிப்பு இனறித தானே உலகு ஆம. எ-து. அரககை

யுருக்கி இரதத்தோடு சேர்த்து அணைத்த கற்பொடி அவ்விரதத்தோடொன்றாய் ஒருங்கியைந்து நீக்கமின்றி நின்றாற்போல, முதல்வன் உயிர்களின் ஒருங்குகூடி நின்று நீக்கமின்றி உடனாகலான், தானேயாம், உலகேயாம், தானே உலகேயாம் அற்றேல், 'வாமதேவமுனிவன் முதலியோர் யானேயுலகெல்லாமாயினேன் எனக் கூறுதலானும், சர்வஞ்ஞானோத்தரத்தில் யானேயெல்லாமாய் அல்லனுமாய் உடனுமாய் நின்றேன் என்று உயிர்கண்மேல் வைத்தோதுதலானும், உயிர்களும் இவ்விலக்கணத்தனவாவான் செல்லும்போலுமெனின்,—

தமியேன் உளம் புகுதல் யானே உலகு என்பன் ஒன்று.

எ-து அம்முதல்வன் பாசக்கூட்டத்தினீங்கித் தனியாய் நின்ற என்னகத்துச் சோகம்பாவனையாற் புகுந்து வேற்றுமையின்றித் தோன்றலான் யானேயுலகெல்லாமென்பேனாயினேன் இம்முத்திகாலத்து ஆகலின், அதுபற்றி உயிர்களும் அவ்வாறுவான் சேறலின்று எ - று

அதுபற்றி உயிர்களும் அவ்வாறுவான்சேறலின்றென்பது குறிப்பெச்சம்.

இவ்வாற்றுமைபற்றியன்றே அருச்சுனற்குக் கீதைநூல் செவியுறவுற்றத கண்ணன் யானே யுலகெல்லாமாயினேனென்றதூஉம், முதல்வனது விசுவரூபத்தைத் தான் காட்டியதூஉம், ஏனையவற்றைக் கைவிட்டு என்னையே வழிபடுகவென்றதூஉம், அதனை உறுதியாகக்கொண்ட அருச்சுனன் அவன் கூறிய கருத்துநோக்கிச் சாங்காங்கு சிவபூசை செய்ததூஉம், கண்ணன்மேலிட்ட போதுகள் முதல்வன்திருமுடிமேற் கண்டதூஉமெனக் கண்ணனும் உபமன்னியமுனிபாற் சிவதீக்கையுற்றுத் தன்னையுந் தலைவனையுமுணர்ந்தோனாகலிற் சிவோகம்பாவனையைத் தலைப்பட்டோனாதலறிக

௳லப்பாய்நிறறலான் உலகேயாமென்பார் உடங்கியை ந்து எனவும, பொருட்டன்மையால வேறுநிறறலால தானே யாமென்பாா நினறு எனவும, உயிாகருயிராய் நிறறலால தானேயுலகாமெனபாா பிரிபபினறி எனவுங்கூறினா.

ஈணடும் இரட்டுறமொழிநதுகொணடுரைகக.

இன்றியென்னுஞ்செயதெனெசசககுறிப்பு மழைபெயது குளநிறைநதது எனபுழிபபோலக காரணகாரியபபொருட்டாய நினறது.

இவ்வதிகரணத்தானே பேதமென்றும் அபேதமென்றும் பேதாபேதமெனறும பிணஙகுஞசமயிகளையெலலாம மறுத்து அம்மூவகையியலபுந் தனகட்டோன்ற நிற்கும் அதது விததுணமை ஏதுககளானும உவமைகளானும் உணாத்திய வாறு. புடைநூலாசிரியரும இவவதிகரணப்பொருளேபறறி * "புறசசமயததவாககிருளாய—தெரிககலுறறும்" என வகுததோதினா.

முதலதிகரணமுடிநதது.

## இரண்டாமதிகரணம்.

இனி இவ்வான்மாக்களுககு இருவினை முதல்வறுணையின் வரும எனறது

எ-து. மே-ள். எ-னின். முதல்வன் அவ்வாறு உயிாகளோடியைந்து நின்று புணருற்பவஞசெய்யுஙகால் உலகத்துக்குப்போல அவனுககுத் துணைக்காரணமுதலியன வேணடப்படுமோ படாவோ, என்னும ஐயப்பாட்டின்கண் முதலவனது சுதந்திரத்திற்கும் அளவிலாற்றற்கும் இழுக்காய் முடியு

* சிவப்பிரகாசம், பாயிரம். ௭.

மாகலின் அவனுக்கு அவை வேண்டப்படா எனப் பரிணாம வாதிகள் கூறுங் கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் இரண்டாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இ-ள் வெ-டை.

ஈண்டு இருவினையென்றது முற்பிறவிகளினீட்டப்பட்டு மாயையிற் கட்டுப்பட்டுக் கிடந்த புண்ணியபாவங்களையென்க, எனவே, மாயையினுண்மையும் பெறப்பட்டது. இவை வேண்டப்படுதல்பற்றி முதல்வன் சுதந்திரத்திற்கு இழுக்கில்லையென்பார். முதல்வனாணையின் வரும் என்றார்

ஒருநகரியைக் காப்பான் பாடிகாவலிட்டாங்கு அவை அவன்றாக்கினையாகலான்.

எ-து எது எ-னின் ஆணையேயமையும் இருவினையெற்றுக்கு என்னுங்கடாவை யாசங்கித்து மேற்கோள் சாதித்தனுதலிற்று இ-ள் ஒருபட்டணத்தைப் புரக்கும் வேந்தன் பாடிகாவற்றொழிலைக் களைகளைவானொருவன்மாட்டு வைத்தாற்போல எல்லாவறிவு முதன்மை யநுக்கிரகங்களுடைய அம்முதல்வன் புணருற்பவத்தைச் செய்வதாகிய தன்றாணையை அவ்விருவினைகண்மாட்டுவைத்து நடாத்துதலே முறையாகலான் இனியிவ்வான்மாக்களுக்கு இருவினை முதல்வனாணையின் வரும் என மேற்கொண்டது எ-று.

முதல்வன் செய்யுஞ் செய்தியெல்லாம் உலகத்தோடொப்ப நிகழ்வனவாகலின் ஈண்டைக்கு அரசன்செய்தி உவமையாயிற்று.

பாடிகாவலாவது களைகளைவானொருவனைக்கொண்டு வேந்தன் செய்விப்பதொரு தண்டத்தொழில்விசேடம் அது "கோடிகாவனைக் கூறாத நாளெலாம்* பாடி காவலிற் பட்

* திருநாவுக்கரசுநாயனார் திருக்கோடிகாத்திருக்குறுந்தொகை. ௬. நாடி நாரணன்.

டுக கழியுமே'' என்னுந் திருப்பாட்டானுமறிக இஃதறியா
தாா தததமக்கு வேணடியவாறெலலாமுரைபப.

உளளதே தோறற வுயிரணையு மவ்வுடலி [வன
னுளளதா முறசெயவினை யுளளடைவே—வளளல
செயபவா செயதிப பயனவிளைககுஞ செயயேபோற
செயவன செயலணையா செனறு.

எ-து உ-ம எ-னின வினை உணடென்பதறகும் அதுவே உயிாககுப்பயனாய வருமென்றறகும மேல வினையே றுமாறறிறகும அது முதலவனையினறியமையாமைககும பிரமாணமெனனையென்னுங கடாவை யாசஙகிதது ஏதுவை வலியுறுததுத னுதலிறறு இ-ள உளளதே தோறற எ-து. இலலது தோனறாதெனபது மேறகூறிய போநதமையான முன் உளளதாய புணணியபாவமெனனும இருகூறறுச சஞசிதவினையே தன் பயனாகிய இன்பததுனபஙகளையும அவை நுகாதறகுரிய நிலைககளமாகிய உடமபினையுந தோறறுவிபப,—உயிா அவவுடலின அணையும எ-து அவவினபத துனபநுகாசசி சடததுககுக கூடாமையிற சிததாகிய உயிரே அவவுடம்பிற பொருநதி அவறறையநுபவிககும. முனவினையை ஈணடநுபவிததொழிநதால மேலைககு வினையுணடாமாறியாஙஙனமெனின,—முன செய வினை உள அடைவே உளளதாம. எ-து முன செய்த வினை அநுபவிததறகேதுவான முறைமையிலே மேலைககு வினையுளதாம அநறேல, அவவினையே பயனாக வருமெனவமையும முதலவன எற்றுககெனின;—செயபவர் செயதிப் பயன் விளைககுஞ செயயேபோல. எ-து. உழவர் செயயுந தொழிற்குத் தககபயனை விளைநிலம் விளைவிப்பதன்றி அதுதொழிறுனே விளைவிக்கமாட்டாததுபோல—வளளலவன செய்வன். எ-து. உணவும் விததுமாயத தொன்

றுதொட்டு வரும அவ்வினைகளை வள்ளலாகிய முதல்வனே அவவுயிாகட்குக கூட்டுவன.—செயல சென்று அணையா எ-து. அவவாறன்றி வினை தானே உயிாகட்குப் பயனுய வநது பொருநதமாட்டாது. எ - று.

வள்ளலென்ரூா, தறபயன குறியாது *"வேணடுவார் வேணடிய" வாறே நலகுமஅருளுடைமை நோககி

உள்ளவைவு உளளுநறகேதுவாகிய அடைவென விரியும ஏகாரம ஏழாவசனபொருட்கண வநதது உளளுதல ாணடநுபவிததல அதறகேதுவாகிய முறைமையாவன அநுபவிததறகுத துணைககாரணமாகிய விருபபு வெறுபபுககள. அவற்றினகனுணடாமாறு முன்னாககாட்டுதும.

மேல முதலவனுககு வினை வேணடப்படுமென்பதறகு அரசனை யுவமைகூறினூா, ஈணடு வினை முதலவனையின்றியமையாதென்பது உணாததுதற்கு உழவுதொழிலையுவமை கூறினுரெனக கொளக

அவவினையைச செயவதனி லவவினைஞா தானுசென்றுய
கவவினையைக காநத பசாசமபோ—லவவினையைப
பேராம லூட்டும் பிரானி னுகராரே
லாாதா மறிநதணைபபா ராஙகு

எ-து. உ-ம் எ-னின் இருவினை சடமாகலிற் சென்றணையமாட்டாவாயினும உயிாகள சேதனமாகலின அவை யேயவறறது பயனை யறிநது எதிாதுககொணடு நுகருமவளனலவறறுககு எனனுங கடாவை யாசஙகிததது அதனை வலியுறுததுதனுதலிறறு. இ - ள காநதபசாசமபோல. எ-து ஒருவனெடுதது நேரொககப் பிடிததவழி இருமபினை வலிததுக

* திருநாவுககரசுநாயனூா திருமறைககாட்டுத திருததாணடகம. க. தூணடு சுடாினைய.

ங்கொள்ளுங் காந்தம்போல—அவ்வினையைப் பேராமல் ஊட்டும் பிராணின் எ-து அவ்வினைப்பயன்களைப பிறழாமல் நுகர்விக்கும் முதலவனால்—அவ்வினைஞர் தாம. எ-து அவ்வினைகளைச செய்யும் ஆன்மாககடாம—அவ்வினையைச் செயவதனில் சென்று அவவினையை நுகராரேல ஆர் தாம் அறிநது அணைப்பார் எ-து. அவறறைச் செயதறகு நிலைக்களமாகிய உடமபின்கட்பொருநதி அவறறதுபயனை அநுபவிபபர், அவவாறநுபவியாராயின், வேறே எவா தாம அவறறையறிநது கூட்டுவோர்—ஆங்கு எ-து அறிவுஞ் சுதநதிரமுமின்றி மலத்தின் மறைப்புணடு கிடககும அபபெதததகாலதது எ - று.

ஒருவருமிலலையெனபதாம்.

ஆன்மாக்களுககுத தமககென அறிவின்மையானும் வினை சடமாகலானும, மாயை தாரகமாமததனைருணிறறல் எனப்போநதமையானும், முதலவனே அறிநதணைப்பனெனப் பாரிசேடவளவை கூறுவா, பிராணினுகராரேலார்தாமறிந்தணைப்பாரெனறுர் இது சொறபொருட்பின்வருநிலை.

நெல்லிற் குமியு நிகழ்செமபி னிறகளிமபுஞ்
சொலலிற் புதிதன்று தொனமையே—வலலி
மலகன்ம மனறுளவாம வளளலாற பொன்வா
ளலர்சோகஞ் செயகமலத தாம.

எ-து. உ-ம். எ-னின். அவ்வினை ஆதியோ அநாதியோ ஆதியெனின் முனபிலலது இடையே தோனறுமென்பது சறகாரியவாதததுககேலாது அநாதியெனின ஒருவர் கூட்டவேண்டுவதிலலையெனஞரு கடாவை யாசஙகித்து அதனை வலியுறுத்ததனுதலிறறு. இ - ள். நெலலிறகு உமியும் நிகழ செமபினில களிம்புமசொல்லின் புதிது அன்று தொனமையே; எ-து. நெல்லின்கணுமியும் செம்பின்கட்களிம்பும் எககாலத

துளவாயினவென்று ஆராய்ந்து சொலலுஙகால் அஙஙல இஞ செம்பும உளவாயினவனறே உளளனவன்றி இடையே வநதனவலல, அதுபோல,—வல்லி மலகனமம அன்று உள வாம. எ-து மாயை மலம கனமமென்று மும்மலஙகளும அநாதியேயுள்ளனவாம்—கமலதது அலா சோகம் பொன வாள செய வளளலால ஆம் எ-து. முனனேயுளளதாய தாம ரைபபூ அலாதலும கூமபுதலும ஞாயிறறினுற் செயயபபடுமா றுபோல அவை தததஙகாரியஙகளைச செயதல முதல்வனுலே யாம எ-று.

இஃதெடுத்துககாட்டுவமை

புதிதன்றென்பதனை ந தனிததனிக கூட்டுக

தொன்மையினுளளவற்றைத தொனமை என்றுபச ரிததார்.

ஏகாரம் பிரிநிலைககண வநதது

மாயை இறைவனுககுப பரிககிரகசததியாகலின, வலலி யெனருர்

வினைக்குத தொன்மைகூறுவார் இனம்பறறி மாயைமல ஙகளுககுந தொன்மை கூறினுர

மூலமலத்தின்காரியம மோகம் மதமுதலாயின இருவி னையின்காரியம இனபத்துன்பமுதலாயின. மாயையின்காரி, யம தனுகரணமுதலாயின வளளலாமெனவே திரோதான சததியது உணமையுமபெறருும அது பாகம வருவிததறபொ ருட்டு மலததின்வழி நின்று மோகமுதலியவறறைத தொழிற படுததுவதாகிய சிவசங்கற்பத்திற கேதுவாதலபறறி மலமெ ன்றுபசரிததுக கூறப்படுமே. இவவாறுமலம கனம மாயை திரோதானம மாயாகாரியமென்னும ஐவகைப்பாசமுங கண டுகொளக.

இவற்றுண் மாயை சுத்தமாயை அசுத்தமாயையென் றிருவகைப்படும். இவ்விரண்டனுட் சுத்தமாயையின் காரியமே அசுத்தமாயையென்பாரும், சுத்தமாயைபோல அசுத்தமாயையும் அநாதியேயாமென்பாரும், ஒன்றுதானே ஊர்த்துவமாயை அதோமாயையென் றிருவகைப்படுமென்பாரும் எனப் பலதிறத்தர் ஆசிரியர். இனி முதல்வனது கிரியாசத்தியே சுத்தமாயையெனப்படுமென்பாருமுளர்; அது முதல்வனுக்குத் தாதான்மியசத்தியாகலிற் பரிக்கிரகசத்தியாகிய சுத்தமாயையாதல் யாண்டையதெனமொழிக. சுத்தமாயையினின்றும் பஞ்சகலைகளும் நால்வகைவாக்குஞ் சிவதத்துவமைந்துஞ் சுத்தகாலமுதற் சுத்தநிலமீறாகிய முப்பத்தொன்றுந் தோன்றும்; அசுத்தமாயையினின்றும் அசுத்தகாலமுதல் அசுத்தநிலமீறாகிய முப்பத்தொரு தத்துவங்களுந் தோன்றும். இந்தத் தத்துவங்களெல்லாம் பொதுவுஞ் சிறப்பும் பொதுச்சிறப்புமெனத் தனித்தனி மூவகைப்பட்டு உயிர்கடோறும் வெவ்வேறுளவாம்.

கன்மமும் *"நாசோற்பத்தி பண்ணிவரு மாதலா லநாதி" என்பதுபற்றிப் பிரபஞ்சம்போலப் பிரவாகாநாதியென்பாரும், †"ஏக னநேக னிருள்கரும மாயையிரண்—டாகவிவை யாறு தியில" எ-ம். "ஆணவ முதலன் றதுபோற் கருமமும்" எ-ம் ஒப்பவோதுதல்பற்றி மூவகைவினைக்கும் முதற்காரணமாய மூலகன்மமொன்று அநாதிசித்தமாயுண்டென்பாருமென்று இருதிறத்தராசிரியரெனக். இவ்வினையீட்டப்படுங்கால், மந்திரமுதலிய அத்துவாக்களிடமாக மனம் வாக்குக் காயமென்னும் மூன்றானீட்டப்பட்டு, தூலகன்மமாய ஆகாமியமெனப் பெயர்பெற்று, பின்னர்ப் பக்குவமாங்காறுஞ் சூக்

* சிவப்பிரகாசம், பொது. கசு. நன்ணியிதி.
† திருவருட்பயன்.

ருமகன்ம்மாய்ப் புத்தித்தத்துவம் பற்றுக்கோடாக மாயையிற் கிடந்து, சாதி ஆயுப் போகமென்னும் மூன்றற்குமேதுவாய முறையே சனகம் தாரகம் போக்கியம் என்னு மூவகைத்தாய், அபூருவம் சஞ்சிதம் புண்ணியபாவமென்னும் பரியாயப்பெயர் பெற்று, பின்னர்ப் பயன்படுங்கால் ஆதிதைவிகம் ஆத்தியான்மிகம் ஆதிபௌதிகம் என்னு முத்திறத்தாற் பலிற்றப்படு, பிராரத்தமென்ப பெயர்பெறும். ஆதிபௌதிகமாவது சடம் வாயிலாக வருவது. ஆத்தியான்மிகமாவது சடத்தோடு கூடிய சேதனம் வாயிலாக வருவது. ஆதிதைவிகமாவது ஒரு வாயிலானன்றித் தெய்வந்தானே காரணமாக வருவது. இன்னும் இவ்வினைகள் உலகம் வைதிகம் அத்தியான்மிகம் அதிமார்க்கம் மாந்திரம் என்று ஐவகைப்பட்டு ஒன்றற்கொன்று ஏற்றமுடைத்தாய், முறையே நிவிர்த்திமுதலிய பஞ்சகலையி னடங்கி, அசுத்தம் மிச்சிரம் சுத்தமென்னப்படும் போகங்களைப் பயப்பிக்குமென்றறிக.

இரண்டாமதிகரணமுடிந்தது

## மூன்றாமதிகரணம்.

இனி இவ்வான்மாக்கள் மாறிப் பிறந்து வருமென்றது.

எ-து மே-ள எ-னின் புனருற்பவம் சடத்துக்கன்றிச் சித்துக்கு முளதாயினன்றே முற்செய்வினையே யாண்டைக்கு வருமென மேற்கூறியதமையும் அஃதுண்டோ இல்லையோ என்னுமையப்பாட்டினகட் குடமுடைந்தவழிக் குடாகாயம் ஆகாயத்தோடு கூடுமாறுபோல உடம்பு நீங்கியவழி உயிர் பிரமத்தோடு கூடுமென்னுஞ்சுருதிபற்றி இறந்தவுயிர் மீளப் பிறப்பதில்லையெனக் கிரீடாப்பிரமவாதிகள் கூறுங்கடாவை யாசங்

சித்துச் சூத்திரத்தின் மூன்றாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட்னுதலிற்று. இ-ள். வெ-படை

வருதல தோன்றுதொட்டவ்வாறுதல

மாறுதல் ஈணடிறததலென்பது 'போககுவரவுபுரிய' என்னு மூலததானும, ஏதுவுதாரணஙகளோடு உளதாகிய இயைபானுமுணாக. இஃதுணராது அச்சு வேறுபடுதலெ னறுரைபபாருமுளா. அஃதிணடைகக்கியாதுமியையாமையு ணாக.

தோற்றமுமீறும உள்ளதறகலலது உளதாதலின்மை யான்.

எ-து ஏது எ-னின் அதறகுப் பிரமாணமென்னையெ ன்னுங கடாவை யாசஙகிதது மேறகோளைச சாதிததனுதலி றறு இ-ள். உறபததியும நாசமுந தொடாசசியாயுள்ள பொருட்கனறி ஏனைப்பொருட்கு உறபத்தி கூடாமையான் இனி இவவான்மாக்கள மாறிப பிறநதுவருமென மேறகொ ணடது எ-று.

தோறறமும ஈறுமெனனுமும்மைகளை எதிரது தழீஇயி னவாகக கோடலிற் றொடாசசியாயென்பது போநதவாற றிக உளதாதல் ஈணடுத தோனறுதல.

இனி இவ்வாறன்றிக குடாகாயவுவமையைபபற்றி இருவி னையான வரும புனருறபவம உயிரினபொருட்டுச் சிவத்துக கேயாமெனச சிவாததுவிதிகள் கூறுஙகடாவை யாசங்கிதது மூலப்பகுதியிறறோனறும புததிததுவததிறகே அதுவெனச் சாஙகியா கூறுஙகடாவை யாசஙகிதது மேறகோடனுதலிறறு இவ்வதிகரணததினைககொணடு தோற்றமும ஈறும அவ்வுரி மையுளளதறகேயன்றி ஏனையவற்றிற்கு உளதாதலின்மை யான இவ்வான்மாககளே மாறிப் பிறந்துவருமென மேற

கொண்டதென்றுரைப்பினுமாம். இப்பொருட்கு உரிமையெ ன்பது அவாய்நிலையான் வந்தது.

உளதாதலென்னும் ஒருமை தோற்றவீறுகளோடு தனித் தனி சென்றியையும்.

ஆன்மாக்களேயென்னும் பிரிநிலையேகாரம் விகாரத்தாற் றொக்கது.

இனி மாயாவாதி முதலியோர் மதத்தை மறுத்தற்பொரு ட்டு மேற்கொண்டதென்பாருமுளர். அத்துவிதமென்றசொல் லானே அவரை மறுத்து ஆன்மாக்களைப் பெறுவித்தமை யின் ஈண்டவர்மதம்பற்றிக் கடா நிகழ்த்தற்கோரியைபின்மை யுணர்க.

கண்ட நனவைக் கனவுணர்விற் றான்மறந்து
விண்படாந்தத் தூடு வினையின்றற—கண்செவிகெட்
டுள்ளதே தோற்ற வுளமணுவாய்ச் சென்றுமனந்
தள்ள விழுங்கருவிற் றான்.

எ-து. உ-ம். எ-னின் புனருற்பவமாமாகாற்படும் இயல் புகளுணர்த்தி அதனை வலியுறுத்துதலுதலிற்று. கண் செவி கெட்டு உள்ளதே தோற்ற உளம் அத்தூடு விண்படாந்து கண்ட நனவைக் கனவு உணர்வில் தான் மறந்து மனம் தள்ள வினையினால் அணுவாய்ச் சென்று கருவில் விழுந்தான் எனக் கொண்டுகூட்டுக. இ-ள். கண் செவி கெட்டு உள்ளதே தோற்ற எ-து. கண் செவி முதலிய உறுப்புக்களையுடைய இவ் வுடம்பு கெட்டழிதற்குக் கேடின்றிப் படைப்புக்காலந் தொடங்கிச் சங்காரகாலமளவும் நிலைபெற்றுள்ளதாகிய சூக் குமதேகம் பூதசாரவுடம்பு முதலியனவாய்க் கூறப்படு— உளம் அத்தூடு விண்படாந்து எ-து உயிரானது அப்பூதசா ரமுதலிய உடம்பின்கட்பொருந்தித் துறக்கநிரயங்களிற்சென்

றநுபவித்து, பின்னர்—கண்ட நனவைக் கனவு உணர்வின் தான் மறந்து. எ-து. நனவின்கட் கண்டவற்றைக் கனாக்காணுங்காலத்து மறந்து அறிவுவேறுபட்டாற்போல, முன்னைக் கண் செவி கெட்டவாறும் உள்ளதே தோற்ற அத்தூடு வினைபடர்ந்தவாறும் ஆண்டநுபவித்தவாறுமாகிய இன்னோரன்னவற்றை மறந்து அறிவு வேறுபட்டு,—மனந்தள்ள வினையின்ல அணுவாய்ச்சென்று கருவில் விழும் தான். எ-து. முன்னுடம்பு இறக்குங்கால் அடுத்த வினை காட்டுங் கதிநிமித்தம்பற்றி உயிர் அவாவுமாறு மனஞ்செலுத்துதலான் அக்கதிக்கட் சேறற்கேதுவாய எஞ்சிநின்ற புண்ணியபாவசேடத்தாற் சூக்குமதேகமாத்திரையாய்ச் சென்று அம்மனந்தள்ளிய கதிக்கு அமைந்த அக்கருவின்கட்படும் எ-று.

இன் உவமவுருபு. தான் அசை. மறத்தற்குச்செயப்படுபொருள் அவாய்நிலையான் வந்தது.

வினைபடர்ந்தென்னும் உபலக்கணத்தால் நிரயம்படர்ந்தென்பதூஉம் பெறுதும். படர்ந்தெனக் காரியத்தைக் காரணமாக உபசரித்தார்.

அத்தூடென்புழி அன்சாரியை விகாரத்தாற்றொக்கது. பொருந்தியென்பது சொல்லெச்சம். வினை ஆகுபெயர்.

உடம்புநீங்கிப்போங்கால் முதற்கட் கெடுவன கண்ணுஞ்செவியுமாகலின், அச்சிறப்புநோக்கிக் கண்செவிகெட்டென்றுபசரித்தார். கெட்டவழியென்பது கெட்டெனத் திரிந்துநின்றது.

ஐம்பெரும்பூதத்தின் காரியமெனப்பட்ட தூலவுடம்பு சூக்குமவுடம்பின் காரியமாமாறென்னையென்னும் ஐயநீக்குதற்கு உள்ளதே தோற்றவென்றார்.

ஏகாரந் தேற்றம்.

ஆகாயமுதலிய தூலபூதஙகள் சதநமுதலிய சூக்குமபூத ஙகளின காரியமாதலின், அதுபறறியே தன்மாததிரைமயமா கிய சூக்குமவுடம்பிற றோன்றுவதாய தூலவுடம்பு ஐமபெரும் பூதமயமெனப்பட்டதனறிப் பிறிதிலலையென்பது *"பூதனு சரீரம போறறை புரியட்ட ரூபந் தானே யாதனு சரீர மாகி" எ-ம. †"சூக்கும வடிவே தென்னிற றூலகா ரணம தாகும" எ-ம ‡"தூலமா முருவினுககுச் சூக்கும முதல" எ-ம. ¶"மாறியிவ வுருவ மெலலாம் வருவதெஙங கேகின றென னிற கூறிய சூககு மததாம" **"விதிபபடி சூககு மததே யுருவரும." எ-ம. ††"மறுதிதரு முடல" எ-ம வழிநூலாசிரி யரும் இவ்வாறே கூறியவாறு காணக இஃதறியாதார தததம கரு வேணடியவாறே யுரைபப அது நோனறுஙகால‡‡ "கா லமுறறு - நீககிட மாமபின் வேரோா நீணமர நிகழநதது" மாறுபோலச சூக்குமவுடமபு கெடாதுநிறபத தூலவுடமபு ¶¶"வேறொரு குறியாமாரம வீரசங கிலியுமா" தலபோல வினைககீடாக அசசுவேறுபட்டு ○"மதிககெழு கலைகளபோல வருவது போவதாம" எனபதூஉம வழிநூலாசிரியா கூறிய வாறறுணறிக

அணு சூககுமவுடமபு

தளள தளளுதலாவெனக

அககருவிலெனச சுட்டுவருவிகக

தான் அசை.

---

* சிவஞானசித்தி, இரணடாஞசூத்திரம ௫௬ † ஞாண காஞசூத்திரம. ௧௦ ‡ இரணடாஞசூத்திரம ௫௦ ¶ இரணடா ஞசூத்திரம. ௭௭. ** இரணடாஞசூத்திரம. ௭௯ †† பதினொ ராஞசூத்திரம் ௩. அநாதியுட ‡‡ இரணடாஞசூத்திரம ௭அ சூக்குமங ¶¶ இரணடாஞசூத்திரம. ௭௭. மாறியிவவுருவ இர ணடாஞசூத்திரம. ௭௯

உள்ளதே தோற்றவென்றதனால் உடற்றிரிவும், விண்ப டர்ந்தென்றதனால் இடத்திரிவும், கண்ட நனவைக் கனவுண ர்விறான் மறந்தென்றதனால் அறிவுத்திரிவும் பெறப்பட்டன.

உள்ளதே தோற்றவென்றதனால் புதிது புதிதாயதோ ன்றுதல்பற்றிச் சற்காரியவாதத்திற்கு இழுக்கின்மையும், அத் தூடு விண்படர்ந்தெனவும் அணுவாய்ச் சென்று கருவில் விழுமெனவுங் கூறியதனால் போக்குவரவுபற்றி வியாபகத்து க்கு இழுக்கின்மையும், வினைசேடத்தாலென்றதனால் துறக்க நரகங்களின் அநுபவித்தொழிந்தமைபற்றிப் புனருற்பவகார ணத்திற்கு இழுக்கின்மையும், மனந் தள்ளவென்றதனால் அஃ தெனசுதந்தரகேதுவுங்காட்டியவாறு

வேதத்துட்கூறப்படும் பஞ்சாக்கினிவித்தையின் இயல் புணர்த்துவார் கண் செவி கெட்டவழி விண் படர்ந்து மறந்த ணுவாய்ச் சென்று கருவில் விழுமென்றார். பஞ்சாக்கினிவித் தையினியல்பு நீலகண்டபாடியத்திற் காண்க.

மறந்து விண்படர்ந்தெனக் கூட்டியுரைப்பாருமுளர். துறக்கநிரயங்களிற்படர்ந்து அநுபவிப்புழி அறிவுதிரியாமை புராணங்களுட் காண்க.

அரவுதன் றோலுரிவு மக்கனவும் வேறு
பரகாயம் போயவருமப் பண்பும்—பரவிற்
குடாகாய வாகாயக் கூத்தாட்டா மெனப்
கடாதுள ளாம போமா றது.

எ-து உ-ம். எ-னின். உயிர்க்குப் புனருற்பவமாகாமை கருவாதிகளான் எடுத்துக் காட்டப்படுங் குடாகாய வாகாயவு வமைக்குப் பொருள்கூறி மேலதனை வலியுறுத்துதனுதலிற்று. இ-ள் அரவு தன் தோல் உரிவும் அக்கனவும் பரகாயம் போய் வரும அப் பண்பும் பரவில வேறு. எ-து. கண செவி கெட்ட

வழி உள்ளதே தோற்ற அதனூடு விண் படர்தற்குப் பாம்பு தோலுரித்துப்புதிதொருதோல போர்த்துச் சேறலும் புருடன நனவுடம்பினீங்கிக் கனவுடம்பிற் சேறலும், யோகிகள் தம்மு டம்பு நீங்கிப் பரகாயத்திற்சென்று மீட்லுமாகிய இவ்வுவமை கள் மிக்கு வழங்குதற்கண் இவற்றிற்கு மாறாக—குடாகாய ஆகாயக் கூத்தாட்டு ஆம என்பது அடாது எ-து.குடவாகாயம் குடமுடைந்தவழி ஆகாயத்தோடு கூடுமாறு போல்வதோர் கூத்தாட்டாமென்று நீ கூறுதல பொருந்தாது.—உள்ளம் போம் ஆறு அது எ-து சூக்குமவுடம்பு விட்டுப் போமாற்றி றகே அவவுவமையாகலான். எ - று.

எனவே, உடலவிட்டுப் போமாற்றிற்கு இவ்விருவகையு வமைகளும் ஆகமங்களிற் கூறுதலின், அவை தம்முள் முர ணுதவாறு, அரவுதன்றோலுரிவு முதலியன தூல‌ுடல் விட் டுப் போமாற்றிற்கும், குடாகாயவுவமை சூக்குமவுடம்புவிட் டுப் போமாற்றிற்குமெனக் கோடல பொருத்தமுடைமையின் அவவேறுபாடுணராது குடாகாயவுவமையுந் தூலவுடம்புவிட் டுப் போமாற்றிற்கே போலுமென மலையற்கவென மேலதனை வலியுறுத்தவாறு காண்க.

மேலைவெண்பாவில "கண்ட நனவைக் கனவுணாவிற் றுன்மறந்து" என்றது அறிவு வேறுபடுமுறைமைக்கு எடுத்து க்காட்டியதெனவும், ஈண்டு அக்கனவுமென்றது அதனையே உடல் வேறுபடுமுறைமைக்கு எடுத்துக்காட்டியதெனவுந் தெரிந்துகொள்க.

பரவு முதனிலைத்தொழிற்பெயர். இலலுருபு தொழிஙிக ழ்ச்சிக்கண் வந்த ஏழாவது

பரவுதல் எல்லார்க்கும் புலனாமாறு மிக்குநிகழ்தல்.

ஈண்டு உள்ளமென்றது சூக்குமவுடம்பை,

போமாற்றிற்கென்னும் நான்காவது விகாரத்தாற் றொக்கது, "ஐந்தவித்தா னாற்றல்" என்புழிப்போல

குளவாம்பல் குளாம்பலென மரீஇயினாற்போலக் குடவாகாயங் குடாகாயமென மரீஇயிற்று.

ஆகாயக்கூத்தாட்டென்பது உவமத்தொகை. இதனை உம்மைத்தொகையாகக்கொண்டு குடாகாயவாகாயமுங் கூத்தாட்டுமேபோலென்றுரைப்பாருமுளர்.

மூன்றாமதிகரணமுடிந்தது.

## நான்காமதிகரணம்.

இனி நீக்கமின்றி நிற்குமன்றே யென்றது.

எ-து. மே-ள் எ-னின். அங்ஙனம் புனருற்பவமாதற் கேதுவாய் இருவினைகளைச் செலுத்தி நிற்பதெனப் போந்த ஆணையெனப்படுஞ் சத்தியாவது முதல்வனின் வேறோ அன்றோவெனும் ஐயப்பாட்டின்கட் பொருட்குச் சத்தி வேறென்னுமீமாஞ்சகா முதலியோர் மதமும் அன்றென்னும் நையாயிகா முதலியோர்மதமும் பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் இறுதிக்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இ-ள் முதல்வன் றனதாணையாகிய சிற்சத்தியோடு சமவேதமாய் நிற்பன். எ-று.

அன்னியயோகவியவச்சேதம் அயோகவியவச்சேதம் என்றற்றொடக்கத்து வடசொற்கள் பிறிதினியைபு நீக்குதல் இயைபின்மை நீக்குதல் என்றற்றொடக்கத்தனவாக மொழிபெயர்த்து வழங்கப்படுமாறுபோலச் சமவாயமென்னும் வடமொழி தமிழின்கணே நீக்கமின்றி நிற்றலென மொழிபெயர்த்து வழங்கப்படுமென்றுணர்க. வடமொழி இரண்டாஞ்சூத்திரத்திறுதியில் ஆணை முதல்வனோடு சமவேதமாய் நிற்கு

மென ஆணைமேல் வைத்தோதியதனை ஈண்டு முதல்வன்மேல் வைத்தோதினார். கண்ணழிப்புழி இருவினை முதல்வனாணையின வருமெனக் கூறிப்போந்த ஆணை ஈண்டுக் கூறுமையே இனிது விளங்குமென்னுங் கருத்தாற் சொற்பல்காமைப்பொருட்டு அதனையொழித்தெடுத்துக்கொள்ளப்பட்டது இப்பொருள் காணமாட்டாதார் சருவவியாபியாய் நிற்றலாலென்னும் ஏதுவின்பொருளே மேற்கோளுக்கும் பொருளாகக் கொண்டுரைப்ப அது கூறியது கூறலாதலுமன்றி மொழிபெயர்த்தல் யாப்பிற்கேலாமையுமறிக. ஈண்டுச் சமவாயமென்றது தாதான்மிய சம்பந்தத்தை. அஃதாவது பொருளான் ஒன்றேயாயும் ஒருவாற்றாற் பேதமாதற்கு உரிமையுடைமை.

அவன் ஏகாநேகமிரண்டுமின்றிச் சருவவியாபியாய் நிற்றலான்.

எ-து. ஏது எ-னின் அதற்குப் பிரமாணமென்னையென்னுங் கடாவை யாசங்கித்து மேற்கோளை வலியுறுத்துதனுதலிற்று இ-ள் அம்முதல்வன் ஒன்றே வேறேயென்னும் இருதன்மையுமின்றி அவ்விரண்டற்கும் பொதுவாய எங்கணும் வியாபியாய் நிற்றலான் இனி ஆணையினீக்கமின்றி நிற்குமன்றேயென மேற்கொண்டது. எ-று

அவினாபாவமுணர்த்துவார் ஏகாநேகமிரண்டுமின்றியென மேற்கோளிற்போந்தபொருளை அநுவதித்துச் சருவவியாபியாய் நிற்றலானென ஏதுக்கூறினார் சருவவியாபியாய் நிற்றல் அவையேதானேயாயென்னும் அதிகரணத்தாற் சாதிக்கப்பட்டமையின் அதனை ஈண்டேதுவாக வைத்து ஆணையினீக்கமின்றி நிற்குமென்று மேற்கோளைச் சாதித்தவாறு.

எங்குமுள னென்றளவை யொன்றனா னிரண்டென்
லெங்கு முளனன் றெவற்றெவனு—மங்க [ணி

ணவையவ னன்றில்லைப் பொன்னொளிபோ லீச
னவையுடைமை யாளாகா மங்கு.

எ-து. உ-ம். எ-னின். ஏதுவும மேற்கோளுந் தம்முள் அவிநாபாவமாமாறு யாங்ஙனமென்னுங் கடாவை யாசங்கித்து அதனை வலியுறுத்துதனுதலிற்று. இ-ள். எங்கும உளன் என்ற அளவை ஒன்று அன்று எ-து யாங்கணும் அவையே தானேயென மேற்கூறிய அளவையானே முதலவன் ஒரு பொருளாதல கூடாது எ-று. ஒன்றாயிற் கங்கைக்கரையினின்ற ஒருமானுடனே காவிரிக்கரையினும ஒருங்குநிற்கமாட்டான அதுபோல ஒருபொருள ஓரிடத்துளதாதலன்றி யாங்கணும வியாபித்து நிற்கமாட்டாதெனபதாம. இரண்டு என்னில எங்கும உளன அன்று. எ-து அற்றேல முதலவன் இருபொருளாய நிற்குமெனக் கோடுமெனின் யாங்கணும் அவையேதானேயாயுளனாதல கூடாது எ-று தன்மாட்டே வேற்றுமையுடையானுக்குப் பிறபொருளகளின்கண் வேற்றுமையின்றி வியாபித்து நிற்றல சாலாதெனபதாம் அற்றேல இவ்விரண்டோடு முரணுதலின் எங்குமுளனல்லனெனக் கோடுமெனின்,—எவற்று எவனும் அங்கண அவை அவன் அன்று இல்லை. எ-து. எவ்விடங்களினுள்ள எத்திறப்பொருளுமாகிய அவ்விடத்து அவைகளெல்லாம் அகரவுயிரின்றேல் அக்கரங்களில்லையாமாறுபோல அம்முதலவனையின்றி யமையாவாகலான எங்குமுளனல்லனென்றல் பொருந்தாது எ-று. ஆகலான் எங்குமுளனல்லனென்றல் பொருந்தாதென்பது குறிப்பெச்சம். அற்றேல் வேறு விடுக்குமாறெனையெனின்;—ஈசன் பொன் ஒளிபோல. எ-து. எங்குமுளனாகிய முதல்வன் ஞாயிறும் ஒளியும்போல ஒன்றாதற்கும் இரண்டாதற்கும் பொதுவாய்த் தாதான்மியத்தாற் சிவமுஞ்சத்தியுமென் றியைந்து நிற்கும். எ-று. அற்றேல் பசுபாசங்களும் வியாப

கமெனக் கோடலின் அவையும இம்முறைமைபற்றி ஏகாதே கமிரணமின்றி முதலவன்போலத் தத்தமு சத்திகளோடு தாதான்மியமாய் நிற்குமெனபது பெறபபடுதலான முதலவ ஞெடு சமமாவான் செலலுமெனின்,—அவை உடைமை நாம் ஆள அங்கு. எ-து அவவாருயினும முதலவனது வியாபக ததை நோககி வியாபபியமாகலின அப்பாசஙகள உடைமை யாம, பசுககளாகிய நாம, அடிமையாவேம் அமமுதலவண மாட்டு. எ - று.

அன்றெனப் பாடமோதுவாருமுளர்.

பாசங்கள் உடைமையாமாறும் பசுக்கள் அடிமையாமா றும 'தாரகமாமததன்ருணிறறல' எ-ம். 'அதனிலீறலாவொ ன்று பலவாறே தொழுமபாகும' எ-ம. மேறபெறப்பட்டமை யின, அவறறை எணடெடுததுககாட்டி ஆசங்கை நீககி யவாறு.

என்றவென்னும பெயரெசசத்தகரம் விகாரத்தாற்றொக கது. "புகழபுரிந்து" எனபுழிபபோல அளவையாலென ஆனுருபு விரிததுரைகக

ஒன்றன்று உளனன்று என்புழி ஒன்று உளனென்னுந தருமிவாசகஙகள ஆகுபெயரால அததருமஙகளினமேனின் றணவாகலான உளனெனபதும அஃறிணையொருமையோடு முடிநதது.

அன்மை கூடாமைப்பொருட்டு

எவற்றெவனுமென்பது ஏழாமவேறறுமைத்தொகை. அஃறிணைககணவரும் எவனென்னும வினைவினைககுறிப்புச் சொல ஈண்டுப் பெயாததன்மைப்பட்டு எவனுமென்ன ஏருசாப் பொருணமையுணர்ததி நின்றது.

அன்றியென்னும் வினையெச்சம் செய்யுளாகலின் அன்றெனத் திரிந்தது

இன்மை ஈணடு அமையாமைப்பொருட்டு.

பொன ஆகுபெயர்.

ஆம என்பது உடைமையோடியையும்

பொன்னொளிபோலீசனெனபது தொகையுவமமாகலிற பொதுவியல்பு விரிததுரைககப்பட்டது.

இவவதிகரணத்தாற் போந்த தொகைப்பொருள், முதல்வன் வியாபகனாதலின் வியாபகப்பொருட்கு ஒன்றாய நிற்றல கூடாது, அது கூடாமைபற்றி இரணடாய் நிற்பனெனின வியாபகனாதல் கூடாது; வியாபியல்லனெனின் பசுபாசங்கள் அவனையின்றியமைதல் கூடாது, ஆகலான், முதலவனொருவனே ஞாயிறுமொளியுமபோலச் சிவமுஞ்சததியுமெனத தாதான்மியததால இருதிறப்பட்டுச சருவவியாபியாய்ப் பொதுமையினிறபனெனச் சமவேதமாய நிற்குமாறு தெளிவிக்குமுகததானே தாதான்மியசததி யுணமைககுப் பிரமாணங்கூறியவாறுமென்றுணர்க. அஃதாமாறு,—தன்னைவிளககுவதூஉம் விடயங்களை விளககுவதூஉந் தானேயாகிய ஞாயிறொன்றுதானே விடயங்களை விளக்குழிக் கதிரெனவுந் தன்னைவிளககுழிக் கதிரோனெனவுந் தாதான்மியததால் இருதிறப்பட்டியைந்து நிற்றலபோல, புறப்பொருளை நோககாது அறிவுமாத்திரையாய்த் தன்னியலபினிற்பதூஉம் புறப்பொருளை நோக்கி நின்றுணர்த்துவதூஉமாகிய இருதன்மையையுடைய பேரறிவாய சைதன்னியமொன்றே அங்ஙனம் புறப்பொருளை நோக்கி நிற்குநிலையிற் சத்தியெனவும் புறப்பொருளை நோக்காது அறிவுமாத்திரையாய் நிற்குநிலையிற் சிவமெனவுந் தாதான்மியத்தால் இருதிறப்பட்டியைந்து நிற்குமெனவுணர்க.

இனித் தீயின்சத்தியொன்றுதானே சுடுதல் அடுதல் முதலிய தொழில் வேறுபாட்டால் சுடுஞ்சத்தி அடுஞ்சத்தி யென்றற்றொடக்கத்துப் பலவேறுவகைப்படுமாறுபோல, சிவசத்தி யொன்றே காரியவேறுபாட்டால் பரை ஆதி இச்சை ஞானம் கிரியையென்று ஐவகைச்சத்திகளாயும், முறையே ஐந்தும் நான்கும் எட்டும் பதின்மூன்றும் எட்டுமாகிய கூறுபாடுடைய ஈசானிமுதலிய ஐவகைச்சத்திகளாயும், ஆரணி செனனி முதலிய மூவகைச் சத்திகளாயும், நிவிர்த்தி பிரதிட்டை முதலிய ஐவகைச் சத்திகளாயும், வாமை சேட்டைமுதலிய அட்டசத்திகளாயும், பராவாகீசுவரி அபராவாகீசுவரி மனோன்மணி மகேசை உமை திரு வாணியென எழுவகைச் சிவபேதங்கட்கும் முறையே எழுவகைச்சத்திகளாயும், அத்தியானமிகமென்பமெ உன்மனை சமனை முதலிய கலைகளாயும், இன்னும் பலவேறுவகைப்பட்டு நிற்கும் அவ்வச்சத்திகளோடு புணர்ந்த சிவமும் அவ்வாறே பலவகைப்பெயர் பெற்று நிற்கும். அவ்வச்சத்திகட்கு இடமாய விந்துவும் அங்ஙனம் பலவேறுவகையான் விருத்திப்பட்டு அப்பெயர்பெறும். இவற்றினியல்பெல்லாம் ஆகமங்களுட்காண்க.

நான்காமதிகரணமுடிந்தது.

இரண்டாஞ்சூத்திரமுடிந்தது.

# மூன்றாஞ்சூத்திரம்.

உளதில தென்றலி னெனதுட லென்றலி
னைம்புல னொடுக்க மறிதலிற் கண்படி
லுண்டிவினை யின்மையி னுணர்த்த வுணர்த
மாயா வியந்திர தனுவினு ளான்மா. [லின்

எ-து. ௩-ம். எ-னின். ஆன்மப்பிரகாச முணர்த்துத னுதலிற்று.

எ-து. க-ரை. எ-னின சூத்திரக்கருத்துணர்த்துத னுதலிற்று. இ-ள் மேல அவையேதானே யெனவெடுத்துக்கொளளப்பட்ட உயிர் சூனியமுதலியவற்றுள் ஒன்றாகற்பாற்றென அவ்வமதம்பற்றி நிகழூஉங்கடாவை யாசங்கித்து உயிர் அவற்றிற்கு வேறாயுண்டென்பது கருத்தளவையான் விளக்கி மேலைச்சூத்திரத்தின் உயிர்க்கண்மேல வைத்தோதிய முதலவனிலக்கணத்தை வலியுறுத்துதல் மூன்றாஞ்சூத்திரத்தின் கருத்து. எ-று.

முதன்மையுடைமைபற்றி உலகிற்கு நிமித்தகாரணமாகிய பதிப்பொருளுண்டென்பது முதற்சூத்திரத்துட் கூறி, காரணமாதற்பொதுமையான் இயையுடைமைநோக்கித் துணைக்காரண முதற்காரணங்களது உண்மையும் அவற்றான் உலகங் காரியப்படுமாறும் இரண்டாஞ்சூத்திரத்துட்கூறி அவற்றை ய்ப்பயன்கோடற்குரிய பசுக்களதுண்மைக்குப் பிரமாணம் ஈண்டுக் கூறுகின்றாரென்றுணர்க. இதனானே சூத்திரவியையும் இனிது விளங்கும்.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு. இலதென்றன் முதலிய அறுவகையேதுக்களானும் மாயாவியந்திரதனுவென்னும்

பெயரடையாற்பெறப்படும் குறிப்பேதுவானும் இவற்றின்வேறாய இவ்வுடம்பினுள் உயிரெனப்படுவதொன்றுண்டு எ-று

இது பூட்டுவிற்பொருள்கோள்.

உளதென்றது சாதியொருமை. அறிதலினென்றது ஐம்புலனொடு சென்றறியையும்.

தனுவினுள்ளான்மாவுளதென்றாரேனும், காணப்பட்ட உடம்பால் காணப்படாத உயிருக்குண்மை கூறவேண்டுதலின் இவ்வுடம்பு சூனியமுதலியவற்றின் வேறாய ஆன்மாவையுடைத்தென உடம்பின்மேல் வைத்தோதுதல் ஆசிரியர் கருத்து. அற்றாகலினன்றே பதியுண்மை உலகின்மேல் வைத்தோதியதூஉமென்பது.

ஈண்டு மேற்கோள் ஒன்றாயினும் எழுவகைப்பட்ட வேறுவேறு மறுக்குமேதுக்கள் ஏழாகலான் ஆன்மாவுளதென்னுமேற்கோள் அவற்றொடு தனித்தனிசென்றியைதலின் ஏழதிகரணத்ததாயிற்று இச்சூத்திரமென்றுணர்க. இதனுட் கூறிய வேதுவேயேதுவும் மேற்கோளும் அதுவேயாகலான் ஏனைச்சூத்திரங்களுட்போல வேறேதுக் கூறவேண்டாமையின், இவையேதுவாமாறும் இவற்றான் மேற்கோளைச் சாதிக்குமாறும் இனிது விளக்கிவலியுறுத்துதன் மாத்திரையே ஈண்டுரைக்கப்படுவதெனக் கொள்க.

## முதலதிகரணம்.

ஈண்டு இலதென்றலின் ஆன்மாவுளதென்றது.

எ-து. மே-ள். எ-னின். சூனியான்மவாதி, தேகான்மவாதி, இந்திரியான்மவாதி, அந்தக்கரணான்மவாதி, சூக்குமதேகான்மவாதி, பிராணான்மவாதி, விஞ்ஞானான்மவாதி, சமூகான்மவாதி என்னுமெண்மருள் அந்தக்கரணான்மவாதிகள் ஆன்

மாவினதிலக்கணங்கூறும்வழி அநுவாதமுகத்தான் மறுக்கப் படுதலின் அவற்றையொழித்து, ஒழிந்த எழுவாமதங்களையும் முறையே மறுத்து உயிருண்மை சாதிப்பான்றொடங்கி, அவற்றுள் இது சூனியமேயான்மாவென்னு மாத்துமிகர் கூறுங் கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட்டனுதலிற்று. இ-ள் வெ-டை.

ஆன்மாவிலதென்றலினென வருவித்துரைக்க.

எவற்றினையும் அன்றன்றெனவிட்டு ஆன்மா இலதென்று நிற்பது உளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

எ-து பொ-ரை. எ-னின். ஆன்மா இலதென்றலே பற்றி அஃதுண்டெனக் கோடல் முயற்கோடில்லையென்னு மேதுவால் அஃதுண்டெனச் சாதித்தலோடொக்கும் என்னுங் கடாவை யாசங்கித்து அதனாற்றபரிய முணர்த்துதனுதலிற்று இ-ள். ஆன்மா இலதென்னுஞ் சூனியான்மவாதிகளும் இல்லையென வாளா கூறுதலமையாமையின் உடல் பொறி விடயமனைத்தினையும் முறையானே இஃதான்மாவன்று இஃதான்மாவன்றென ஒரோவொன்றாகக் கழித்து இவ்வாறாகலின் ஆன்மாவென்பது சூனியமென்று அங்ஙனங் கூறுபவாகலான் அவற்றை ஒரோவொன்றாக விட்டு அங்ஙனங்கூறிக்கொண்டு நிற்பதோரறிவுண்மையின் அவ்வறிவே மேல் அவையே தானேயாயென்பதனுள் ஆகமவளவையாற் சாதித்துப்போந்த ஆன்மாவென்றவாறும். ஈண்டிலதென்றலின் ஆன்மாவுளதென மேற்கொண்டது. எ-று.

அங்ஙனமறியுமறிவுஞ் சூனியமேயெனின், அஃது என்னை யீன்றாண்மலடியென்பதனோடொக்குமென்றொழிக வென்பது கருத்து.

ஞானமை ஈண்டுச் சூனியப்பொருட்டு. சூனியமாவது உள்ளதுமன்று இல்லதுமன்று இரண்டுமாவதுமன்று வேறுமன்றெனப்படும் பாழ்.

ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது.

*அன்றன் றெனநின் றனைத்தும்விட் டஞ்செழுத்தாய்*
*நின்றொன் றுளத்ததுவே நீயனைத்து—நின்றின்று*
*தர்ப்பணம்போற் காட்டலாற் சார்மாயை நீயல்லை*
*தற்பரமு மல்லை தனி.*

எ-து. உ-ம். எ-னின் அவ்வறிவை உடல் பொறி விடயமுதலியவற்றின் வேறாகப் பிரித்துக் காணுமாறும் அதுவே உயிராமாறுந் தெரித்துணர்த்தி அதனை வலியுறுத்துதனுதலிற்று இ-ள். அனைத்தும் நின்று எ-து உடல் பொறி விடய முதலிய அனைத்தினும் அதுவது தானாகின்று—அன்று அன்று என விட்டு எ-து. முறையானே இது நானன்று இது நானன்றென ஒரோவொன்றாகக் கண்டு நீக்கியவழி—அஞ்செழுத்தாய் ஒன்று நின்றுளது. எ-து அவ்விடத்து அகரமுதலிய சூக்குமபஞ்சாக்கரரூபமாயறிந்து வந்ததோரறிவு நிலைபெற்றுளதன்றே—அதுவே நீ எ-து அதுவு நானன்றெனக் கழிப்பின் அங்ஙனங் கழித்த உணர்வு வேறுண்டெனப்பட்டு மேலும் வரம்பின்றியோடுமாகலிற் சூக்குமபஞ்சாக்கரரூபமாய் நின்றறிந்து வந்த அவ்வறிவுதானே நீயென்பதறிவாயாக அற்றேல், மாயேயமுஞ் சிவமுமுளவெனப்படு மேலைச்சூத்திரங்களாற் சாதிக்கப்பட்டமையின் அவையே அவ்வறிவினையுமறிந்து நீக்குமெனவமையுமாகலான் வரம்பின்றியோடுமாறில்லையாலெனின்,—சார்மாயை எ-து. நிலனுற சாரப்ப _ மாயை—அனைத்தும் நின்று இன்று தர்ப்பணம்போல ட்டலான் நீ அல்லை. எ-து. நிலமுதலிய காரியமனைத்து

மாய் நின்றொடு விரவி நின்று இப்பெத்தகாலத்துக் கணணுக்குக கணணாடிபோல் உனக்கறிவை விளக்கி நிற்றன்மாத்திரையேயன்றி அறிவதன்றாகலான் நீ அம்மாயையல்லை.—தற்பரமும அலலை. எ-து. மாயையான் விளஙகி யறியும நீ அதற்கு அதீதமாகிய சிவமுமலலை:—தனி எ-து அவற்றினவேறு. எ-று.

விட்டவழியென்பது விட்டெனத் திரிந்துநின்றது.

அவ்வறிவாவது இதுவென்றுணர்ததுவார் அன்றன்றென நின்றனைததும் விட்டவழியென ஏதுப்பொருளை அநுவதிதது அஞ்செழுததாயொன்று நின்றுளதென அடையாளங் கூறினா. அஞ்செழுததாய் நின்றறியுமாறு வருகின்ற சூததிரததுட்பெறபபடும இதற்குப் பிறரெலலாங கூறியது கூறலெனனும வழுபபட மேலு மோரியையபினறி யுரைததார.

அனைததுநின்றென்புழி முன்னர்க் கண்ணுருபும பின்னர் ஆககசசொல்லுந் தாதுரைகக ஏகாரந் தேறறம். தற்பரமெனறது குறிபபேதுவாய நினறபெயா.

அனைத்து நின்றின்று தர்ப்பணம்போற்காட்டலால் சார் மாயை நீயலலை தறபரமுமலலை தனியொன்றதனானே வருகின்ற அதிகரணங்களுககெலலாந தோற்றுவாய செய்தவாறு மாயிறறு.

முதலதிகரணமுடிந்தது.

## இரண்டாமதிகரணம்.

இனி எனதுடலென்றலின் ஆன்மாவுளதென்றது.

எ-து. மே-ள். எ-னின். அவ்வறிவு உடம்பின்கணன்றி நிகழக் காணாமையானும் நானுணுகினேன் பருத்தேனென உடம்பினையே நானென்று வழங்கக் காண்டலானும் உடம்

பேயான்மாவெனத் தேகான்மவாதிகள் கூறுங்கடாவையாசங்கித்துச் சூத்திரத்தினிரண்டாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட்டனுதலிற்று. இ-ள் வெ-டை.

நான் பருத்தேன் சிறுத்தேன் கரியேன் மனிதன் பார்ப்பானென உடம்பின் குணவிசேடங்களை உபசாரத்தால் உயிருக்கேற்றி வழங்கினும் யானுடம்பு யானகை யானகால் எனவுடம்பை அவ்வாறு வழங்குவாரின்றி எனதென வேற்றுமைப்படவே யாவரும் வழங்கக் காண்டலின் அதுவே உயிர் வேறுண்டென்பதனை அறிவுறுக்குமென அவன் வழங்குமுறையேபற்றி அவனை மறுத்தவாறு.

என்பதி என்மனையென்றாற்போல என்கை என்காலென நிற்பதுளதாகலின் அதுவே அவ்வான்மாவாமென்றது

எ-து. பொ-ரை எ-னின் எனதுடலென்பது பிறிதின் கிழமைப்பொருட்படாது தலைமாத்திரையாய நிற்குமிராகுவை இராகுவினது தலையென்று வழங்குமாறுபோல அபேதம்பற்றியே வழங்கப்படுமென அமையுமெனனுங் கடாவை யாசங்கித்து அதன்றாற்பரிய முணர்த்துத னுதலிற்று இ-ள் இராகுவினது தலையென்றாற்போல்வன சிறுபான்மைவழக்கமாகலின் ஆண்டொற்றுமைப்பொருள் கோடலமையும் ஈண்டவ்வாறன்றி என்பதி என்மனைவி என்பொருள் என்றுவழங்குமாறுபோல என்கை என்கால் என்கண் என்செவி என்பொறி என்பிராணன் என்னறிவெனப் பலவாற்றானும் பெரும்பாலும் உலகத்து வழங்கக் காண்டலின் இவ்வழக்க மிகுதிப்பாடு பிறிதின்கிழமைப்பொருட்கணன்றி வாராமையான் அங்ஙனங்கூறிக்கொண்டு நிற்கும்பொருள் வேறொன்றுண்டென்பது பெறப்படுதலின் அதுவே மேலுரையளவைபற்றிச் சாதித்த ஆன்மாவென்றவாறாம். எனதுடலென்றலின் ஆன்மாவுளதென மேற்கொண்டது. எ-று.

எனதென்ற மாட்டி னெனதலா தென்னு
னனதலா துன்கைகால் யாக்கை—யெனதென்று
மென்னறிவ தென்று முரைத்துநீ நிற்றிகா
ணுன்னிலவை வேறா முணர்.

எ-து உ-ம் எ-னின். பதி மனைவிமுதலியபொருள்கள் தம்மின் வேறாதல் கண்டு பிறிதின்கிழமைப்பொருள்பட எனதென்றாற்போலனறிக் கைகான்முதலியவற்றைத் தற்கிழமைப்பொருள்பட எனதென்று கூறிநிற்றலின் அவ்விருவேறு மொழியுந் தம்முளொக்குமாறென்னையென்னுங் கடாவை யாசங்கித்து அதனைவலியுறுத்துதனுதலிற்று இ-ள். எனது அலாது என்னாது எனது என்றமாட்டின். எ-து. நீ உலோகாயதநூல் கேட்குமுன்னெல்லாம் பதி மனைவிமுதலிய புறப்பொருளையே உயிரெனக்கொண்டு மயங்கினாயன்றே அக்காலத்து அவற்றை எனதன்றென வேறுகாணாது தனித்தனி எனதென்றே தற்கிழமைப்பொருளாகக் கூறிக்கொண்டு நின்றாற்போல,—உனது அலாது உன்கை கால் யாக்கை எனது என்றும் என் அறிவது என்றும் உரைத்து நீ நிற்றிகாண் எ-து உனதன்றாகிய உன் கைகால் யாக்கைகளைத் தனித்தனி எனதென்றும் அங்ஙனமறிந்த பாசவறிவை என்னறிவதென்றுந் தற்கிழமைப்பொருளாகக் கூறிக்கொண்டு நீ யொருபொருள் வேறு நிற்கின்றாய் காண்—உன்னில் எ-து. உலோகாயதநூல் ஆராய்ந்தபின்னாப் பதி மனைவி முதலிய பொருள்கள் உனக்கு வேறாதல் கண்டாற்போலக் கை கால் முதலியவற்றினியல்புகளையும் ஏதுக்கண்முதலியவற்றான் ஆராய்ந்து பார்த்தியாயின்,—அவை வேறாம் உணர் எ-து. அக்கைகான் முதலியன உனக்கு அன்னியமாம் அதனையறிவாயாக. எ-று.

இன் உவமவுருபு.

உன்றலாதெனைபதனைக கைகால் யாக்கைகளோடு தனி த்தனி கூட்டுக.

இரண்டாமதிகரணமுடிந்தது.

## மூன்றாமதிகரணம்.

இனி ஐம்புலனறிதலின் ஆன்மாவுளதென்றது.

எ-து. மே-ள். எ-னின். ஐம்பொறிகள் ஐம்புலனகளையு றியுமெனறல எல்லாாக்குமொப்ப முடிந்தமையின் அவை உட ல்போற சடமன்மை பெறப்படுதலானும், அவறறை எனதெ ன்னும வழக்கம பெரும்பானமையன்றாகலானும, அவையே உயிராதலமையுமென இந்திரியானமவாதிகள் கூறுங்கட வையாசங்கித்து மூன்றாங்கூறறைக் கணணழித்துரைத்து மேறகோடனுதலிறறு இ-ள் வெ-படை.

ஐம்புலனாகிய சத்தப்பரிசரூபரசகந்தங்களை இந்திரியங்கள ஒனறறிந்ததொனறறியாமையின இவ்வைந்தினுனும ஐம்பய னுமறிவதுளதாகலின அதுவே அவ்வான்மாவாம என்றது.

எ-து. பொ-ரை. எ-னின. ஐம்புலனறிதலின ஆன்மா ஐம்பொறியினவேறெனச சாதித்தறகேதுவாமாறு யாங்ஙன மென்னுங்கடாவை யாசங்கித்து அதனாறபரிய முணாத்துத னுதலிற்று. இ-ள் வெ-பபடை.

ஒன்றறிந்த தொன்றறியா தாகி யுடன்மனனி
யனறும் புலனுயவ வனுசெழுந்தை—பொனறறிது
வுளளதேயாகி லதுநீ தனித்தனிகண
டுளளலவை யொன்றல்லே யோா.

எ-துஉ-ம். எ-னின். இந்திரியங்கள் ஒன்றறிந்த தொன் றறியாதென்றதொக்கும் ஐந்துமைந்துயிரெனக் கோடலின்

அதனுமெனமக்காவதோரிழுக்கில்லை. இனி இவ்வைந்தையுங் கொண்டு ஐம்புலனையும் ஒருபொருளே யறியுமெனின் அதற்குப் பிரமாணங் கண்டிலம் குடத்தைக் கண்ட யானே அதனைத் தீண்டினேனென மறிந்துணர்வு நிகழ்தல் ஐந்துமோருடம்பினகண்ணே நிலைபெறு மொற்றுமைபற்றியமையுமெனக் கோடுமெனனுங்கடாவை யாசங்கித்து அதனை வலியுறுத்துதனுதலிற்று. இ-ள் உடல மன்னி ஒன்று அறிந்தது ஒன்று அறியாதாகி. எ-து உடம்பின்கண்ணே நிலைபெற்று ஒருவிடயத்தை யறிந்த இந்திரியம் மற்றொருவிடயத்தை அறியாதாய—அன்றும் புலன் ஆய அவ்வஞ்செழுத்தை. எ-து. அங்ஙனந் தம்முண் மாறுபடுஞ் சத்தமுதலிய புலன்களைச் சூக்குமபஞ்சாக்கரத்தாற் செலுத்தப்பட்டாராய்ந் தறிகின்ற அவ்வைம்பொறிகளின் றொழிற்பாட்டை—அறிதல் ஒன்று உள்ளதேயாகில. எ-து கண் உருவத்தையறிவது செவி ஓசையையறிவதென்று இவ்வாறுணர்தலையுடையதோர்பொருள் இல்லதோ உள்ளதோவென வினாயினார்க்கு இல்லதெனின் இவ்வறிவு நிகழாதாதல்வேண்டுமாகலான் உள்ளதேயாமெனின—அது நீ எ-து. அவ்வாறுணர்வதியாது அதுவே நீயாகியவான்மா அவ்வாறுணர்வனவும் அவ்விந்திரியங்களேயென்றுறபடுமிழுக்கென்னையெனின்—அவை தனித்தனி கண்டு உள்ள எ-து அவ்விந்திரியங்கள் தத்தமவிடயங்களை வேறு வேறு கண்டறிதன்மாத்திரையேயன்றி இத்தொழிற்பாட்டையுடையேம் யாமெனவும் அறியமாட்டாவாகலான்—ஒன்று அலலை ஓ. எ-து. அவ்வைந்தின் றொழிற்பாட்டையுமறிந்து அவற்றின் வரும் பயன்கொள்வதாய நீ யவற்றின் வேறுவை அதனையாராய்ந்தறிவாயாக. எ - று.

ஆகியெனனுஞ் சிறப்புவினை ஆயென்னும் பொதுவினையோடு முடிந்தது, இவனுமிவளுஞ் சிற்றிலிழைத்துஞ் சிறுப

றையறைந்தும் விளையாடுப என்றாற்போல. ஆயென்பது வினைத்தொகை. அவ்வஞ்செழுத்தென்க அஞ்செழுத்தாற் செலுத்தப்பட்ட பொறியை ஆகுபெயரான் அஞ்செழுத்தென்றா அஃதிருமடியாகுபெயராய ஐம்பொறியின் றொழிற்பாட்டையுணர்த்திநின்றது.

உள்ளல உள்ளலனென்க.

இம்மூன்றதிகரணங்களானுஞ் சாக்கிரத்தினிகழுமியலட் பற்றி ஆன்மாவினுண்மை சாதிக்கப்பட்டது

மூன்றாமதிகரணமுடிந்தது.

## நான்காமதிகரணம்.

இனி ஒடுக்கமறிதலின் ஆன்மாவுளதென்றது

எ-து மே-ள. எ-னின் *"நேசவிந் திரியங் கடகு நிகழறி விதனாற் காணும்" என நீவிரங் கோடலின் அவவிந்திரியங்களின் வேறாய் அங்ஙனமறிவது புரியட்டகவுடம்பேயாமெனவமையும் அஃது புறத்து நிகழாதாயினும் அகத்தே நின்று இந்திரியங்களைப் புறத்திற் செலுத்தியறியுமெனக் கோடுமெனச் சூக்குமதேகான்மவாதிகள் கூறுங்கடாவை யாசங்கித்து நாலாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட்னுதலிற்று. இ-ள. ஐம்பொறிகளுமொடுங்கின சொப்பனத்தானத்தின் நிகழ்ந்தவற்றையறிதலின் ஆன்மா வேறுண்டு. எ-று

ஒடுக்கம் ஆகுபெயர்.

நனவின்கட் கனவுகண்டாமென்றுங் கண்டிலமென்றும் நிற்பதுளதாகலின் அதுவே யவ்வான்மாவாமென்றது.

---

* சிவஞானசித்தி, இரண்டாஞ்சூத்திரம் ௯௪. ஓசை நற்பரிச.

எ-து. பொ-ரை. எ-னின். சொப்பனத்தின்கணிகழ்ந்தவற்றையறிவதுஞ் சூக்குமதேகமேயாகலின் இது சித்தசாதனமாமாலென்னுங்கடாவை யாசங்கித்து அதன்குற்றபரியமுணர்த்துதனுதலிற்று. இ-ள். வெ-டை.

இஃதென்சொல்லியவாறோவெனின் ஒடுக்கமறிதலின் என்றது ஒடுக்கத்தினிகழ்ந்தவற்றை நனவின்கண் மயங்கியறிதலென்னும் பொருட்டாதலாற் சித்தசாதனமாதல் யாண்டையதென விடுத்தவாறென்பது. கனவுகண்ட சூக்குமவுடம்பே நனவின்கண் அதனையறியுமாயிற் கண்டபடியறியாது மயங்கியறிதல் கூடாமையின் உயிர்க்காயின் அதுபோல ஒருதன்மைத்தாகலின்றி அகத்துச்சேறலும் புறத்துச்சேறலும் வேறுபாடுடைமையான் அதுபற்றி மயங்கியறிதல் கூடுமாகலின் அங்ஙனமறியுமுயிர் வேறுண்டென்பது கண்டுகொள்க.

அவ்வுடலி னின்றுயிர்ப்ப வைம்பொறிக டாங்கிடப்பச்
செவ்வி தினவ்வுடலிற் சென்றடங்கி—யவ்வுடலின்
வேறொன்று கொண்டு விளையாடி மீண்டதனை
மாறலுட னீயல்லை மற்று.

எ-து. உ-ம். எ-னின். கனவின்கட் செல்லுமாறும் ஆண்டு நிகழுமாறும் மீளவருமாறுமுணர்த்தி அதனை வலியுறுத்துதனுதலிற்று. இ-ள். அவவுடலின் நின்று உயிர்ப்ப ஐம் பொறிகள தாம் கிடப்ப எ-து. மேல் உயிரன்றெனக் கூறிப் போந்த தூலவுடம்பினின்று உயிர்ப்பனவாய ஐம்பொறிகள் ஆண்டே உயிர்ப்பொழிந்து கிடப்ப—அடங்கிச் செவ்விதின் அவ்வுடலில் சென்று. எ-து. அவை யங்ஙனங்கிடந்தவழிப் புறத்து நிகழுந் தொழிற்பாடெல்லாமடங்கி அவ்வுடம்பினுள்ளால் வருத்தமின்றிச் சென்று—அவ்வுடலின் வேறு ஒன்று கொண்டு விளையாடி. எ-து. அத்தூலவுடம்புபோல அதனின்

வேறாயதோருடம்பையெடுத்துக்கொண்டு வேறோராற்றாற்க ண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று விளையாடி—மீண்டு அதனை மாறல். எ-து. மீளவதனை மாறி மேற்சேறலான்— நீ உடல் அல்லை மற்று. எ-து நீ அசூக்குமதேகமல்லை அத னின் வேறாவை எ-று.

உயிர்ப்பவென்றது அன்பெறாத அகரவீற்றுப் பலவறி சொல. உயிர்த்தல தொழிற்படுதல

தாமும் மற்றும் அசை

மீண்டு மீள.

மாறல் மாறலாமெனக.

இவ்வதிகரணத்தாற் சொப்பனத்தினிகழு மியல்புபற்றி உயிருண்மை சாதிக்கப்பட்டது

நான்காமதிகரணமுடிந்தது.

## ஐந்தாமதிகரணம்.

இனிக் கண்படில உண்டிவினையின்மையின் ஆன்மாவு ளதென்றது.

எ-து. மே-ள். எ-னின் சொப்பனத் தானமாதனிரையி னன்றித் தொழிற்படாத சூக்குமதேகமபோலன்றிச் சுழுத்தி துரியங்களினுந்தொழிற்படுவதாய பிராணவாயுவே அடங்கு தல் விடுதல் செய்தறிவதாகிய ஆன்மாவாதலமையுமெனப் பிராணான்மவாதிகள் கூறுங்கடாவை யநுசரித்துச் சூத்திர த்தினைத்தீங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடலு தலிற்று. இ-ள். வெ-பனை.

உண்டிவினை உம்மைத்தொகை. அஃது * "உண்டியும் வினையு மின்றிக கிடந்து" என வழிநூலாசிரியா கூறியவாற றானு மறிக

ஒடுங்கினவிடத்து இன்பதுன்பஞ் சீவனம் பிரகிருதிக கின்மையின ஒடுங்காதவிடத்து இன்பதுன்பஞ் சீவியாநிறப துளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

எ-து. பொ-ரை. எ-னின். கணபடைகொண்டவழி உணடிவினையிலலையென்றது உடறகோ பிராணவாயுவுக்கோ வென வினுயினுர்க்கு உடமபு உயிரன்மையான் அதறகவை யில்லாமைபறறி ஈணடைககாவதோரிழுககிலலை இனிப் பிரா ணவாயுவுககென்னின் அது துயின்றெழுந்தபின்னர்ச சுகமா கத துயினறேனென்றறிதல பிறிதோராறறுற பெறப்படாதெ னனும் அருததாபததியான் ஆணமெ இனபதுனபநுகாசசி யுணடெனபது பெற்றும். விழித்துழிபபோல உறஙகுழியும பிராணவாயுவியஙகுதலான் வினையுணமையுங கணடாமாக லின் அதறகு அவையாணடில்லையெனறல மாறுகோளபோ லுமெனனுங்கடாவை யாசஙகிதது அதன்றுறபரிய முணர்த துதனுதலிநூறு. இ-எ ஈணடு உண்டியெனறது விடயஙகளி னிடமாக வரும் இன்பத்துன்ப நுகாசசியை வினையென்றது உடம்பு சேட்டித்தலையாகலின். இவ்விரணடும பிராணவா யுவை யொழித்தெழுந்த கருவிகளெலலாமொடுஙகிய துயிலி டதது அஃதியங்காநிறபவும் உடம்பின்கணணே நிகழ்தலின் மையின் அவையொடுஙகாத நனவினிடத்து அவையிரணடும அதன்கணிகழ்தலுணமையின் அவவினமையுணமைகட் கேது வாகக கருவிகளையொடுககியும் ஒடுககாது நிறபதியாது அதுவே அவ்வான்மாவென்றவாறும். கண்படில் உணடிவினையின்மை யின் ஆன்மாவுளதென மேற்கொண்டது எ-று

* சிவஞானசித்தி, நான்காஞ்சூத்திரம். ௩௦. கணடுணர்.

பிராணவாயுவை யொழித்தொழிந்த கருவிகளென்பது ஆற்றலான் வந்தது.

இன்பத்துன்பநுகாச்சியை இன்பத்துன்பமென்றுபசரித்தார.

சீவனம் சீவித்தல் சேட்டித்தலென்றதாம்

செவவெணடொகை விகாரத்தாற்றொக்கது.

சீவியாநிற்பதென்பது சீவியாநிற்றலெனனுந் தொழிற்பெயர்மாத்திரையாய் நின்றது. "உறங்குவதுபோலும" என புழிப்போல.

உளதென்றது தனித்தனி சென்றியையும.

துயின்றுழியும் விழித்துழியுந் திரிபின்றி ஒருதன்மைத்தாதலபற்றி உடம்பு பிரகிருதியெனபபட்டது பிரகிருதிகெ ன்றது உருபுமயக்கம

இரணடுகாலத்துமொப்ப வியங்குதல்பற்றிப் பிராணவாயுவைப் பிரகிருதியெனககொண்டு அதற்கவையினமையினெ ன்றுரைப்பாரும, பிரகிருதிவிகாரமாகிய சித்தத்திற்கு அவையின்மையினெனவுரைத்தச சுழுத்தியினகணணுந் தொழிற்ப டுவதாய சித்தமேயுயிரென்னுஞ சித்தான்மவாதிகளை மறுத்தற்கெழுந்த திவ்வதிகரணமென ரூரைப்பாருமுளர்.

கண்டறியு மிவவுடலே காட்டொடுங்கக காணுதே
யுண்டி வினையின்றி யுயிர்த்தலால—கண்டறியு
முளளமவே றுண்டா யொடுங்கா துடனண்ணி
லுளளதா முணடிவினை யூன.

எ-து. உ-ம். எ-னின் துயிலிடத்துக் கருவிகளெல்லா மொடுங்குதலின் இன்பத்துன்பநுகர்ச்சியுஞ் சேட்டையும

பிரகிருதிக்கில்லையாயினவாகலான் அதுபற்றிப் பிராணவாயுவை யான்மாவென்றற் கிழுக்கென்னை யென்னுங்கடாவை யாசங்கித்து அதனைவலியுறுத்துதனுதலிற்று. இ - ள். கண்டு அறியும் இவ்வுடலே. எ-து. கண்டறிதற்கு நிலைக்களமான இவ்வுடம்பின்கண்ணே—காட்டுக காணாதே ஒடுங்க. எ-து. காட்டாய கருவிகள் தொழிற்படாதேயொடுங்கவும்—உண்டி வினை இன்றி எ-து அவையொடுங்கியவழி உண்டியும் வினையும் பிரகிருதிக்கில்லையாகவும்—உயிர்த்தலான். எ-து பிராணவாயு நிலைபெற்று இயங்குதலான்,—கண்டு அறியும் உள்ளம வேறு உண்டு எ-து. கண்டறியு முரிமையையுடைய உயிர பிராணவாயுவின வேறாயுண்டு—ஒடுங்காது உடல் நண்ணிலூன் உண்டி வினை உள்ளதாம். எ-து அவ்வுயிரொடுங்காது அவ்வுடலின்கணெய்திற்றாயின் அவ்வுடம்பு கருவிகளின் றொழிற்பாட்டானாய உண்டியும் வினையுமுடைத்தாம —ஆய. எ-து அதனையாராயந்தறிவாயாக. எ - று.

இது அருத்தாபத்தியளவை.

கண்டறிதல் ஒருபொருட்பன்மொழி.

இன்றியென்னும் வினைக்குறிப்புச் செயவெனெச்சத்திரிபு. சிறப்புமமைகள் தொக்கன ஆவை *"அறிந்திடா துடலுறகத் தறிவின்மை கரண மின்மை—யறிந்திடு முதலி யாகினதிற்கக் கரணம் போகாது" என்னும் பொருள் விளைந்து நின்றன.

ஊன் ஆகுபெயர்.

உயிர் வேறுண்டென்றதனை வலியுறுத்துவார் உடம்பாட்டுமுகத்தானு மோதினார்.

* சிவஞானசித்தி, மூன்றாஞ்சூத்திரம். ௪. அறிந்திடும.

இவ்வதிகரணத்தானே சுழுத்தி துரியங்களினிகழுமிய ல்புபற்றி உயிருண்மை சாதிக்கப்பட்டது இதுகாறுஞ் சார் மாயை நீயல்லையென்றதனை வலியுறுத்தியவாறு

ஐந்தாமதிகரணமுடிந்தது

## ஆறாமதிகரணம்.

இனி உணர்த்தவுணர்தலின் ஆன்மாவுளது என்றது.

எ-து மே-ள. எ-னின் பிரமப்பொருள மேற்கூறிப்போ ந்த சடப்பொருளகள்போலன்றிச சித்தாகலான் அதுவே உயிராதலமையுமென விஞ்ஞானான்மவாதிகள கூறுங டாவை யாசங்கித்து ஆறுங்கூற்றைக கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இ-ள் தொழிற்படுங்கருவிகளொன் றுமின்றிக கேவலமாய அதீதாவத்தையினின்றுழி அறியுமா றின்றிப் பின்னாக கலைமுதலிய கருவிகளால அறிவிக்கவறி ந்து வருதலுண்மையின் ஏககாலத்துங திரிபின்றியறிந்தாங றிந்து நிற்குஞ் சித்தாகிய பிரமத்திற்கு இத் தகைமையான் அங்ஙனமுணருமான்மா வேறுண்டு. எ று.

உணர்த்தவுணர்தலெனவே முன்னுணராது கிடத்தல் பெற்றாம்.

அவனறிந்தாங்கறிவனென்றறிவிக்கவறிந்து உபதேசி யாய் நிற்பதுளதாகலின் அதுவேயல்வான்மாவாமென்றது.

எ-து. பொ-ரை. எ-னின் அறிந்தாங்கறிவதாகிய பிரம ப்பொருள் அவிச்சைக்காலத்துக் கருவிகளோடுகூடியன்றி யறியாதெனக் கோடுமாகலின அதுபற்றி உயிர் வேறுண்டெ ன்றல் பொருந்தாதென்னுங்கடாவை யாசங்கித்து, அவ்வளவி னவன்மகிழ்க வென்னுநியாயத்தால வேறு மதன்றுறபரிய முணர்த்ததனுதலிற்று. இ-ள் கருவிகளோடு கூடியவழி

யுந் தன்னியல்புணருமாறின்றி அம்முதல்வன் இதுபோலமறந்து மறந்தறிதலின்றி அறிந்தவாறேயறிநது நிற்கும பேரறிவுடையனென வேதாகமஙகளானறிவிக்கவறிநது குரவனறிவுறுக்கு முபதேசமொழியைப் பெறறுடையதாய நிறபதொன்றுளதாகலின அதுவே மேலுரையளவையாற சாதிததுப் போநத ஆன்மாவெனறவாறும உணர்ததவுணர்தலின் ஆன்மாவுளதென மேற்கொணடது எ - று.

அறிந்தாஙகென்பது அப்பொருட்டாதல் "எண்ணிய வெண்ணியாங கெய்துப" என்பதனானுமறிக இதற்குப் பிற வாறுமுரைப்ப அவையெலலாம பொருந்தாமை யோரந் துணாக.

அறிந்து மறிவதே யாயு மறியா
தறிநததையும விட்டங் கடங்கி—யறிநத
தெதுவறிவு மனறுகு மெயகண்டா னென்றி
னதுவதுதா னெனனு மகம.

எ-து. உ-ம். எ-னின். கருவிகளோடு கூடியவழியும் அவிசசை நீஙகாமையின் விடயஙகண்மாததிரையேயறியும ன்றித தன்னியலபறியுமாறிலலை அஃதுபதேசத்தாலறியற்பாலதேயாமாகலான் அதுபறறி இழுககென்னையென்னுங்கடாவை யாசஙகிதது அதனையும மேறகூறிய நியாயத்தானுடம்பட்டு இன்னுமொருதாறபரிய முரைககுமுகத்தானே விடயஙகளையறிவுழியும் படும் வேறுபாடுகூறி அதனை வலியுறுத்துதனுதலிற்று. அவ்வறிந்தாங கறியுமாறும் உயிர் மறநது மறந்தறியுமாறும் தெரித்துணர்ததி வலியுறுத்ததனுதலிற்று. எனினுமமையும். இ-ள். அறிநதும் அறிவதே ஆயும் அறியாது எ-து. கருவிகளெல்லாவற்றோடுங் கூடிச் சாக்கிரத்தானத்தினின்று விடயங்களையறியுமிடததும் ஒருஙகேயறியமாட்டாது ஒன்ற

னையயறிந்தும் ஒன்றனையறியப்புகுவதாயும் முன்னறிந்
தொன்றனை அறியாதொழிந்தும—அறிந்ததையும விட்டு
அஙகு அடங்கி. எ-து. இஙஙனமொரோவொனறுக அறியப
பட்ட விடயததையும இடையீடனறி அறியமாட்டாது விட்
டுவிட்டாஙகே ஐந்தவததைப்பட்டடஙகி—அறிந்தது எது.
எ-து மீளவறிந்து வருதல கணகூடாகக காணபபடுதலான்
அஙஙனமறிந்து வந்த பொருள யாது அது சடமனறெனபது
மேறகாட்டபபட்டது முனனரும காட்டபபடும—அறிவும
அன்று எ-து. ஒன்றுக இயலபாகவுணாதலே பேரறிவாக
லின அதுவமன்றும—மெய கணடான ஒனறின். எ-து இனி
மெய்யாகிய சித்தாநதநெறியினையுணாநதோன் வேறெனனை
யோவெனை மனமொருஙகியாராயுமாயின—அது அது தான
என்னும அகம ஆகும எ-து காடடுமொளிககு வேறுய கண
ணொளிபோல அவவறிவிறகு வேறுய அதுவதுவே தானெ
னச சாாநததினவணணமாய நினறறியுமியலபையுடைய உயி
ராம. எ - று

அறிந்தும் அறிவதேயாயும என்னும் உம்மைகள எணணி
ன்கண வந்தன. அறியாதுமென்னு மெணணுமமையும விகாரத
தாறறொககது. அறிந்ததையுமென னுமுமமை இழிவுசிறப்பு
அறிவுமென்னுமுமமை இறநததுதழீஇயது ஏகாரம அசைநிலை

அங்கு உணர்த்துமுறைமைத் தாணமாகிய இலாடததி
னென்றவாறு.

அறிந்ததையும் விட்டங்கடஙகி யறியுமாறு வருகின்ற
சூத்திரத்திறுதியினும், அதுவதுதானெனச சார்ந்ததின்வண
ணமாமாறு உணமையதிகாரததும பெறப்படும்.

அறிநதுமறிவதேயாயுமறியாதறிநததையும் • விட்டங்கட
ங்கியறிநதநெது என்பதற்கு ஓதியதனை ஓதியபொழுதேயுண
ர்நதும் பலகாலோதியுணர்வதாயும் பலகாலோதியுமுணர்தலி

ன்றியும் உணர்ந்ததனையும் பின்னர் மறந்தொழிந்தும் இவ்வாறேறுதியுணர்ந்ததியாதென்றுரைத்தலுமொன்று. இப்பொருட்கு அடங்கியெனபுழியும் எண்ணும்மை விரித்துரைக்க.

இங்ஙனம் மூவகைப்படுத்துரைக்கவே, உணர்த்தவுணர்தலென்னுமேதுவான் முறையே அதீதத்தின்கணிகழுமியல்புபற்றியும் சுத்தத்தின்கணிகழுமியல்புபற்றியும் உணர்த்துமுறைமைக்கணிகழுமியல்புபற்றியும் உயிருண்மை சாதிக்கப்பட்டது. இது தற்பரமுமல்லை தனியென்றதனை வலியுறுத்தியவாறுகாண்க.

விஞ்ஞானமே ஆன்மாவென்னும் புத்தரின் யோகாசாரன்மதத்தை மறுத்தற்கெழுந்தது இவ்வதிகரணமெனக்கொண்டு அதற்கியையவுரைப்பாருமுளர்.

ஆறாமதிகரணமுடிந்தது.

## ஏழாமதிகரணம்.

இனிமாயாவியந்திர தனுவினுள் ஆன்மாவுளதென்றது.

எ-து மே-ள் எ-னின். உடம்புமுதலியவற்றுள் ஒரோவொன்றே ஆன்மாவாதலின்றென்றதொக்கும் அவற்றுள் ஒன்று குறைந்தவழியும் அறிவு நிகழாமையானும் எல்லாங் கூடியவழி அது நிகழ்தலானும் அனைத்துங் கூடிய சமுதாயமே உயிராதலமையுமெனச் சமுகான்மவாதிகளாகிய சௌத்திராந்திகர் வைபாடிகர் கூறுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தினிறுதிக்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இ-ள். மாயாகாரியங்களான் யாக்கப்பட்டியன்ற சூத்திரப்பாவைபோலுமுடம்பின்கண்ணே அவற்றிற்கு வேறாய் ஆன்மாவுண்டு. எ-று.

எனவே அவையெல்லாம் மாயையின்காரியங்களாய் நிலைபெறுதனவாகலின் நிலைபேறுடைய உயிராகாவென்றவாறாயிற்று.

மாயை ஆகுபெயர் இகரம் விரித்தல்விகாரம்
அவைதாம் வெவ்வேறு பெயர்பெற்று நிற்றலான்

எ-து. ஏது. எ-னின். சித்தமுஞ் சித்தப்பகுதியுமாகிய அகச்சமுதாயமைந்தும் மாயாகாரியமென்பது எம்மனோர்க்கு உடம்பாடன்மையின் அதுபற்றி ஆன்மா வேறுண்டெனச் சாதித்தலமையுமாறெனனையெனுங்கடாவை யாசங்கித்து அவ்வளவினவன்மகிழ்கவெனனு நியாயம்பற்றி வேறுமோராற்றாற் சாதித்தனுதலிற்று இ-ள் நீ ஐந்துசந்தமெனக் கொண்ட மாயாகாரியங்கள் ஆன்மாவென்பப் பெயர்பெறுமாறின்றி வேறுவேறு பெயர்பெற்று நிற்பனவாகலான் மாயாவியந்திர தனுவினுள் ஆன்மாவுளதென மேற்கொண்டது. எ-று.

வேறுவேறு என்பது வெவ்வேறென மரீஇயிற்று

கலையாதி மண்ணந்தங் காணிலவை மாயை
நிலையாவாந் தீபமே போல—வலையாமன்
ஞானத்தை முன்னுணர்ந்து நாடி லதுதனுவாந்
தானத்தின் வேறாகுந் தான்.

எ-து. உ-ம். எ-னின், அவை தனித்தனி வெவ்வேறு பெயர்பெறினுந் தொக்க சமுதாயத்தினைக்கண் ஆன்மாவெனப் பெயர்பெறுமெனக் கோடுமாகலின் அதுபற்றி யிழுக்கென்னையென்னுங் கடாவை யாசங்கித்து அவை வெவ்வேறு பெயர்பெறும்வழியும் அவர்கூறியவாறு பெயர்பெறாது வேறு பெயர் பெறுமாறும் அவை மாயாகாரியங்களேயாமாறும் அவை தொக்க சமுதாயத்தினும் ஆன்மாவெனப் பெயர்பெ

றாது வேறுபெயர் பெறுமாறுமுணர்த்தி அதனை வலியுறுத்து தனுதலிற்று. இ-ள். காணின் கலை ஆதி மண் அந்தம். எ-து. அங்ஙனஞ் சமுதாயமாதற்குரியவை யாவையென்று அளவைகளானறியப்புகிற் கலைமுதனிலமீறாகிய தத்துவங்களேயாம் - அவை மாயை நிலையாவாம் எ-து. அவையனைத்தும் மாயையின்காரியங்களாகலின் நிலையுதலின்றிச் சிலகால நின்றழிவனவாம் —ஞானத்தை அலையாமல் முன் உணர்ந்து நாடில். எ-து. அவை தொக்க சமுதாயத்தின் விளங்கித்தோன்றுவதாய ஞானத்தினியல்பை அசையாமற் கருத்தை யொருக்கி முன்னுணர்ந்து பின் அச்சமுதாயத்தை யாதெனநாடாயின்,— அது தீபமேபோலத் தனுவாம் எ-து. அச்சமுதாயங் கண்ணுக்கு விளக்குப்போல உயிர்க்குத் தூலசூக்குமபரங்களாகிய உடம்பாம் —தான் அதனின் வேறு ஆகும் தான். எ-து. அதனாற் கண் விளக்கின் வேறாயினாற்போல உயிர் அவ்வுடம்பின் வேறாம் எ-று.

ஆமென்பது மேலுஞ்சென்றியையும்.

மாயை ஆகுபெயர்.

தானென்பது முன்னையது எழுவாய், பின்னையது அசை.

அதனினென்பது அதனினென மரீஇயிற்று, "இதனை மெய்யெனக் கருதி" என்புழிப்போல.

இதனானே தனியென்றதனை வலியுறுத்தவாறு.

இவ்வாறு மூன்றுசூத்திரத்தானும் சைவாகமங்களுட் கூறப்படும் பதிமுதலிய பொருள்களதுண்மை அனுமானவளவையான் வலியுறுத்தப்பட்டது. ஆகமவளவையே யமையுமாகலின் அனுமானவளவை மிகையாம்போலுமெனின்,— ஆகாது; மந்தவுணர்வுடைய மாணாக்கர்க்கு வேற்றுச்சமயநூல்களை நோக்கியவழிச் சைவாகமப்பொருளின் மலைவு நிகழா

மைப்பொருட்மெ, கேட்டல சிநதித்தல் தெளிதல நிட்டை
யெனனு நானகுவகையானன்றி ஆகமஙகளைக கேட்ட துணை
யானே அநுபவங கூடாமையிற சிநதனை செயது வனமை
மெனமையுணாநது தெளிநதுகோடறபொருட்மெ கருதலள
வையும வேணடபபடுமாகலானெனக

எழாமதிகரணமுடிநதது

மூனறாஞசூததிரமுடிநதது.

பிரமாணவியன் முற்றிறறு.

உ

# இலக்கணவியல்

## நான்காஞ்சூத்திரம்.

அந்தக் கரண மவற்றினொன் றன்றவை
சந்தித்த தான்மாச் சகசமலத் துணரா
தமைச்சர சேய்ப்பநின் றஞ்சவத் தைத்தே.

எ-து சூ-ம் எ-னின. இதுவுமது

எ-து. க-ரை எ-னின சூததிரககருததுணர்ததுதனுத லிறறு இ-ள் பிரமாணம இலககணமிரண்டானும பொருணமை பெறறபாறறென்னு முறைமைபறறி மேறபிரமாணததாற் பெறுவிககபபட்ட பதி பாச பசுககளுககிலககணம் எதிர்நிரனிறையாக வைததுக கூறுவான்றொடங்கி அவற றுள் இது மேலடுகக நினற ஆனமாவினிலககணங் கூறுத னுதலிறறு

சொறபலகாமைப்பொருட்டும் ஒத்து வேறுயவழியும இயைபுடைமையுணாநது கோடறபொருட்டும ஈண்டு இதுவுமதுவென மாட்டெறிநதுரைதத ஆசிரியர், இங்ஙனமுரைதத க்கோடற் கேறபவன்றே ஈண்டு ஆனமாவினதுண்மையுணா த்துதனுதலிறறெனச சிறநதெடுததோதாது பொதுப்பட ஆன் மப்பிரகாசமுணாத்துதனுதலிறறென்றதூஉமென்க. இவவா றன்றி மேலைச்சூததிரத்தின் ஆன்மாவினதுண்மை கூறுமுகத தாற் றெருக்தோதிய அஞ்சவத்தையை ஈண்டிலககணங்

கூறுமுகத்தான் விரித்தோதப்படுதலின், இதுவுமதுவென்றது மேலைச்சூத்திரப்பொருளோடு மாட்டெறிந்ததென்றுரைப்பினுமாம். இதனானே சூத்திரவியைபு இனிது விளங்கும்.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு ஆன்மா அந்தக்கரணங்களாகிய மனம் புத்தி அகங்காரஞ் சித்தமென்னு நான்கனுள் ஒன்றன்றாயினும் நுண்ணுணர்வின்மையிற் சூழ்ச்சித்துணைவராகிய அமைச்சரோடு கூடிநின்று தன்றொழினடாத்தும் அரசன்போல, சகசமலத்தினான் உணர்வின்றிக் கஞ்சுகம்போலுங் கலாதிகளாற் பொதுவகையான உணர்வு நிகழினுஞ் சிறப்புவகையான் நிகழுமாறு அவற்றாற் பெறப்படாமையிற் சிறப்புவகையானுணருமாறு தனக்குச் சூழ்ச்சித்துணையாகிய அவ்வந்தக்கரணங்களோடு கூடிநின்று சாக்கிர முதலிய ஐந்தவத்தையுமுடைத்தாம் எ - று.

எனவே, அங்ஙனநின்று அஞ்சவத்தைப்படுதல் ஆன்மாவுக்கு இலக்கணமென்றவாறாயிற்று. இஃது உயிர்க்குத் தடத்தலக்கணமெனப்படும் பொதுவியல்பு.

ஒன்றன்றாயினும் சகசமலத்து உணராது அமைச்சரேய்ப்ப அவற்றொடு சந்தித்துநின்று அஞ்சவத்தைத்தாமென வியையும்.

உணராது சந்தித்ததென்பது காரணகாரியப்பொருட்டாய் நின்றது. சந்தித்தது வினையெச்சமுற்று.

இவ்வாறன்றி ஆன்மா அவற்றுள் ஒன்றன்றாயினும் சகலமலத்துணராமையால் அவற்றொடு சந்தித்தது சந்தித்தவழி அவையுந்தானும் அமைச்சரசெய்ப்ப நிற்றலான் ஐந்தவத்தைத்தாயிற்று எனவதிகரணம் பகுத்துக்கோடற்கேற்ப வேறு வேறு வினைமுடிபு செய்துரைத்தலுமொன்று.

வடமொழிசசூததிரததோதுதலின் ஈண்டும் ஆயினுமெனவருவிதது ஒருதொடராக வைததுரைக்க அந்தககரணமவறறிஞென்றனறாயினுமெனவே, அவறறிஞென்றனறாதலும அநுவாதமுகததால ஈணடேபெறறும இஃதுணராதார அந்தககரணமவறறிஞென்றன்றெனறதனை வேறுதொடராக வைததுரைப்ப அங்ஙனமுரைப்பின்,முன வருவனவற்றை அவாயநினறு ஒருபொருணமேல் வாராமையின் ஒருசூததிரமாதறகேலாமையறிக

அவை சநதிததென்புழி ஒடுவுருபு விகாரததாறறொககது, இரணடாவது விரிபபினுமமையும

ஆனமாவெனபது மேலைசசூததிரததினினறும வருவிததுரைககறபாலதாகவும, ஈணடு வேறோதியது ஓததுவேறுதலபறறியென்றுணாக

ஆனமாவெனனுஞ்சொறகுப பொருள் வியாபகமெனபதூஉம சிததசிததெனபதூஉமாம

மலத்து மலத்தாலெனவிரிகக

அமைசசரசு அமைசசரொடு கூடிய அரசென உருபும பொருளும உடனறொககன.

காரணபபொருட்டாய நின்றென்னும் வினையெச்சம அஞசவததைததெனனும வினைகுறிப்புமுறறோடு முடிநதது

இதனுள அநதககரணமவறறிஞென்றன்றென்றது ஓரதிகரணம, ஒன்றனறாயினுஞ் சகசமலததுணராதமைசசரசேயபபவவை சநதிததென்றது ஓரதிகரணம், அமைச்சரசேயப்பநினறஞசவதைந்ததேயென்றது ஓரதிகரணம், ஆக மூன்றதிகரணதத்து இசசூததிரமென்றுணர்க.

## முதலதிகரணம்.

ஈண்டு இவ்வான்மாவாவது அந்தக்கரணங்களாயுள்ள மனோபுத்தியகங்கார சித்தங்களில் ஒன்றன்று என்றது

எ-து. மே-ள். எ-னின். ஏனையவெல்லாம் வெவ்வேறு பெயர் பெற்று நிற்பனவாகலான் உயிராகா ஆயினும் மனமுதலிய அந்தக்கரணங்கள் சிந்தையைச் சீவனென்றுஞ் சீவனைச் சிந்தையென்றும் இங்ஙன முயிரென்னும் பெயரானும் வழங்கப்படுதலுண்மையானும் இந்திரியமுதலியவற்றை அவ்வாறு கூறாமையின் அஃதாகுபெயரென்றற்கேலாமையானும் அவையே தனித்தனி ஆன்மாவாமென்றல் அமைவுடைத்தென அந்தக்கரணான்மவாதிகள் கூறுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இது மேலைச்சூத்திரத்துள் ஓதற்பாலதேயாயினும் ஈண்டிலக்கணங்கூறும் வழியும் அவற்றொடு சந்தித்து அமைச்சரசேய்ப்ப நிற்பதென அவத்தைக்கேதுவாக எடுத்தோதவேண்டுதலின் ஈண்டெடுத்தோதுதல் "சிலவகை யெழுத்தின் செய்யுட் டாகிச்—சொல்லுங் காலை யுரையகத் தடக்கி—நுண்மையொடு புணர்ந்த வொண்மைத் தாகி" என்னுமிலக்கணத்ததாய சூத்திரத்துக் கேலாமையான் அதுபற்றி விதிமுகத்தானன்றி அநுவாதமுகத்தான் ஈண்டோதப்பட்டது. இ-ள். வெ-ளிடை.

ஈண்டு அந்தக்கரணமென்றது உள்ளந்தக்கரணமாகிய கலாதிகளினுஞ் செல்லாமைப்பொருட்டு மனோபுத்தியகங்கார சித்தங்களிலெனக் கிளந்தெடுத்துரைத்தார். கலாதிகளுண்டெனக்கொண்டோரின் உயிர் வேறுண்டெனக்கொள்ளாதார் இன்மையின் ஆண்டாசங்கை நிகழாமையானும் அமைச்சரோடு உவமிக்கப்பட்டு அவத்தைக் கேதுவாவன அம்மனமாதியேயன்றிக் கஞ்சுகத்தோடு உவமிக்கப்பட்டு

அசித்தின் நீங்காது உடனிற்பனவாய கலாதிகளன்மையானும் அவற்றை ஈண்டெடுத்தோதவேண்டாமையின் மனமுதலிய புறவந்தக்கரணங்களே ஈண்டுக் கூறநின்றனவென்பது கருத்து.

அவை தாம் பிரகாசமாய்நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்

எ-து எது எ-னின் * "மனமும் புத்தி யகங்காரஞ் சித்த நான்கு—மருவியான மாவே யென்ன வரும்" என நீயிருங்கோடலின் உயிர் அவற்றுளொன்றாதலமையுமென்றுற்படுமிழுக்கென்னையெனனுங்கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று. இ-ள் அவ்வந்தக்கரணங்கடாம் தம்மிற் கீழுள்ளவற்றை நோக்கிச் சித்தாய்நின்றே தம்மை நோக்கி அசித்தாய் நிற்றலால் தன்னை நோக்கியுஞ் சித்தாய் நிற்கும் இவ்வான்மாவாவது அந்தக்கரணங்களாயுள்ள மனோபுத்தி யகங்காரசித்தங்களில் ஒன்றன்றென மேற்கொண்டது. எ-று.

எனவே, உயிரான் அதிட்டிக்கப்பட்டு ஐம்பொறிகளறிந்த விடயங்களுள் ஒன்றனை இஃதியாதாகற்பாற்றெனச் சித்தஞ்சிந்தித்தறியும், யான் சிந்தித்தேனென்றறியமாட்டாது. மனம் அதனை இஃதின்னதாகற்பாற்றெனவும் அஃதாமோ அன்றோவெனவும் இவ்வாறு சங்கற்பவிகற்பஞ்செய்தறியும்; யான் சங்கற்ப விகற்பஞ்செய்தேனென்றறியமாட்டாது. அகங்காரம் அதனை இன்னதெனத் துணிவேன் யானென்று ஒருப்பட்டெழுந்தறியும்; யானொருப்பட்டெழுந்தேனென்றறிய மாட்டாது. புத்தி அதனை இன்னதிதுவென நிச்சயித்தறியும்; யானிச்சயித்தேனென்றறியமாட்டாது. ஆகலான் அவ்வாறின்றி அவற்றோடு கூடி யான் சிந்தித்தேன் பற்றினேன் எழுந்

* சிவஞானசித்தி, நான்காஞ்சூத்திரம். உ. கருவியா.

திருந்தேன் நிச்சயித்தேனென்றும் அதன்பின் அதுவதுவாய-பரிணமித்துச் சுகதுக்கமோகரூபமாய்த் தனைமாட்டு வந்த புத்தித்தத்துவத்தின் பரிணாமங்களைக் கலாதிகளோடு கூடி நின்று இது சுகம் இது துக்கம் இது மோகமென்றறிந்தும் யான் சுகித்தேன் யான் துக்கித்தேன் யான் மோகித்தேன் என்றறிந்தும் இங்ஙனம் பிறவற்றை நோக்கியுந் தன்னை நோக்கியுஞ் சித்தாகிய ஆன்மாத் தம்மை நோக்கிச் சித்தாகாத அந்தக்கரணங்களின் ஒன்றுமாறியாணுடையதென மறுத்தவாறாயிற்று. * "இவன்றானும் புத்தியுஞ்சித் திவனுமோ புத்தி" என வழி நூலாசிரியர் கூறியதும் இவ்வியல்பு நோக்கி.

ஈண்டுப் பிரகாசம் அப்பிரகாசம் என்பன சித்து அசித்தெனனும் பொருளவாம்.

ஏனையோரை நோக்கி அரசனுக்கு அணுக்கராதற் சிறப்புப்பற்றி அமைச்சரை அரசரென்று உபசரித்துக் கூறப்படுமாறுபோலப் புறக்கருவிகளை நோக்கி ஆன்மாவுக்கு அணுக்கமாய நிற்றற்சிறப்புப்பற்றி மனம்புத்தியகங்காரஞ்சித்தநான்கு மருவி யான்மாவேயென்ன உபசரித்துக் கூறப்படுமெத்தனை யென்றொழிக. சூழ்ச்சித்துணையாதல்பற்றி அந்தக்கரணங்கள் அமைச்சரையொக்குமெனவே, ஏனைக்கருவிகள் ஏனைப்பரிசனங்களை ஒக்குமென்பது பெற்றாம். அது ஞானாமிர்தத்திற் காண்க.

மேலைச் சூத்திரத்தின்றேதிய ஏதுக்களே ஈண்டைக்கு மமையுமாயினும், சிறந்தமைபற்றி வேறேதுக்கூறினர்.

மனமாதி யாலுணர்தன் மன்னு புலன்கண
மனமாதி மன்புலனி னல்லன — மனமே

---

* சிவஞானசித்தி, பதினொராஞ்சூத்திரம். கக. சிவஞ்சிவ.

னுதித்தொன்றை யுள்ள முணர்த லதனி
னுதிக்குங் கடற்றிரையை யொத்து.

எ-து உ-ம். எ-னின். அவ்வந்தக்கரணங்கள் தம்மிற் கீழுள்ளவற்றை நோக்கிச் சித்தாமாறும் தம்மின் மேலுள்ளவற்றை நோக்கியுந் தம்மைநோக்கியும் அசித்தாமாறுந் தெரித்துணர்த்தி ஏதுவை வலியுறுத்துதனுதலிற்று. இ-ள். மனம் ஆதியால் உணர்தல் மன்னு புலன்கள். எ-து மனமுதலிய அந்தக்கரணங்களாலுணரப்படுவன ஐம்பொறிகளாற்றரப்பட்டுப் புறத்தே நிலைபெற்ற விடயங்களாம் — உள்ளம் உணர்தல் மனம் மேல் உதித்த ஒன்றை எ-து ஆன்மாவுணர்வது மனத்துக்கு மேலெனப்படும் புத்தியிற்றோன்றிய தோன்றலையாம் — கடற்றிரையை ஒத்து உதிக்கும். எ-து அவ்விரு வேறுணர்வுங் கடலிடையெழுந்து கரைசாருந் திரைபோலப் பரம்பரையின் ஆன்மாவினமாட்டு வந்து தோன்றும் — அதனின் மனம் ஆதி மன் புலனின் அல்லன எ-து. அதனானே மனமுதலியன அவ்விடயங்களின் வேறாயினாற்போல ஆன்மாவும் அம்மனமுதலியவற்றின் வேறாம் எ-று.

உதிக்குமென்னும் பயனிலைக்கு உணர்தலிரண்டுமே எழுவாய்.

செவ்வெண்டொகை விகாரத்தாற்றொக்கது.

புலனின் இன் உவமவுருபு.

அல்லனென ஆடூஉவறிசொல்லாற் கூறியது வடமொழி மதம்பற்றி.

உதித்தவென்னும் பெயரெச்சவீறு விகாரத்தாற்றொக்கது.

புத்தியிற்றோன்றியதோன்றுவது சுகதுக்கமோகரூப விடயம்.

பரம்பரையிற் றோன்றுதலாவது முன்னர் வாயிற் காட்சியுணர்வு தோன்றி அதன்பின மானதககாட்சியுணர்வு தோன்றி அதன்பினனாத தன்வேதனைககாட்சியுணர்வு உயிரின்கண் வநது தோன்றுதல.

இதனானே அநதககரணங கீழுள்ளவற்றை நோக்கிச சித்தாமாறும் மேலுள்ளவறறை நோககி அசித்தாமாறும உயிா அவ்வாறனறி யாணடுஞ சித்தாமாறுங கணடுகொளக

சிநதிததாய்ச சித்தந தெளியாதா யாங்காரம
புநதியா யாயநது மனமாகிப—பநதித்து
வெவவேறு தானே துணிநதுள்ள மிவவேறு
மவவேறும போதுபோ லாங்கு.

எ-து உ-ம். எ-னின் மேற்பொதுவகையாற் கூறிப் போநத அநதககரணங்களினியலபு சிறப்புவகையாற்கூறுமுகததான் மானதககாட்சியுளளுங கடறறிரைபோலப் பரமபரையின வெவவேறுயுணாவு நிகழுமாறுணாததி உயிாவேறுதலை வலியுறுததுததனுதலிறறு இ-ள் உளளம. எ-து புருடதததுவமென நினறவுயிா—ஆங்கு எ-து வாயிறகாட்சியாற கண்டவிடயங்களினெனறனை மனமாகியானுணரும் மானதககாட்சியின்கணணும ஒருபெறறித்தாதலினறி—சித்தமாயச சிந்தித்து. எ-து சித்தமாய நினறு இஃதியாதாகறபாறறெனச சிநதித்தும,—மனம ஆகிப பநதித்து எ-து அதனபின மனமாய் நின்று இஃதினனதாகறபாறறெனப் பறறியும,—ஆஙகாரம் ஆய்த தெளியாது. எ-து அதனபின் அகஙகாரமாய நின்று இஃதாமோ அன்றோ இதனை யின்னதெனத் தெளிவேனி யானெனத் தெளிவுபிறவாதெழுநதும்,—புந்தியாய் ஆய்நது. எ-து. அதன்பின்னாப் புததியாய்நின்று இஃதின்னதெனத தெளிந்தும்,—வெவ்வேறு தானே துணிநது இவ்வேறும.

'எ-து இங்ஙனம் வெவ்வேறாகவேயுணர்தலான் அவ்வாறுண ரும புருடன் இவ்வந்தககரணங்களின் வேறாம்—போது அவ்வேறாம போல. எ-து ஞாயிறுமுதலியவற்றோடு கூடிகி னறு நாழிகை நாள் பக்கந் திங்களயாண்டு முதலியனவாயப் படும் பாகுபாடுசெயயுங் காலதத்துவம் அஞ்ஞாயிறுமுதலியவ றறின் வேறாயினறபோல எ - று.

ஆயதல் ாண்டு நிசசயிததறபொருட்டு.

துணிதலெனபது அறிதலென்னும பொருணமாததிரை யாய நின்றது.

தான் அசை ஏகாரந் தேறறம்.

இவ் அவ் என்பன வகரவீறறஃறிணைப் பன்மைச சுட் டுபெயா.

வேறாம் போதுபோலெனவே, ஆண்டு நீக்கப்பொருள் ஞாயிறுமுதலியனவென்பது தானே விளங்குமென்பது நோ சகி அவ்வெனசசுட்டியொழிநதாா. சீாரியையும உருபும உட ன்றொககன.

சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. ஆங்கும் வெவ் வேறு தானே துணிநதெனவே மானதக்காட்சியும் இங்ஙன நாலவேறுவகைததாய ஒன்றறகொன்று முறையே ஏதுவும் பயனுமாயக் கடறறிரைபோலப பரமபரையிற றோன்றுமெ ன்றவாறாயிற்று.

செயயுளாகலின் முறைபிறழ வைத்தார்.

அகார வுகார மகங்காரம புததி
மகார மனஞ்சித்தம் விநதுப்—பகாதிவற்றை
நாத முளவடிவா நாடிற் பிரணவமாம்
போதங் கடற்றிரையே போன்று.

எ-து. உ-ம் எ-னின் அம்மானதககாட்சியினிகழுஞ சவிகறப வுணாவிற்கேதுவாய் அவறறையுடனின்று செலுத தும அககரங்களிவையென்பதும் அவறருனுணர்வு மாறிமா றித தோன்றுமாறு முணாததுதனுதலிறறு இ-ள வெ-டை

*"மன்னு மகார மனஞ்செலுத்தும் புததியினை—யுன்னு முகார முயகரிககு—முன்னுகு—மாஙகாரந தனனை யகாரஞ செலுததியிடு—நீங்காத சிததம விநதுவோ" என்பவாகலா னும, ஈணடோதிய முறையே முறையெனவும, †"அவவுட னுவவு மவவு மனம்புததி யகஙகா ரஙகள" என வழிநூலாசி ரியரோதியது எதிாநிரனிறைப பொருளெனவுங கொளக. "அவவுட னுவ்வு மவவு மனமபுததி யகஙகா ரஙகள" என றதே முறையெனக்கொணடு அதறகியையக கொணடுகூட்டி யுரைபபாருமுளா.

பகாதிவறறை நாடிற பிரணவமாமெனவும போனறுமெ னவுங கூடடுக.

அந்தககரணஙகளைச செலுததும் அககரங்களைக கூறு வார் ஒப்புமைபறறிப புருடனைச செலுததும அககரமும உட ன்கூறினா

உடனினின்று செலுததுதலபறறி அபேதமாக வைத்தோ தப்பட்டன.

"நிகழ்ந்திடும் வாக்கு நான்கு நிவிர்த்தாதிகலையைப்ப ற்றி" அகரமுதலிய பஞசகலைவடிவாய நின்று இவறறை வேறுவேறு செலுத்துதலபற்றிக கணநதொறும் நினைப்பு மீற ப்புமாகிய சகலகேவலங்கள் அதிருட்பமாய்க் கறஙகோலை போல மாறி மாறி நிகழுமெனவும் மாகலகதின்கட் கணந

* துகளறுபோதம. † சிவஞானதது, நான்காஞசூததி ரம் ரு. ‡ சிவஞானசிததி, முதறசூத்திரம. உச.

'தோறும் அங்ஙனமுணர்வுதித்தும் ஒடுங்கியும் வருதல சமுத்தி ரத்தின்கட் புதித் புதிதாய்த் திரைதோன்றியும ஒடுங்கியும் வருமாறு'போலுமெனவுமுணர்க. கடற்றிரையுவமை மேற பரம்பரையாய் உணாவு வருதற்கெடுத்துக்காட்டினூர்; ஈண்டுப் புதித புதிதாய் வருதறகெடுத்துககாட்டினூா ஆதலாற புனருத்தியனமை யுணாக.

எண்ணில வோங்காரத் தீசா சதாசிவமா
நணணிய விந்துவொடு நாதத்துக—கணணிற
பகரயனமா லோடு.பரமனதி தெயவ
மகரவுக ரமமகரத தாம

எ-து உ-ம. எ-னின் அவ்வககரங்களுஞ் சடமாகலின் அவற்றை யதிட்டிககும அதிதெயவஙகள் இவையெனபதுணாத்துதனுதலிற்று இ-ள எணணிலவோங்காரதது நணணிய விநதுவொடு நாததததிதெயவங் கணணில ஈசரொடு கூடிய சதாசிவமாம் அகரவுகரமகரததிதெயவங்கணணிற பகரயனமாலோடு பரமனும. எ - று

எண்ணிலவோங்காரம் எணணததின்கண நிலவிய ஓங்காரமென வினைத்தொகை. எணணம ஈண்டு மானதக் காட்சி.

ஒடு எண்ணின்கண் வந்தது.

ஈண்டு அயன் மால் பரமனென்றது சுத்தவித்தையின் வைகுவாரை பரமன் உருத்திரன். அகரவுகரம மகரத்தாமெனபுழி மகரம் இசைப்பொருட்டாய் ஒற்றிலவழி யொற்றாய் வந்தது.

முதலதிகரணமுடிநதது.

## இரண்டாமதிகரணம.

**இனி இவ்வூான்மாச சகசமலத்தினு லுணர்வின்றென்றது.**

எ-து. மே-ள எ-னின், ஆன்மா அந்தக்கரணங்களி னொன்றன்றாயின் அவற்றொடு சந்தித்து நிற்றற் கேதுவென்னையென அவர் கூறுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் இரண்டாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இ-ள் வெ-படை.

ஆகந்துகமலங்களி னீக்குதற்குச் சகசமலமென விசேடிக்கப்பட்டது படவே, உயிர் முதல்வனைப்போல அந்தக்கரணமுதலியவற்றின் வேறாய சேதனப்பொருளாயினுஞ் செம்பிற்களிம்புபோல வேறுகாரணமின்றி மூலமலந் தன்னோடு உடனாய்நிற்றலிற் றன்னியல்பானுணருமாறின்றிக் கருவிகளைக் கூடிநின்றுணர்வதாயிற்றென விடுத்தவாறாயிற்று இதனானே மலத்துளதாமென மேற் பிரமாணத்தாற் பெறுவிக்கப்பட்ட மூலமலத்திற்கு ஈண்டிலக்கணங் கூறினாரென்பது பெறுதும். அறியாமையைச் செய்தலாகிய கேவலத்தினிகழுமியல்பே மலத்திற்குத் தன்னியல்பு கருவிகளோடு கூடி அவத்தையுறுவதாகிய விபரீதவுணர்வைச் செய்யுஞ் சகலத்தினிகழுமியல்பே பொதுவியல்பாகலான், மலத்திற்கு இருவகையிலக்கணமும் ஈண்டே பெறப்பட்டன.

அது தான் ஞானதிரோதகமாய் மறைத்துக்கொடு நிற்றலான்.

எ-து. எது எ-னின். சகசமலத்தினால் உணர்வின்றியொழியிற் பின் கருவிகளோடு கூடியவழி அறிவுண்டாமாறியாங்ஙனமெனச் சற்காரியவாதம்பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று இ-ள் அச்சகச் மலமாவது ஞானத்திற்குத் திரோதகமாய் அதனையில்லையெனும்படி மறைத்துக்கொண்டு நிற்றலான் இனி இவ்வான்மாச் சகசமலத்தினால் உணர்வின்றென மேற்கொண்டது. எ-று.

மலத்தினிலக்கணம் வடமொழிவழக்குப்பற்றிக் கூறு
வார் ஞானதிரோதகமாமெனவும் அதனைத் தமிழ்மொழியான்
விளக்குவார் மறைத்துக்கொண்டு நிற்றலானெனவுங் கூறினாரா
கலான், அது கூறியது கூறலன்மையுணர்க. திரோதகமென
னும் வடமொழி மறைத்தலைச்செய்வதெனனும் பொருட்டாய
வினைமுதன்மேனின்ற வினைப்பெயர்.

இதனானே ஞானாபாவமே அஞ்ஞானமென்பார் மதமும்
மறுக்கப்பட்டது, அபாவம் ஒருகாரியத்தைச் செய்யமாட்டா
மையின்.

மாயா தனுவிளக்கா மற்றுள்ளங் காணாதே
லாயாதா மொன்றை யதுவதுவாய—வீயாத
வன்னிதனைத் தன்னுண் மறைத்தொன்றாங் காட்ட
றன்னைமல மன்றணைதற் றான். [மபோற

எ-து. உ-ம் எ-ன்னின் ஆகந்துகமலமே ஞானதிரோத
கமாதலமையும் வேறுமோர்மலமுண்டென்றல் மிகைபோலு
மென் ஐக்கவாதசைவர் முதலியோர் மதம்பற்றி நிகழுங்க
டாவை யாசங்கித்து ஆகந்துகமலத்தானுஞ் சகசமலத்தானுஞ்
செயப்படுங்காரியங்கட்குத் தம்முள் வேற்றுமை பெரிதாமா
றுணர்த்துமுகத்தான் அதனை வலியுறுத்ததனுதலிற்று இ-ள.
உள்ளம் மாயா தனு விளக்கு ஆக காணாதேல் ஒன்றை
ஆயாது ஆம் எ-து உயிர் ஆகந்துகமலமெனப்படும் மாயாகா
ரியமாகிய உடம்பு தனக்குக் காட்டாகக்கொண்டு காணாதா
யின் ஒருவிடயத்தையுமறிவதிலதாயாம்—மலம் தன்னை
அன்று அணைதல் தான். எ-து. சகசமலம் உயிரை அநாதியே
பற்றிநிற்றல்—அது அது ஆய் வீயாத வன்னிதனைத் தன்னுள்
மறைத்து ஒன்று ஆம் காட்டம் போல். எ-து. காட்டமுதலிய
வற்றுள் அதுவதுவேயாய்நின்றுந் தனக்குக் கேடிலலாத

வன்னியைத் தன்கணு மறைத்துவைத்து ஒன்றேயாய்நிற்குங் காட்டம்போலும். எ - று.

எனவே, காட்டாய் நின்று விடயங்களையறியும்வண்ணம் உயிர்க்கறிவை விளக்குதல் மாயையின் செய்தி, அவ்வறிவைத் தடைசெய்துகொண்டு நிற்றல் மலத்தின் செய்தி, இவ்விரண்டும் இங்ஙனம் ஒளியுமிருளும்போல இகலி நிற்பனவாகலான் அத்தன்மைத்தாய மாயை இத்தன்மைத்தாய மலமாதல் யாண்டையதென மறுத்தவாறாயிற்று.

மற்றென்பது மலமன்றணைத்தலென்பதனோடியைந்து வினைமாற்றின்கண் வந்தது.

முற்றும்மை சிறப்பும்மைகள் தொக்கன.

ஆமுந் தானுங் கட்டுரைக்கண் வந்த அசை.

வன்னி அது அதுவாதல் காட்டத்துண் மறைந்துழிக் காட்டமேயாயுஞ் சூரியகாந்தத்துண் மறைந்துழி அதுவேயாயும் இவ்வாறே அவ்வவற்றின் மறைந்துழித் தானென்பதொன்றில்லையென்னும்படி நிற்றல் அங்ஙனமாகியும் வீயாமை, கடைதன்முதலிய தொழிற்பாடு நிகழ்ந்தவழித் தோன்றுதலாற் பெறாஅம். தன்னுண் மறைத்தல் வன்னியென்பதொன்றில்லையென்னும்படி பொதிந்துகொண்டு தானேயாதல். ஒன்றுங்காட்டம் ஒன்றேபோல அத்துவிதமாய்க் காட்டுமென்றவாறு. இவ்வாறு உவமைக்கோதிய அடையுந்தொழிலும் இயையும் பொருட்கண்ணுங் கூறிக்கொள்க.

மாயைகன்மங்களைப்போல ஆதியன்றெனக் காலத்தானும் வேற்றுமைகூறுவார் அன்றணைத்தலென்றார்.

இங்ஙனங் கூறிப்போந்த மலமாவது ஞானாபாவமென்பாரும், பிராக்கிஞானமென்பாரும், தமோகுணமென்பாரும், பஞ்சக்கிலேசத்துள் ஒன்றாகிய அவிச்சையென்பாரும், மாயை

கன்மங்களென்பாரும், சிவசத்தியென்பாரும், உயிர்க்குண மென்டாருமாய், அவ்வச்சமயநூல்பற்றி மயங்குவாருமுளர். அம்மல் திறகுப் பறறுககோடாகிய சூனியமுதலியவறறின் வேறெனப்பட்ட ஆன்மாவும் இயற்கையாற சடமென்பாரும், அறிவுமாததிரையேயெனக குணிபொருளன்றென்பாரும், சுதநதிரவறிவுடைததென்பாரும, அவ்வுடம்பளவிற்றெனபாரும், அணுவளவிற்றென்பாரும், உருவென்பாரும், அருவென்பாரும, உருவருவென்பாருமாய, இன்னும் பலதிறப்படக கூறி மயஙகுவாருமுளா. அவையெலலாம் பொருநதாமை ஆகமஙகளுட்காணக. ஈணடுரைப்பிற பெருகும்.

இசசகசமலம் ஞானதிரோதகமாயத திரவியமாய் அறியாமைககுணத்ததாய்ச செமபிறகளிமபுபோல உயிரின் குறறமாய் அநாதிபந்தமாயச சடமுமாயப் பலவுமாயின் அழிவெய்துமாகலின் அநாதிபந்தமாதல் பெறப்படாமையின் ஒனறேயாய விஞ்ஞானகலா பிரளயாகலர் சகலரென்னும் உயிாப்பாகுபாட்டிறகேதுவாய் உயிர்கடோறுந தனித்தனி வெவ்வேறுய மறைதது நின்று தத்தஙகாலவெலலையி னீஙகுவனவாகிய சததிகள் பலபலவுடைததாய உயிாகள் மூன்றவத்தைகளும் படுதறகு மூலகாரணமாய் நித்தமாய் வியாபகமாய் வியாபகவுயிர் அணுததன்மைப்படுமாறு செய்தலின் ஆணவமென்னும் பெயர்த்தாய்ப பசுத்துவம் பசுநீகாரம் மிருததியுமூர்ச்சை மலம் அஞ்சனம் அவிததை ஆவிருதியென்றறெருடககத்துக் காரணககுறிகளுமுடைததாய் நிற்பதெனவும் படலம் படர்ந்த கண ஞாயிறறின் சநநிதியினிறபினும படலத்தான் அவ்வொளியை யிழநது இருளினழுந்துமாறுபோல் முதலவன் சந்நிதியினிற்பினுஞ் சோபானமுறையின் அறிவிக்க அறியுந் தன்மைத்தாய உயிா அநாதியேயறிவித்தால் அறியமாட்டாமையின் அம்மாட்டாமையான் அவ்வறிவை இழந்து அறியாமை

யாய் அழுந்துதலின் அஃதவ்வுயிர்க்குப் பந்தமாயிற்றெனவு முணர்க. அநாதியே மலத்தினீங்குதல் முதல்வன் வினையாய அநாதிமுத்தத்தன்மையென எண்குணங்களுள் வைத்தெண்ணப்படுவதென்பது சிவாகமங்களுக்கெல்லாம் ஒப்பமுடிந்தவாறுபோல அநாதியே மலத்தைப்பற்றுதல் உயிரின் வினையாய உயிர்க்குற்றங்களுள் வைத்தெண்ணப்படுவதென்பதூஉம் அவற்றிற்கெல்லாம் ஒப்பமுடிந்தது. ஈண்டுப்படுங் கடாவிடைகளெல்லாம் ஈரிடத்துமொக்கும்.

இரண்டாமதிகரணமுடிந்தது.

## மூன்றாமதிகரணம்.

இனி இவ்வான்மாச் சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியந் துரியாதீதமாயுள்ள பஞ்சாவத்தைத்தனாய் நிற்குமென்றது.

எ-து மே-ள எ-னின். இருள்கப்பட்ட கண் விளக்கோடு கூடியவழி விடயங்களைக் காண்டலேயன்றி வெவ்வேறவத்தைப்படுமாறில்லை. அதுபோல மலத்தகப்பட்ட உயிர் கருவிகளோடு சந்தித்தவழி ஒருதன்மைத்தாயறிதலே அமைவுடைத்து அவ்வாறன்றி மேலைச்சூத்திரத்தோதிய முறையான் ஐம்புலனறிந்தும் ஒடுக்கமறிந்தும் உண்டி வினையின்றிக் கிடந்தும் உணர்ந்தவுணர்ந்தும் இங்ஙனம் வெவ்வேறு அவத்தைப்படுமாறியாங்ஙனமென அவர் கூறுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் இறுதிக்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று இ-ள் வெ-டை

அவத்தையெனப்படுவன பலவுளவாகலின். அவற்றுள் ஈண்டு ஐந்தவத்தையெனப்பட்டவை யாவையென்னும் ஐயநீக்குதற்குக் கிளந்தெடுத்துரைத்தார்.

அவத்தித்தன் என்னும் வடமொழி ஆதேசவறிசொலலா கூறியது, அம்மதம்பற்றி.

அம்மைசசரசேயப்ப நிற்றலானென்பதூஉம் ஈண்டு வரு வித்துரைத்துக்கொள்க. கொள்ளவே, * "படைகொடு பல வரிபோதும்" வேந்தன் "கடைதொறும் விட்டுவிட்டுச் காவ லுமிட்டு" அந்தப்புரத்திற் செலலுமாறுபோல ஆன்மா அந்த னம் அருசவத்தைப்படுதல் அமைவுடைத்தென விடுத்தவா ருயிற்று.

அதுதான் மலசொரூபத்தின் மறைந்து அரூப சொரூபி யாய நிற்றலான

எ-து எது எ-னின். அரசனபோல் உயிர் அங்ஙனம் ஞசவத்தைப்படுமாயின வியாபகத்திற்கிழுக்காய் முடியுமபோ லுமென்னும் கடானவ யாசங்கித்து மேற்கோளச சாதித்தனு தலிற்று இ-ள அவவுயிர்தான மலவடிவின மறைப்புண்ட வழி அருவுடம்பாகிய தத்துவசொரூபியாய் நிற்றலான அதத்த துவங்கள் தொழிற்படுமவத்தை வேறுபாடுபற்றி இனி இவ வான்மாச சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியந் துரியாதீ தமாயுள்ள பஞ்சாவத்தித்தையை நிற்குமென மேற்கொண டது எ-று.

"சீவனே வியாபி யவத்தையில் விழ்ந்து திரும்புதல் குர றமாய கருவி சேருதல் பிரித லில்லையா முறையிற் செயபட மீங் கருவியே தெரியுந்—தாவிலா வறிவு தங்கினவிடமே தகு முயிர்க் கிருப்பிடம்" என்றதூஉம் இப்பொருள்பற்றியெனக

தத்துவவுன்னுருபனுதல் வீடு பெற்றுழியும் உண்டுபோலு மென்று ஆசங்கை நிகழாமைப்பொருட்டு, மலசொரூபத்தின்

---

* சிவஞானசித்தி. ஞானகாண்ருத்திரம். கூஉ.

மறைந்தென மேற்கூறியபோந்ததனை வழிமொழிந்துகொண்டு அருபசொரூபியாய நிற்றலானென்று ஏதுக்கூறினார்.

மறைந்தவழியென்றது மறைந்தெனத் திரிந்துநின்றது.

ஒன்றணையா மூலத் துயிரணையு நாபியினிற்
சென்றணையுஞ் சித்த மிதயத்து—மன்றவே
யையைந்தா னன்னுதலிற் கண்டத்து வாக்காதி
மெய்யாதி விட்டகன்று வேறு

எ-து. உ-ம் என்னின். தத்துவங்கள் தொழிற்படுத்தற்கண் நிகழும் அவத்தை வேறுபாடு தெரித்துணர்த்தி அஃதேதுவா கலை வலியுறுத்துதனுதலிற்று. நன்னுதலில் வாக்காதி மெய்யாதி மன்ற ஏய் ஐயைந்தாம் கண்டத்தின் வாக்காதி மெய்யாதி விட்டு அகன்று வேறு ஐயைந்தாம் இதயத்திற் சேர்ந்து சென்றணையும் நாபியினில் உயிர் அணையும் அணையா மூலத்து ஒன்று என விளையும். இ-ள் சாக்கிரத்தானமெனப்படும் இலாடத்திற் புறவிந்திரியம் பத்தினையுந் தேற்றமாகப் பொருந்திய இருபத்தைந்து கருவி தொழிற்படும், சொப்பனத்தானமெனப்படுங் கண்டத்தின் அப்பத்தினையும் விட்டு நீங்கி வேறாய இருபத்தைந்து கருவி தொழிற்படும், சுழுத்தித்தானமெனப்படும் இதயத்தின் அவற்றுள் இருபத்திரண்டுகருவிகளை விட்டு நீங்கி முன்னாகக் கூறப்படும் இரண்டு கருவிகளோடு கூடிய சித்தந் தொழிற்படும், துரியத்தானமெனப்படும் உந்தியிற் சித்தத்தையும் விட்டு நீங்கி முன்னாகக் கூறப்படும் புருடதத்துவத்தோடு பிராணவாயுக் கூடித்தொழிற்படும். இக்கருவிகளொன்றும் அணையாத அதீதத்தானமெனப்படும் மூலாதாரத்திற் புருடனொன்றே நிலைபெறும் எ-று

எனவே, இலாடத்தானமுதலிய ஐந்தினுந் நிற்குங் கருவிகள் முறையே முப்பத்தைந்தும் இருபத்தைந்தும் மூன்றும் இரண்டும் ஒன்றுமெனப்படு போந்தவாறுணர்

மன்றவென்பது தேற்றப்பொருட்டாகிய இடைச்சொல்.

எய்தல் பொருந்துதல், வினைத்தொகை.

வாக்காதி மெய்யாதியையென இரண்டாவது விரித்துரைக்க அஃதீரிடத்துஞ்சென்றியையும்.

வருகின்ற சூத்திரத்தின் மெய் வாய் கண் மூக்கு எனச்செய்யுட்கேற்ப மெய்யை முற்கூறுதலின் அம்முறைபற்றி ஈண்டுச் செவியாதியென்னாது மெய்யாதியென்றார். அவற்றொடு கூடிய இருபத்தைந்தாவன அவ்விந்திரியம் பத்துக்கும் விடயமாகிய வசனாதி சத்தாதி பத்தும் அவற்றினுக்கு உட்கருவியாகிய அந்தக்கரணங்கணான்கும் அவற்றொடு கூடிய அவத்தையுறவதாகிய புருடனொன்றும், அஃதவத்தையுறுதற்குரிய மதுகைக்கேதுவாய அகங்காரத்தாற் செலுத்தப்படும் பிராணாதி வாயுக்கள் பத்துமென இவை ஈண்டுச் சத்தாதியென்றது வசனாதிபோலும் விடயங்களையெனக்கொள்க. எனவே, பூதங்களைக் கூறிய அவற்றுடனின்று தேராழிக்குத் தேருறுப்புப் போல இந்திரியங்களின் றொழிற்பாட்டிற்கு மதுகையை விளைத்து நிற்பனவாய புறக்கருவியறுபதில் ஈண்டுக் கூறிப்போந்த விடயங்கள் பத்தும் வாயுக்கள் பத்தும் ஒழித்தொழிந்த புறக்கருவிகள் நாற்பதும் அவற்றையுடைய பூதங்களைந்தும் அவற்றிற்கு வலியாயுடனிற்பனவாய சூக்குமபூதமெனப்படுந் தன்மாத்திரைகளைந்துமெனனும் ஐம்பதுகருவிகளுங் கீழ்நோக்கிய சாக்கிரத்தானத்தில் தமது சத்திமடங்கி வினைக்கீடாகத் தொழிற்படாதொழியுமெனவும், அவை யொழிந்தவழி அவ்வத்தைக்கேதுவாய் நின்ற ஏனைப் பொறிமுதலிய முப்பத்துநான்கும் அவற்றோடு கூடிய புருடதத்துவமும் இருவகைப்பூதங்களானும் புறக்கருவிகளானுந் தரப்படும் மதுகையின்மையின் ஆண்டுப் பொறிகளின் றொழிற்பாடு மெத்தென நிகழுமெனவுங்கொள்க. கலாதிகளுஞ் சுத்ததத்துவமும் அவத்தைக் கேது

வாகாரணமியான் உடனென்றாராயினா ஏனையவும் வரிந்தநூ
லகளுட கூறியவாறுபற்றி உணாந்துகொளக

இலாடத்தே சாக்கிரத்தை யெய்திய வுள்ள
மிலாடத்தே யைந்தவத்தை யெய்து—மிலாடத்தே
யவ்வவ விந்திரியத் தத்துறைகள கணடுவே
யவ்வவற்றி னீங்கலது வாங்கு

எ-து உ-ம் எ-னின் அங்ஙனம் அதீதத்தையெய்திய
பருடன மீளப் பிரேரக வவத்தையாகிய உணாத்துமுறை
மைச சாக்கிரத்தைத் தலைப்படுமாறு அறுவாதமுகத்தான விள
க்கி அவவிடத்தினும முறைமையிற செலுத்தும பிரேரகக
கருவிகளாந்தின் றொழிற்பாடுபெற்றி ஐந்தவத்தை நிகழுமெனப
தூஉம அவை இவையெனபதூஉஞ் சுத்தாவத்தையுட இவை
போலுமெனபதூஉங கூறி அதனை வலியுறுத்துதலுதலி
றறு. இ-ள. இலாடத்தே சாக்கிரத்தை எய்திய உள்ளம்
எ-து இலாடத்தானத்தினீங்கி ஆணட நடவத்தைப்பட்டுக
கீழ்ப்போந்து மூலாதாரத்தினெய்தியபின மறித்தும அவ
வாறே ஆணடாணடவத்தைப்பட்டு மேறசென்று இலாடத்
தானத்தின் உணாத்துமுறைமைச சாக்கிரத்தைத் தலைப்பட்ட
புருடன்—இலாடத்தே ஐந்து அவத்தை எய்தும் எ-து. ஆண
டுஞ சாக்கிரசசாக்கிரமுதலிய ஐந்தவத்தையுறும —இலாட
த்தே அவ்வவவிந்திரியத்து அத்துறைகள் கணடு எ-து அவை
யாவன அவ்விலாடத்தானத்தின்கணணே அவவப்பொறிக
ளான் அவ்வவவிடயங்களை யுணர்ந்து—அதுவே எ-து அப்
போதப்போதே—அவ்வவற்றின் நீங்கல். எ-து. அவ்வவவிட
யங்களினீங்குதலாம்—அது ஆங்கு. எ-து இனி முனனர்க
கூறப்படுஞ் சுத்தாவத்தையும இவைபோல ஐவகைப்ப
டும. எ-று.

மேற்செல்வுழி ஆண்டாண்டுப்பட்டுமேவுதலைக்கூறுங் கீழ்ச் செல்வுழிப் போலன்றி விசேடமின்மையின் வகுத்தோதாது இலாடத்தே சாக்கிரத்தையெய்திய வுள்ளமென அநுவாதமுகத்தாற் கூறியொழிந்தார்.

இழியுங்காலும் ஏறுங்காலுங் கண்டத்தானத்திற் கனாக் காண்டலுண்டென்பது முறையே ஞானாமிர்தத்தினும் போற்றிப்பஃறொடையினுங் காண்க.

அவ்வவ்விந்திரியம் ஆண்டாண்டு விடயித்தற்குரிய இந்திரியம்.

அவ்வவ்விடயம் ஆண்டாண்டுப் புலனாதற்குரிய விடயம்

கண்டுநீங்கலென வியையும்.

அது அவ்வக்காலம். ஈண்டும் அடுக்கிக் கூறிக்கொள்க.

கண்ணுருபு தொக்கது ஏகாரம் விரித்தார்.

கண்டென ஒருமொழியாக்கவைத் துரைப்பாருமுளர்; குற்றியலுகரத்தின்முன் உடம்படுமெய் பெறுதற்கு ஓத்திலாமையானும் பொருட்சிறப்பின்மையானும் அஃதுரையன்மையறிக.

அப்போதைப்போதே நீங்கலாவது விடயங்களைக் கண்ட கண்டபொழுதே அவற்றை அயாத்துவிடுதல் * "ஒன்றன்பாலும் வருடயன் மாறி மாறி வந்திடும்" என வழிநூலாசிரியர் கூறியதும் இவ்வியல்பு நோக்கியென்க. † "கரணந்தன்னிற் செயற்றொறுங் கண்டுகொண்ணீ" ‡ "உந்திநிங் கரணந்தன்னிற் செயற்றொறு முணர்ந்து கொள்ளே" என்பனவுமது. இந்நுட்பமுணர்ந்துகோடற்குத் தூலாருந்ததிநியாயம் பற்றிக

* சிவஞானசித்தி, இரண்டாஞ்சூத்திரம் ௯௪-ஒருபுலனுகரு. † நான்காஞ்சூத்திரம் ௬௫. அறிதருமுதல்வ.௪ ‡ ௬௯. உந்திநிங்கரண

கைப்பொருளை வீழ்த்தித் தெளிதன்முதலிய தூலத்துள் வைத்துக் காட்டுப.

இனி அரூபசொரூபியாய் நிற்புழிப்படும் ஐக்கியத்தையியல்பு கூறுதற்கெடுத்துக்கொண்ட இவ்வதிகரணத்தின் அதனோடியைபில்லாத சுத்தத்தின்கட்படும் ஐந்தவத்தை கூறுதற்கு ஓரியைபில்லையாயினும் அவத்தையெனப்படுவன ஈண்டோதியன மாத்திரையே போலுமென மயங்காமைப்பொருட்டு வேறுமைந்தவத்தையுள அவை முன்னாகக் கூறப்படுமென்னுந்துணையே கூறுவார் அதுவாங்கு என்றொழிந்தார் இக்கருத்தேபற்றி *"பிறிவிலா ஞானத் தோரும் பிறப்பற வருளா லாங்கே—குறியொடு மைந்தவத்தை கூடுவர் வீடுகூட" என்றொழிந்தார் வழிநூலாசிரியரும்.

இவ்விரண்டு வெண்பாக்களானுங் கூறிப்போந்த முத்திறத்தைந்தவத்தைகட்கு முறையே மூலமாய கேவலஞ் சகலஞ் சுத்தமென்ற மூன்றனுள் வைத்துத் தன்னுண்மையெனப்படுங் கேவலத்தினியல்பு சகசமலத்துணராதென்பதனானே பெற்றாம். ஏனைச் சகலத்தினியல்பு வருகின்ற சூத்திரத்தினுஞ் சுத்தத்தினியல்பு அப்பாலைச் சூத்திரத்தினும் பெறுதும்.

மூன்றாமதிகரணமுடிந்தது.

## நான்காஞ்சூத்திரமுடிந்தது.

# ஐந்தாஞ்சூத்திரம்.

விளம்பிய வுள்ளத்து மெய்வாய் கண்மூக்
களந்தறிந் தறியா வாங்கவை போலத்
தாந்த முணர்வின் றமியருள்
காந்தங் கண்ட பசாசத் தவையே.

எ-து சூ-ம எ-னின் இவ்வான்மாக்களிடத்துத் தமது முதலுபகார முணர்த்துதனுதலிற்று.

எ-து. க-ரை எ-னின் சூத்திரக்கருத்துணர்த்துதனுதலிற்று இ-ள். ஐந்தவத்தைப்படுமெ வழிக் கருவியும் உயிரும் அமைச்சும் அரசுமேயப்ப நிற்பின் அவையே யமையுமாகலான் முதல்வனால் ஆண்டைக் காகற்பாலதொரு பயனில்லை போலுமென்னுங் கடாவை யாசங்கித்து ஆண்டுமே இன்றியமையாது வேண்டப்படுவதாய முதல்வனுடைய உதவியை அறிவிக்குமுகத்தானே இரண்டாஞ் சூத்திரத்திற்கூறிய துணைக்காரண முதற்காரணங்களிலக்கண முணர்த்துதல் இவ்வைஞ்சாஞ்சூத்திரத்தின் கருத்து. எ-று.

இதனானே சூத்திரவியையும் இனிது விளங்கும்.

மாயை கன்மங்கள் திரோதானசத்திக்குக் கருவியாய் அதனுள்ளடங்குதலிற் றமது முதலுபகாரமெனப்படுந் திரோதானசத்தியதிலக்கணங் கூறவே அவற்றதிலக்கணமுங் கூறியவாறாதலறிக.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு. மேலைச்சூத்திரங்களின் அங்ஙனங் கூறிப்போந்த உயிரானே மெய் வாய் கண் மூக்குச் செவியென்பன தத்தம் விடயங்களை இஃதின்னதெ

ன்று அளவிட்டறிந்தும் அங்ஙனமறியுந் தம்மையுந் தம்மைய திட்டித்து நின்று செலுத்தும் அவ்வுயிரையும் அறியமாட்டா அவ்விந்திரியங்களைப்போல உயிர்களுந் தமதறிவிற்கு வியஞ்சகமாகிய முதல்வனது சிற்சத்தியான மேற் கூறிப்போந்த இருவகையஞ்சவத்தையினின்று வினைப்பயன்களையறிந்து அநுபவிக்குந் தம்மையுந் தம்மைச் செலுத்துந் திருவருளையும் அறியமாட்டா, உயிர்கள் அவ்வாறுணர்தல் காந்தத்தைக் கண்ட இரும்பு அதன் சந்நிதிமாத்திரையின் வலித்துக்கொள்ளப்படுமாறுபோலக் காரணத்தானன்றிச் சங்கற்பத்தான் அதிட்டிக்கு முதல்வன் சந்நிதிமாத்திரையினும் ஆகலான் அதுபற்றி முதல்வன் விகாரியாதலின்று. எ - று

ஆகலான் அதுபற்றி முதல்வன் விகாரியாதலின்றென்பது குறிப்பெச்சம்

செவியென்பது சொல்லெச்சம்

ஐம்பொறிகளைக் கூறியது உபலக்கணமாகலின் ஏனைக் கருவிகளும் அவ்வாறாதல் கொள்ளப்படும் அற்றாகலினன்றே * "பொறிபுலன் கரணமெல்லாம் புருடனு லறிந்து" என்றா வழிநூலாசிரியரும்.

விடயங்களை யறிவுழி முதல்வன் உடனின்று செலுத்து வனுயின் அவ்விடயங்களோடொப்ப முதல்வனையும் அறிதல் வேண்டுமென்பாரை நோக்கி, அளந்தறிந்தென்றொழியாது அறியாதெனறா.

ஆங்கவை ஒருசொன்னீர்மைத்து தம்முணர்வின்றயிலெ ன்றது தமது முதலென்னும் பொருளபட் வந்த ஆறும்வே றுமைத்தொகை.

---

* சிவஞானசித்தி, ஐந்தாஞ்சூத்திரம்.

ஈண்டு அருளென்றது ஏற்புழிக்கோடலால் திரோதான சத்தியையேயெனின்றது. அருளாலென விரித்து அளந்தறிந்தறியாவென உவமைக்கோதிய வினையைப் பொருளினுங் கூட்டியுரைக்க.

இதனுள் விளம்பிய வுள்ளத்து மெய் வாய கண்மூக் களந்தறிந்தறியாவென்றது ஓரதிகரணம், ஆங்கவைபோலத் தாந்தமுணர்வின் தமியருள காந்தங்கண்ட பசாசத்தவையே யென்றது ஓரதிகரணம், ஆக இரண்டதிகரணத்தது இச்சூத்திரமென்றுணர்க.

## முதலதிகரணம்.

ஈண்டு ஐயுணர்வுகள் ஆன்மாவாலுணருமென்றது

எ-து மே-ள எ-னின் தாமரையிலையினீர்போற் புருடன் பற்றற நிற்பப் புருடன் சந்நிதியிற் புத்திதத்துவமே ஐம்பொறிவழியான் விடயங்களையும் அறியுமெனவுமையும் அவ்வாறன்றிக் கருவிகளோடு கூடிப் புருடனே அவத்தைப் படுமென மேற்கூறிய தன்மையுமாறென்னையெனச் சாங்கியநூலார் மதம்பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இ-ள் வெ-டை.

உணர்விற்கேதுவாகிய பொறிகளை உணர்வென்றுபசரித்தார்

• அவற்றினான் ஆன்மா வொற்றித்துக் காணினல்லது அவையொன்றையும் விடயியாவாகலான்

எ-து. ஏது. எ-னின். அதற்குப் பிரமாணமென்னையென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று. இ-ள அவ்வைம்பொறிகளோடும் உயிர் ஒற்றுமைப்பட்டு நின்றறிந

தாலன்றி அவை ஒருவிடயத்தையும் விடயிக்கமாட்டாவாகலான் ஈண்டு ஐயுணர்வுகள் ஆன்மாவாலுணருமென முறைகொண்டது. எ - று.

ஆன் உடனிகழ்ச்சிப்பொருட்கண் வந்தது.

உம்மை இழிவுசிறப்பு முற்றுமாம்.

எதிர்மறைமுகத்தாற் கூறினார், இன்றியமையாமை விளக்குதற்கு

ஐம்பொறியை யாண்டங் கரசா யுள்நிற்ப
வைம்பொறிக ளுள்ள மறியாவா—மைம்பொறியிற்
காணாதேற் காணாது காணுமுளங் காணாதேற்
காணாக்கண் கேளா செவி

எ-து உ-ம் எ-னின் உயிர் அங்ஙனமொற்றுமைப்பட்டு நின்று செலுத்துதலும் அவை உயிரையின்றியமையாமையும் எம்மாற்றாற்பெறுதுமென்பாரை நோக்கி ஏதுவை வலியுறுத்துத லுதலிற்று இ-ள். அரசு ஆய எ-து. அரசன் அத்தாணிமண்டபத்தின் வைகித் தன்கீழ்க் கருமஞ்செய்வாரை அவரவர்க்குரிய காரியங்களிற் செலுத்தி ஆளுமாறுபோல,—உளம் ஐம்பொறியை ஆண்டு அங்கு நிற்ப எ-து. உயிர் ஐம்பொறிகளை அவ்வவற்றிற்குரிய விடயங்களிற்செலுத்தி யாண்டு இலாடத்தானத்தி னிற்றலான்,—ஐம்பொறிகள் உள்ளம் அறியாவாம். எ-து அரசனேவப்பட்டோர் ஏவிய கருமமாத்திரை யினன்றி அதிகத்திற் செல்லமாட்டாமைபோல அவ்வைம்பொறிகள் உயிரையறியமாட்டாவாயின. அற்றேல், ஐம்பொறிகள் உயிரானன்றியறிதல் அமையாதாயினும் உயிர் ஐம்பொறிகளானன்றியும் அறிதலமையும்போலுமெனின்,—ஐம்பொறியில் காணாதேல் காணாது காணும் உளம் காணாதேல் காணாக்கண் கேளா செவி. எ-து ஒருகருமஞ் செய்தற்கண் அரசரும்

அமைச்சர்முதலாயினோருந் தம்முள இன்றியமையாதவாறு போல நன்றனை விடயித்தற்கண் உயிரும ஐமபொறிகளுந் தமமுள் இன்றியமையா. எ - று.

அன்னவாதல உயிர் ஐம்பொறியினீங்கிச் சொப்பனத தானததினையதியவழிக கணடுகொளக.

நிறபவென்னுஞ் செயவெனெசசம் மழைபெய்யக் குள நிறைநதது எனபழிபபோல நிறறலாலெனக் காரணப்பொரு ட்டாய நின்றது இவவாறுரையாககால இஃதேதுவின பொருள் வலியுறுபபதாய உதாரணமாதறகேலாமை யறிக.

முதலதிகரணமுடிநதது

## இரண்டாமதிகரணம்.

இனி இதுவுந தமது முதலாலே யுணருமென்றது.

எ-து. மே-ள். எ-னின, கருவி சடமாகலிற சிததாகிய உயிரானன்றி அமையாவாயினுஞ சிததாகிய உயிா முதல்வனது உபகாரத்தையவாய நிறபதனறு அவாவுமாயின் முதலவனும அவவாறே பிறிதொன்றனுபகாரததை அவாவுமெனப பட்டு மேலும் வரமபின்றியோடும என ஈசுரவவிகாரவாதிமுதலியோர் கூறுங்கடாவை யாசங்கிததுச சூததிரததின் பிற்கூறறைக் கண்ணழிததுரைத்து மேறகோடனுதலிற்று. இ-ள. வெ-டை.

தமது முதலென்பது யானெமமூர் புகுவன் நீ நம்மூர் புகுவை யெனபுழிப்போல வேறுமுடிபு கோடலிற பாலவழு வன்மையுணர்க.

உம்மை இறந்ததுதழீஇயவெச்சம்.

இம்முறைமை தமக்கொருமுதலுடையவற்றிற்கேயன்றி ஏனைப்பொருட்கின்மையின் வரம்பின்றியோடுமாறில்லையெ

ன்பார், தமது முதலென்று உடம்பொடு புணர்த்தே[illegible]
தமமுணர்வின்றமியென்றது மது

தத்துவங்களுமுயிருந் தமக்கொரு முதலுடையனவாத
லும் முதல்வனுக்கு அஃதின்மையும் மேற்கூறியபோந்த சூத்தி
ரங்களாற் பெறப்பட்டனவென்பது கருத்து

இவ்வான்மாத் தனாலே யுணருமிந்திரியங்களைப்போ
லத் தானும் * தனனையுணராது நிற்றலான.

எ-து எது. எ-னின் உயிர் ஐம்பொறியிற் சடமன்மை
யான் அவற்றை யெடுத்துக் காட்டி மேற்கோடல் எண்டைக
கமையாதென்பாரை நோக்கி அதனைச் சாதித்தனுதலிற்று.
இ - ள் வெ-டை

சடமுஞ் சேதனமுமாய வேறுபாடுபெற்றித் தமமுள ஒவ்
வாவாயினுந் தமமையுந் தமது முதலையும் அறியமாட்டாமைக
கண் ஐமபொறியும உயிருந் தமமுள ஒக்குமாகலின், அதுப
ற்றி அங்ஙனமேற்கோட லமையுமென்பது கருத்து.

மன்னுசிவன சந்நிதியின மற்றுலகஞ் சேட்டிதத
தென்னு மறையி ணியன்மறந்தாய—சொன்ன சிவன
கண்ணு வுளமவினையாற கண்டறிந்து நிற்குங்கா
னெண்ணுன சிவனசத்தை யின்று.

எ-து உ-ம. எ-ன்ன தன்னுணரும இந்திரியங்களை
எண்டைக்கு உவமை கூறின் அவவிந்திரியங்கட்கு வருமப்
யன் அவற்றினொற்றித்துககாணும் உயிர்க்காய்வாறுபோல
உயிர்க்குவரும் இன்பத்துன்பப்பயனும உயிரானொற்றித்துக்

* தன்னை யுணராது என்பதற்குத் தன்னையுந் தன்முத
ல்வனையுமுணராது எனப் பொருள் கொள்ளப்படும். தன் ஐ-
தன முதல்வன்.

அமைச்சர் (முதல்வனுககாதலவேணடுமென்பாரை நோக்கி அங்
போல ஒன்றாகாமை கூறி அதனை வலியுறுத்துதனுதலிற்று. இ-ள.
தமானனு சிவன சந்நிதியின மறறு உலகம சேடடிததது என
னும மறையின் இயல மறநதாய எ-து ஈணடுக கூறிய கருந
வளவையேயன்றி நிலைபெறற முதல்வனது சந்நிதியிற பிரப
ஞசனு செயபபடுகின்றதெனறோதும வேதப்பொருளையும
அறியாது பிணஙகுகினற பேதாய—உளம சொனன சிவன
கணணு வினையால கணடு அறிந்து நிறகும காண. எ-து உயி
ராவது தமககெனவோா காரணமினறித தனபொருட்டே
அறிவனவாய அவ்விந்திரியங்களபோலனறி அவ்வேதத்துள
எடுத்தோதபபடும முதல்வன தனககுக காட்டாகிநிறபத் தான்
செய்த வினைககீடாக ஒனறனையறிந்து நிறகும், இவவேறு
பாடு அறிவாயாக —இனறு ஆகலாற சிவன அசததை என
ஞான எ-து. அஙஙனங காட்டாகி நிறபினுந தனது சந்நிதி
யின அசததெலலாஞ சூனியமாகலான மஙகலவடிவினனாய
முதல்வன் அவ்வுயிாபோல அவற்றை அநுபவியான். எ-று

இதனுட் சிவனெனறது மன்னுசிவனென்புழிப் பேரின்
பததுககுக் காரணமென்னும பொருட்டாய்த் தனது சந்நிதிக
கண் உலகத்தைச் சேட்டிபபித்தறகுரிய இயைபுணர நின்
றது, சொன்னசிவனெனபுழி முறறுணர்வினனெனனுமபொ
ருட்டாய்க் காட்டாதற்குரிய இயைபுணரநின்றது; எணணுஞ
சிவனென்புழித் தூயதனமையனெனனுமபொருட்டாய் அச
த்தையெணணாமைக்குரிய இயைபுணரநின்றது ஆகலாற்
கூறியது கூறலனமையுணர்க. அஃது அம்முப்பொருளுடை
த்தெனபது சோமசம்புபத்ததி வியாக்கியானமுதலியவற்றுட்
காண்க. சிவதத்துவவிவேகத்துள் மூவகைப்படுத்தோதிய
பொருளும் இவையேயாமாறு கணடுகொளக.

ஈணடு உலகமென்றது உயிர்களை.

மறையினியலும் பொருளை மறையினியலென்றுபசரித்தார்.

இறந்ததுதழீஇயவெச்சவும்மை விகாரத்தாற்றொக்கது.

மறந்தாயென்பது விளியுருபேற்றபெயர்.

ஈண்டுச் சந்நிதியென்றது அவிகாரவாதிகள் கூறும் அபிமுகமாத்திரையன்றென்பார் சொன்னசிவன் கண்ணென்றார் சிவசத்தி அவ்வக்காரியங்களின் உன்முகமாதலாகிய சங்கற்பமே ஈண்டுச் சந்நிதியெனப்படுமென்பதாம்.

காந்தங்கண்ட பசாசத்தனவேயென்றது ஒருபுடையுவமையாதல்பற்றியே பிறிதன்றென்பது கருத்து.

விளையாவென்றது ஐம்பொறிபோலன்றி உணர்தற்பயன் உயிர்க்கேயாதற்கேதுக் காட்டியவாறு

கண்டறிதல் ஒருபொருட்பன்மொழி

எண்ணல் ஈண்டநுபவித்தன்மேற்று

இன்றென்பது சாதியொருமை.

அவனெதிர் என்பது அவாயநிலையாய் வந்தது.

ஆகலானென்பது சொல்லெச்சம் இன்றுதல் யாவையுஞ் சூனியஞ் சத்தெதிர் என்புழிப் பெறப்படும் இக்கருத்தே பற்றி * "மாயை மருவிடான் சிவனவன்க—ணூறைதரா தசேதனத்தால்" என்றார் வழிநூலாசிரியரும். † "உன்னுதார் தேகிடந்த கீட முறுவதெல்லா—முன்னுடைய தென்றுய்நீ யுற்றனையோ—மன்னுயிர்க—ளவ்வகையே காணிங் கிழிவதுவு மாவதுவுஞ்—செவ்வகையே நின்றசிவன் பால." என்றதும் இவ்வியல்பு நோக்கி.

---

* சிவஞானசித்தி, ஐந்தாஞ்சூத்திரம். ௯. இறைவன்றன.

† திருக்களிற்றுப்படியார். ௮௭.

வெய்யோ னொளியி லொடுங்கி விளங்காது
வெய்யோனை யாகாத மீன்போல—மெய்யவனிற்
கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனைக்
கண்டுடனாய மன்னுதலைக் காண்

எ-து உ-ம. எ-னின் உயிர் அங்ஙனமுணர்த்த வுணருங்கால முதல்வனின் வேறுநின்றுணருமோ ஒன்றாய நின்றே யுணருமோவென்பாரை நோக்கி அவ்விரண்டியல்புமின்றி நின்றுணருமாறுணர்த்தி அதனை வலியுறுத்துதனுதலிற்று. இ-ள் வெய்யோன் ஒளியில் ஒடுங்கி எ-து. ஞாயிற்றின்னொளியினடங்கி—விளங்காது எ-து அதனின் வேறாய் விளங்கித் தோன்றுதலின்றி—வெய்யோனை ஆகாத மீன்போல எ-து அதுவாயொழிதலுமில்லாத நாண்மீன்கள் அஞ்ஞாயிறன்றே ஒளியுடையவாமாறுபோல,—கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனை மெய் அவனில் கண்டு எ-து. கண்டுங் கேட்டும் உண்டும் உயிர்த்துந் தீண்டியும் அறியப்படும் ஐவகைவிடயங்களையும் உயிர் மெய்ப்பொருளாகிய முதல்வனால் உணர்ந்து—உடனாய மன்னுதலைக் காண் எ-து. வேறாதலும் ஒன்றாதலுமின்றி அவ்விரண்டற்கும் பொதுவாய் அடங்கி உடனாய் நிலைபெறுதலை அறிவாயாக எ-று.

உவமை யடைபொருளினும், பொருள்வினை உவமையினுஞ் சென்றியையும்.

ஐ சாரியை.

நாண்மீன்முதலியவற்றின் ஒளியெல்லாம் ஞாயிற்றினுடைய ஒளியேயென்பது வேதநூற்றுணிபாகலான் அஃதீண்டைக் குவமையாயிற்று.

உயிரென்னும் எழுவாய் மேலைவெண்பாவினின்றும் வருவித்துரைக்கப்பட்டது.

அருளுண்டா மீசற் கதுசததி யன்றே
யருளு மவனன்றி யிலலை—யருளின
றவனன்றே யிலலை யருடகண்ணா கண்ணுக்
கிரவிபோ னிறகுமர னேயாந்து

எ-து உ-ம் எ-னின அஙஙனமாயினும உயிாகட்குப் பலவேறுவகைபபட உணாவு நிகழதலின் அஃதுணாததறகு வேறுபாடடாகுய தெனலவேணடும வேணடவே, நிருவிகாரியென்னுஞ் சுருதியோடு முரணி முதலவன விகாரியாவான் செலலுமெனபாரை நோககி விகாரியாகாமை யுணாததி அதனை வலியுறுததுதனுதலிறறு இ-ள அருள ஈசறகு அனறே உணடாம. எ-து உயிாகடகுப் பசுததுவததை நீககிச சிவததுவததை விளககுதறகணுளதாகிய இரககம முதலவனுககு அநாதியேயுளளது—அது சததி. எ-து. அவவிரககம வேறு பொருளனறு முதலவனுககுளதாகிய சததியேயாம,—அருளும அவனனறி இலலை அருளினறு அவன் அனறே இலலை எ-து. இரககமும அவனுங குணமுங குணியுமாகலின அவவருளு முதலவனையினறி யமையாது முதலவனும அதனையினறி யமையானுய—அருட்கணணா கணணுககு இரவிபோல ஏய்நது நிறகும அரன், எ-து ஞானககண்ணுடையாருணர்விறகு ஞாயிறு தனனொளியோடு தாதான்மியமாயியைநது நிறகுமாறுபோல அவவருளோடு தாதான்மியமாயியைநது நிறபன் முதலவன், ஆகலாற றனவயததனுகிய அமமுதலவன் விகாரமின்றி நின்றே தனது சததிசஙகறபமாததிரையான அனைத்துஞ் செய்தல்கூடும. எ - று

ஆகலாற் றன்வயத்தனுகிய அம்முதல்வன் விகாரமின்றி நின்றே தனது சத்திசஙகறபமாததிரையான் அனைததுஞ் செயதலகூடுமெனபது குறிபபெச்சம்.

உம்மை எதிரது தழீஇயது.

இன்றியென்னும் வினையெச்சக்குறிப்பினிகரஞ் செய்யு ளாகலின் உகரமாயத் திரிந்தது.

அன்றே அசை

இவ்வியல்பு சித்தாந்தநெறியுணர்ந்தார்க்கன்றி விளங்கா தென்பார் அருட்கண்ணாற் கண்ணுகவென்றார்.

சதசியத்துணைமையும் அதனியல்பும் நீக்கமின்றி நிற்குமன்றேயென்பதனுள் வகுத்துரைத்தமையின் ஆண்டுக் காண்க.

இரண்டாமதிகரணமுடிந்தது

ஐந்தாஞ்சூத்திரமுடிந்தது.

## ஆறாஞ்சூத்திரம்.

உணருரு வசத்தெனி னுணரா தின்மையி
னிருதிற னல்லது சிவசத் தாமென
விரண்டு வகையி னிசைக்குமன னுலகே.

எ-து. ரு-ம. எ-னின். சத்தும் அசத்தும் வரைசெய் துணர்த்துதனுதலிற்று.

எ-து. க-ரை. எ-னின் சூத்திரக்கருத்துணர்த்துதனுத லிற்று. இ-ள. மேலைச்சூத்திரத்தானுங் கூறியபோந்த பொருள்களுள் யாது சத்து யாது அசத்தென்னும் ஐயநீக்குத ற்குச் சத்தினியல்பும் அசத்தினியல்பும் இவையென அவ்விர ண்டும் இலக்கணத்தாற் றம்முண் மயங்காதவாறு வரைந்து வைத்துணர்த்தி உண்மையதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய் யுமுகத்தானே இலக்கணவோத்துட் கூறுதற்கு எஞ்சிநின்ற

பதிப்பொருள இலக்கணங்கூறுதல் இவ்வாறாஞ்சூத்திரத்தின் கருத்து. எ - ம்.

இதனானே சூத்திரவியையும் இனிது விளங்கும்.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு. தமதுணர்வின் றம்மியாகிய முதற்பொருள் அளவைகளானறியப்படும் இயல்பிற்றெனின், அங்ஙனமறியப்படும் பிரபஞ்சம்போல அழிபொருளாகிய அசத்தாம் எவ்வாற்றானும் அறியப்படாத் தியல்பிற்றெனின், அங்ஙனமறியப்படாத முயற்கோடுபோற் சூனியப்பொருளாம் ஆகலான் இவ்விருபகுதியுமன்றி ஒருவாற்றானறியப்படாமையும் ஒருவாற்றானறியப்படுதலுமாகிய இரண்டுவகையானுஞ் சிவசத்தாமெனக் கூறுவர் மெய்யுணர்வினிலைபெற்றுயர்ந்தோர் எ - று.

உணருருவெனி னசத்தென மாறுக எனினென்பது முன்னருஞ் சென்றியைந்தது.

முற்றும்மைகள் தொக்கன.

அல்லதென்பது வினையெச்சக்குறிப்புமுற்று அன்றியாமென இயையும்.

ஒருவாற்றானறியப்படாமை பாசஞான பசுஞானங்களான் அறியப்படாமை ஒருவாற்றானறியப்படுதல் சிவஞானமொன்றானே அறியப்படுதல். பாசஞானபசுஞானங்களான் அறியப்படாமையிற் சிவமாதலும் பதிஞானத்தால் அறியப்படுதலிற் சத்தாதலும் பெறப்படுமென்பார் இரண்டுவகையிற் சிவசத்தாமென விசைக்குமென்றார். சிவசத்தென்னும் இருபெயரொட்டுப் பண்புத்தொகை வடநூன்முடிபு. சடமாகிய சத்தினீக்குதற்குச் சிவசத்தென்றார். சிவசத்தென்பது சித்துச்சத்தென்னும்பொருட்டு.

எனவாய் மேலைச்சூத்திரத்தினின்றும் வருவித்துரைக்கப்பட்டது.

இருதிறனுமன்றி இரண்டுவகையானுஞ் சித்தாதலுஞ் சத்தாதலு முடையனாய் நிற்றல முதல்வனுக் கிலக்கணமென இலக்கணமும் இதனுட் போந்தவாறுணர்க

முதல்வனுக்குப் பொதுவியல்பு மேற் புணருற்பவமுணர்த்து முகத்தாற் கூறிப் போந்தமையின் இது சொரூபலக்கண மெனப்படுஞ் சிறப்பிலக்கணமெனக் கொள்க அற்றாகலின்றே இதனை இலக்கணவோத்துண் முற்றக்கூறாது உண்மையைச் சாரவைத்து இறுதிக்கட்கூறியதூஉமெனக் கொள்க இன்னும் முதல்வனுக்குள்ளவாகிய சிறப்பியல்புக் குணங்களெல்லாம் இவ்விரண்டனுள்ளடங்கும். அஃதறிந்தடக்கிக்கொள்க. * "தன்னாலே தன்னையறிந்தாற் றன்னையுந் தானே காணும்" எ-ம் † "உன்னரிய திருவருளை யொழியமல முளதென் றுணராவரிதா மதனுண்மை தெரிவரிதா முனக்கே" எ-ம். ‡ "மாயையுமா மாயை மாயா வருமிரு வினையின வாயமை—யாயவா றுயிரின் மேவு மருளெனி லொளியாய் நிற்கும்" எ-ம். இவ்வாற்றால் வினைப்பசுபாசங்களுஞ் சிறப்பியல்பு பற்றியுணர்தல் சிவஞானத்தானன்றி அமையாதாயினும் ¶ "தீப மெனத் தெரிந்தாங்—கொருவியான் மாவி னுண்மை யுணர்ந் தவா தன்மையுணர்ந்தோர்—தருமிது பசுஞானம்" எ-ம். ○ "இவைகீழ் நாடலாலே—காதலின் ஞானபிரம மென்னு ஞானங் கருதுபசு ஞானம்" எ-ம். பொதுவியல்பு பற்றி

* சிவப்பிரகாசம், உண்மை உஉ. தன்னறிவதனு.
பொது. உச. அன்னியமானவை.
உண்மை உ0. மாயைமாமாயை.
¶ சிவஞானசித்தி, நான்காஞ்சூத்திரம் உ. கருவியாமனமு.
○ ஒன்பதாஞ்சூத்திரம். உ. வேதசாத்திர.

யோதுதலானும் யானிதனை யறிந்தேன் அறிகின்றிலனெ னறியும பாசவுணர்விறகு அவறறது பொதுவியல்பு விடயமாதல கண்கூடாகப் பெறப்படுதலானும், அவை யிருவாற்றுணுணருருவாதலுமுடைமையிற சிவசததாவான் செலலாமை யறிக. சறகாரிய வாதங கூறுஞ சைவசிததாநததததில அசத்தெனபது சததுககு மறுதலையன்மையான் அபபசுபாசஙகள் அஙஙனமறியபபடுமெ பொதுவியலபுபறறி அசததெனப்படுமோ யினுஞ சிறப்பியலபுபறறி அசததாதல் செலலாமையிற சிறப்பியலபு நோககுமவழி அவை சததாதற கிழுககின்மையுமறிக இஙஙனஞ் செவவனே யிறுகக அறியாதார அபாவததினியலபாவது பாவததிறகு மறுதலைபபொருளபோலுமென னையாயிகா முதலியோர மதமபற்றி மயஙகி எலலாபபொருளுஞ சததென்னுஞ் சிததாநததோடு முரணுமைபபொருட்டு ஈணடுச சதது அசததெனப்பட்டனவும சிதது அசிததெனனும் பொருளவாமெனவும, சுததம அசுததமெனனும பொருளவாமெனவும, உரைததிடாப்படுவா. காரியபபிரபஞ்சம் ஏனைப்பசுபாசஙகளபோலனறி இருவகையியலபானுங காட்சிபபுலனாய் இததுணைப்பொழுது நிறகுமென நமமனோரால அறியவாராது நிலைபெறுவதுபோலத்தோனறிவிரையக கெட்டு மறைந்து போதற சிறப்புடைமைபற்றி அதுவே ஈணடு உணருருவசத்தென்றெடுததுக கொளளப்பட்டது. அசத்தெனவே அசித்தென்பதூஉந தானே போதரும.

இதனுள் உணருருவசததெனி னுணராதின்மையினென்றது ஓரதிகரணம்; இருதிறனலலது சிவசத்தாமென இரணடுவகையி னிசைக்குமன்னுலகே யென்றது ஓரதிகரணம; இரண்டதிகரணததது இச்சூத்திரமெனறுணர்க.

## முதலதிகரணம்.

*ஈண்டு அறிவினாலறியப்பட்ட சுட்டு அசத்தென்றது.*

எ-து மே-ள் எ-னின் மேலைச்சூத்திரத்தின் அளந்தறிந்தறியா வென்றதனை உடம்படாது பிரபஞ்சம்போல முதலவனும் அளவைகளான் அளந்தறிபொருளேயாமென லோகாயதிகர் முதலியோர் கூறுங்கடாவையும் எல்லாப்பொருளுஞ் சத்தாகலின் அளந்தறிபொருளுஞ் சத்தேயாமெனச் சாங்கியர் கூறுங்கடாவையு மாசங்கித்துச் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று இ-ள சுட்டறிவினால் அறியப்பட்ட சுட்டுப்பொருளெல்லாம் அசத்து எ-று

சுட்டு ஆகுபெயர்

சிவஞானத்தாலறியப்படுதலை நீக்குதற்கு அறிவினாலென விசேடித்தார்

ஈண்டு அறிவென்றது ஒன்றை முந்தி அதுவதுவாகச் சுட்டிக்காணும் அளவையறிவினையென்பது "அறிவினா லறிந்த யாவு மசத்தாத லறிதி" என்ற புடைநூலாசிரியர் மீள அதனைத் தெரித்தோதியவாறுபற்றி யுணர்ந்துகொள்க.

அவைதாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்

எ-து. எ-து. எ-னின் உள்ளதென்னு முணர்விற்கு விடயமாய் உபலத்தியைப் பயப்பிக்கும் பிரபஞ்சத்தை இல்லையென்னுமுணர்விற்கு விடயமாய் அநுபலத்தியைப் பயப்பிக்கும் இல்பொருளோடொப்ப அசத்தென்றல் அமையுமாதலியாங்ஙனமெனவும் சத்தாகிய பிரபஞ்சத்தைச் சுட்டப்படுதன்மாத்திரையான் அசத்தென்றல் சற்காரியவாதத்திற்கிழுக்காம்போ

---

* சிவப்பிரகாசம், உண்மை. ரு.

னுமெனவும் முறையே அவ்விருவர்மதம்பற்றிக் கூறுவாரை நோக்கி மேற்கோளை சாதித்தனுதலிற்று இ - ள். அசசுட்டு ப்பொருள்கடாம் இராசதகுண மிகுதிப்பாட்டானுளளதெ ன்னும உணாவிற்கு விடயமாய உபலத்தியைப் பயப்பித்து நின்று தானே தாமதகுணமிகுதிப்பாட்டான இலலையென்னு முணர்விற்கு விடயமாய அநுபலத்தியைப் பயப்பித்து நிற்ற லான் ஈணடறிவினலறியபபடட சுட்டு அசத்தெண மேற்கொ ணடது எ - று.

ஈணடுப் பிரகாசம் அப்பிரகாசமென்பன உபலத்தி அநு பலத்தியென்னும பொருளவாய அவை நிகழ்தற்கிடனாகிய பொருணமேனின்றன.

இது நையாயிகரை நோக்கி மேற்கோளை சாதித்த வாறு இனி இதனையே இரட்டுறமொழிந்துகொணடு அவை தாங் காரியவவத்தையிற் றாலமாய விளங்கினபோதே காட்சிப் புலனாயச சடிதியின மறைந்து சூக்குமமாய்க காரணவவத்தை யின விளங்காது நிற்கும இவ்வேற்றுமையுடைமையான ஆங் ஙனம் புலனாகாத காரணப்பொருள்களை நோக்கிக காரியப்பி ரபஞ்சம் அசத்தாதல சாலுமாகலின் ஈணடறிவினலறியபப ட்ட சுட்டு அசத்தென மேற்கொணடதென்றவாறு எனவும் உரைத்துக்கொளக.

அசத்தறியாய கேணி யறிவுறிந்த வெலலா
மசத்தாகு மெயகண்டா னுயின—

எ-து. உ-ம் எ-னின். ஒருசாரன அங்ஙனமாயினும் உண லத்திப்பட்டனவெல்லாம் அவ்வாறு அசத்தாமென்றற்குப் பிரமாணமென்னையென்னு நையாயிகரை நோக்கி ஏதுவை வலியுறுத்திதனுதலிற்று. இ - ள். அசத்து அறியாய் நீ கேள். எ-து. அசத்தினியல்பை யறியாத மடவோனே யாரினக்கு

மிறைவ! நீ மனம்பற்றிக் கேட்பாயாக—மெய் கண்டான் ஆயின் அறிவு அறிந்த எல்லாம் அசத்து ஆகும். எ-து. சத்தினியல்பை யறிந்தோன ஆராயாதாராயின அறிவினாலறியப்பட்டனவெல்லாம் அசததேயாம் எ-று.

அறியாயென்பது விளியுருபேறறபெயர்.

அசததினியல்பை யறிநதாயாயின இவ்வாறு பிணங்குவாயல்லையென்பார அசததறியாயெனறும், *"எநதை தாட்பால வணஙகித தலைநினறு கேட்க" என்பார் கேணியெனறும், உபலததிக்கு விடயமானவையெலலாம் அநுபலததிககு விடயமாதல ஒருதலையெனபார அறிவறிநதவெலலாமசததாகுமென்றும, சததினியலபுணாநதாககனறி அசததினியல்புணர வாராதெனபார மெயகணடானெனறும்,ஆய்தறகருமைநோககி ஆயினென்றுங கூறினர்

அசத்தலாய
நீரி லெழுதது நிகழுகனவும பேயததேரு
மோரினவை யினறுமா றொபபு.

எ-து. உ-ம். எ-னின. இரட்டுறமொழிந்துகொண்டு சாங்கியரை நோககி யுரைத்த பொருளை வலியுறுததுதனுதலிற்று. இ-ள. அசத்து அலாய் எ-து அசற்காரிய வாதி யல்லாத அறிவுடையோனே—அவை இன்று ஆம ஆறு ஒப்புஓரின். எ-து அங்ஙனந் தோன்றி மறைவனவாய பிரபஞ்சம் அசத்தாமாற்றிற்கு உவமையாராயின்,—நிகழ் நீரில் எழுத்தும் கனவும் பேயத்தேரும். எ-து. நிகழாநின்ற நீர்மேலெழுத்துங் கனவிற்காட்சியும் பேய்த்தேருமாம. எ - று.

---

*. திருஞானசமபந்தமூர்த்திநாயனார் திருப்பிரசுரம. சு. ஆட்பாலவர்.

எனவே, அப்போதுள்ளனவாய நீர்மேலெழுத்து முதலி யனவற்றை அங்ஙனே சடுதியின் மறைந்துபோதற் சிறப்புப் பற்றி அசத்தென்றல் எல்லார்க்குமொப்பமுடிந்தமையின், அவ்வியல்புடைய பிரபஞ்சத்தையும் அவைபோல அசத்தெ ன்றல் அமையுமென்றவாறாயிற்று. 1

அசற்காரியவாதியை அசத்தென்றுபசரித்தார்.

நீரிலெழுத்து முதலியன பொய்யென்பாரை மறுத்தற்கு நிகழென்றடைகொடுத்தார் அஃதியாண்டுஞ் சென்றியையும்.

ருவ்வுருபு விகாரத்தாற் றொக்கது

இன்றெனனுமொருமை அப்பன்பின்மேனின்றது.

நீரிலெழுத்துத் தோன்றியபொழுதே மறைந்துபோதற் கும், கண்டபொருள் முடிவுபெறுதலின்றி இடையே மறை ந்துபோதற்கும், அருஞ்சுரத்தின் முதுவேனிலின் நண்பகற் கடுமைபற்றித் தோற்றி ஞாயிற்றின் கிரணம் முகிற்படலத் தின் மறைந்தவழித் தானு மறைந்துபோவதாகிய பேய்த்தேர் ஒருகாரணங்காட்டி மறைந்துபோதற்கும் உவமையாயின. இவ்வெண்பாவை "இலயித்ததனின்" என்பதுபோல இங் ஙனம் இருதொடராக வைத்துரைத்து மேற்கோளேதுக்களை யும இரட்டுறமொழிந்துகொண்டு இரண்டதிகரணப்பொருள் கோடல் ஆசிரியர் கருத்தென்பது வழிநூலாசிரியர் * "அசத் தாஞ் சுட்டி யுணர்பொரு ளான வெல்லாம்" எ-ம். † "உல கிலே யசத்து மென்பர்" எ-ம். வேறு கூறியவாற்றானு முண ர்க. இஃதறியாது இவ்வெண்பாவை ஒருதொடராக வைத்து ரைப்பார்க்கு அசத்தறியாதானே அசத்தலாய் என்றதனால் ஒருபயன்படாமையும், ஆயின ஓரினென்று இருகாற்கூறுத

* சிவஞானசித்தி, ஆருஞ்சூத்திரம். உ. ஆலதாயழிவ.
† க. மண்டனில.

லும். சித்தாரும் இன்றாமென்று இருகாற்கூறுதலுங் கூறியது கூறலென்னும் வழுவாதலுமறிக. இனி ஒருவாற்றானுமுணரப்படாதபொருள் சூனியமென்பது எல்லாச்சமயத்தார்களும் ஒப்பமுடிந்தமையின் ஆண்டதிகரணத்திற்குரிய ஐயப்பாடுமுதலியன நிகழாமையான் அதனை வேறெடுத்துரைத்து மேற்கொள்ளவேண்டாவாயினும், மந்தவுணர்வுடையார்க்கு அதன்கண் ஐயநிகழாமைப்பொருட்டு வழிநூலாசிரியர் *"உணராத பொருளசத்தென்னி லொருபய னில்லை போலும்" என விடுத்தொழிந்தாரென்றுணர்க

முதலதிகரணமுடிந்தது

## இரண்டாமதிகரணம்.

இனி இவ்விரண்டு தன்மையுமின்றி வாக்குமனாதீதகோசரமாய் நின்றவதுவே சத்தாயுள்ள சிவமென்றுணர்ப்பாற்று.

எ-து. மே-ள் எ-னின். மேல உணர்பொருளியல்பும் உணராதபொருளியல்புங் கூறுமுகத்தான் அசத்தினியல்பை வரைசெய்துணர்த்தியவழி இரண்டுமே இவ்வாறாகலான் இவற்றின் வேறாய முதல்வனதியல்பாவது மாயாவாதி கூறும் அநிருவசனம்போலுமென்னுங் கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் பிற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இ-ள். வெ-டை.

வாக்கெனப்படு நாதமுடிவான பாசஞானத்தை வாக்கென்றும் அவற்றின் வேறாய பசுஞானத்தை மனமென்றும் உபசாரவழக்காற் கூறினார்.

வாக்குமனாதீதகோசரமாய் நின்ற. எ-து. அவ்விரண்டின் விருத்திகளைக் கடந்து அதீதமாயும் ஒற்றுமைப்பட்டு நின்

* சிவஞானசித்தி, ஆறுஞ்சூத்திரம். ௪. உணராத.

றுணரும் அநுபவஞானமாத்திரைக்கே விளங்கிக் கோசரிப்பதாயும் நின்றவென்றவாறு.

அவ்வாறு நின்றபொருள் இதுவென அளவைகளான் அறியவாராமைபற்றி அதுவேயென மகாவாக்கியத்திற் கூறிய தனை அநுவதித்துச் சத்தாகிய சிவமாதலைச் செவியறிவுறுத்தார்.

வாக்குமனோதீதம் என்றது தமிழ்நூன்முடிபு. மரவடி மராடியென மரீஇயினாற்போல மனவதீதம் மனோதீதமென மரீஇயிற்று. அதீதகோசரமென்பது வடநூன் முடிபு.

வாக்குமனோதீதப்பொருளாகலின் உணருருவாந்தன்மையும், கோசரப்பொருளாகலின் உணராதாந்தன்மையும் இல்லையென்பது பெறப்படுதலின் இவ்விரண்டுவகையு மின்றியென்றார்.

பிரகாசத்திற்குப் பிரகாசிக்கவேண்டுவதின்மையானும் அப்பிரகாசத்திற்குப் பிரகாசமின்மையானும்

எ-து. ஏது எ-னின் இவ்விரண்டுவகையுமில்லாத பொருள் அநிருவசனமாய் நிற்பதெனவோது வாக்குமனோதீத கோசரமாய் நிற்பதென்றற்குப் பிரமாணமெனவினையெனபாரை நோக்கி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று. இ - ள். வாக்குமனங்களா லோதியுணரப்படுவதாய நிருவசனப்பொருட்கு முன்னர்க் கூறப்பஞ்சாதனங்களினின்று அறியற்பாலதாக வேண்டாமையானும் ஒருவாற்றானும் அறியப்படாத அநிருவசனப்பொருட்குச் சாதனத்தினின்றும் அறியப்படுமாறின்மையானும் இனி இவ்விரண்டுதன்மையுமின்றி வாக்குமனோதீத கோசரமாய் நின்ற அதுவே சத்தாயுள்ள சிவமென்றுணரற்பாற்றென மேற்கொண்டது. எ - று.

உணர்தற்பாற்றென்றார் உணர்தலருமை நோக்கி.

பிரகாசம் அப்பிரகாசமென்பன உபசாரவழக்கு.

எண்ணிய சத்தன் றசத்தன்றா மென்றாலென்
கண்ணி யுளதென்றன் மெய்கண்டா — னெண்ணி
யறியு மிரண்டா மசத்தாதல் சத்தா
மறிவறியா மெய்சிவன்றா ளாம்.

எ-து. உ-ம் எ-னின். பரப்பிரமப்பொருள் அவிச்சைவயத்தான் ஞாதாவெனவும் ஞேயமெனவும் பகுக்கப்பட்டு முன்னர்க் கூறப்படுஞ்சாதகங்களினின்றறியவும்படும் அவிச்சை நீங்கியவழி அப்பகுப்பின்மையாற் சத்தென்றாதல் அசத்தென்றாதல் ஒருவாற்றானும் ஞேயமாமாறின்றிக் கேவலஞானமாத்திரையேயாய் நிற்பதொன்றாகலான் அது கோசரமாமென்றல் பொருந்தாதென்பாரை நோக்கி அதனை வலியுறுத்துதனுதலிற்று. இ-ள். எண்ணிய சத்து அன்று அசத்து அன்று ஆம் என்றால் என் கண்ணி உளது என்றல். எ-து. பரமார்த்தமாகிய பரப்பிரமப்பொருள் விவகாரத்திற் கருதப்பட்ட சத்துமன்று அசத்துமன்றென்னின் அங்ஙனமொருபொருளுண்டென்றல் யாது பிரமாணங்கருதியோ அதனைக் கூறுவாயாக. பிரமாணமுண்டெனின் அதற்கு அது பிரமேயமெனப்பட்டு ஞேயமாவான் செல்லுமென்றஞ்சிப் பிரமாணமில்லையென்பையாயின்,—மெய்கண்டான் எண்ணி அறிய இரண்டு அசத்து ஆம் எ-து. சத்தினியல்பையுணர்ந்தோன் ஆராய்ந்தறியிற் காட்சிமுதலிய பிரமாணங்கட்கு விடயமாவதூஉம் ஒருவாற்றானும் பிரமாணமல்லாத சூனியமுமாகிய இரண்டும் மேற்கூறியவாற்றான் அசத்தேயாம்.—ஆதல் சத்து ஆம் அறிவு அறியா மெய் சிவன் தாள் ஆம். எ-து. ஆதலாற் சாந்தோக்கிய முதலியவற்றுட் சத்தென்றோதப்படுஞ் சுட்டறிவினால் அறியப்படாத மெய்ப்பொருள் சைவவுபநிடதங்களினுஞ் சைவாகமங்களினும் அன்னியமின்றி நின்றுணரும் அநுபவ

மாத்திரையிற் கோசரிப்பதென்றோதப்படுஞ் சிவனருளாவதி னறி நீ கூறுஞ் சூனியமன்று. எ - று

அறியவென்னுஞ் செயவெனெச்சம் மழைபெய்யக் குள நிறையும் எனபுழிப்போலச் செயினென்னுமெச்சப்பொருட்டாய் நின்றது. முற்றும்மை விகாரத்தாற்றொக்கது.

அசத்தாமென மாறுக

சத்தாகிய மெய்யெனவியையும் "அடியளந்தான் றாயது" என்றாற்போல அறிவறியாமெய்யென்றது வாளாபெயராய் நின்றது

சிவனருளெனச் சிவசத்தியின்மேல் வைத்து உயர்த்துக் கூறியது உபசாரவழக்கு * "இறைவனார் கமலபாதம்" என்பதுமது

இதனாற் போந்தபொருள் சத்துமன்றி அசத்துமன்றி ஒரு பொருளுண்டெனின் அதற்குப் பிரமாணமென்னை பிரமாணாதீதமாகிய சூனியமென்ற சூனியமும் அழிபொருளுமாகிய இரண்டும் அசத்தேயென்பது மேற் காட்டினமையாற் பிரமப் பொருள் அசத்தெனப்பட்டுச் சத்தென்னுஞ் சுருதிகளோடு முரணுமாகலின் அவற்றுட் சத்தென்றோதப்படும் பரப்பிரமப் பொருளாவது உண்மைஞானத்திற் கோசரிப்பதென யாங்கூறுஞ் சிவமேயன்றி நீ கூறுஞ் சூனியமன்றென மாயாவாதியை மறுத்துக் கோசரமென்றதனை வலியுறுத்திய வாறுமெண்க.

எண்ணியறிய விரண்டாமசத்தென்பதற்குப் பிறரெல்லாம் வருகின்ற வெண்பாவிற்கூறும் பொருள்படக் கூறியது கூறலாதன்மேலும் ஓரியைபின்றியுரைப்ப

---

* சிவஞானசித்தி சுபக்கம், பாயிரம்.

உணர்ப வசத்தாத லொன்றுணரா தொன்றை
யுணருநீ தானுணரா யாயி—னுணருமுனிற்
றானிரண்டா மெய்கண்டான் றன்னா லுணர்தலாற்
றானிரண்டாய்க் காணான் றமி.

எ-து உ-ம் எ-னின. பிரகாசித்த பொருளையும் வேறொ ராற்றான அறிதுமென வேட்கைசென்றுழி அவ்வாற்றாற புது வதாய்ப பிரகாசிக்கவேண்டுதலிற் பிரகாசத்திற்குப் பிரகா சிக்கவேண்டுவதில்லையென்றல யாண்டுஞ் செல்லாமையின வாக்குமனாதீதமென்றல் பொருந்தாதென்பாரை நோக்கி அதனை வலியுறுத்துதனுதலிற்று. இ-ள. உணர்ப அசத்து. எ-து. நினனாலறியப்படுவனவாய கருவிகளெல்லாம மேற்கூறியவா ற்றான் அசத்தாம. அசத்தெனவே அசித்தாதலும் பெறப்படும் - ஆதல ஒன்று ஒன்றை உணராது எ-து ஆகலான அவற்றுள் ஒரு கருவியும ஒன்றாகிய முதற்பொருளை அறியமாட்டாது.— உணரும நீ தான உணராய் எ-து அவற்றானறிந்து வருகி ன்ற நீதானும அதனையறியமாட்டாய்.—ஆயின், எ-து. நீயே யாய்ந்தறிவாயாயின்,—உணரும உனின தான் இரண்டு ஆம். எ-து. அவ்வாறுணரப்படும்பொருள்கள்போல உணர்கின்ற நின்னின வேறாம.—மெய்கண்டான்றன்னால் உணர்தலால் தான் இரண்டாய்க் காணான் தமி. எ-து. உயிர்க்கு அறிவு வி ளக்குமுறைமையை அறிந்தோன் தன்னறிவு அச்சிவனருளின் அடங்கி அதுவாய் நின்று அதனானே அதனையறியுமாகலான் ஏனைப்பொருள்களையறியுமாறுபோல வேறாய் நின்றறிவானல்லன் அத்தனிமுதற்பொருளை. எ-று.

இதனாற் போந்தது சத்தாகிய சிவம் பாசஞானத்தானு தல் பசுஞானத்தானுதல அறியப்படாது; அறியப்படிற் குட முதலாயினபோல உயிரின்வேறாய் அவிச்சையான் வருஞ சுகதுக்கங்களைப் பயப்பதன்றி அவிச்சையினீங்கிய நிரதிசய

வினைபதந்தைப பயவாதாகலான் அவ்வுண்மையுணர்ந்தோனை ஏனையபோல அசத்தாதலின்றித் தனியாய நின்ற அம்முதற் பொருளை அதனுடொன்றிநது நின்றே காணபனென னையாயிகர் முதலியோரை மறுதது வாககுமனதீதமாய் நின்றே கோசரமாமென வலியுறுததியவாறுமெனக.

உணர்பவெனபது அகரவீற் றம்றிணைப்பன்மைப் பெயர்சசொல.

ஒன்றுமென்னும முற்றும்மை விகாரத்தாறறொககது.

உனினென்னும் இன்னுருபு நீககபபொருடகண வந்தது ஒற்றிரட்டாமை புறனடையாற கொளக தான அசை.

பாவகமேற றானசத்தாம பாவனா தீதமெனிற
பாவகமாமன்றெனனிற பாழுதுவாம—பாவகத்தலைதப
பாவித்த றென்னனிற பாவகமாந தனனருளாற
பாவிப பதுபரமில பாழ

எ-து உ-ம. எ-னின். தானே கோசரமானலன்றித் தன்னலறிதலகூடாமையிற றனனலே தனையுணருமெனபது தனனைபபறறுதலென்னும் வழுவாமாகலின அவவாறன்றி வாககுமனதீதப்பொருள யோகநூலிற்கூறுந தியானபாவனைகளிற கோசரமாமென்றலே அமைவுடைத்தென யோகமதப பற்றிக் கூறுவாரை நோககித தனனலனறிக கோசரமாகாமையை வலியுறுததுதலுதலிற்று இ-ள. பாவகமேல தான அசத்து ஆம். எ-து. நீ கூறும் பாவனை ஏனைப்பாவகஙகள போல [illegible]னமுதலியவற்றோடு கூடி நின்று பாவிககும பாவகமெனின் அறிவினலறியப்பட்ட சுட்டாகலான் அப்பொருள அசத்தாம்:—பாவனதீதம் எனின் பாவகம ஆம். எ-து. கருவிகளை நீங்கிநின்று பாவிப்பதாகலின் அப்பாவனையைக கடநததெனிற கருவிகளைநீங்கியவழி ஒன்றுமறியுமாறின்றிக் கேவல

ழாமாகலான் அது பாவகமாத்திரையேயன்றிப் பயன்படுமாறி லலை:—அன்று என்னின் பாழது ஆம் எ-து. இவ்விருதிறனு மன்றி அதிருவசனமாகப் பாவிக்கப்படுவதெனின் அது சூனி யப்பொருளாம் —பாவகத்தைப் பாவித்தல் தான் என்னை பாவகம் ஆம் எ-து அவ்வாறன்றிப் பாவனைக்கெய்தாத பொருளை எய்தியதாகவைத்துப் பாவகஞ்செய்தலெனின் அது போலிப்பாவனையாதலாற் பாவகஞ்சித்தம்போலப் பாவனை மாத்திரையேயன்றிப் பயன்படுமாறில்லை அற்றேல் ஒருவாற் றானும் பாவனைக்கெய்தாத பொருள் பாழாமெனின்,—தன் அருளால் பாவிப்பது பரம் எ-து. அப்பாவகத்தை யொழித் துத் தனது திருவருளாற் பாவிக்கப்படுவதாம் பரம்பொருள்— பாழ் இல. எ-து ஆகலான் நீ கூறும் பாவனைக்கெய்தாமை பற்றிப் பாழாதலில்லை. எ - று. தான் அசை

பாவகத்தைப் பாவித்தலென்பது "கறைமிடறணியலு மணிந்தன்று" என்றதுபோலக்கொள்க.

மேலைவெண்பாவில் தன்னென்றது தனது சத்தியையா கலால் தன்னைப் பற்றுதலென்னுங் குற்றமாதல் யாண்டைய தென விடுப்பார் தன்னருளாற் பாவிப்பதென்றார் தன்ன ருளை யறியுமாறும் அதனாற்பாவிக்குமாறும் ஒன்பதாஞ் சூத்தி ரத்துட் கூறப்படும்.

யோகநூலார் கூறும் பாவனையாவது இந்நான்கனுள் ஒன்றாகற்பாலதன்றி வேறின்மையின் நான்கினையுங்கூறி மறுத் தார்

அறிய விரண்டல்ல னுங்கறிவு தன்னா
லறியப் படானறிவி னுள்ளா—னறிவுக்குக்
காட்டாகி நின்றானைக் கண்ணறியா மெய்யென்னக்
காட்டா தறிவறிந்து கண்டு.

எ-து உ-ம். எ-னின். மேற்கூறிப் போந்த பாவனைகட் கெய்தாத பொருளைத் தன்னருளாற் பாவித்தலவேண்டாம் உயிர் பசுத்துவநீங்கிய காலத்துச் சிவனைப்போல முற்றுமுணர்தல் முதலிய எண்குணங்களுமுடைய தென்று ஆகமங்களுட் கூறுதலின் ஆண்டான்மஞானஞ் சிவஞானத்தோடொப்பதன்றிப் பசுஞானமெனப்படாமையான் அவ்வறிவான் அறியப்படுவ கோசரப்பொருளென்றலே அமைவுடைத்தென்னுஞ் சிவசமவாதிகளை நோக்கித் தன்னருளாலன்றிக் கோசரமாகாமையை வலியுறுத்துதனுதலிற்று. இ-ள் அறிய இரண்டு அல்லன. எ-து சிவாகமங்களின் அத்துவிதங் கூறுதலின் உயிர் தன்னறிவானறிதற்குத் தன்னின் வேறல்லனாகலானும்,—அறிவின் உள்ளான் ஆங்கு அறிவு தன்னால் அறியப்படான் எ-து சமமாதலின்றித் தூலசூக்கும முறையாற் றன்னறிவுகட்குள்ளுமாய் நிற்றலின் அவ்விடத்துந் தன்னறிவினால் அறிய வாரானாகலானும்—அறிவுக்குக் காட்டு ஆகி நின்றனை. எ-து. தன்னறிவுக்கு வியஞ்சகமாய் நின்றறிவிக்கும் உயிர்க்குயிராய முதல்வனை—அறிவு கண்டு அறிந்து காட்டாது எ-து. ஆன்மஞானமானது தான்கண்டறிந்து தனக்குணியாகிய உயிர்க்குக் கோசரமாமாறு காட்டமாட்டாது.—மெய் அறியாக் கண் என்ன. எ-து. தன்னின் வேறின்றித் தனக்குண்ணிற்றலிற் றன்னாற்காணப்படாது தனக்குக் காட்டாகின்ற உயிரை யறியமாட்டாத கண்ணொளிபோல எ-று.

காட்டு முதனிலைத்தொழிற்பெயர்.

அறிவுக்குக் காட்டாகி நின்றானென்னும் பெயரடையுரா னும் ஓரேதுக் கூறியவாறு.

கண்டறிதல் "குழிந்தாழ்ந்தகண்" என்றாற்போல ஒரு பொருட்பன்மொழியாய்ச் சிறப்பின்கண் வந்தது.

மெய்யறியாக் கண்போலென இயைத்துரைக்க. கண்மு

தலியவற்றை நோக்கி உயிர் சத்துச்சித்தாமென்றவதனை மெய் யென்றார். கண ஆகுபெயர்.

கணணறியாமெயயென்பதறகுக் கண்ணையறியாத உடம் புபோலென்றுரைப்பாருமுளர். உடமபிறகு அறியுந்தன்மை யினமையானும, உடமபிறகுக் கண காட்டாதலுமினமையா னும் அஃதிணடுவமையாதறகேலாமையின அது போலியுரை யெனவொழிக.

அதுவென்று மொன்றன் றதுவன்றி வேறே
யதுவென் றறியறிவு முண்டே—யதுவென
றறிய விரண்டல்ல ஞங்கறிவு ணிற்ற
லறியுமறிவே சிவமு மாம

எ-து உ-ம எ-னின அததன்மையனாகிய முதலவனைத தலைப்பட்ட உயிா அமமுதலவனோடு ஒன்றாயப போவதேயா கலின் ஆணடுஙஙனமறிவதூஉம அறியப்படுவதூஉமாதல யா ஙஙனமெனனுஞ சிவாததுவிதசைவா சுததசைவரை நோககி ஒனறாயவழியும அறிவதும அறியபபடுவது முணடென்பது ணாததி அதனை வலியுறுததுதனுதலிறறு இ-ள் அது எனி னும ஒனறு அன்று. எ-து. சததாகிய சிவம ஞேயப்பொரு ளாய விசிட்டமாய நிற்பதென்பது உமக்குமொககுமாகலான் அசசிவம இனனதென்றறிய வாராது அநிருவசனமாய நிறப தொருநிருவிசேடப்பொருளெனக் கொணட மாயாவாததனை ப்போல அதுவென்று அநிருவசனமாய்க கூறப்படுவதொரு சூனியமன்று ஆகலான்—அது அன்றி வேறே அது என்று அறி அறிவும் ஆங்கு உணடே.எ-து அந்த ஞேயமாத்திரையே யன்றி அதனின வேறாகவாக்கு மனாதீதமாய நிற்பதொருபொ ருளென்றறிகின்ற ஞாதாவும் ஆணடுளளதேயாம். அற்றேல், ஒன்றாதல் பெறப்படாதாலெனின்,—அது என்று அறிய இர ண்டு அல்லன் அறிவுள் நிற்றல் அறியும் அறிவே சிவமும் ஆம்.

எ-து. உலகத்துப்பொருள்போல் அதுவென்று சுட்டி யறியு மாறு முதலவன் தன்னின வேறல்லனாய் அப்பணைந்த உப்புப போலத் தன்னறிவின்கண் விரவி வேற்றுமைதோற்றாது நிற் றலான் அறிவிறந்துநிற்கின்ற அவ்வுயிர் சிவமேயாம் எ - று.

உண்மை சிவமாயுஞ் சிவமாகாமை விளக்கிநின்றது

அதுவென்னு மொன்றன்றாகலானென ஏதுப்பொருள் பட்டுக்கொண்டுரைக்க

அறிவுமென்ற உம்மை இறந்தது தழீஇயது

அல்லவென்பது முற்றெச்சம். வேறுமுடிபுகோட்டலிற் பால்வழூவாகாமையுணர்க.

உண்டேயெனினும் ஏகாரம் தேற்றம், ஏனையிரண்டும் அசைநிலை. நிற்றல நிற்றலானென்றவாறு.

இவ்வெண்பாக்களாந்தம் முறையே வாக்குமனாதீதமே ன்றல் பொருந்தும் கோசரமாமென்றல் பொருந்தாதென்னும் மாயாவாதிகளையும், கோசரமாமென்றல் பொருந்தும் வாக்கு மனாதீதமென்றல் பொருந்தாதெனனும் நையாயிகாமுதலி யோரையும், பாவனைக்குக் கோசரமாமெனனும் பாதஞ்சலரை யும், ஆனமஞானத்திற்கே கோசரமாமெனனுஞ் சமவாதசை வரையும், முத்தியிற் சிவமேயன்றி உயிரென வேறின்மையின் உயிர்க்குக் கோசரமாமாறியாண்டையதென்னுஞ் சிவாத்துவி தசைவர் முதலியோரையும் மறுத்து, வாக்குமனாதீதகோசர மாய் நிற்குமியல்பு வலியுறுத்தி ஒருபொருண்மேல வந்தவாறு காண்க.

இவ்வாறு நாலாஞ்சூத்திரமுதலிய மூன்றினும் மேற்பிர மாணத்தாற்கூறிப் போந்த பசுபாசபதிகட்கு இலக்கணங்கூ றுமுகத்தான் முறையே கேவலஞ் சகலஞ் சுத்தமென்னும் மூன்றவத்தையுங் காட்டப்பட்டன. இம்மூன்றனுட் கேவலம் மருட்கேவலமும், சகலகேவலமும், பிரளயகேவலமும், விஞ்

ஞானகேவலமும், அருட்கேவலமுமென ஐவகைப்படும் அவ றறுள, மருட்கேவலமாவது அநாதிகேவலம. சகலகேவலமா வது சஙகரித்தபின்னர்ப் புனருற்பவத்திற கேதுவாயபபடுங கேவலம ஆணடுச சூக்குமவைந்தொழிலுண்டென மிருகேந் திரததுட்கூறுதலின் அநாதிகேவலததோடு இதனிடை வேற றுமையாமாறு கண்டுகொளக. பிரளயகேவலமாவது மாயை யோடு இயைபின்றி ஆணடுப்படுங கேவலம் விஞ்ஞானகேவ லமாவது மாயைகனமஙகளெனனும் இரணடனோடும் இயை பின்றி ஆணடுபபடுங கேவலம. அருட்கேவலமாவது தததுவ சுத்திப் பினனாபபடுங கேவலம. அது துகளறுபோததநிற காணக இனிச சகலமுஞ சகலததிற கேவலம், சகலததிற் சகலம,சகலததிற் சுத்தமென மூவகைப்பட்டு ஒரோவொன்று ஐந்துவகைப்படும அவற்றுட் சகலததிறகேவலமைநதும "ஒனறணையாமூலதது" என்றதனுட்காணக. சகலததிற சக லமைநதும் "இலாடததேசாககிரததை" என்றதனுட்காணக. சகலத்திற சுததமைநதும * "யோகிறறருவதோர் சமாதி" என வழிநூலாசிரியா தொகுததோதியது சிததாநதசாராவலி. யோகபாததநின் வகுத்துககூறுதலான ஆணடுக காணக இனிச் சுததமுஞ சீவன்முத்தி அதிகாரமுத்தி போகமுத்தி இலயமுத்தி பரமுத்தியென ஐவகைபபட்டுச் சாககிரமுத லியபெயர் பெறும், அவற்றை முனனா வகுததோதுப.

இரணடாமதிகாரணமுடிந்தது

ஆறுஞ்சூத்திரமுடிநதது.

இலக்கணவியன முற்றிறறு

பொதுவியல்பு முற்றுப்பெறறது.

திருச்சிற்றம்பலம்.

---

* சிவஞானசித்தி, நான்காஞ்சூத்திரம். ௩௬. இருவகை

திருச்சிற்றம்பலம்.

# சிறப்பியல்பு.

## சாதனவியல்

### ஏழாஞ்சூத்திரம்.

யாவையுஞ் சூனியஞ் சத்தெதி ராகலிற்
சத்தே யறியா தசத்தில தறியா
திருதிற னறிவுள திரண்டலா வான்மா.

எ-து. சூ-ம். எ-னின். மேலதற்கோர் புறனடையுணர்த் துத னுதலிற்று

எ-து. க-ரை. எ-னின். சூத்திரக்கருத்துணர்த்துதனுத லிற்று. இ-ள் நூலாருந்தி நியாயம்பற்றி மேலையாறுசூத்தி ரங்களினுஞ் சிவாகமங்களிற் கூறப்படும் முப்பொருள்களது பொதுவியல்பு பிரமாணமுகத்தானும் இலக்கணமுகத்தானும் ஆராய்ச்சி செய்துணர்த்திய ஆசிரியர், அம்முப்பொருள்களது சிறப்பியல்பெனப்படும் உண்மை சாதனமுகத்தானும் பயின் முகத்தானும் ஆராய்ச்சிசெய்துணர்த்துவான் புகுந்து முதற் கண் மூன்றுசூத்திரங்களான் அவற்றையறிந்து அதனுறு பயன் பெறுதற் கேதுவாகிய சாதனங் கூறிய தொடங்கினர். அவற்றுள் இச்சூத்திரம் உணருருவசத்தெனவும் இருதிறனல்

லது சிவசததெனவும் மேலைச்சூததிரததான் வரைசெய்துணர் ததியவழி அங்ஙனமறியும பொருள அவ்விரணடனுள ஒன் ஞே வேறேயென்னும் ஐயப்பாட்டின்கண அவ்விரண்டி னுள ஒன்ருகற்பாலதென்பாா மதமபறறி நிகழுங கடாவை யாசஙகித்துச சூத்திரத்துகருப் புறனுகவெடுதது ஓரொழிபா கிய சதசததினியல்பு வரைசெயதுணர்தது முகத்தானே சாதி த்துப் பயன்பெறுதற்குரிய அதிகாரியாவது இதுவெனபதுண ர்த்துதனுதலிறறு எ - று

அதிகாரமும் ஒத்தும் வேருயவழியும் இயைபுணர்ந்து கோடறபொருட்டுக கருத்துரை அவவாறு செயதாரென்பது இப்புறனடையை வடநூலாா வாககியசேடமெனப.

இதனுட் கூறப்படுமூனறதிகரணமும் மூன்றுபுறனடை போலுமெனை மலையாமைபபொருட்டு ஓா புறனடையென்ருர். முனனையவிரணடும் இறுதியதிகரணததைச சாதிததறகேது வாய ஒருபொருணமேல வநதனவேயாம என்பது கருதது.

ஒன்றனை யறிநதவழி அதனுனய பயன்பெறுதறகுரிய முயறசிசெய்யலுறுவாாககு அதனைச சாதிககுமாறறல தமககு ண்டென்பதூஉம், சாதிததனுல வரும பயன் இதுவென்ப தூஉம் அதனைப் பயப்பிததற்குரிய சாதனமாவது இதுவென்ப தூஉம அதுவருவாயும் உணாந்தாலனறி அதனகண மனவெ ழுச்சி செல்லாமையின் ஈணடோதப்படுஞ் சாதனஞ்செய்து பயன்பெறுதற் குரிமையுடைய அதிகாரியினியல்புணர்த்துவ தாய இச்சூததிரம் முதற்கணவைககப்பட்டது.

இதன் பிண்டப்பொழிப்பு மேலைச்சூத்திரத்துட் கூறப போந்த இரண்டனுள் வாககுமனுதீதமாகிய சிவசத்தின் சந்நி தியின் உணருருவாகிய அசத்தெலலாம் பாழாகலிற் சத்தாகிய சிவம் அசத்தாகிய பிரபஞசத்தை அறிதல்செய்யாது: அசத்தா

கிய பிரபஞ்சம் அறிவில்லாத சடமாகலிற் சத்தாகிய சிவத்தை அறிதல் செய்யாது ஆகலாற் பாரிசேடவளவையான் இருதிற னறிவுளதொன்றுணடென்பது பெறப்படுதலின் அதுவே சத்தாதற்றன்மையும் அசத்தாதற்றன்மையுமாகிய இரண்டுமெனறிச் சதசத்தாயுள்ள உயிராம். எ - று.

இரண்டனுள் ஒன்றனைப் பிரிக்கின்றமையிற் சத்தேயெ ன்னுமேகாரம் பிரிநிலைக்கண் வந்தது.

அசத்திலதாகலினென்றுரைக்க.

அசத்துச் சத்தையறியாமைக்கும் சத்தெதிர் சூனியமாதலே ஏதுவாதலமையுமாயினும், அசத்தென்னப்பட்ட கருவிகண் முத்திநிலையிற் சிவகரணமாய் ஆன்மசந்நிதியையொட்டி முதல்வன்சந்நிதியின்றிக்கப்பெறுமெனபாரை நோக்கி வேறுமோரேதுக்கூறினார். இக்கருத்தே பற்றி * "சத்தினமு னிலாமையானுந் தனைக்கொண்டொன் றுணாத லானும்" என விரண்டேதுவும் உடன்கூறினார் வழிநூலாசிரியரும்

ஏற்புழிக்கோடலான அறிதலென்றது ஈண்டநுபவ வறிவின்மேற்று

இனைத்தெனவறிந்தபொருட்கு வினைப்படுதொகுதிக்கண் வேண்டப்படுமுற்றும்மை விகாரத்தாற் றொக்கது

இதனுள் யாவையுஞ் சூனியஞ் சத்தெதிராகலிற் சத்தேயறியாதென்றது ஓரதிகரணம்; அசத்திலதறியாதென்றது ஓரதிகரணம்; இருதிறனறிவுளதிரண்டலாவான்மாவென்றது ஓரதிகரணம்; ஆக மூன்றதிகரணத்தது இச்சூத்திரமென்றுணர்க.

## முதலதிகரணம்.

ஈண்டுச் சத்தினிடத்து அசத்துப் பிரகாசியாதென்றது.

* சிவஞானசித்தி, ஏழாஞ்சூத்திரம். க. அனைத்துஞ்

எ-து. மே-ள். எ-னின். "தந்திடுஞ் சிவனவன்றன் சந்நிதிதன்னி னின்றே." எ-ம் "கூடுமொளி வளர்குடிலை மாயை மேவி." எ-ம். "தாரகமா மத்தன்றா ணிற்றல்." எ-ம். "விமலனுக்கோர் சத்தியாய்." எனவும் "உலகமேயுருவமாக" எ-ம. "ஆநதுவா மூர்ததியாகி" எ-ம். "இருநிலனாய்த தீயாகி நீருமாகி—நின்றவாறே." எ-ம் கூறபபடுமியலபுடைய பிரபஞசத்தைச் சததெதிர் சூனியமெனறல அவசித்தாந்தமாய் முடியும்போலும் எனவும், "மணடிய வுணர்வு யிர்க்காய மன்னி நின் றறியும" எனவுங கூறுஞ் சிவாத்துவிதசைவர் மதம்பற்றி நிகழுஙகடாவை யாசஙகித்துச் சூததிரததின் முதறகூறிற்போந்த எதுவைக கணணழிததுரைத்து மேற்கோடனுதலிற்று. இ-ள் சுட்டுணாவின்றி நின்றறியுஞ சிவசததின்முனனாச் சுட்டியறியப்படும் அசத்தாய பிரபஞசம் விளஙகித் தோன்றாது. எ-று.

ஈண்டுச் சூனியமென்றது விளங்காமைப்பொருட்டென்பார் பிரகாசியாதென்றார் இககருததே பறறி "மூனததிடாதசத்துச் சததின் முன்னிருள" எனறா வழிநூலாசிரியரும். மூனததிடாமையாவது இது குடம இஃதாடையென நமமனோரற் சுட்டியறியபபடுமாறுபோல முதலவனாற் சுட்டியறியப்படுவதாய வேறு நிலலாமையாம ஆகவே ஈண்டுச் சத்தெதிர் யாவையுஞ் சூனியமென்றது கொணடு அவசித்தாந்தமாதல் யாணடையதென மறுத்துச சததறியாதென்றதனை வலியுறுத்தியவாறுகாணக.

மெய்யினிடத்துப் பொய் அப்பிரகாசமாய் நிற்றலான்.

எ-து. எது. எ-னின். முற்றுணர்வுடைய சிவத்துக்கு அசத்தை விடயிப்பதாய சுட்டுணர்வும் உண்டென்றுற்படுமே இழுக்கென்னையென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று. இ-ள். தன்னியலபாகிய இயற்கையுணர்வின

முன்னர்ப் பொதுவியல்பாகிய செயற்கைச்சுட்டுணர்வு பிரகா சித்து நில்லாமையான் ஈண்டுச் சத்தினிடத்து அசத்துப் பிரகா சியாதென மேற்கொண்டது. எ - று

பிரகாசித்துநிற்றலின்மையாவது இயற்கையுணர்வோ டொப்ப ஒருபொருள்கு நிலலாமை எக்காலத்தது நிலைபெறுவதாய தன்னியல்பே மெய்யெனவும் இடையே தோன்றிமறைவு தாய பொதுவியல்பே பொய்யெனவும் கூறப்படுவனவுக லான அவை ஈண்டைக்கேற்புடைய அறிவினமேனின்றன இஃதறியாதாருரைப்பனவெல்லாம் மேற்கோளைச் சாதித்தற் குரிய ஏதுவாதல் செல்லாது கூறியது கூறலாய் முடியுமென் றொழிக.

அன்னியமி லாமை யரற்கொன் றுணர்வின்று
மன்னியமி லானசத்தைக் காண்குவனே—லன்னிய'
காணு னவன்முன் கதிர்முன னிருள்போல [மாக
மாணு வசத்தின்மை மற்று.

எ-து. உ-ம் எ-னின் சுட்டுணர்வின்மையான் முதல வன் அசத்தையறியானெனின் முற்றுணர்வுடைமைக் கிழுக் காமென்பாரை நோக்கி இழுக்கின்மை கூறி ஏதுவை வலியு றுத்துதனுதலிற்று. இ - ள அன்னியம் இலாமை அரற்கு ஒன்று உணர்வு இன்று ஆம் எ-து. தன்னுள் வியாப்பிய மான பசு பாசங்களோடு வேற்றுமையின்றி உடனாய்நிற்றலை யுடைய முதல்வனுக்குச் சுட்டியறியக் கிடப்பதொன்றில்லை ஆகலான்—அன்னியம் இலான் அசத்தைக் காண்குவனேல அன்னியமாக் காணுன். எ-து. அத்தன்மையனாகிய முதல வன் அசத்தை யறியலுறுவனாயின் அறிஞராகுதறிவனன்றி நம்மனோர்போல வேறாகச் சுட்டியறிவானல்லன்—கதிர் முன் இருள்போல் அவன் முன் -மாணு அசத்து இன்மை

மற்று. எ-து. ஞாயிற்றின்முன் இருட்டுப்போல அமமுதல்வனெதிா நனமையிலலாத பிரபஞசம விளஙகி நிலலாதாகலான். எ-று.

எனவே, அசத்தை விடயிப்பதாகிய ஏகதேசவுணாவ முற்றுணாவைத தடுப்பதாகலான் அஃதிலலாமை முறறுணாவிறகு மேமபாடாவதனறி இழுககாகாதெனன ஐயமகறறி எதுவை வலியுறுததவாறு காணக.

மாறுமை வியாபகவுணாவிறகு விடயமாகாமை.

இனமை ஈணடு விளஙகாமை குறிதது நினறது.

மறறு அசை. மறறுக காணகுவனேலென மேலே கூட்டி வினைமாறறின்கண வநததெனினுமமையும்.

உணாவுங் கதிரும் ஆகுபெயர். கதிாமுன்னிருள் ஈண்டு முனையானமமாததிரைககு ஒருபுடையுவமையாயிறறெனபது வழிநூலாசிரியர் "முனைததிடா தசததுச சததின முனனிருளிரவி முனபோல" எனறவாற்றானறிக.

முதலதிகரணமுடிநதது.

## இரண்டாமதிகரணம.

இனி அசததினுககு உணாவினறென்றது.

எ-து மே-ள். எ-னின். சதது அசததையறியாதாயினும் அசததெனப்பட்ட தனுகரணபுவனபோககஙகளுள ஒனறுய காணம் விளக்குப்போல் விகாரமினறி நிற்கும் ஆனமசந்நிதியிற பெததநிலைக்கண் அசத்தாய விடயங்களையறிந்தாற்போல முத்திநிலையிற் சிவகாணமாய் நின்று சிவத்தையறியுமென்றலும் கணணாடியினிழலபோல ஆன்மசந்நிதியின் அதன்கணறிவுணடாமென்றலும் அமைவுடைத்தப்போலுமெனச்

சிவசஙகிராந்தவாதி மதம்பற்றி ரிகழுங் கடாவை யாசங்கித்துச சூததிரத்தின இரணடாஙகூறறிற போநத வேதுவைக கணணழிததுரைதது மேறகோடனுதலிறறு இ-ளெ வெ-டை

சூததிரததின இலதென்றது அறிவிலதென்னும பொருட்டென்பார் உணர்வின்றெனவுரைததார்.

ஈண்டு அசததென்றது சுததுவப்பிரபஞ்சத்தை, வினைப் பிரபஞ்சத்திறகு அறிவினமை சாதிககவேணடாமையின

அதுதானிருபிககில இன்ருகலான

எ-து எது. எ-னின பதிஞானபசுஞானஙகளோடொப்பப் பாசஞானமொன்றென வைநதெணணபபடு மூரிமையுடையவதனை அறிவுடைததனறெனறல பொருநதாதென்பானைநோககி மேற்கோளைச சாதிததனுதலிறறு இ - ள அவ்வறிவாவது தூலமாய நோககும வழி அவவசததுககு உளளது போலத் தோனறினும் ஐயநதிர்பினறி மாசறுகாடசியான ஆராயும் வழி அதன்கண இலலாதாகலான் இனி அசததினுக குணாவினறென மேறகொணடது. எ - று.

எனவே, பாசம் வாயிலாக உயிரின்கணிகழு ஞானமே பாசஞானமென்று உபசரிததுக கூறபபடுமெதனைப் பாசததிற்குளதாகிய ஞானமெனக காணடல நிருபியாதவழிப் படும் மடமையே பிறிதிலலையெனறவாருயிறறு

பேய்ததேர்நீ ரென்றுவரும பேதைக்கு மறறனைநத
பேய்த்தே ரசததாகும பெறறிமையின்—வாய்ததத
கண்டுணர்வா ரிலவழியிற் காணு மசததினமை [னைக்
கண்டுணாவா ரில்லதெனக் காணு.

எ-து. உ-ம். எ-னின். அதனை உவமைமுகத்தான் வலியுறுத்துதனுதலிற்று. இ - ள். பேய்ததேர் நீர் எனறு வரும

பேதைக்கு மற்று அணைந்த பேய்த்தேர் அசத்து ஆகும் பெற்றிமையின. எ-து. பாலைநிலத்தின்கட் காணப்படுவதாய பேய்த்தேரை நீரென்று கருதி அதனையுண்ண வருகின்ற நீர்வேட்கையுடைய மடவோனுக்கு அதனையடுத்தவழித் தன்னாலணையப்பட்ட அப்பேய்த்தேர் நீராதலின்றிப் பொய்யாந்தன்மை போல,—வாய்த்து. எ-து குரவன் அறிவுறுக்கும் உபதேசமொழி கிடைத்து—அதனைக் கண்டு உணர்வார் இல்வழியின் அசத்து இன்மை காணும். எ-து. அவ்வசத்தி னியல்பை ஆராய்ந்தறிவாரினறி அறியமாட்டாதார் உள்வழி அவர்க்கு அதன்கணறிவுள்ளதாய் மதிக்கப்படுஞ் சத்தாந்தன்மையே காணப்படும்—கண்டு உணர்வார் இல்லது எனக் காண. எ-து. அவ்வுபதேசமொழி கிடைத்து அதனியல்பை யாராய்ந்தறிய வல்லார்க்கு அவ்வசத்தறிவு இல்லதேயாமென்று அறிவாயாக. எ-று.

மற்று வினைமாற்று. மை பகுதிப்பொருள்விகுதி. இன் உவமவுருபு வாய்த்தென்பது வாய்ப்பவென்பதன்றிரிபு வாய்த்தல் நேர்படுதல் ஆணைக்கேற்புடைய வினைமுதல் அவாய்நிலையான் வந்தது.

அசத்தின்மையாவது சத்தாந்தன்மை நான்கனுருபு விகாரத்தாற்றொக்கது. அறிவென்பது அதிகாரத்தான் வந்தது.

இரண்டாமதிகரணமுடிந்தது

## மூன்றாமதிகரணம்.

இனி இருதிறனறிவுள திரண்டலா வான்மா வென்றது.

எ-து. மே-ள். எ-னின் சிவசத்தின்றன்மையே உயிர்க்குத் தன்மையாவதன்றி வேறில்லையாகலிற் சத்தே அசத்தை

அறியுமென்னுஞ் சிவாத்துவிதசைவரையும் உயிர்க்குத் தன்மையென்பதொன்றின்மையின் அசத்தே சத்தை அறியுமென்னுஞ் சிவசங்கிராந்தவாதசைவரையும் மறுத்துச் சத்து மசத்தும் தம்முளறியுமாறில்லையென மேற்சாதித்தவழி இரண்டுமே இவ்வாறாயின் இவற்றையறியும் பொருள் வேறென்னையெனபாரை நோக்கிப் பாரிசேடவளவையான் அவ்விரண்டின் வேறாய உயிர்க்குத் தன்மையுண்டென்பது விளக்கிச் சதசத்தினியல்பை வரைசெய்துணர்த்துதனுதலிற்று இ-ள். வெ-டை.

ஈண்டு இரண்டலாவான்மா இருதிறனறிவுளதென்றது சத்தெதிர் நில்லாத அசத்துஞ் சத்துந் தம்முள் ஒன்றாய் நின்றறியப்படாமையான் இருதிறனறிவுளது இரண்டலாவான்மாவேயாம் தம்முள் ஒன்றொன்று அநுபவிக்கப்படாத ஞாயிற்றையும் விடயத்தையும் அநுபவிக்குங் கண்போலுமென அனுமானங் கூறிக்காண்க. அவை உயிரானும் அறியப்படாத வழிப் பயப்பாடின்றிச் சூனியமாய் முடியுமாகலான் உயிர் அறிதற்றன்மைத்து என்பது தெற்றெனவுணர்க.

இவ்விரண்டினையுமறிவதாய உபதேசியாய்நின்ற அவ்வறிவு இரண்டன்பாலுமுளதாய் உள்ளவதுவே அவ்வான்மாவா மென்றது.

எ-து பொ-ரை. எ-னின். இருதிறனறிவென்னுந் தொகைச்சொல் விரியுங்காற்படும் பொருள்வேறுபாடு விளக்குமுகத்தான் உயிர்க்குத் தன்னியல்பு வேறுவேறு கூறுஞ் சமயங்களெல்லாம் மறுக்கப்படுமாறுணர்த்துதனுதலிற்று இ-ள். இவ்விரண்டினையும் அறிவதாய். எ-து. மேற் கூறிப்போந்த சத்தையும் அசத்தையும் அறியுந்தன்மைத்தாய—உபதேசியாய். எ-து. அறிவிக்க அறியுந்தன்மைத்தாய்—இரண்டன்பாலும் நின்ற அறிவு உளதாய். எ-து. அவ்விரண்டின்கண்ணும் நிலைபெற்ற அநுபவவறிவுள்ளதாய்—உள்ள அதுவே

அவவானமாவாமென்றது. எ-து. இவ்வாறுள்ள பொருள் யாது அதுவே சததும அசத்துமல்லாத சதசத்தாகிய உயிரொன்றவாறும் இருதிறனறிவுள திரணடலாவானமாவென மேற்கொணடது. எ-று.

ஆமென்னும் வினையெசசமுமென்றும் உளளவென்னும் பெயரெசசவினைககுறிபபோடு முடிநதன.

இருதிறனறிவெனனும தொகைச்சொல ஈண்டு மூன்று பொருளின மயஙகிறறெனனுங கருததான இவவாறு மொழிந்தார். அவறறுள இருதிறனையுமறியுமறிவெனனும இரணடாமவேறறுமைத தொகைப பொருள்பறறி இவவிரணடினையுமறிவதாயெனவும, இருதிறனால விளஙகிய வறிவென்னும் மூனறாமவேறறுமைததொகைபபொருளபறறி உபதேசியாயெனவும், இருதிறனிலுமுளள வறிவெனனும ஏழாம்வேறறுமைததொகைப்பொருளபறறி நின்றவறிவு இரண்டன்பாலுமுளதாயெனவும், உரைககப்பட்டன.

இவ்விரண்டினையு மறிவதாயுள்ள வதுவென்பதனால் இரணடும இவ்வாறாயின் இவறறையறியுமபொருள் வேறெனனை யென்னுங் கடாவுககு விடைகூறி அயவிருவர்மதங்களையும் அவறறோடொருதனமையவான சமயஙகளையும் மறுததவாறு.

உபதேசியாயுளளவதுவெனறதனால் உயிர் அறிவிகக வேணடாது தானேயறியுமியலபிறறென்னுஞ் சமவாதசைவர் ஈசுரவவிகாரவாதசைவர் ஐக்கவாதசைவா மதங்களையும் அவற்றோடொருதன்மையவான சமயஙகளையும் மறுததவாறு.

இரண்டன்பாலுமுளதாயுளள வதுவென்பதனால் ஆன்மாவினறிவு சத்தோங்கூடுமாறிலலையெனனும் பாடாணவாத சைவர் பேதவாதசைவர் மதஙகளையும் சத்தோடு 'கூடியவழி யொன்றாய்ப் போதலேயன்றி அதன்பாலுளதாமாறில்லையென்

ளுஞ் சுத்தசைவர்மதத்தையும் அவற்றோடொருதன்மைய
வான சமயங்களையும் மறுத்தவாறு

இவ்விரண்டினையுமறிவதாயெனவே அவ்வறிவுத்தன்மை இவ்விரண்டினறன்மைபோலன்றி இருளொளியலாக் கண்டன்மைபோல வேறாயதோர் தன்மையென்பதூஉம் உபதேசியாயெனவே அஃதாகாயத்தின் குணமாய ஓசையினியல்பு போலத் தன்னைவிளக்குவதாகிய வியஞ்சகமுள்வழி விளங்குவதோர் தன்மையென்பதூஉம், இரண்டன்பாலுமுளதாயெனவே அத்தன்மை படிகம்போலச் சார்ந்ததன்வண்ணமாய அழுந்துந் தன்மையென்பதூஉம் பெறப்பட்டன.

அருவுருவந் தானறித லாயின்மையா யான்மா
வருவுருவ மன்றாகு முண்மை—யருவுருவாய்த்
தோன்றியுட னில்லாது தோன்றாது நில்லாது
தோன்றன் மலர்மணம்போற் றொக்கு

எ-து உ-ம் எ-னின் அம்மூன்றனுள் மூன்றாவதனை வலியுறுத்தி இரண்டலாமையை விளக்குதனுதலிற்று இ-ள். ஆய இழை ஆய ஆன்மா அரு உருவந்தான் அறிதல் அரு உருவம் அன்று ஆகும் எ-து நுதலிய நூலகளை ஆராய்வதாகிய உயிரே சத்து அசத்தென்னும் இரண்டினையும் அறிவதாகலான் அஃதவ்விரண்டுமின்றி அவற்றின்வேறாம் அற்றேல் அவ்விரண்டினையு மறியு முயிர்க்குத் தன்னுண்மையறியப்படுமோ படாதோவெனக் கடாயினார்க்குப் படுமென்றற் றுளப்பட மூன்றனையு மறிவதென்றது அவ்விரண்டனையு மறிவதாயென்றல் பொருந்தாது, படாதெனின் அறியப்படாத பொருள் சூனியமெனப்பட்டு வழுவாமாலெனின்— உண்மை அரு உருவாய்த் தோன்றி உடன் நில்லாது தோன்றாது நில்லாது மலர் மணம்போல் தொக்குத் தோன்றல். எ-து.

அவ்வான்மாவினுண்மைத் தன்மை அவ்விரண்டுமேபோல விளங்கித் தோன்றி அவற்றோடொப்ப நிற்பதுமன்று விளங்காது சூனியமாய் நிற்பதுமன்றாய் மலரின்கண் வாசம் அவ்விருவகையுமன்றி அதன்கண் அடங்கித்தோன்றுமாறுபோலச் சத்தினும் அசத்தினுஞ் சார்ந்ததன்வண்ணமாய் அடங்கித் தோன்றுவதோரியல்பாம். ஆகலான், அஃதவைபோலத் தனித்தறியப்படுவதொன்றன்றி அவ்விரண்டினையுமறியுமுகத்தானறியப்படுவதாம். எ - று

ஆகலான் அஃதவைபோலத் தனித்தறியப்படுவதொன்றன்றி அவ்விரண்டினையு மறியுமுகத்தான் அறியப்படுவதாமென்பது குறிப்பெச்சம்.

சுட்டுணர்விற்கு விடயமாகாமைபற்றிச் சத்தை அருவென்றும் அதற்கு விடயமாதல்பற்றி அசத்தை உருவென்றுங் கூறினார். உணருருவசத்தென்புழி உருவென்றதும் அதுநோக்கி.

செவ்வெண்டொகை விகாரத்தாற் றொக்கது. தான் அசை.

அறிதலானன்றாகுமெனவினையும்.

இழை நூலாகலான் ஈண்டுச் சாத்திரத்தையுணர்த்திற்று.

ஆய்தல் நுணுகுதல். "ஓய்த லாய்த னிழத்தல் சாஅ யாவயி னான்கு முள்ளத நுணுக்கம்" என்றார் தொல்காப்பியனாரும். ஆயிழையாயெனப் பொருளின் நுணுக்கம் நூன்மேலேற்றப்பட்டது; இரண்டாவது விரித்துரைக்க.

உயிர்க்கு அறியுந்தன்மை யுண்டாகலானன்றே வேதாகமமுதலிய நூல்களுளவாயினவென அதனை வலியுறுத்துவார் ஆயிழையாயன்மாவென அதனையுடம்பொடுபுணர்த்தோதினார். இக்கருத்தே பற்றி "பலகலை யுலகி னிலவுதலானும்" என்றார் புடைநூலாசிரியரும். இவ்வாறன்றி ஆயி

ழையாயென மகடூஉமுன்னிலையாக்குவார்க்கு இவ்வுதாரணம் மேலதனை வலியுறுத்துதற்கெழுந்ததன்றாயக் கூறியதுகூற லெனனும் வழுவாய் முடியுமெனவொழிக.

தேற்றேகாரம் விகாரத்தாற்றொக்கது.

அருவுருவாயென்புழி ஆக்கச்சொல் உவமைப்பொருள் குறித்து நின்றது, "ஆளவா ரிலிமா டாவேனோ" என்றாற்போல

தொக்குத் தோன்றன் மலாமணம்போலெனக் கூட்டுக.

மயக்கம் துறாறு மருந்திற் றெளிந்தும
பெயாத்துணர்நீ சந்தாகாய பேசி—லசத்துமலை
நீயறிந்து செயவினைக ணீயன்றி வேறசத்து ந
தானறிந்து துபயாமை தான.

எ-து உ-ம். எ-னின் அங்ஙனமறியுமுயிர் சிவசத்தோ டொப்பச் சித்தாகுமெனப்பாரை நோக்கி உபதேசியாயென்ற தனை வலியுறுத்துதனுதலிற்று இ-ள் மயக்கமது உற்றும மருந்தினத் தெளிந்தும, எ-து நின்னறிவை விளக்குதற்குரிய வியஞ்சகமில்வழி ஒருவிடயத்தை இன்னதென்றறியமாட் டாது மயக்கத்தையுறறும் பசிநோயக்கு அன்னம்போல அம மயக்கநோயக்கு மருந்தாய வியஞ்சகமுள்வழி அம்மயக்க நீங்கி அதனையின்னதென்று நிச்சயித்தும—பெயாதது உணர் நீ பேசில சத்து ஆகாய எ-து இங்ஙனம் மாறி மாறியுணர்ந்து வருகின்ற நீ சொல்லுமிடத்துச் சிவசத்தோடொப்ப அறி யுஞ் சத்தியுடையாயல்லை அற்றேல் அசத்தனோவென் போலு மெனின்—நீ அறிந்து செய் வினைகள் நீ அன்றி வேறு அசத் துதீ தான் அறிந்து துய்யாமை தான் அசத்தும் அலை. எ-து. வியஞ்சகம உள்வழியும் நீ முன்னறிந்து செய்த வினைகளை

இப்பொழுது நீயேயறிந்தநுபவிக்கவல்லையன்றி நின்னின்
வேறாய் அசத்தாகிய பாசம் அறிந்தநுபவிக்கமாட்டாமை
யான் அதனோடொப்ப அசத்தனுவாயுமலலை—வேறு. எ-து
சத்தகுணமுடைய ஆகாயம்போல வியஞ்சகமுள்வழி அறியு
மாற்றலுடைமையும் அஃதிலவழி அவ்வாற்றலின்மையுமாகிய
இரண்டுமுடைய நீ அவ்விரண்டற்கும் வேறாய்ச் சிதசித்தாந்
தன்மையுடையை. எ - று

மருந்திறறெளிந்தெனவே மயங்குதல அஃதில்வழியென்
பது பெற்றாம். வியஞ்சகமிலவழித் தலைப்படுவதூஉம அஃது
ளவழி நீங்கிநிற்பதூஉமாகிய மயக்கம உண்டியில்வழித் தலைப்
படுவதூஉம அஃதுளவழி நீங்கிநிற்பதூஉமாகிய இயல்புடைய
பசியோடொத்தலின அதனைப் பசிநோயாகவும், தீர்த்தலொ
ப்புமைபற்றி வியஞ்சகத்தைப பசிதீர்க்குமருந்தாகவும உருவ
கஞ்செய்தார இஃதேகதேசவுருவகம மருந்தெனப் பொதுப்
பட உருவகஞ்செய்தாராயினும மறிந்து மறிந்துவேண்டுப
மொறு ஈண்டைக்கேற்புடையது பசிநோய தீர்க்கு மருந்தே
யாகலின் அவ்வாறுரைக்கப்பட்டது அது பகுதிப்பொருள
விகுதி.

உம்மை எண்ணின்கண் வந்தது அசத்துமென்னும்மை
இறந்தது தழீஇயிற்று.

தானென்பது முன்னையது எழுவாயுருபு படநின்றது.
பின்னையது அசைநிலை.

துவ்வாமை துய்யாமை என மரீஇயிற்று.

சத்தியுடைய பொருள் சத்தம், அஃதில்பொருள் அசத்த
மாகலின, அவ்வடமொழிகள் ஈண்டம்முக்கெட்டுக ரூந்திய
லுகரவீறாய் நின்றன: "நாகனையான்;" "பெற்றோன்று யர்

த்த பெருமான்," "பேது செய்து," "வாது செய்த் திருவுள ளமே'' எனபுழிப்போல

அசித்தமல்லையென்பது பாடமாயின், மேற்சத்தாகாயெ ன்றதனை இசையெச்சமாகக் கொண்டு சத்தாந்தன்மையே யுடையாயல்லை; அதனமேலுஞ் சித்தாமாறியாஙஙனமென்று ரைத்து இயைத்துக்கொள்க இவ்வாறன்றி ஈண்டுச் சத்தா காய அசத்துமல்லையென்பவற்றை மேலருவுருவ மன்ருகுமென் றதன் பொருள்படக் கொண்டுரைப்பாருமுளா அவா ஆண் டேயமைந்து கிடந்தபொருளை மறித்துங் கூறவேண்டாமை யும் பெயாத்துணர் நீயெனவும அறிந்து துயயாமையெனவும் அறிவுடைமை அறிவின்மைபறிக கூறும பொருளவையா தல செலலாமையும நோக்கிலா

மெய்ஞ்ஞானந் தன்னில் விளையா தசத்தாத
லஞ்ஞான முள்ள மணைதலகாண—மெய்ஞ்ஞானந்
தானே யுளவன்றே தணகடனி ருபபுபபோற
ருனே யுளமுளவாத தான

எ-து உ-ம. எ-னின. அம்மயக்கம அவ்வுயிரோடின்ய புடைய முதலவனுக்கு முண்டுபோலுமெனவும அது.தான உயிர்க்கு எக்காலத்து வந்ததெனவு நிகழுங்கடாவை விடுக்கு முகத்தான இரண்டனபாலு முளதாமாறு வலியுறுத்துதனுத லிற்று. இ-ள். அஞ்ஞானம் எ-து மேறகூறிபபோந்த மய க்கமாவது—மெய்ஞ்ஞானந் தன்னில அசத்து ஆதல் விளை யாது. எ-து ஒருபெற்றித்தாய அறிவெனபபடுஞ் சிவத்தி னெதிர் கதிர்முனனிருளபோல நிலையுதலிலலதாகலின் ஆண் டுளதாதலின்றி—மெய்ஞ்ஞானந் தானே உள் அன்றே. எ-து. அச்சிவம் என்றுள்ளது அன்றே—தான் எய உளம் உளவாத தான். எ-து. தான் பொருந்துதற்குரிமையுடைய உயிர்களுள்

ளனவாக—உள்ளம் அணைதல. எ-து. அவ்வுயிர்களைப் பற்றி
நிற்றல—தண்கடல் நீர் உப்புப்போல காண எ-து தண்ணிய
கடலினகணுள்ளதாதலின்றி அக்கடலிடத்துள்ளதாகிய நீலைப
பற்றி நிற்கு முப்புப்போலென்றறிவாயாக எ-று

விளையாதென்னும் வினையெச்சமற்றை அணைதலென்னுந்
தொழிற்பெயரோடு முடிந்தது

தானேயெனபது கட்டுரைக்கண் வந்தது. தானேயுள
முளவாத தானெனபுழித தானெனபது முனனையது எழு
வாய பினனையது அசைநிலை

எயுளமென்னும வினைத்தொகை "அறிவறிந்தமக்கட்
பேறு" போல நின்றது. எய்தற்குரிமையாவது மேற்கா
டடிறும

தண்கடனீருப்புப்போலென்றதனால் முப்பொருள்களும
வியாபக வியாப்பியங்களாய் நிற்குமாறும பெறப்பட்டது

இரண்டன்கண்ணும உயிர்க்கியைபுடைமை கூறவே,
இரண்டன்பாலு முள்ளதாதலை வலியுறுத்தவாறு காண்க

ஈண்டிருதிறனையுமறியுமறிவுளதெனவே இருதிறனாகிய
சத்து அசத்து எனப்பட்டனவெல்லாம் பிரமேயம அவற்றை
யறியுஞ் சதசத்தாகிய உயிர் பிரமாதா அவ்வுயிரினறிவாகிய
சிற்சத்தி பிரமாணம அவ்வறிவு நிகழ்ச்சி பிரமிதியென்ப
தூஉம இருதிறனால் விளங்குமறிவுளதெனவே அவ்விரண்ட
னுள அசத்தானறிவு விளங்கும வழித் தனக்கு வேறாய நின்று
விளக்குவனவாய காட்சியனுமானமுறையெனப்படும் அசத்
தாகிய பாசஞானமூன்றுஞ் சத்தானறிவு விளங்கும்வழி அன்
னியமின்றித் தனக்காதாரமாய உடனின்று விளக்குஞ் சிவ
ஞானமுந் தனக்கு வியஞ்சகங்களாகலான் அதுபற்றி அவ்வை
யும பிரமாணமென்று உபசரித்துக் கூறப்படுமென்பதூஉம்,

இருதிறனினு மறிவுளதெனவே ஈரிடத்துங் கேடின்றி அசத்தான விளங்கி அசத்தை யறிவுழி அசத்தினபாலும சத்தான விளங்கிச சத்தையறிவுழிச சத்தினபாலும் அதுவதுவாய அழுந்துமெனபதூஉம பெறுதும. இவவாறனறி விஞ்ஞசகங்களையே பிரமாணமென்னுந தார்க்கிகாமுதலியோா மதங்கள பொருநதாமையும அவவியஞ்சகங்களானிகழும பிரமிதிவேறுபாடும அவற்றதியல்புகளும் ஈண்டுவிரிபபிற பெருகும் பௌட்கரமுதலிய சிவாகமங்களுட் கண்டுகொள்க

மூன்றாமதிகரணமுடிநதது.

ஏழாஞ்சூத்திரமுடிந்தது.

# எட்டாஞ்சூத்திரம்.

ஐம்புல வேடரி னயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல்குருவுமாய்த்தவத்தினிலுணர்த்தவி
டன்னியமின்மையினரன்கழல்செலுமே. [ட்

எ-து சூ-ம் எ-னின் ஞானத்தினை யுணருமுறைமையினை யுணர்த்துதனுதலிற்று.

எ-து. க-ரை எ-னின். சூத்திரககருத்துணர்த்துதனுதலிற்று. இ-ள். அவ்வான்மாவின் அறிவாவது மேலிருதிறனென்றதனுள் அசத்தான் விளங்கி அசத்தின்பாலுளதாய அசத்தினையறிந்து நின்றவாறுஞ் சத்தான் விளங்கிச சத்தின்பாலுளதாய்ச் சத்தினையறிந்து நிற்குமாறுந் தரிசிக்குமுறைமையினை யுணாத்துமுகத்தாற் சாதித்தற்குரிய அதிகாரந் தனக்கு

ண்டென மேலைசூத்திரத்தானறிந்த ஆன்மாவுக்குச் சாதித்த நுறை பெறப்படுமே பயனும அதறகுச சிறநத சாதனமாவதும அது வருவாயும் இவையென்பதுணர்த்துதல இவவெட்டாஞ் சூத்திரத்தின கருத்து. எ - று.

இதனானே சூத்திரவியைபும் இனிதுவிளங்கும்.

இசசூத்திரத்தின பிணடப்பொழிப்பு உயிர் தான் முன் னேசெயதுகொளளப்பட்ட புணணியவிசேடத்தாற றனககு அநதரியாமியாய இதுகாறு முணணின்றுணாததிவந்த பரம் பொருளே இபபொழுது குருவடிவமுங் கொணடெழுந் தருளி வநது சிவதீககை செயது, மனனவ குமாரனாகிய நீ ஐம் பொறிகளாகிய வேடருட்பட்டு வளாந்து நின்பெருந் தகை மையை அறியாது மயஙகி யிடர்ப்பட்டாய நின்பெருந்தகை மையாவது இவ்வியலபிறறென்றறிவுறுப்ப அறிநதமாததி ரையே அவ்வேடரை விட்டு நீங்கி அனனியமின்றி அனன் னியமாகதனமையின நிலைபெறறு அமமுதலவன்றிருவடிகளை யணையும எ - று.

உயிரென்பது மேலைசூத்திரததினின்றும வருவிததுரை க்கப்பட்டது.

தவத்தினிற் குருவுமாய் வளர்ந்தயர்ந்தனையென வுணர் ததவிட்டுச் செலலுமென இயையும்.

புலன் ஆகுபெயர்.

வளர்ந்தயர்ந்தனையெனபது ஈகதுபுகழ்பெற்றான் என்பு ழிப்போலக் காரணகாரியப்பொருட்டாய் கின்றது.

தமமுதலென்றது வேறுமுடிபாகலிற் பால்வழுவின்மை யுணர்க.

குருவுமென்ற உம்மை உயிர்க்குயிராய் உண்ணின்றுணர் த்தியதூஉமன்றியென இறந்தது தழீஇயிற்று; சிறப்புமாம.

அன்னியமின்மை அத்துவிதம். அஃதாவது சேறலைப் பயப்பித்ததாய் ஆண்டுளதாகியவியைபு

அரனென்றது சுட்டுப்பெயராப்படுகின்றது.

வெண்கொற்றக்குடையும் நவமணிமுடியுஞ் சிங்காசனமும் மன்னவர்க்கேயுரிய சிறப்படையாளமாம்; அதுபோலப் பிரபஞ்சமெல்லாவற்றிற்கும் மூலகாரணமாமியல்பாகிய ஒருபெரு வெண்கொற்றக்குடையும், எவற்றையும் ஒருங்கே ஓரியல்பானறியும் பேரறிவாகிய ஒருபெருஞ் சுடாமுடியும், அங்ஙனே உயிர்க்குயிராய் நின்று எவற்றினையுஞ் செலுத்துமியல்பாகிய ஒருபெருஞ் சிங்காதனமும், பிறரொருவர்க்கின்றித் தனக்கேயுரிமையாகச் சிறந்தமைபற்றிப் பசுக்களுக்குப் பாசங்களையரித்தலான அரனென்னுந் திருப்பெயருடைய முதல்வனை மன்னவனாகவும், அம்முதல்வனது பேரானந்தப் பெருஞ்செல்வமுழுதுந் தனதேயாகக் கொண்டநுபவிக்குஞ் சுதந்திரமுடைமையுஞ் சித்தெனப்படுஞ் சாதியொருமையும்பற்றி ஆன்மாவை மன்னவகுமாரனாகவும், அவ்வான்மாவை அறிவுப்பெருஞ்செல்வமுழுவதையும் ஆறலைத்துக்கொண்டு சிறுமையுறுத்துதலும் விதிவிலக்கை யிழப்பித்து இழிதொழிலினிற்பித்தலுமாகிய இயல்புபற்றி ஐம்பொறிகளை வேடராகவும் உருவகஞ் செய்தார். இஃதேகதேசவுருவகம்.

ஐம்புலவேடரினயர்ந்தனை வளர்ந்தெனவெனவே ஐம்புலவேடரின் வளர்ந்தயர்தலும் அநுவாதமுகத்தாற் பெற்றாம்.

இதனுள், தவத்தினிலுணர்த்தவென்றது ஓரதிகரணம்; தம்முதல் குருவுமாயென்றது ஓரதிகரணம், ஐம்புலவேடரினயர்ந்தனை வளர்ந்தெனவென்றது ஓரதிகரணம்; விட்டன்னியமின்மையி னரன்கழல் செலுமேயென்றது ஓரதிகரணம்; ஆக நான்கதிகரணத்தது இச்சூத்திரமென்றுணர்க.

## முதலதிகரணம்.

ஈண்டு இவ்வான்மாக்களுக்கு முற்செய் தவத்தான் ஞான நிகழுமென்றது.

எ-து மே-ள். எ-னின் மேற்கூறிப் போந்த சாதகராற் செய்யப்படுஞ் சாதனமும் அது வருவாயும் வேறு வேறாகக் கூறுஞ் சமயத்தாரை நோக்கிச் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று இ-ள் வெ-டை

மேற் கூறிப் போந்த இயல்புடைய ஆன்மாக்களுக்கென்பார் இவ்வான்மாக்களுக்கென்றார்.

படிமுறையானன்றி இவ்வொருபிறவியிற்செய்த தவத்தானே அமையாதென்பதுணர்த்துதற்கு முற்செய்தவமென விசேடித்தார்

ஈண்டு ஞானமென்றது குரவனுணர்த்திய வாறு சிவஞானங் கண்ணாகக்கொண்டு அறிவதாகிய சாதனவறிவினை மேற்று

நிகழுதல் ஐயந்திரிபின்றி விளங்குதல்

மேற் சரியை கிரியாயோகங்களைச் செய்துழி நன்னெறியாகிய ஞானத்தைக்காட்டியல்லது மோக்ஷத்தைக்கொடாவாகலான்

எ-து எது எ-னின் தவங்களே சாதனமாதலமையும் ஞானமெற்றுக்கென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று இ-ள். வெ-டை.

ஈண்டுத் தவமெனப்பட்டன பிறவல்லவென்பார் சரியை கிரியாயோகங்களையெனக் கிளந்துரைத்தார்.

கிரியர்யோகங்களென்னும் உம்மைத்தொகை வடநூன் முடிபு. கிரியாயோகமிரண்டற்குந் தீக்கையொன்றென்பது

சோனற அவ்விரண்டனையுந் தொகுத்தோதிச சரியையைத் தமிழுக்குரியவீறருன வேறு வைததாா

ஆளுடையபிள்ளையாா முதலாயினாககுத தவமினறியும் ஞானநிகழ்நதவாறெனனையெனனுங கடாவை விடுததறகு மேறசெயதுழியென சணடும வலியுறுததாா

மேலாகிய உணமைசசரியை கிரியாயோகங்களையெனி னுமமையும

காட்டிககொடுக்குமெனறபாலதனை எதிரமறைமுகததாற கூறினாா, ஞானததை யினறியமையாமை யுணாததுதறகு. சரியை கிரியா யோகஙகளைச செயதுழி யெனறது உபலக கணமாகலின் தீககை பெறறுழி அதுவும் ஞானததைக காட் டியல்லது மோடசததைக கொடாதெனக கொளக அவை யெலலாம ஞானததைக காடடியலலது மோட்சததைக கொ டாமையை வலியுறுததுவாா நனனெறியாகியவென ஞான ததை விசேடிததாா நனமையெனபபடுவனவெலலாவறறி னுஞ சிறநத நனமையாவது வீடுபேறெனபது அதனைத தலை பபடுததறகேதுவாய்ச் சிறநதநெறியாகலின ஞானம நனனெ றியெனப்பட்டது. வீட்டிறகு நெறியென அவ்வசசமயததா ராற கூறப்படுவனவனைததுந தனகணணே வநது கூடநின்ற பெருநெறியாகலானும் அது நனனெறியெனப்பட்டது. நன் னெறி சன்மாாககமெனபன ஒருபொருட்கிளவி.

தவஞ்செயதா ரெனறுந தவலோகஞ் சாாநது
பவஞ்செயது பற்றறுபபா ராகத்—தவஞ்செயத
நறசாாபில வநதுதிதது ஞானததை நணணுதலைக.
கறறூர்கூழ சொலலுமாங கண்டு

எ-து. உ-ம். எ-னின, மேற சரியை கிரியா யோகஙக ளைச் செய்தார் அவற்றான் ஞானததைக காணுமுறைமை எவ

வாறென்பாரை நோக்கி அஃதாமாறுணர்த்தி எதுவை வலியு
றுத்துதனுதலிற்று. இ - ள். தவம் செய்தார். எ-து. சரியை
முதலியவற்றைச் செய்தார்கள்—என்றும் தவலோகம் சார்
ந்து. எ-து அவ்வத் தவப்பயன்களைப் பயப்பிக்குஞ் சாலோ
காதிபதங்களை ஒருதலையாக நண்ணி ஆண்டுள்ளவாகிய இன்பங்
களை அநுபவித்து,—பற்றுப் பவம் செய்து அறுப்பார் ஆக.
எ-து. முன்னுடம்பிறக்கு நாள் அடுத்த வினை காட்டுவ கதிநி
மித்தம்பற்றியெழுந்த அவாவினை மீள நிலத்தின்கட் பிறந்தநு
பவித்து நீக்கிக்கோடற்பொருட்டு—தவம் செய்த நற்சார்பில
வந்து உதித்து ஞானத்தை நண்ணுதலை. எ-து. மீளத் தவஞ்
செய்தற்குரிய உயர்ந்த குலத்தின்கண் வந்து தோன்றித் தவக்
குறையான அவ்விடயப்பற்று முறுகாவண்ணம் அறுத்துத்
தத்துவஞானத்தைத் தலைப்படுவாராதலை—கற்றா சூழ் கண்டு
சொல்லுமாம். எ-து வீட்டுநூல்களைக் கற்றாது சூழ்ச்சி அந்
நூற் கருத்துணர்ந்து சொல்லும். எ - று.

தவந்தானாகப் பிறிதொன்று தானாக இவ்வுலகத்து உட
ம்பொடு நின்றீட்டிய வினையெல்லாம் அவ்வுலகத்திற் செலுத்
தித் தத்தம்போகங்களைப் பயந்தேவிடுமாகலான் அவற்றை
ஒருஞான்றும் பிறழமாட்டாவென்பார் என்றுந் தவலோகஞ்
சார்ந்தென்றார்.

ஆகவென்னுஞ் செயவெனெச்சம் உண்ணவந்தானென்
புழிப்போலத் தற்பொருட்டாய் நின்றது.

பற்றறுதற்பொருட்டு வந்துதித்தெனவே ஆண்டுப் பற்று
ச்செல்லாதவழி அவ்வுலகத்து நின்றாங்கே ஞானத்தை நண
ணுவரென்பதூஉம் பெறுதும்.

கற்றாது சொல்லுதற்றொழில் சூழ்ச்சிமேலேற்றப்பட்டது.

ஆம் அசை நற்சார்பில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதலென்ற அருத்தாபத்தியான் இழிகுலத்தோர் தத்துவ ஞானத்துக் குரியரல்லரென்பது பெறப்பட்டது

பசித்துண்டு பின்னும் பசிப்பானை யொக்கு
மிசைந்த விருவினையி னின்ப—மிசைந்த
விருவினை யொப்பி னிறப்பி றவத்தான்
மருவுவன் ஞானத்தை வந்து

எ-து உ-ம் எ-னின் சரியை முதலிய தவங்களே தத்துவஞானத்தைக் காட்டுமென யாப்புறுத்தோதியதென்னை வேதத்துட் கூறிய வேள்வி முதலாயினவுந் தத்துவஞானத்தைக் காட்டுமென்றல் அமையுமெனப் பாட்டாசாரியன்மதம் பற்றிக் கூறுவாரை நோக்கி ஏதுவை வலியுறுத்துதனுதலிற்று இ-ள் இசைந்த வருவினையி லின்பம் எ-து ஒருநல்வினைசெய்வானொருடங்கி அறநூலையாயவாராது உணர்வினுக்கண் விடயமாய வரும்பொழுதே தம்மாற் பெறப்படுங் காமியப்பயன்களை உடன்கூறிக்கொண்டே வருகின்றனவாய வேள்வி முதலிய அறங்களின் பயனாகிய இன்பம்—பசித்து உண்டு பின்னும் பசிப்பானை ஒக்கும் எ-து. முன்னாப் பசித்துண்டு பின்னும் பசிப்பானுக்கு அவ்வுண்டியான் வருமின்பத்தை யொக்கும் ஆகலான்,—இசைந்த இருவினை இறப்பு இல் தவத்தான் ஒப்பில. எ-து ஒருவனுக்கு ஞானத்தைத் தடுத்துப் பந்தமுறுத்துதற்கட் பொன் விலங்கும் இருப்புவிலங்கும்போலத் தம்முட் சமப்படுத்துணரப்படுவனவாகிய அறம் பாவமிரண்டுந் தம்மைப்போல அநுபவமாத்திரையாற் கெடுதலின்றி மேன்மேன்முறுகி வளர்வனவாய சரியை முதலிய தவங்களானே நோக்கவொத்தால்,—வந்து ஞானத்தை மருவுவன் ஆம். எ-து. அத்தவமுதிர்ச்சியுடைமையான் முன்ன

ர்க கூறப்படுஞானகுருவைத் தேடி வந்து ஞானத்தைத் தலைப்படுவேன் எ - று

வேள்விமுதலாயினவெல்லாம அழிதன்மாலையவாய காமியங்களைப் பயப்பனவென்றித தத்துவஞானத்தைப பயவாவென்றற்கு அவற்றை விதித்தநூலகளே சான்றென்பார இசைத்து வருவினையென்றும், அவை ஞானத்தைப் பயவாமைமாத்திரையேயன்றித் தீவினைபோல அது நிகழவொட்டாது தடைசெய்து நிற்றலுமுடைமையின அவற்றது கழிவே ஈணடைதற்கு காரணமாவதெனபாா இசைத்தவிருவினையொப்பிலென்றுங கூறினர்

ஒப்பிலென்னும வினையெச்சம மருவுவனென்னும பிறவினைமுதலவினை கொணடது

தேற்றவேகாரம விகாரத்தாற றொககது

ஆம அசை

வருதல இடவழுவமைதி

பசிப்பானென்றது ஆகுபெயர். இசைத்துவருவினையென நூலின்றொழில வினைமேலேற்றப்பட்டது. மிசைத்தவிருவினையெனப் பாடமோதி, இருவினைகளுள மிகக விருவினையாகிய பிரமகொலை பரிமேதவேளவி போல்வன தமமுள் ஒருஙகே பயனறுவனவாய ஒத்தகாலத்தென்றுரைப்பாருமுளா. அஃது ஈணடைதற்குப் பயனபடாமையுஞ் சித்தாந்தத்துக்கேலாமையு மறிக

இசைத்து வருவினையிலின்பம் பசித்துணடு பின்னும் பசிப்பானையொக்குமெனவே, இறப்பிறவததான் மருவப்படு ஞானம் பசித்துணடு, பின்னும் பசித்தலிலலாத கடவுளர்க்கு அவ்வமிழ்தவுணடியானைய பயனையொக்குமென்பதூஉம்பெறப்பட்டது. படவே, அவ்வமிழ்தவுண்டி நரை திரை மூப்பின்றி

நிலைபெறுதலாகிய பெரும்பயனைத் தருதன்மாத்திரையேயன்றிப் பசி தீர்தலாகிய அவாந்தரப்பயனையுந் தருமாறுபோல இறப்பிறவுமூர் தத்துவஞானத்தைப் பயத்தன்மாத்திரையேயன்றித் தத்தம பதமுத்தியாகிய அவாந்தரபபயனைப்பயத்தலும் அமைவுடைத்தாமாறு கண்டுகொள்க

முதலதிகரணமுடிந்தது

## இரண்டாமதிகரணம்.

இனி இவவானமாககளுககுத தமது முதறுனே குருவுமாயுணாததுமெனறது

எ-து மே-ள எ-னின மேறகூறியவாறறுன் நிகழூஞானததையுணாததுவாா கலைஞானஙகளை யுணாததுவாா போல நமமனேரில ஒருவராதலமையுமெனச சாஙகியா நையாயிகா முதலியோா மதமபறறி நிகழுஙகடானவ யாசஙகிதது சூததிரததின இரணடாங கூறறைக கணணழிததுரைததது மேறகோடலுதலிறறு இ-ள. மேறகூறியவாறறுற சரியை முதலிய மூனறும முறறிய பினனா இமமூறறுதலானே மலபரிபாகஞ சததிநிபாதம நிகழநதது தததுவஞானததின அவாவுதலையுடைய உயிாகட்கு இதுகாறும தமககு முதலாய உணணின்றுணாததி வநத பரமபொருளே அப்பருவமறிநது குருமூர்ததமாயெழுநதருளி வந்து அதனை யறிவுறுககும எ - று

எனவே, ஏனையோாககு அது கூடாதென்றவாறுயிறறு.

இககருததே பறறி *"அகததுறுநோய்க குளளினா ரன்றியதனைச சகததவருங காணபரோ தான்" என்றுா புடைநூலாசிரியரும.

ஏகாரந தேறறம்

* திருவருட்பயன, அருளுருநிலை. உ.

அவன் அன்னியமின்றிச் சைதன்னியசொரூபியாய் நிற்றலான

எ-து. ஏது. எ-னின். மாயாவொருவன் மாயாவுருவினையே யான் ஏயுமெனின் எம்மனோரிலொருவனுய முடியுமாகலின தமது முதல குருமூர்த்தி ஆதாரமாகத் தரித்துநின்றுணர்த்துமென்றலே அமைவுடைத்தெனப பொதுவகையான் அதிட்டானபக்கங் கூறுவாரை நோக்கிச் சிறப்புவகையான ஆவேசபக்கமாமாறுணர்த்தி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று. இ-ள். அம்முதலவன் பாலினைப்போல மறைந்து வேறாய நிற்றலின்றிச் சுத்தான்ம சைதன்னியமே தனக்குச் சொரூபமாகக்கொண்டு தயிரினைப்போல ஆண்டு விளங்கி நிற்றலான் இவ்வான்மாக்களுக்குத் தமது முதல்வனே குருவுமாயுணர்த்துமென மேற்கொண்டது எ-று.

பாலினைப்போல வேறாய் மறைந்து நின்று செலுத்தப்படுவனவற்றினும பொதுவாயச் செலவதாகிய அதிட்டானபக்கங் கொள்வார்க்கு ஏனைச்சமயகுரவரும் குரவராவான்சேறலின் அஃது ஈண்டைக்கு அமைவுடைத்தன்றென்பதாம்

சைதன்னியமென்றா மாசுதீர்ந்ததென்பதுணர்த்துதற்கு.

மெய்ஞ்ஞானந் தானே விளையுமவிஞ் ஞானகலாக
கஞ்ஞானு வச்சகலாக்கக்குருவாய—மெய்ஞ்ஞானம
பின்னுணர்த்து மன்றிப பிரளயா கலருக்கு
முன்னுணர்த்துந் தானகுருவாய முன.

எ-து. ௨-ம். எ-னின். ஓரோரிடங்களிற் குருவாய்வந் துணர்த்துதலின்றியும் ஞானிகளுமாறென்னையென்பாரை நோக்கி அதனை வரைசெய்துணர்த்தி வலியுறுத்துதனுதலிற்று. இ-ள். விஞ்ஞானகலர்க்குத் தானே மெய்ஞ்ஞானம

வினையும் எ-து. அம்முதலவன் மூவகையான்மாக்களுள் விஞ்ஞானகலராயினார்க்குத் தன்மையினின்றவாறே தத்துவஞானத்தை விளைவிப்பன் — அன்றிப் பிரளயாகலருக்குத் தான் குருவாய் முன் உணர்த்தும் எ-து அவ்வாறன்றிப் பிரளயாகலராயினார்க்கு நாற்றோளும் முக்கண்ணுங் கறைமிடறும் முதலிய உருப்பிறங்கிய முதற்றொழினடாத்தி நின்ற தன்னியற்கை வடிவே குருவடிவாகக் காட்டி முன்னாக நின்று தத்துவஞானத்தையுபதேசித்துணர்த்துவன் — அஞ்ஞான அச்சகலர்க்கு அக்குருவாயப் பின் மெய்ஞ்ஞானம் உணர்த்தும் எ-து. அவிச்சையையுடைய சகலராயினார்க்கு அவர்வடிவுபோலும் வடிவுடைய குருவாகி அவ்வடிவின்பின்னாக மறைந்து நின்று தத்துவஞானத்தை யுணர்த்துவன் — முன் எ-து அவ்வேறுபாட்டை யறிவாயாக எ-று.

முன்னென்றதனை முன்னைப்பொருளென்றுரைத்து எழுவாயாகக் கோடலுமொன்று.

வினையுமென்பது அரசனெடுத்தசிவாலயம் என்புழிப் போல விகுதி தொக்குநின்றது. இவ்வாறன்றி எளிதின் அட்டப்படுதலாகி அரிசி தானே அட்டது என்றாற்போல எளிதின் விளைவிக்கப்படுதலாகி மெய்ஞ்ஞானந்தானே விளையுமென்றாரெனினுமமையும். *"உணர்வின்றுறத்தருளி" என்றார் புடைநூலாசிரியரும்.

ஈண்டு அஞ்ஞானமென்றது அவிச்சையையென்பது சகலர்க்கே அடையாயோதியவாற்றானறிக.

அச்சகலரென்றது தவஞ்செய்தாரென மேலெடுத்துக் கொள்ளப்பட்ட சகலரென்றவாறு.

அக்குரு வென்றது மேற்கோளிற் கூறிப்போந்த குரு வென்றவாறு.

---

பொறிப்பஃறொடை.

தானே விளையும் முன்னுணர்த்தும் பின்னுணர்த்தும் எனவே, விஞ்ஞானகலர்க்குத் தன்மையினும் பிரளயாகலர்க்கு முன்னிலையினும் சகலர்க்குப் படர்க்கையினும் நின்றுணர்த்துமென வரைசெய்தவாறு காண்க. இவற்றுள் முன்னையவிரண்டும் நிராதாரமெனவும் பின்னையது சாதாரமெனவுங் கூறப்படும்.

அறிவிக்க வன்றி யறியா வுளங்கள்
செறியுமா முன்பின் குறைக—ளெறியிற்
குறைவுடைய சொற்கொள்ளார் கொள்பவத்தின்
குறைவில்சகன் சூழ்கொள் பவர்க்கு [வீடென

என்-து உ-ம் என்னின் விஞ்ஞானகலர் முதலிய மூவர்க்கும் ஒரியல்பா னுணர்த்தாது அவ்வாறு தன்மையினும் முன்னிலையினும் பின்னிலையினுமாயுணர்த்துதல் என்றுக்கென்பாரை நோக்கிக் காரணங் கூறி அதனை வலியுறுத்துதனுதலிற்று. இ-ள் உளங்கள் செறியின் அறிவிக்க அன்றி அறியா. என்-து உயிர்களெல்லாந் தமக்குரிய படிவழியின் வைத்து முதல்வனறிவிக்க அறியுமியல்பினவன்றி ஒன்றுபோல் அறிவிக்கவறியுமியல்பினவல்ல ஆகலான்—குறைவு இல் சகன் சூழ்கொள்பவர்க்கு. என்-து. அவ்வறிவாற் குறைபாடில்லாத சகக்கடவுளது உபதேசமொழியைக் கொண்டொழுகு மியல்பினராகிய பிரளயாகலர் சகலர்க்கு—குறைகள் முன் பின் செறியுமாம் என்-து அவ்வறிவித்தலறிதலாகிய குறைகள் முன்னிலையினும் பின்னிலையினு நிகழ்வனவாம்—குறைவு உடைய சொல் கொள்ளார் கொள் பவத்தின் வீடு என். என்-து. குறைவில் சகனல்லாகிய குறைவினையுடைய உபதேசமொழி கொண்டொழுகவேண்டாத விஞ்ஞானகலர்க்கு முதல்வனாற் கொள்ளப்பட்ட தன்னுண்மைமாத்திரையின் வீடுபயக்குமுணர்வுண்டென்றறிவாயாக. என்-று.

குறை இன்றியமையாமைப்பொருள்; அது *"வினைக்கு றைதீர்ந்தாரிற் றீர்ந்தன்றுலகு" என்பதனுட் பரிமேலழகரு ரையானு முணர்க

பவம், சம்பவம், உண்மை என்பன ஒருபொருட்கிளவி

வீடுபயக்குமுணர்வை வீடென்றும், சூழ்ச்சி பயக்கு முபதேசமொழியைச் சூழ்ச்சியென்றுங் காரணகாரியமாக உபசரி க்கப்பட்டன. கொள்பவர் கொள்ளாரெனப்பன்மையும் அவை கொள்ளாரகவென்னு நான்கனுருபு விகாரத்தாற் றொக்கது. "ஐந்தவித்தானாற்றல்" என்புழிப்போல

ஆம் வீடென்வினையும். வீடாமெனப்பாடமோதுவா ருமுளர்.

மேலைவெண்பாவின் முன்னுணர்த்தும் பின்னுணர்த் தும் தானே விளையுமெனக் கூறியவற்றை ஈண்டு நெறியின் றிவிக்கவன்றி யறியாவாகலான் அது முன் செறியம் பின் செறியும் பவத்தினுமெனக் காரணங் காட்டி வலியுறுத்தி னார் இதற்குப் பிறரெல்லாந் தத்தமக்கு வேண்டியவாறே மேலைவெண்பாவோடு இயைபுறவுரைத்தார் அல்லதூஉம் அறிவிக்கவன்றியறியாமை உபதேசியாய் என் ஆன்மாவின்ற னியல்பு கூறுமவழிப் பெறப்பட்டதாகலின் அதனை ஈண் டும் புனருத்தியாகக் கூறவேண்டாமையின் மேலது வலியுறு த்தற் கேற்புடைய அறிவிக்க அறிதற்கட்படும் விசேட மாத் திரையே ஈண்டெடுத்தோதினாரென்றுணர்க. படிவழியின் வைத்தறிவிக்கவன்றியறியாமை "பந்தமும் வீடுந் தெரிபொ ருட் பனுவற் படிவழி சென்றுசென்றேற்"என்பதனானுமறிக.

இல்லா முலைப்பாலுங் கண்ணீரு மேந்திழைபா
ன்லலா யுளவாமா னீர்நிழல்போ—லில்லா

* திருக்குறள். சுகஉ.

வருவாகி நின்றானை யாரறிவார் தானே
யுருவாகித் தோன்றானே லுற்று.

எ-து. உ-ம் எ-னின். அமமுததிறததுள் ஈண்டைககெ டுததுககொண்ட அஞ்ஞான வசசகலாககககுருவாதல உபசா ரமேயனறி ஏனையபோலுணமையாதல செலலாதெனபாலை ரோகக உணமையாதலை உவமைமுகததான வலியுறுததுதனு ாலிற்று இ-ள் நலலாய. எ-து அறிவால நனமையுடைய மாணுககனே—ஏநது இழை பால முலைப்பாலும கணணீரும இலலா உளவாம போல எ-து ஏநதிய விழைகளையுடையாட் குக குழவிமாட்டுளதாகிய அருவாகிய அன்பினைப் பிறரறியு மாறு வெளிபபடுததும அவவனபினுருவாகிய முலைபபாலுங கணணீரும அவணமாட்டுக குழவியைக காணுமுன இலலா வாயப பினனுளவாம அதுபோல—நீ நிழல போல இலலா அரு ஆகி நினறானை ஆா அறிவாா தானே உரு ஆகி உறறுத தோனறானேல எ-து. நீரினகணிழலபோல உயிாகணமாட் டுப புலபபடுதலிலலாது அருவமாய நினற முதலவனை யாாதா மறிவார் அவனே குருவடிவாய வநது தோனறி நினறு உண ாததாறுபின. எ-று

ஒருவருமிலலையெனபதாம

இஃதெடுததுககாட்டுவமை

இனறிடமையாமையுணாததுவாா தோன்றானே லாரறி வாரென எதிாமறைமுகததாற கூறினா

பொருளுககோதியதனை உவமையினுங் கூட்டி ஏற்குமா றுரைகக

முலைப்பாலுங் கணணீரும் அன்பை விளக்குமென்பது *"சுரந்த திருமுலைக்கே துயயதிரு ஞானஞ்—சுரந்தணடா"

* திருககளிறறுபபடியாா

பிள்ளையெனச் சொல்லச்—சுரந்த—தனமுடையா டென்பா ணடி மாதேவி தாழ்ந்த—மனமுடையா ளனபிருந்த வாறு' எனபதனானும், † "அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்—புன்கணீர் பூச றரும" எனபதனானு மறிக. அவ்விரண்டும அன்பின் வடிவே பிறவல்லவென்பது அனபு நிகழ்தற்குரிய காரணமுளவழி வெளிப்பட்டு அஃதிலவழி வெளிப்படாத ஒற்றுமை நோக்கிக் கண்டுகொள்க இவ்வொற்றுமை யுணாததுவாா இலலாவாயுளவாமென்றா

இலலவெனபது முற்றெச்சக்குறிப்பு

ஆல அசை நீா அகத்தியங்கு முயிாகட்கு இடங்கொடுததலுண்மையான் நீரினகண வெளியுணடெனபதூஉம், உணடாகவே, ஆண்டு நீருக்கு நிழலுணடென்பதூஉம், பெறப்பட்டன. அந்நிழல, வேறு நிலலாது நீரோடு விரவி நிறறலின நீரேபோற புலப்படாதாயிறறு அதுபோலச் சிவசைதனனியமும யானென்னுமுணாவிறகு விடயமாயப புலப்படும ஆனமசைதனனியத்தோடு விரவிப் புலப்படாது நிறபதொனறெனபாா நீர் நிழலபோலிலலா வருவாகி நினறனையெனறா

இரண்டாமதிகரணமுடிநதது

## மூன்றாமதிகரணம்.

இனி இவ்வான்மாக்கள் ஐயுணாவுகளானமயங்கித் தம் மையுணராவென்றது

எ-து. மே-ள் எ-னின். விடயஞானத்தை விளக்கும் ஐமபொறிகளே தததுவஞானததை விளக்குதறகுமமையும் தமமுதல குருவுமாதலவேணடாவெனச் சிவசங்கிராந்தவாத சைவர் மதம பறறி நிகழுங கடாவை யாசங்கித்துச சூததிரந

† திருவளளுவர்

தின் மூனறுங கூறறைக கண்ணழிததுரைத்து மேற்கோட ணுதலிறறு. இவ்வாறுரையாககால, இனியென்பதனு ஹுன ாததபபடும மேலையதிகரணததோடுளதாகிய இயைபு பெறப் படாமையறிக. இ-ள வெ-டை

உணாவு ஆகுபெயா

அவை தாம பளிஙகிலிட்ட வன்னமபோற் காட்டிற் றைக காட்டி நிறறலான

எ-து. எது எ-னின். அறிவை விளககுங கருவியான் மயகக நிகழுமாறியாஙஙனமெனபாரை நோககி மேறகோ ளைச சாதிததனுதலிறறு இ-ள படிகததின் வைதத பலவே றுவகைப்பட்ட நிறஙகள அபபடிகவொளியைக் கீழபபடுதே துத தததமியலபினையே விளககி நிறகுமாறுபோல அவவைம பொறிகடாம ஆனமசொரூபததைக கீழ்ப்படுததுத தமமாற்கா டடபபடட தததம விடயமாததிரையே அவ்வான்மாவுககுக காடடி நிறபனவாகலான இனியிவவானமாககள ஐயுணர்வுக ளான மயஙகித தமமை யுணராவென மேறகொணடது எ-று.

விடயஙகளுள்ளும அவவவிடயமாததிரையே அவவவிக் திரியங காட்ட வலலுமெனபாா காட்டிறறையென ஒனறறி சொலலாற கூறினா

பன்னிறங் காடடும படிகமபோ லிநதிரியந
தனனிறமே காட்டுநதகைகினைநது—பன்னிறததுப்
பொயபபுலனை வேறுணாநது பொயபொயயா மெய
மெயபபொருடகுத தைவமாம வேறு. [கணடான.

எ-து. உ-ம. எ-னின. அங்ஙனங காட்டிற்றையே காட் டிநிற்குமாயின், 'அவ்விந்திரியங்கள உள்வழித் தம்முதல் ருரு வுமாயுணர்த்தினும உணர்தல செல்லாதுபோலுமென்பாரை

நோக்கி உணர்தற் குபாயங்கூறி அதனை வலியுறுத்துதனுதலிற்று இ-ள் பல்நிறம் காட்டும் படிகம்போல இந்திரியம் தன் நிறமே காட்டும் தகை நினைந்து எ-து. தன்னாற் சாரப்பட்ட பன்னிறங்களினியல்பே தன்மாட்டுக் காட்டிநிற்கும் பொதுவியல்புடைய படிகம்போலத் தன்னாற் சாரப்பட்ட இந்திரியங்களினியல்பையே சார்ந்ததன்வண்ணமாய்த் தன்மாட்டு விளக்கிநிற்குந் தனது பொதுவியல்பை முன்னாகச் சிந்தித்தறிந்துகொண்டு பின்பு—பல நிறத்துப் பொய்ப் புலனை வேறு உணர்ந்து. எ-து அந்நிறங்கள் படிகத்துக்கு வேறென்றறியுமாறுபோலப் பலவகையியல்புடைய பொதுவியல்பைச் செய்யும் பொறிகளைத் தன்னின் வேறெனத் தெளிந்து—பொய் பொய்யா மெய்கண்டான. எ-து. அவற்றானாய அப்பொதுவியல்பு பொய்யாயொழியுமாறு தனது சிறப்பியல்பை யுணர்ந்தானாயின—வேறு மெய்ப்பொருட்குத் தைவம் ஆம் எ-து அவ்வசத்தாகிய பொறிகளுக்கு வேறாகிய சிவசத்தினியல்பு தன்மாட்டு விளங்கச்செய்யுமாகலின் அச்சிவசத்துக் கடிமையாம் எ-று

ஈண்டுப் பொய் மெய்யெனப்பட்டன அப்பொருளவாதல் மேலே காட்டினும்.

தைவமென்பது தேவனதுடைமை யென்னும் பொருட்டாய வடமொழிப்பகுபதம்.

இதனானே கருவிகளுள்வழிக் காட்டிற்றைக் காட்டிநிற்றலின் அறிதல் செல்லாது அவை நீங்கியவழிக் கேவலமாய் முடியுமாகலிற் றன்னுண்மையறியுமாறியாங்ஙனமென்னுங் கடாவை யாசங்கித்து அவையுள்வழியே தன்னுண்மை யறிதற்குபாயங்கூறி இதுபற்றி அவை காட்டிற்றைக் காட்டி நிற்றற் கிழுக்கில்லையென வலியுறுத்தவாறுமென்க.

மெய்ப்பொருட்குத் தைவமாமென்றதனால் வருகின்ற அதிகரணத்திற்குத் தோற்றுவாய் செய்தவாறு.

மூன்றாமதிகரணமுடிந்தது.

## நான்காமதிகரணம்.

இனி இவ்வான்மாத் தன்னை இந்திரியத்தின் வேறாவான் காணவே தமது முதல் சீபாதத்தை யணையுமென்றது.

எ-து மே-ள் எ-னின். பொய்ப்புலனை வேறுணர்ந்து பொய் பொய்யா மெய்கண்டாற்கு அதுவேயமையும் கருவிகள் நீங்கியவழிச் செய்யக் கடவதொரு முயற்சி கூடாமையின் ஆண்டு மெய்ப்பொருட்குத் தைவமாதல் பெறப்படாதெனப் பேதவாதசைவர் முதலியோர் கூறுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் நான்காங் கூறறைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று இ-ள் வெ-டை.

இந்திரியத்தின் வேறாயவழிக் கேவலத்தை யணைதலுமுண்மையின் அதனை நீக்குதற்பொருட்டு வேறாகவெனவொழியாது வேறாவான் காணவென்றார்; காண்டலே அதற்கமையுமென்றலின்.

ஏகாரந் தேற்றத்தின்கண் வந்தது.

ஊசல் கயிறற்றாற் றாய்தரையே யார்துணையான்.

எ-து. ஏது. எ-னின். அவ்வாறு காண்டலே சீபாதத்தை யணைதற்குச் சாலுமென்பது யாங்ஙனமென்பாரை நோக்கி உவமையின் வைத்துக்காட்டியமேற்கோளைச் சாதித்தனுதலிற்று. இ-ள். ஒருவன் ஏறியிருந் தாடுதற்கு ஆதாரமான ஊசல் கயிறற்றதாயின் அவனுக்கு உற்றுழியுதவுந் தாய்போல ஆண்டு தாரகமாவது நிலனேயன்றிப் பிறிதில்லையென்னும

ஒப்புமையான் இனி யிவ்வான்மாத் தன்னையிந்திரியத்தின் வேறுவான காணவே தமது முதல சிபாததகைதயணையுமென மேறகொண்டது. எ - று

வியாபகப்பொருட்குக காடசிவிசேடமே நீககமாகலின் அறுதல அதறகு உவமையாயிறறு.

சிறைசெயய நினற செழுமபுனலி னுளளரு
சிறைசெய புலனுணாவிற றீாநது—சிறைவிட
டலைகடலிற செனறடஙகு மாறுபோன மீளா
துலைவிலரன பாததகைத யுறறு.

எ-து. உ-ம. எ-னின் கருவிகணீஙகினவழி வேறு நில லாது சிவததைதத தலைபபடுமாயின அவவுயிாககுங கருவிகணீ ஙகிக கேவலததைதத தலைப்பட்ட உயிாகருப்போல மீட்சியு ணடுபோலுமெனபாரை நோககி அஃதினறுமாறுகூறி மேல தனை வலியுறுததுதனுதலிறறு இ - ள சிறைசெயய நினற செழும்புனலின உளளம எ-து ஒருவன அணையையுயாத துக கடடித தடைசெயய ஆணடுத தடையுணடு தேஙகி நினற ஆற்றுநீர்போலக் கருவிகளாகிய பாசஞானந தனதுவியாபக ததைதத தடைசெய அதன்கண ஏகதேசமாயடஙகித தடையு ண்டு நின்றவுயிர்—சிறை விட்டு அலை கடலில சென்று அடங் கும ஆறு போல எ-து அவ்வணைமுறிநது தடை தீாநதவழி இடையீடனறிக கடலினகண முடுகிச சென்று அந்நீரேயாய அதனுளடங்கி மறிதது வாராத ஆறறுநீாபோல—சிறைசெய் புலன உணர்வில தீர்நது. எ-து. கருவிகளாகிய பாசஞானத் தடையினினறு நீஙகியவழி—உலைவு இல் அரன் பாததகைத உறறு மீளாது எ-து. தனககுக கேடிலலாத சிவபிரானது திருவடியைத் தலைககூடி அததிருவடி நிறைவேயாய் அதன்க ணடஙகிப் பின்பு மீளுதல செயயாது. எ - று.

சிறைசெய்யநின்ற செழும்புனலின் உள்ளம் என்றது தொகையுவமம். இன. உவமவுருபு. தேககத்தின் மிகுதி யுணராததுவார் செழுமபுனலென்றார்.

மலசத்திககுக் கேடுண்மையின் அதனைத் தலைப்பட்ட உயிாககுக கருவிகளின் மீட்சி கூடும், சிவசததிககு அஃதினமையின் அதனைத் தலைப்பட்டவுயிர் அவ்வாறு மீளுதற்கோரியையிலலையெனபார் உலையிலரன்பாதமென விசேடித்தாா.

அடஙகுமெனனும் உவமவினை பொருளினும், மீளாதென்னும பொருளவினை உவமையினுஞ் செனறியைக்தன

எவவுருவு தானெனனணி னெயதுவா ரில்லைதா
னிவவுருவின வேறே லிறைபலல—னெவ்வுருவுங்
கணபோ லவயவங்கள காணுவக கணணிலலா
கண்பேறே காணக கழல

எ-து உ-ம் எ-னின் மீளாதென்று விடுத்தல்வேண்டாம் எலலாஞ சிவமாகக கணடாாககு மீணடாலென் மீளாக்கா லெனனெனனுஞ சிவாததுவிதசைவரை நோக்கி அது விடையாதறகேலாமை கூறி மறிததும மீளாமையை வலியுறததுத னுதலிறறு. இ - ள். எவ்வுருவும் தான் என்னின் தாள் எய்துவாா இலலை எ-து உயிருணாவேயன்றிப் புலனுணர்வுஞ் சிவமேயாமாயின விசேடமினமையாற் புலன்வழி ஒழுகுஞ் சகலநிலையைக கைவிட்டுத திருவடியைத் தலைக்கூடவேணடாமையின் ஒருவரும் அதனை எய்துவாரில்லையாய் முடிந்து * "பாசத்தைப் பசுக்கள் விட்டுப் பதியினை யடைய முத்தி" என்னும வேதாகமங்கள் போலியாய் முடியும்—இவ்

* சிவஞானசித்தி, பரபக்கம், பாஞ்சராத்திரிமதமறுதலை. ௨௫.

வுருவின் வேறேல் இறை யலலன். எ-து. அது பற்றி முதல் வன் புலனுணரபோடியையினறி அதனின் வேறாய் நிற்பன் என்னின் அப்புலனுணர்விறகு அவனுலாகறபால தொன்றின் மையின் அவன ஆணடைக இறைவனலலனெனபபட்டு முத ன்மைக இழுக்காய முடியும மறறெனனையோ அதனியலபெ ன்னின்—எவ்வுருவும எ-து உயிருணாவுபோலப் புலனுண ர்வுங கலப்பின்றி சிவமேயாமாயினும இரணடுந தமமுளொப பனவலல—அவயவஙகள கணபோலக காணு எ-து உயிா ஐமபொறிகளினும ஒபப நிறபினும் அவறறண மெய வாய மூககுச செவி நான்குங கணணிநதிரியம ஒளியான அவவா னமபோதததோடு விரவிச சேயமைககணணதாகிய விடயத் தையும் வியாபிததறியுமாறுபோல வியாபிததறிய மாட்டாவா ய்த் தமமாட்டு வநத விடயஙகளை நினறுஙகுநின்றியைந தறித றறன்மையவேயாம—அககழல அககண இலலார் கண பேறே காண எ-து. அககணணினது வெறறிப்பாட்டைக கண்ணொளி யிழநதாரது கணபேறறினகட் கணடறிவா யாக எ-று

கணணும் அவயவங்களும் ஆகுபெயா கண்பேறேயென ஏழாவது தொகுதது ஏகாரம் விரிததார் கழலணிவாககு உளதாகிய வெறறிப்பாட்டைக கழலென்றுபசரிததார். கழல காலணிமணிவடம்.

ஈணடு வெற்றியாவது ஏனை நான்கிநதிரியங்களையு நோக்கி மேம்படுதல.

கண்போலவயவஙகள காணு வககண்ணில்லார் கண் பேறே காணக் கழலென்பது முதலவன இரணடினுமொப்ப விரவிநிற்பினும் உயிருணர்வுபோலப் புலனுணர்வு வியாபகவி ளக்கமாதலின்றி ஏகதேசவிளககமாம. உயிருணர்விறகு உள தாகிய அம்மேமபாடு அவ்வியாபகவுணர்வை யிழந்த பசுத்து

வமுடையா ராமாட்டறியப்படாதாயினும் அவரது பசுத்துவநீ
ங்கிய சிவப்பேற்றின்கணறியப்படுமென்பது தோன்ற நின்ற
மையின் இஃதொட்டென்னு மலங்காரம்.

சிவமாயவழியும் புலனுணர்வு ஏகதேச விளக்கமாவத
னறி - உயிருணர்வுபோல வியாபகவிளக்கமாதலில்லையெ
னவே, அதன்கண் மீளுதலிழுக்கென்பது பெறப்பட்டது
இதற்குப் பிறரெல்லாம் இயைபின்றியுரைத்தார்.

ஐம்பொறியி னல்லையெனு மந்த கரசிவனை
யைம்பொறியை விட்டணு கணைசகல—னைம்பொறி
னீங்கானீர்ப் பாசிபோ னீங்குமல கன்மமவரி [யி
னீங்கானை நீங்கு நினைந்து.

எ-து. உ-ம எ-னின். சிறைவிட்டவழி அலைகடலிற்
சென் றடங்குதலேயன்றி ஆற்றுலலைகடற்கே பாய்ந்த நீர்
அவ்வாற்றுள் மறித்தலு முண்மையின் அதுபோல அரன்பா
தத்தை யுற்றவுயிருக்கு ஒரோவழி மீட்சியுமுண்டென்பது
பெறப்படுதலான் அவ்வழி மீளாமை செல்லாதென்பாரை
நோக்கி அம்மீட்சிக்குக் காரணமிதுவென்பதூஉம், அதனை
நீக்குதற்குபாயமுங் கூறி வலியுறுத்துதனுதலிற்று. இ-ள்
ஐம்பொறியின் அல்லை எனும் அந்தகர. எ-து ஐம்பொறிகள்
போல ஏகதேசவிளக்கமுடையாயல்லையென்றறிவுறுக்கப்ப
டுஞ் சித்தாந்தமகாவாக்கியத்தைப் பெற்றுடைய மாணவ
கனே,—அங்கு ஐம்பொறியை விட்டுச் சிவனை அணை சகலன
ஐம்பொறியின் நீங்கான். எ-து சிறைவிட்டலைகடலிற் சென்
றடங்குமாறுபோலென மேற்கூறியவாறே ஐம்பொறிகளா
லுய புலனுணர்விற்றீர்ந்து சிவன்றிருவடியையுற்ற சகலன்
அவ்வைம்பொறிகளான் மீள்வதனை நீங்குவானல்லன்—நீர்ப்
பாசிபோல் நீங்கு மல கன்மம் வரின் நீங்கானை நீங்கு நினை

ந்து எ-து. கல்லெறியும வழி நீஙகிய நீர்ப்பாசி அது விடும் வழிப் பரககுமாறுபோல அவவணையின்கணீஙகிய மலகனம மாயைகள் வாதனைவயததாணிகழ மயாச்சிபற்றி வந்து கூடு மாயின் அதுபறறிப பொறிவழி மீளாமல அவ்வழியுந தன்னை விட்டு நீங்காத முதலவனை முன்னர்க் கூறப்படு முபாயஙகளி னினறு சிநதிதது அவறறை நீககிககொள்ளும். எ - று

வரினென்றதனுல, வருதல் ஒருதலையன்று வாசனையுள வழியேயென்பதுபெறறும.

நீங்கியென்பது பாடமாயின, நீங்கினவாகிய மலகனம மெனப் பெயராககவைததுரைகக

சித்தாநததைத அந்தமென்றது தலைககுறை தாம அதன கணணதாயசசிறநத ஒருவாாததை

அஙகு மேறகூறியபடி

ஐமபொறியை விட்டணைதறகுரியான் இவனென்பது ணர்ததுவர் சகலனெனறா

நீஙகுமென்னும் மகரஞ் சநதி நோககிக கெட்டது. நீங கெனவே பாடஙகொணடு அணையென வேறு பிரித்து முன னிலையேவலாககி அதறகேற்ப நீஙகாயெனப் பாடந திரிதது ரைப்பாருமுளர்.

மேறகூறிய மீளாமையை வலியுறுததுவார் ஐம்பொறி யினல்லையெனு மந்ததரசிவனை ஐமபொறியை விட்டகத ணை சகலனைம்பொறியினீஙகாளெனறும் ஒரோவழியுளதாமா யின், அதற்குக காரணம இஃதென்பார் நீர்ப்பாசிபோ னீஙகி மலகனமம வரினென்றும், அது நீககுதறகுபாயஙகூறுவாா நீங்காவே நினைந்து நீஙகுமென்றுங கூறினர். மலகன்மமெ னவே, இனம்பற்றி மாயையுங் கொள்ளப்பட்டது.

"மங்கல மென்ப மனைமாட்சி மற்றத—னன்கல நன்மக் கட் பேறு" என்றாற்போல நீக்கானை நீங்கு நினைந்தென்றதனால வருகின்ற சூத்திரத்துக்குத் தோற்றுவாய் செய்ததுமாயிற்று.

இம்மூன்றுதாரணங்களும் முறையே திருவடிஞானத்தைப் பெற்றவுயிர் புலனுணர்வின் மீட்டலில்லையெனவும் மீட்டு விழுக்காமெனவும் ஒரோவழிப் பயிற்சிவயத்தானே மீளவருமாயின் மீளாதவாறு செய்துகொள்ளற்பாற்றெனவும் கூறித் தாய்த்தரையேயாமென்னும் ஏகாரப்பொருளை வலியுறுத்தி ஒரு பொருண்மேல் வந்தவாறு காண்க.

நான்காமதிகரணமுடிந்தது.

எட்டாஞ்சூத்திரமுடிந்தது.

# ஒன்பதாஞ்சூத்திரம்.

ஊனக்கண் பாச முணராப் பதியை, ஞா
னக் கண்ணினிற் சிந்தை நாடி, யுராத்துனைத்
தேர்த்தெனப் பாச மொருவத், தண்ணிழ லா
ம்பதிவிதி யெண ணுமஞ் செழுத்தே.

எ-து. சூ-ம். எ-னின். ஆன்மசுத்திபண்ணுமாறுணர்த்துதனுதலிற்று

எ-து. க-ரை. ஏ-னின். சூத்திரக்கருத்துணர்த்துதனுதலிற்று. இ-ள். தம்முதல் குருவுமாயுணர்த்தக் கேட்டு அதனைச் சிந்தனைசெய்துணருமாறுணர்த்து முகத்தான் ஐம்புல

வேடரின் வளர்ந்த வாலாமை நீக்கி உயிர் தன்னைத் தூய
மைப்படுத்துமாறுணர்த்துதல் இவ்வொன்பதாஞ் சூத்திரத்
தின் கருத்து எ - று.

சூத்திரவியைபும் இதனானே இனிது விளங்கும்

சிவப்பிரகாசத்துத் தான் பணியை நீத்தலென்றோதப்ப
டும் ஆன்மசுத்தியாவது இறைபணிநிற்கவென வருகின்ற சூத்
திரத்திற் பெறப்பாலதாகலானும், அழுக்கு நீக்கமே அறுவை
க்குச் சுத்தியாமாறுபோலப் பாசக்ஷயமே உயிர்க்குச் சுத்தியா
வதன்றி வேறன்மையானும், பாசக்ஷயம்பண்ணுமுன்னாச்
சுத்தியாதல் கூடாமையானும், வருகின்ற சூத்திரத்தின் கருத்
தாய நின்ற ஆன்மசுத்தி பண்ணுமாற்றைப் பதியை நாடியெ
னவுந் தண்ணிழலாம்பதியெனவுஞ் சிவதரிசனம் பண்ணு
மாறே யுணர்த்துதற்கெழுந்த இச்சூத்திரத்தின் கருத்தாக
வைத்துரைத்ததென்னையோவெனின் மலையற்க, சிவதரிசனத்தி
னிகழ்வது ஆன்மசுத்தியெனனும் உடனிகழ்ச்சியுணர்த்துதற்
கும் தம்முள் வேறுபாடு சிறுபான்மையுடையனவாய இவ்வி
ரு சூத்திரமும் ஒருபொருண்மேலனவெனப் புணர்த்துதற்கும்
இவ்வாறுரைத்தாராகலின். அஃதங்ஙனமாக, ஆன்மாத் தன்
னை யிந்திரியத்தின் வேறாவான் காணவே தமது முதல் சீபாத
த்தை யணையுமென்றலின், அக்காட்சியே அதற்கமையுஞ் சுத்
தியெற்றுக்கெனின், அஃதொக்கும் நிருவிகற்பமாய்க் காண
டலும், இரட்டுறக் காண்டலும், தெளியக்காண்டலுமெனக்
காட்சிமூவகைப்படும் இம்மூன்றும் அதிபரிபக்குவமுடையா
ர்க்குக் கேட்டமாத்திரையே ஒருங்கு நிகழுமாயினும் ஏனை
யோர்க்குக் கேட்டல் சிந்தித்தல் தெளிதலென்னுஞ் சோபா
னமுறையினன்றி நிகழாமையின், அவரைநோக்கிச் சிவரூப
த்தி னிகழும் ஆன்மதரிசனத்தின் பின்னாகச் சிவதரிசனத்தி
னிகழும் ஆன்மசுத்தியும் ஒருதலையான் வேண்டப்படுமென

றுணர்ந்துகொள்க. *"நேசமொடு திருவடிக்கீழ் நீங்காதே தூங்கு நினைவுடையோர் நின்றிடுவர் நிலையதுவே யாகி— யாசையொடு மங்குமிங்கு மாகியல மருவோர் ரருமபாச மறுக் குமவகை யருளின வழி யுரைபபாம்" என வழிநூலாசிரிய ரும இக்கருததேபற்றி யோதினார்.

இச்சூததிரததின பிண்டப்பொழிப்பு குறையுணர்வாகிய பசுவறிவானும் பாசவறிவானும் உணரபபடாத முதலவனை அவனது திருவடிஞானததாற் றனனறிவின்கணணே யாரா யநதறிக. அததிருவடிஞானததான் நிலமுதனுதமீறுகிய பாச ககூட்டம் நின்றுழி நிலலாது பரநது திரிதறகண அதிவேக முடைய பேயததேரினியலபிறறுயக கழிவதென்றறிநது நீங கவே, அபபதிஞானம பிறவிததுயராகிய வெப்பததுககுக குளிரநத நிழலாய வெளிபபட்டு விளஙகும. அவவாறு பாச ததை யொருவிஞானததைப் பெறறு ஞேயததைக் கணட காட்சி சலியாமைபபொருட்டு அபபொருள பயககுந் திருவ ருசெழுதது அவவிதிபபடியறிநது கணிககப்படும். எ - று.

ஊனமென்பது அப்பொருட்டாதல்†"ஊனமேற் கிரியை விததை" என்பதனுனறிக.

"நன்று மனனிது நாடாய் கூறி" என்றுறபோல நாடி யென்பது இகரவீறறு முன்னிலையேவல.

உராத்துனை ஏழாமவேறறுமைததொகை. உராவென் பது முதனிலைத் தொழிறபெயா, பறவாககுளலி பாயரவேங் கையென்றுறபோல ஒருவரானுராரப்படாத வேகததையு டைய தேனுசை செயப்படுபொருட்கண வந்த பெயரெசச

* சிவஞானசிததி, சுபககம, எட்டாஞ்சூத்திரம். கக. பாசுபடு. † சிவ்ஞானசிததி, சுபககம, முதறசூத்திரம. சுரு. ஞானமேயான.

மறையாகக்கொண்டுரைத்து, "திருத்தார் நன்றென்றேன் றியேன்" என்றாற் போல உரா வென்பது குறுக்கல்விகாரமெனபாருமுளா.

பின் வந்தபதி ஆகுபெயா.

இதனுள, ஊனக்கண் பாசமுணராப்பதியை ஞானக்கண்ணினிற சிந்தை நாடியென்றது ஓரதிகரணம, உராத்துணைத் தோத்தெனப் பாசமொருவத் தண்ணிழலாம் பதியென்றது ஓரதிகரணம, விதியெண்ணுமஞ்செழுத்தேயென்றது ஓரதிகரணம ஆக மூன்றதிகரணத்தது இச்சூத்திரமென்றுணாக.

## முதலதிகரணம்.

ஈண்டு அமமுதலே ஞானக்கண்ணாலே காணக்வென்றது

எ-து மே-ள. எ-னின மேலைச்சூத்திரத்தோதியவாற்றான் முதலவன பாசவறிவால நாடப்படுவனலலனாயினும பசுவறிவால நாடப்படுவனெனறற்கு இழுக்கெனனையெனச் சிவசமவாதசைவா மதமபற்றி நிகழுங் கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் முதறகூறறைக் கண்ணழித்துரைத்து மேறகோடனுதலிற்று இ-ள. வெ-டை

ஏகாரம தேற்றம்

அவன வாக்கு மனாதீதகோசரமாய நிறறலான

எ-து. ஏது. எ-னின ஏனைஞானங்களா னறியப்படாது சிவஞானத்தானறியப்படுமென்றற்குப் பிரமாணமெனனையெனபாரை நோக்கி மேறகோளைச் சாதித்தலுதலிற்று.இ-ள வாக்குமனாதீதகோசரமாய நின்ற அதுவே என்புழியுரைத்தாம

ஆண்டுப் பொதுவகையாற பெறப்பட்டதனை ஈண்டெடுத்து வாக்கு மனாதீதமாயுங் கோசரமாதல பிறிதொன்றாற பெறப்படாதெனனும அருத்தாபத்தியான ஞானக்க

ன்றுமில் காணப்படுமென்பது தாமே போதருமென மேற் கோளைச் சாதித்தார்

நாடியோ வென்போ நரம்புசீக் கோழையோ
தேடி யெனையறியேன் றேர்ந்தவகை—நாடியரன்
றன்னாலே தன்னையுங் கண்டு தமைக்காணா
ரென்று மெனவறிவா ரின்று

எ-து உ-ம் எ-னின் கோசரமாதல் பிறிதொன்றாற் பெறப்படாதென்றதென்னை பசுத்துவநீங்கியவழிச் சுட்டிறந் தறிவதாகிய உயிருணர்வு திருவடிஞானத்தோ டொப்பதாக லின் அதன்கட் கோசரமாதல் அமைவுடைத்துப்போலுமென் பாரை நோக்கி அவ்வுணர்வு விளங்குமாறுணர்த்துமுகத்தான் அவரை மறுத்து ஏதுப்பொருளை வலியுறுத்ததனுதலிற்று. இ-ள் நாடியோ என்போ நரம்புசீக் கோழையோ தேடி என்னை அறியேன் தேர்ந்த வகை நாடி. எ-து. நாடி முதலியவ ற்றுள் யான் யார் என்னைத் தேடியுமறிகின்றிலேனென்று இவ்வாறு தேர்கின்ற தேர்ச்சியறிவின்கண்ணே இதனைத் தெளிவிப்பதோரறிவு வேறுண்டென ஆராய்ந்துநோக்கி— அரன் றன்னாலே தன்னையுங் கண்டு தமைக் காணார். எ-து. அவ்வாறு நாடுங்கால் விளங்கித் தோன்றுவதாய முதல்வ னது திருவடிஞானத்தால் முதல்வனையுமுணர்ந்து முதல்வ னின் வியாப்பியமாய் நின்று அங்ஙனமறியும் பொருளாகிய தம்மையுமுணர்தலைச்செய்யாதார்—என்றும் என அறிவார் இன்று. எ-து. மற்றெவ்வியல்பினரென்று தம்மையறிய வல் லுவர் இம்முத்திகாலத்து. எ - று.

நாடியென்றது இடை பிங்கலை முதலியவற்றை. நரம் பெனவே யடங்குமேனும் தலைமைபற்றி வேறுகூறினார். சீ புண்ணீர். கோழை ஐ.

ஓகாரந் தெரிநிலை. என்றென்பது சொல்லெச்சம வகை ஆகுபெயர்.

ஒறறுமைபறறி அரனதுஞானததை அரனென்றுபச ரிததார

உமமை எதிரது தழீஇயிறறு எவனென்னும வினாவி னைககுறிபபுப்பெயா ஈணடாகுபெயராய எனனெனமரீஇயி றறு ஆய அசை

நாடியோ எனபோ நரமபுசிக கோழையோ வெனற உபலககணததால ஏனைத தததுவ தாததுவிகஙகளினும அவ் வாறு தெரிதல கொளளபபடும

இது தமமையறியுமாறுணாததுமுகததானே தலைவனை யறிநதபின அறியப்படுவதாகிய தமமறிவு கொணடு தலைவனை யறியுமாறு யாணடையதென மறுதது வலியுறுததவாறு காணக

காடடிய கணணே தனைககாணு கண்ணுககுக
காடடாய வுளளததைக கண்காணு—காடடிய
வுளளந தனைககாணு வுளளததின கண்ணாய
களவனரு னுளளததிற காண்.

எ-து உ-ம் எ-னின எதிர் முகத்து ஒருபொருளைக கணட கண்ணே மறிதது நோககியவழி வெளிம புறததுப் பொருளையுங் காண வலலும அதுபோல அஙஙனந் தோநதறி தலைச செய்த உயிரே தெளிநதறிதலையுஞ் செயய வலலுமென அமையுமென்பாரை நோககி அதனது மாட்டாமையை விள ககி அரன்றனருலே காணடலை வலியுறுததுதலிறறு. இ-ள். கட்டியகணணே தனைக காணு. எ-து உயிராற காட்டப்பட்டு ஒருவிடயததைக் காண்கினற கண்ணனது தன்

னியல்பைக் காணமாட்டாது—கண்ணுக்குக் காட்டாய உள்ளத்தைக் கண் காணும் எ-து. தனக்கு அவ்விடயத்தைக் காண்பித்து முதலாய்நிற்கு முயிரையும் அது காணமாட்டாது—காட்டிய வுள்ளம் தன்னைக் காணும் எ-து. அதுபோல முதல்வனால் மறைந்துநின்றுணர்த்தப்பட்டு ஒன்றனைத் தோந்துணர்கின்ற உயிர் அவ்வாறே தன்னியல்பையுமறியமாட்டாது. தன்னையுணர்த்திநிற்கு முதல்வனையுமறியமாட்டாது—உள்ளத்தின்கண் ஆய கள்வன் தான். எ-து அத்தோற்சியறிவின்கண்ணும் உடனாய்நிற்கும் கள்வன் அம்முதல்வனாகலானே—உள்ளத்தில் காண். எ-து. அவனை அவ்வறிவின்கண்வைத்துக் காட்டித் தெளிவாயாக. எ-று.

இது சொற்பொருட் பின்வருநிலை. ஏகாரம் அசைநிலை. "முறைகாக்கு முட்டாச் செயின்" என்றாற்போலக் காணுதென்னுந் துவ்வீறு விகாரத்தாற் றொக்கது.

பின்வந்தவுள்ளம் ஈண்டுத் தோற்சியறிவின்மேற்று. உள்ளத்தின்கண்ணுமென்னுஞ் சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது.

தோன்றாது நிற்றல்பற்றிக் கள்வனென்றார். கள்வனென்றது கண்ணுக்கு உயிர் மறைந்து நின்றே காட்டுவதாகலான் அது தன்னையும் உயிரையும் அறியமாட்டாவாயிற்று; அதுபோல முதல்வன் இதுகாறு மறைந்து நின்றே யுணர்த்தலின் உயிர் தன்னையு முதல்வனையும் அறியமாட்டாதாயிற் றென்பதுபட நின்ற குறிப்புமொழி. உள்ளத்திற் காணவல்லார்க்கு அக்கள்வன் நீத்தலின் தம்மையும் முதல்வனையுங் காண்டல் கூடுமென்பதாம். * "கள்ள ரோடில்ல முடையார் கலந்திடின் வெள்ளவெளியாமென் றுந்தீபற" என்றதும் இக்கருத்துநோக்கி.

* திருவுந்தியார். ௨௧.

கண்ணுக்குக் காட்டாய வுள்ளத்தைக் கண் காணுமென
னுவமைகக்கோதியவாறு பொருளினும வருவித்துரைத்துக்கொ
ள்க இஃதெடுத்துக்காட்டுவமை

முதலதிகரணமுடிந்தது.

## இரண்டாமதிகரணம்.

இனி அசத்தாயுள்ள வன்னபேதங்களை அசத்தென்று
காண உள்தாய சிறப்பது ஞானசொரூபமென்றுணர்ப்பாற்று

எ-து மே-ள எ-ணின அமமுதலே ஞானக கணணுலே
காணகவெனறுணாநதியவழி அந்தஞானககணணைப் பெறு
மாறு யாங்ஙனமென நிகழும அவாயநிலையை நீக்குதறபொரு
ட்டு மேலதற்கோர் புறனடையாயெழுந்த இச்சூத்திரத்தின
இரணடாங்கூறறைக் கணணழித்துரைத்து மேற்கோடனுத
லிற்று இ-ள வெ-டை

பாசமொருவத் தணணிழலாம்பதியெனபுழிப பாசமென்
றது காரியப்பிரபஞ்சத்தையெனபாா அசத்தாயுளளவென
றும் சொற்பலகாமைப்பொருட்டு ஏதுப்பொருளை உருவகமுக
த்தான் உடம்பொடுபுணாத்துக காட்டுவாா பிரபஞ்சத்தையெ
னறது வன்னபேதங்களையெனறும, வியாபகப்பொருளுக்கு
ஒருவுதலாவது உணர்ச்சிவிசேடமேயாமென்பாா அசத்தென
றொழியவென்றது காணவெனறும, தணணிழலாய் சிறறந்
புதிதன்றென்பார் உளதாய் சிறப்பதென்றும், பதியென்றது
ஆகுபெயராற் பதிஞானத்தின்மேனின்ற தென்பாா ஞான
சொரூபமென்றும், இஃதநுபவத்தினனறிச கொலலளவை
யின் அறிய வாராதென்பார் உணர்ப்பாற்றென்று முரைத்
தார். இஃதேகதேசவுருவகம்.

இதனுட் பெறப்படுமேதுப்பொருளை ஏனையவறறுட் போல மேறகோளின வேறுவைததுக காணுமாறு·

இனி, அசததாயுள்ள பிரபஞசததை அசததெனறு காண வுளதாய நிறபது ஞானசொரூபமெனறது வேறறியலபாகிய வனனபேதஙகளை வேறறியலபென்று கணடு கழிப்பின உள தாய நிறபது படிகசொரூபமாநதுணையான எனவரும்

இ-ள் படிகசொரூபததைக காட்டாது மறைதது நினற வேறறு நிறஙகளை இவை நிலையுதலிலவாகிய வேறறுநிறஙக ளெனக கணடுநிறபின அவ்வழிநிலையுதலுடைததாய விளஙகி நிறபது பளிஙகினது சொரூபமாமெனனு மொப்புமையான் நிலையுதலுடைய தறசொரூபததைக காட்டாது மறைந்து நிற கும நிலையுதலிலவாயுள்ள பிரபஞசததை இவை நிலையுதலு டையன வலலவெனறு விவேகிததறியின் அஙஙனநிராலம்ப மயமாய விளஙகித தோன்றுவது ஞானசொரூபமென மேற கொணடது. எ - று.

வனனபேதமாவது சிததிரமெனககொணடு சுவாமேல் வைததுரைததலுமொனறு

அசததாயுளளபிரபஞசத்தை அசததெனறு காணடலா வது ஆசிரியனறிவுறுதத உபதேசப்பொருளினுறைததுநினறு * "அட்ட குணமெட்டுச சிததி சோகனதன் முதலவாழவு குலவுபத மெலலாம—வெறுததுநெறி யறுவகையு மேலொ டுடு ழடஙக" காரணரூபததினிலலாமையால "வெறும்பொ ழியன நீஙகிரு"ததல

நிரகுணனாய நினமலனாய நிததியா னநதனாயத
தறபரமாய் நின்ற தனிமுதலவ—னறபுதமபோ

* சிவஞானசித்தி, ஒனபதாஞ்சூத்திரம். ௯. குறித்தடி

லானு வறிவா யளவிறந்து தோன்றுமே
வானே முதல்களையின் வந்து.

எ-து. உ-ம. எ-னின் அசத்தை அசத்தென்று கண்டொருவியவழித் தோன்றுவது சூனியமேயன்றிப் பிறிதில்லை போலுமென்பாரை நோக்கி ஞான சொரூபத்தினியல்பு கூறி அதனை வலியுறுத்துதனுதலிற்று இ-ள். நிர்க்குணன ஆய. எ-து அசுத்தப்பிரபஞ்சம்போல முக்குணரூபமாயளவிட்டறியப் படுவானுமல்லனுய—நின்மலன ஆய் எ-து முக்குணங்களைக் கடந்த மிசிரப்பிரபஞ்சம்போல மலகன்ம காரியரூபமா யறியப்படுவானுமல்லனுய—நித்தியானந்தன் ஆய் எ-து மலகன்மங்களையுங் கடந்த சுத்தப்பிரபஞ்சம்போல அநித்தியானந்தரூபனுயறியப்படுவானுமல்லனுய—தற்பரம் ஆய.எ-து இம்மூன்றனோடுங் கூடிப் பொதுவியல்புபற்றி அவ்வாறுணரப்படும் உயிர்போலன்றி அதற்குமேலாய—நின்ற தனி முதல்வன். எ-து இவ்வாறு நிற்றலான் ஒன்றனியல்புபற்றி யறியப்படாத தனிமுதலாகிய இறைவன்—வானே முதல களையின. எ-து ஆகாசமுதலிய அசத்தை அசத்தென்றுகண்டொருவியவழி—அளவு இறந்து அற்புதம்போல வந்து எ-து. பயின்றறிந்து வருந் தனது சுட்டறிவினளவினைக் கடத்தலான் இன்னதென்றறிய வாராத சூனியப்பொருள்போலத் தோன்றி—ஆனு அறிவு ஆய்த் தோன்றுமே. எ-து. பின்னர்ச் சுட்டிறந்தறியுந் தன்னறிவின்கணீங்காது நிலைபெறுவதாயுச் * "சோதிக்குட் சோதியாய்" விளங்கித் தோன்றுங்கொல்லோ. எ - று.

காபரம் தனக்குப் பரமெனவிரியும். தன்னேன்றது உயிரை.

* சிவஞானசித்தி, எட்டாஞ்சூத்திரம். கஅ [illegible]

அற்புதம் காண்டசெ சூனியத்தின்மேற்று. முதற்கட் சூனியமாய்த் தோன்றினுஞ் சூனியமன்றெனபார் அறபுதம்போல வநதென்ரா ஆறுமை நீங்காமை.

ஓகாரம எதிர்மறை ஏகாரம அசைநிலை.

வானே முதலெனவே தோற்றமுறைபற்றி வான் முதலாகிய பூதங்களும் ஒடுக்கமுறை பற்றி வான்முதலாகிய ஏனை த்தத்துவங்களு மடஙகும

நிாகுணனுய நின்மலனுய நித்தியானநதனுய்த தற்பரமாயென்புழி ஆககசசொல உணமைகுறிதது நின்றது வடமொழிமதம் அறிவாயென்புழி ஆககம் வேறுபாடு குறிதது நின்றது

ஒறறுமைபறறி முதல்வனது ஞானததை முதல்வனென்றுபசரிததா

சுட்டி யுணர்வதனைச சுட்டி யசநதென்னச
சட்ட வினியுளது சதமேதகாண—சுட்டி
யுணாநதனீ சததல்லை யுண்மையைத தைவம
புணாநததனுற பொயவிடடுப போம.

எ-து உ-ம். எ-னின் வானே முதல் களைநதவழி அங்ஙனக் தோன்றுவதும் வேறொனறெனக் கோடும் ஞானசொரூபமென்றற்குப் பிரமாணமென்னையென்பாரை நோக்கி அதனை வலியுறுத்ததனுதலிறறு. இ-ள். சுட்டி உணர்வதனைச் சுட்டி அசதது எனன. எ-து ஏகதேசவுணர்வாற் சுட்டியுணரப்படுவதாய பிரபஞசததை மேற்கூறியவாறே ஒரோவொன்ருகச் சுட்டி அசததெனறு கணடு கழித்துக்கொண்டு சென்றவழி—இனிச் சட்ட உளது சத்தே காண். எ-து முடிவின்கட் செம்மையேகோசரமாவது யாது அஃது அவ்வசத்தின வேறாகிய சத்தேயாம் அதனையறிவாயாக. அற்றேல் அச

த்தின் வேறாய் அங்ஙனந்தோன்றுஞ் சத்தாவது உயிரோயா மென அமையுமெனின்—சுட்டி உணர்ந்த நீ சத்து அல்லை. எ-து. இதுகாறும் அசத்தோடு கூடிச் சுட்டியறிந்து வந்த நீ அசத்தின் வேறாய் அங்ஙனந்தோன்றுஞ் சத்தாவாயல்லை ஆறேல் இச்சுட்டுணர்வு எனக்கு நீங்குவதின்றுபோலுமெ னின்,—உண்மையைத் தைவம் புணர்ந்து எ-து. அசத்தின வயப்பட்டு நின்று சுட்டியறிந்து வந்த நீ அதனையொழிந்து அங்ஙனந் தோன்றிய சத்தின் வயத்தினையாய அதனைப் புண ர்ந்தால்—அதனால் பொய்விட்டுப் போம் எ-து அப்புணர்ச்சி யானே சுட்டுணர்வாகிய அப்பொதுவியல்பு நினைவிட்டு நீங்கும். எ - று.

என்னவென்றது உபசாரவழக்கு

சட்டவென்பது செப்பமுணர்த்தி நிற்பதோரகரவீற்றி டைச்சொல், அது சட்டமென இழிவழக்கின மகரவீறாய மரீஇயிற்று

அசத்தைப் பிரித்தமையின் ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது

உண்மை சத்தென்பன ஒருபொருட் கிளவி

தைவமாயென ஆக்கச்சொல் வருவித்துரைக்க

புணர்ந்தாலென்பது புணர்ந்தெனத் திரிந்தது உண்மை க்குத் தைவமாதல் புணரினென்ன உருபுமயக்கமாகக் கொண் டுரைப்பினுமமையும்.

பற்றறக் கழிந்தொழியுமென்பார் விடுமென்றது விட்டுப் போமென்றார்.

கண்டதை யன்றன் றெனவிட்டுக் கண்டசத்தா
யண்டனை யான்மாவி லாய்ந்துணரப்—பண்டணைந்த

ஊனத்தைத் தானவிடுமா றுத்தமனி னெண்கருட
சானததிற றீாவிடமபோற ருன

எ-து. உ-ம. எ-னின். அசததை அசத்தென்று கண்டொ ழியுமாறும ஒழிந்தவழி உணமையைத தைவம புணருமாறும புணாந்தவழி அதனற பொய விட்டுப் போமாறும யாஙஙன மெனபாரை நோககி அவறறைத தெரிததுணாததி அதனை வலியுறுததுதனுதலிற்று இ-ள. கணடதை அனறு அனறு எனக கணடு அசதது ஆய விட்டு எ-து சுட்டியுணாப்பட்ட பிரபஞசததை இது சததனறு இது சததனறெனஒரோவொ னறுக வைதது நோககி அசததென்றொழிதது—ஆனமாவின அணடனே ஆயநது எ-து. அவவாறு கணடொழிநத தனன றிவின்கண்ணே சுடடுணர்வின்றி நினற கடவுளை ஆராய் நது—உணர எ-து சோகமெனப பாவிப்பனுயின்—உததம னில் பணடு அணைந்த ஊனத்தைத் தான் விடுமாறு. எ-து அப்பாவகததான அததுவிதமாய விளஙகித தோன்று முதலவ னுல அநாதியாயக கூடிநின்ற பொதுவியலபைத தான விட்டு நீஙகுமாறு—ஒண கருட சானததின தீாவிடமபோல தான. எ-து. ஒளிய கருடதியாணததில விளங்கித தோனறுங் கரு டனுல அப்பாவகன விடததைத தீர்ததுகொளளுமாறு போலாம எ-று.

தானென்பது முன்னையது எழுவாய்.பின்னையது அசை.

சானம் பாகததசிதைவு.

கருடதியானமாவது யாதெனிற் கூறுதும்; ஆதிபௌதி கம், ஆதிதைவிகம், ஆததியான்மிகம் எனக கருடன் மூவகை ப்படும். பொருடோறும இவ்வாறு கண்டுகொள்க. அவற்றுள், உலகத்திற் காணப்படுங் கருடன் ஆதிபௌதிககருடன், அதற் கதிதெயவமாகிய மந்திரம் ஆதி தைவிக கருடன், அம்மந்திரம

இடமாகநின்று மாந்திரிகனுக்குப் பயன்கொடுப்பதாகிய சிவ சத்தி ஆத்தியானமிக்கருடன் எனப்படும் அம்மூன்றனுள் ஈண்டுக் கருடனென்றது கருடனுக்கு அதிதெய்வமாய மாந்திரிகனுள்ளத்தின் அதுபோல வைத்துத் தியானஞ்செய்து கணிக்கப்படு மந்திரரூபமாகிய ஆதிதைவிகக்கருடனை அதனைப் பாவித்தலாவது நாடோறும் பயின்று வந்த பயிற்சிவிசேடத்தால் அம்மந்திரரூபமே தானாக அநன்னியபாவனை செய்து தன்னறிவு அதன்வயத்ததாம்படி உறைத்து நிற்றல். அவ்வாறு நின்று அம்மந்திரக்கணக்கொண்டு பாம்பவே அஃதவ்விடவேகத்தை மாற்றுதல் ஒருதலையாகலின் அப்பாவனை ஈண்டைக்குவமையாயிற்று. புள்ளு விலங்கு மரமுதலியவற்றுக்கெல்லாம் அதிதெய்வமந்திரமுளவென்பதூஉம், மந்திரங்களைக் கணிப்போன் படிகம்போல மந்திரசொரூபியாவனென்பதூஉம், சர்வஞ்ஞானோத்தரமுதலியவற்றுட் காண்க

இதனானே கருடபாவனை அசத்தியமென்பார் மதம் போலியாயவாறுமுணர்க அல்லதூஉம், பாவனை போலியாயவழி அது பயனற்றுமாறியாணடையதென்றொழிக.

இரண்டாமதிகரணமுடிந்தது.

## மூன்றாமதிகரணம்.

இனி இவ்விடத்து ஸ்ரீ பஞ்சாக்கரத்தை விதிப்படி யுச்சரிக்க வென்றது.

எ-து. மே-ள். எ-னின். ஆன்மாவைச் சுத்திபண்ணுதற்குப் பாசமொருவியவழித் தண்ணிழலாய்ப் பிரகாசித்த ஞான சொரூபமொன்றே அமையுமாகலின் இவ்விடத்தில் இனிச்செய்யக்கூடுவதொன்றில்லையென்பாரை நோக்கிச் சூத்திரத்தின் மூன்றாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனு

தலிற்று. இ - ள். பாசமொருவி ஆண்டுத் தண்ணிழலாய்ப் பிரகாசித்த ஞானக்கண்ணுற பதியைச் சிந்தை நாடியபின்னர் அவ்விடத்துத் திருவஞ்செழுத்தையும் விதிப்படிகணிக்கவென வேறுகொண்டது. எ - று.

இறந்தது தழீஇயவெச்சவும்மை விகாரத்தாற்றொக்கது அன்றாகலினன்றே * "பின்னுமோசைதரு மஞ்செழுத்தை விதிப்படி யுச்சரிக்க" என்றார் வழிநூலாசிரியருமென்க.

ஈண்டு ஸ்ரீ பஞ்சாக்கரத்தையென்றது முத்திபஞ்சாக்கரத்தை திருவஞ்செழுத்தாற் சாதிக்கப்படும்பொருளும் அதுவேயாகலான் வேறு வகுத்துக் கூறவேண்டாமையின், விதிப்படியென மாட்டெறிந்தொழிந்தார்.

இவ்வாசிரியர் மாட்டெறிந்ததூஉமுணராதார் சாதித்து நிற்குமுறை வேறே ஓதுமுறைவேறேயெனச் சித்தாந்தவழக்கொடு முரணிக் கூறுவர். நிற்குமுறைமையும் ஓதுமுறைமையுந் தம்முளியையிலவழி அஃது அதற்குச் சாதனமாமாறு யாண்டையதெனமறுக்க.

மானதம் மந்தம் உரையெனக் கணிக்குமாறு மூவகைப்படும். அவற்றுட் சுத்தமானதமெனப்படும் அறிவாற்கணித்தலே ஈண்டு உச்சரித்தலெனபார் சூத்திரத்துள் உச்சரிக்கவென்றது எண்ணுகவென்றார். வடமொழிச் சூத்திரத்துத் தியானிக்கவென்றதும் அது. இன்னும் இதன்கட்படும இயல்பெல்லாம், உண்மைவிளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன் கொடிப்பாட்டு, நெஞ்சுவிடுதூது முதலியவற்றுட் காண்க. ஈண்டு விரிப்பிற் பெருகும்.

* சிவஞானசித்தி, சுபக்கம், ஒன்பதாஞ்சூத்திரம்.
பாசஞானத்தாலும்.

இவ்வான்மாக்களுக்கு ஞானம் பிரகாசித்தும் அஞ்ஞானத்தை வேம்புதினறபுழுபபோல நோககிறறை நோககிநிறகுமாகலின் அது நீக்குதறகெனககொள்க

எ-று. ஏது எ-னின். அந்தரஙக வழிபாட்டாக்லின அசிந்திதனுய் நினற பதியைச சிநதிதனுககககணடு வழிபடுமாறறைச சாரவைத தோதறபாலதாகிய இதனைச சிததசாதனமாய ஈணடு விதிததல எறறுககெனபாரை நோககி மேறகோளைச சாதிததனுதலிறறு இ - ள வேமபுதினற புழு அதனையொருவிக் கருமபைத தலைபபட்டு அதன்சுவை தெரிநதுழியும பயிறசிவயததான நோககிறறை நோககிநிறகுமாறுபோல அசததாயுள்ள வன்னபேதஙகளை அசததென்று கணட உயிாகளுககு அதனுள ஞானசொருபம விளஙகி ஞெயஙகாட்சிப்பட்டவிடததும அவை பயிறசிவயததாற பணடைச்சிறறுணாவை நோககிநிறகுமாகலின் அவவாதனை நீககுதறபொருட்டு ஈணடைககு வேணடபபடுதலான இனி ஸ்ரீ பஞசாககரததை விதிபபடி யிவ்விடததுச்சரிககவென மேறகொணடதெனககொளக எ - று.

இவ்விடதெதன்றதனுல அணைநதோர் தன்மையைச சாரவைதது மேறகோடறகுரிய ஸ்ரீ பஞசாக்கரததையென வருவித்துரைத்துககொள்க. எனககொளகவென்று உடம்படுப்பித்ததும் அதுபறறி இக்கருதது நோககியன்றே புடைநூலாசிரியர் அஞசெழுததருணிலையை ஆனமலாபததின பின்னுக அணைந்தோர்தன்மையைச் சாரவைத தோதியதூஉமென்க.

“வானோக்கி வாழும்” “கோனோககி வாழும்” என்றாற்போல ஈணடு நோககென்றது மனவெழுச்சி·விசேடததை.

பிரகாசித்தவழியென்பது பிரகாசித்தெனத் திரிந்தது.

ஈண்டு ஞானமென்றது அசத்தை அசத்தென்று கண்ட வழி விளங்குவதெனப்பட்ட ஞானசொரூபத்தை, அஞ்ஞானமென்றது அதற்கு மறுதலையாகிய சுட்டுணர்வையெனவுணர்க. அது நீக்குதற்கெனக்கொள்கவெனவே, சித்தசாதனமன்றென்பதூஉம் பெறப்பட்டது.

அஞ்செழுத்தா லுள்ள மரனுடைமை கண்டரனை
யஞ்செழுத்தா லர்ச்சித் திதயத்தி—லஞ்செழுத்தாற்
குண்டலியிற் செய்தோமங் கோதண்டஞ் சானிக்கி
லண்டனாஞ் சேடனா மங்கு

எ-து உ-ம் எ-னின். இஃதவ்வாசனையை நீக்குதற்குச் சாதனமாமா றியாங்ஙனமென்பாரை நோக்கி அஃதாமாறு கூறி ஏதுவை வலியுறுத்துதனுதலிற்று இ-ள் உள்ளம் அரன் உடைமை அஞ்செழுத்தால் கண்டு. எ-து. உயிர் சிவனுக்குடைமையாதலை அஞ்செழுத்தை உச்சரிக்கு முறையில் வைத்துநோக்கி— இதயத்தில் அரனை அஞ்செழுத்தால் அர்ச்சித்து எ-து. தன்னுடம்பகத்தே இதயம் உந்தி புருவநடுவென்னு மூன்றனையும் முறையே பூசைத்தானம் ஓமத்தானம் தியானத்தானமாகக் கருதிக்கொண்டு புறம்பே ஞானபூசை செய்யுமுறைப்படி இதயபங்கயத்தில் அவ்வஞ்செழுத்தாலமைந்த திருமேனியில் அம்முதல்வனைக் கொல்லாமை ஐம்பொறியடக்கல் பொறை அருள் அறிவு வாய்மை தவம் அன்பு என்னும் அட்டபுட்பங்கொண்டு அம்மனுவாலர்ச்சனைசெய்து— அஞ்செழுத்தால் குண்டலியின் ஓமஞ்செய்து. எ-து. அத்திருமந்திரத்தானே குண்டலித்தானமான உந்தியில் ஞானவனலையெழுப்பி அதன்கண் விந்துத்தானத் தமிழ்தமாகிய நெய்யைச் சுழுமுனைநாடி இடைநாடியாகிய சுருக்குச் சுருவங்களாலோமித்து—கோதண்டம் சானிக்கில். எ-து. விந்துத் தானமாகிய

புருவநடுவிற் சிகர வகர யகரங்களை மூன்றும் முறையே தற
பதப்பொருளும் துவம்பதப்பொருளும் அசிபதப்பொருளுமா
முறைமைநோக்கி அதனாற் சிவோகம்பாவனைசெய்வனாயின—
அங்கு அண்டன் ஆம் சேடன் ஆம். எ-து அப்பாவனைக்
கண் விளங்கித்தோன்றுவன் அப்பாவகன் அவனுக்குச் சேட
சேடிய பாவகத்தால் அடிமையாவன் எ - று.

ஓமித்தலுந் தியானித்தலும் பூசைக்கங்கமெனவறிக
ஞானசொரூபம் விளங்கிய வழியும் பயிற்சிவயத்தான் ஏகதே
சப்பட்டுப் புறத்திற் செல்ல நோக்குவதாய தன்னறிவை அங்
ஙனமாகாதவாறு மடக்கி அகத்தே ஒருகுறியின்கணிறுத்தி
நிட்டைகூடும்படி அருச்செபத்தோதுமுறையில் வைத்துக்
கண்டு சிந்திக்கச் சிந்திக்க அஃது அந்நோக்கத்தைப் பற்றறக்
கெடுத்து ஞானசொரூபத்தை இனிது விளக்கிப் பூரணநிலை
யிற் கொண்டு செலுத்துமாகலின் இஃது நிட்டைக்குச் சிற
ந்தசாதனமாயிற்றென்பது

இந்துவிற் பானுவி லிராகுவைக் கண்டாங்குச்
சிந்தையிற் காணிற் சிவன்கழலும்—முந்தவே
காட்டாக்கிற் றென்றிக் கனலச்சே ரிரும்பென்ன
வாட்டானு மோதனுஞ் செழுத்து

எ-து உ-ம. எ-ன்ன. அங்ஙனம் ஒருகுறியின்கண்
வைத்தன்றி முதல்வனைக் காண்டல்செல்லாதவாறும் அவ்
வாறு கண்டவழி முதல்வன் தன்மாட்டு விளங்கித் தோன்று
மாறுந் தோன்றியவழித் தான் அம்முதல்வனுக்கடிமையாமா
றும் உவமையில்வைத்துணர்த்தி அதனை வலியுறுத்துதனுதலி
ற்று. இ - ள் இராகுவை இந்துவில் வானுவில் கண்டாங்கு.
எ-து. அந்தரத்தியங்கு நவக்கோள்களுள் ஏனையபோலக்
காணப்படாத இராகுகேதுக்களை உபராகத்திற் சந்திராதித்த

ர்மாட்டிக் கண்டாற்போல—சிந்தையில் காணில். எ-து. முப்பொருள்களுள் யானிதனை யறிந்தேன் அறிகின்றிலேன் என்னு முணர்விற்கு விடயமாகிய பசுபாசங்களோடொப்ப வேறுணரப்படாத முதல்வனைத் தன்னிதயபங்கயத்தின் அஞ்செழுத்தின் முறையினை வைத்துக் காணுமாயின்,—உத்தவே காட்டாக்கில் சிவன் தோன்றிக் கண் ஆம். எ-து. கோலை நட்டுக் கயிற்றினாற் சுற்றிக் கடையவே காட்டத்தினின்று அங்கி தோன்றுமாறுபோல அம்முதல்வன் ஆண்டுத்தோன்றி அறிவுக்கறிவாய் விளங்கி நிற்பன் —தான்கனல் சேர் இரும்பு என்ன ஆள் ஆம் எ-து அப்பொழுது தானும் எரிசேர்ந்த இரும்புபோலத் தனது சுதந்திரத்தை விட்டு அம்முதல்வனுக்கு அடிமையாம்—அஞ்செழுத்து ஓது எ-து. ஆகலான் அத்திருவஞ்செழுத்தை விதிப்படியோதுவாயாக. எ - று

கேது சாயாக்கிரகமாகலின், வேறு கூறுராயினார்.

கண் அறிவு.

தோன்றியாமெனவியையும்

உத்துதல் ஈண்டுக் கடைதன்மேற்று

காட்டாக்கி வடமொழிச்சிதைவு இகரம் விகாரத்தாற் றொக்கது.

இன் உவமவுருபு.

ஈண்டும் ஓதஞ்செழுத்து என்றது வலியுறுத்தவாறு.

மண்முத லுளமலர் வித்தை கலாரூப
மெண்ணிய வீசா சதாசிவமு—நண்ணிற்
கலையுருவா நாதமாஞ் சத்தியதன் கண்ணூ
நிலையதிலா மசிவன்றானோ.

எ-து. உ-ம். எ-னின். தத்துவ முப்பத்தாறற்கும் மேற் முதல்வனை இதயபங்கயத்திற்கண்டர்ச்சிக்குமாறு யாங்

னமென்பாரை நோக்கி அவ்விதயபங்கத்தினியல்புணர்த்தி அதனை வலியுறுத்துதனுதலிற்று இ-ள் நண்ணில. எ-து. அவ்விதயபங்கயத்தினியல்பை அறியப்புகின்—மண் முதல் நாளம். எ-து நிலமுதலிய இருபத்துநான்கு தத்துவமும் உந்தியினின்றெழுந்தோன்றி எண்விரலளவைத்தாயுள்ள நாளவடியாம்—வித்தை மலர் எ-து வித்தியாதத்துவங்களேழுஞ் சுத்தவித்தையுமென்னும் எட்டுத்தத்துவமும் எட்டிதழ்வடிவாம்—எண்ணிய ஈசர் சதாசிவமும் கலாருபம் எ-து அத்தத்துவங்களுக்கு மேலாகக் கருதப்பட்ட ஈசுரஞ் சதாசிவமென்னும் இரண்டுதத்துவமும் அறுபத்துநான்கெனப்படுங் கேசரவடிவாம்—சத்திகலை உருவாம் எ-து சத்திதத்துவம் அக்கேசரங்களுக்குள்ளாகிய பொகுட்டுவடிவாம்—நாதம் அதன் கண்ணும் எ-து சிவதத்துவம் அப்பொகுட்டிற் காணப்படும் ஐம்பத்தொரு வீசவடிவாய.—அதில் அச்சிவன் தாள் நிலையாம் எ-து ஆகலான் அவ்வியல்பிற்றுகிய இதயபங்கயத்தின் முப்பத்தாறு தத்துவமும் ஆசனமாகவுடைய அச்சிவனது சத்தி நிலைபெறும்—நேர். எ-து அதனையறிந்து திருவஞ்செழுத்தால் ஆச்சிப்பாயாக. எ-று

இதனானே *"அண்டபிண்டமவை சமமாதலால்" புறத்துக் காணப்படும் முப்பத்தாறு தத்துவமும் அகத்தினிற் குக்குமமாயுண்டென்பது காட்டி முதலவனுக்கு இந்நிலையே அந்நிலையெனத் தெளிவித்தவாறு.

வித்தையென்பது இரட்டுற மொழிதலான் அவ்வாறுரைக்கப்பட்டது. சிவஞானசித்தியில் †"மூட்டு மோகினி சுத்த

* கோயிற்புராணம், பதஞ்சலிச்சருக்கம். ௭௦ வலங்கைமான.

† சிவஞானசித்தி, சுபக்கம், ஒன்பதாஞ்சூத்திரம். ௯. காட்டுமிதய.

விததை மலரெட்டாய்'' என்புழி மோகினியென்றதூஉம் ஆகுபெயரான அதன்காரியமாய கலாதிகளின்மேனின்றது

இவ்வாறன்றி நிலமுதலிய முப்பததொருதத்துவமெனப் படும் எட்டுகொததும எணவிரனுளவடிவும், அசுததமாயாத ததுவம் நாளததுககும மலருககும நடுககணடமாகிய கிரநதி வடிவம அதறகுமேற சுததவிததையின வாமைமுதலியவெட் டும எட்டிதழ் வடிவுமாமென்றுரைபபாரும, முபபததொன்று ககுமேல அசுததமாயை கிரந்தியின் அதசசதனம சுததமாயை யாததுவசசதனம் அதற்குமேல ஈசுரததத்துவததில அனந்தன் முதலியவெட்டும் எட்டிதழவடிவம சதாசிவதததுவமொன் றுங கேசரவடிவமெனக கொணடு அதறகியையக கொணடு கூட்டி யுரைபபாரும, கலாரூபமென்றது பஞசகலைகளையென வும அஃதியாணடுங கூட்டியுரைககபபடுமெனவுங் கொணடு, மணமுதனுளமலரென்பதறகு மணணாகிய நிவிர்ததிகலாரூபம நாளமும, மணணைமுதலாகவுடைய ஏனையிருபத்துமூனறு ததுவமாகிய பிரதிட்டாகலாரூபம் மலருமாமெனவும, வித தையெணணிய வீசர் சதாசிவமுங கலையுருவமாமெனபதறகு விததியாதத்துவமாகிய விததியாகலாரூபங கலையெனபபடுங கேசரமுஞ சுததவிததையோடு கூடியெண்ணபபட்ட ஈசுரத ததுவஞ சதாசிவதததுவமாகிய சாந்திகலாரூபங கலைக்குள ளுருவெனப்படும பொருட்டுமாமெனவும, நாதமாஞசத்தி யத னகண்ணுமென்பதற்குச சிவததத்துவஞ சத்திததத்துவமாகிய சாநதியதீதகலாரூபம் பொருட்டினகணணாகிய வீசமாமென வும உரைப்பாருமுளர். இவையெலலாம அவ்வவ்வாகமபே தம பற்றிக்கொள்ளப்படும்.

கலை அறுபத்துநான்காகலான், அறுபத்துநான்காகிய கே சரங்களுக்குத் தொகைபற்றிக கூறப்படும் ஆகுபெயராயிற்று.

ஈசா ஆகுபெயர்

கலையுரு கலைகளுள்ளுருவென உள்ளுருபு விரித்துரைக்க.

அதில என்புழி அன் சாரியை விகாரத்தாற் றொககது.

இது நாளமுதலாக மேனோக்கிததோன்றும் உலகத்துக் கமலம்போலாது கணமுதலாகக கீழநோககித் தோன்றிய தோர் திப்பிய கமலமெனக கொள்க

சிவன்றுளதினிலையாமெனவே சிவன் சத்திகருமேலாய் நிறபன் என்பதூஉம பெறபபடும

மூன்றுமதிகரணமுடிந்தது

ஒன்பதாஞ்சூத்திரமுடிநதது.

சாதனவியன முற்றிற்று.

௨

# பயனியல்.

## பத்தாஞ்சூத்திரம்.

அவனே தானே யாகிய வந்நெறி
யேக னாகி யிறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே.

எ-து. சூ-ம் எ-னின. பாசக்ஷயம் பண்ணுமாறுணர்த்துதனுதலிற்று.

எ-து க-ரை. எ-னின் சூத்திரககருத்துணர்த்துதனுதலிற்று. இ-ள். மேல ஏழாஞ்சூத்திரமுதலிய மூன்றானும் முறையே சாதிககும் பொருளதியலபுஞ் சாதித்துப்பெறப்படுமே பொருளதியலபுஞ் சாதிககுமாறுமுணர்த்தி, இனி அச்சாதனத்தானாய பயனியலபு வகுத்துககூறுவானெடுத்துககொண்டார். அப்பயனாவது பாசவீடுஞ் சிவப்பேறுமென இருவகைப்படும். அவவிரண்டனுட் சுட்டுணர்வினாகிய ஏகதேச ஞானத்தைத் திருவஞ்செழுத்தினதுச்சரிப்பாற பற்றறத் துடைத்தவழிப் பெறப்படுவதாகிய மேலைச்சூத்திரத்தினெடுத்துககொண்ட ஆன்மசுத்திப் பயனாகிய பாசவிடுதியைச் செய்துகொள்ளுமாறு மேற்கிளந்தனை செய்தபொருளைத் தெளியுமாறுணர்த்துமு-த்தானுணர்த்துதல இப்பத்தாஞ்சூத்திரத்தின் கருத்து. எ - று.

இதனானே சூத்திரவியைபும் இனிது விளங்கு.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு. ஞானக்கண்ணாற் காணப்பட்ட அமமுதல்வன் தானுடனாய் நின்றறியவும் வேறு காணப்படுமாறின்றி யானேயறிகதேனென்னும்படி உயிர் தானேயாய் ஒற்றுமைப்பட்டு உயிரின்வழி நின்ற, அப்பேதத நிலைபோல் ஈண்டு உயிர் அமமுதலவனோடுடனாய நின்றறியினும தானென வேறு காணபபடுமாறின்றி அவனேடொறறு மைப்பட்டு அவவிறைபணியின் வழுவாது நிறபின, மலமாயை யென்னும் இரணடனோடு வலிய கனமமலமும் இலலையா யொழியும் எ - று

அவனே தானேயென்னும் ஏகாரமிரணடனுள முன்னை யது பிரிநிலைககணணும பின்னையது தேறறததினகணணும் வநதன.

நெறி உவமவுருபு

மலமாயையொடு கூடிய வினையென்ருராகலின் இன் றேயெனரா

உவமைக்கோதியது பொருளினும், பொருளுககோதி யது உவமையினுஞ் சென்றியைநதன

ஈண்டொறறுமைப்படுதலாவது, குடமுடைநதவழிக கு டாகாயமும ஆகாயமுமபோல ஒருபொருளாயொறறுமைபப டுதலோ, அன்றிக குற்றியை மகனெனபதுபோலத திரிவுகா ட்சியானெறறுமைப்படுதலோ, அனறி மணணே குடமெனப் துபோல ஒன்றுதிரிந்தொன்ருயொறறுமைப்படுதலோ, அன்றி வெள்ளையுந் தாமரையும்போலக குணகுணிததன்மையானொ ற்றுமைப்படுதலோ, அன்றித் தீயுமிரும்பும்போல ஒன்றினொ ன்று விரவுதலானெற்றுமைப்படுதலோ, அன்றிப பாலுநீரும் போலப் பிரிக்கப்படாத சையோகத்தானெற்றுமைபபடு தலோ, அன்றிக் கருடனு மாந்திரிகனும்போலப் பாவனைமாத்

திரையானொற்றுமைப்படுதலோ, அன்றிக் காய்ந்தவிரும்பினீர்போல ஒன்றினொன்றிலயமாயொற்றுமைப்படுதலோ, அன்றிப் பேயும் பேய்பிடியுண்டவனும்போல ஆவேசத்தானொற்றுமைப்படுதலோ, அன்றி இரத்தினத்தினொளிபோல விளங்காமையானொற்றுமைப்படுதலோ, அன்றி ஞாயிற்றினொளியின் விளக்கொளிபோலச் சத்தி கெட்டுநிற்றலானொற்றுமைப்படுதலோ, அன்றித் தலைவனுந் தலைவியும்போல இன்பநுகர்ச்சிமாத்திரையானொற்றுமைப்படுதலோ, அன்றி நட்டாருருவாபோல நட்புமிகுதியானொற்றுமைப்படுதலோ, அன்றி ஆவும் ஆமாவும்போல ஒப்புமைமாத்திரையானொற்றுமைப்படுதலோ என்று அவ்வச்சமயவாதிகள் மதம்பற்றி நிகழும் இன்னோரன்ன ஐயப்பாடுகளையெல்லாம் நீக்குதற்பொருட்டு, அவனேதானேயாகியவந்நெறியென உவமையெடுத்துக்காட்டியோதினார் ஈண்டுக்கூறிய ஒற்றுமைக்கட்படுமியைபாவதென்னையெனின் அது வருகின்றசூத்திரத்திற் பெறப்படும்.

இதனுள், அவனேதானேயாகியவந்நெறி யேகனாகியென்றது ஓரதிகரணம், இறைபணிநிற்க மலமாயைதன்னொடு வல்வினையின்றேயென்றது ஓரதிகரணம், ஆக இரண்டதிகரணத்தது இச்சூத்திரமென்றுணர்க.

## முதலதிகரணம்.

ஈண்டுப் பரமேசுரன் இவ்வான்மாவாய் நின்ற முறைமையான் அவனிடத்தேகனாகி நிற்கவென்றது.

எ-து மே-ன். எ-னின். ஞானம் பிரகாசித்து முதற்பொருளைக் காண்டன்மாத்திரையே வீடுபேற்றிற்கமையுமெனச் சிவசமவாதசைவர் முதலியோர் மதம்பற்றி நிகழுங் கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இ-ள். வெ-படை.

அவ்வாறு நிற்கவே யானெனதென்னுஞ் செருக்கற்று அவனது சிபாதத்தை யணையுமாகலான்.

எ-து எது எ-னின். அஃதெற்றுகெனபாரை நோக்கி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று. இ - ள். அநாதியேமொற்று மைப்பட்டுநின்றுலே யானும எனதும் எனப் பகுதத்து நிற்கும் மயக்கவுணர்விற் கேதுவாய மலநீங்கி அம்முதலவனது திருவ டியாகிய சிவானந்தத்தைப் பெறுமாகலான் அச்செருக்கற்றி கருக காரணமாதலபற்றி ஈண்டுப பரமேசுரன் இவ்வான்மா வாய் நின்ற முறைமையான் அவனிடத்து ஏகனாகிநிற்கவென மேற்கொண்டது எ - று.

அவ்வாறுநில்லாதவழி மலமற்று அஃதற்றவழிச சிபாத த்தையணைதல பெறப்படாதென்பார் நிற்கவேயெனத தேற் றேகாரத்தாற் கூறினா.

யானெனப்படுவது ஞாதிரு எனதெனப்படுவன ஞான ஞேயங்கள.

ஆற்றுவது பணிபினகிழமையும உணாச்சிககிழமையும பற்றி வந்தது.

ஒருமை தனித்தனிசென்றியையும்.

செருக்கு ஆகுபெயர்.

அற்றணையுமென்றது மழைபெய்து குளநிறையும் என்று றபோலக் காரணகாரியப்பொருளபற்றி வந்த செயவெனெச் சத திரிபு.

நானவனென் றெண்ணினர்க்கு நாடுமுள முண்டாத
ற்றெனவொன றின்றியே தானதுவாய—நானென
வொன், றில்லென்று தானே யெனுமவரைத தன்ன
டிவைத, தில்லென்று தானுமிறை.

எ-து. உ-ம. எ-னின். அங்ஙனம் பகுத்து நின்றுணருமுணர்வை மயக்கவுணர்வென்றதென்னையென்பாரை நோக்கி ஏதுவை வலியுறுத்ததனுதலிற்று இ-ள். நான் அவன் என்று எண்ணினாக்கு நாமும் உளம் உணடாதல தான் என ஒன்று இனறியே தான் அது ஆய் எ-து யானென்றும் அவனென்றும் ஞாதிரு ஞேயஙகளைப் பகுததுணர்நது நிற்பார்க்கும யானேயென நிறபார்க்குப்போல அவவாறெண்ணுகின்ற உயிருணர்வு முனைததுத தோனறுமாகலான், அவவழித தானென்றொருமுதல காணப்படுமாறின்றித தான் அவ்வுணாவேயாய்—நான என ஒனறு இல் என்று தானே எனுமவரைத தன் அடி வைதது இல எனறு தான் ஆம இறை எ-து. இனி யானென்றொருமுதல் காணப்படுமாறிலலையெனறுணர்ந்து முழுவதுந தானேயெனக் காணுந தெளிவுடையாரைத் தனது திருவடிவியாபகததுள் அடஙகி நிறகச்செயது அவ்வாறேயாவன் முதல்வன் எ-று.

ஆய் ஆம் எனவினையும். ஆயாமென்புழிச் செய்தெனெச்சம் "நள்ளார்க்கு நஞ்சொதது நட்டாாக கமிழ்தொகுமிவன்" என்றாறபோலத தன்வினையாத லுணர நின்றது.

நாமுமுளமுண்டாயவழித் தானிலனாதலும் அஃதில்வழித தானுளனாதலும் யாஙஙனம் பெறுதுமெனிற் காட்டுதும்:—தூலவொளியாகிய கணணொளியுஞ் சூக்குமவொளியாகிய விளக்கொளியும் அததுவிதமாயக் கலந்து நிறகுங்கால உற்று நோக்கவல்லார்க்குப் பிறித்தறிய வாராமையிற கண்ணொளியாக்காணுங்காற் காணுந்தன்மையே முனைத்துத் தோன்றுமாகலின் அவ்வழி விளக்கொளி இருந்தும் இலலைத்தானே, அன்றி விளக்கொளியாக் காணுஙகாற் காட்டுந்தன்மையே முனைத்துத் தோன்றுமாகலின் அவ்வழிக் கணணொளி இருந்தும் இல்லைத்தானே; இனிக் கணணொளியும் விளககொளியுமெனப் பகு

த்துக் காணப்புகினும் காணுந்தன்மையே முற்பட்டுத் தோன்றுதலின் அவ்வழி விளக்கொளியைத் திரிவு புலனாகக் காட்சிப்படுவதல்லது தெளிவுபுலனாக் காட்சிப்படுமாறில்லை. அதுபோலத் தூலவறிவாகிய உயிருஞ் சூக்குமவறிவாகிய சிவமும் அத்துவிதமாய்க் கலந்து நிற்கு நிலையும் பிறித்தறிய வாராமையின் ஆண்டும் இவ்வாறே கண்டுகொள்க.

எண்ணினர்க்குமென இறந்ததுதழீஇயவெச்சவும்மை சந்திநோக்கி மகரங் கெட்டுநின்றது.

இக்கருத்துப்பற்றியன்றே * "கண்ணொளி விளக்கின் சோதி கலந்திடுங் கருத்தொன்றன்றே" எ-ம். † "காண்பானுங் காட்டுவதுங் காண்பதுவு நீத்துணர்மை—காண்பாரார் கண்முத்தி காணார்கள்—காண்பானுங்—காட்டுவதுங் காண்பதுவுந் தன்கட்டங்கண்டு சம்பந்தன்—வாட்டுநெறி வாராதவர்." எ-ம் கூறினார் புடைநூலாசிரியரும். அற்றேல், இவ்விரண்டனுள் யாது திரிவுகாட்சி யாது தெளிவுகாட்சியெனின்—கண்ணொளியோடு கூடியவழியும் இது விளக்கொளி இது ஞாயிற்றொளி இது திங்களொளியென அவ்வப்பெற்றியவேயாய்க் காணப்படும் விளக்கொளி முதலியவற்றின் காட்சி தெளிவுகாட்சியெனவும், அவ்வொளிகளோடு கூடியவழி அவ்வாறொருபெற்றித்தாய்க் காணப்படாத கண்ணொளியை வேறு காண்டல் திரிவுகாட்சியெனவும் கண்கூடாக விளங்கிக் கிடத்தலின் இவ்வாறே பொருளினும் வைத்துணர்ந்துகொள்க. இவ்வாறன்றி, விளக்கொளிமுன்னர்க் கண்ணொளி சத்தி மடங்கிப்போதலின் அது விளக்கொளியைப்போலக் காட்சிப்புலனாகாதாயிற்றென்னுமோவெனின்; என்னும்: என்னை? கண்ணொளி சத்திமடங்கிற்றாயின் விளக்கொளி காட்சிப்புலனாதல் பிறிதொன்

* சிவப்பிரகாசம், உண்மை. அ. கண்ணொளிவிளக்களித்து. † வினாவெண்பா. கக.

ரூற் பெறப்படாமையின். அற்றேல், மின்மினித் துணையாயி
னுந் தானே விளங்கும் இயல்பில்லாத கண்ணுக்கு ஒளிக்கு
ணமுண்டென்பதற்குப் பிரமாணமென்னையெனின்,—அறி
யாது கடாயினாய். ஆகாயத்தின்கண்ணதாகிய சத்தகுணம்
வியஞ்சகத்தானன்றித் தினைத்துணையானுந் தானென விளங்
குமாறின்மையின் அதுபற்றி எதிரொலிவடிவாய அவ்வோ
சையை ஆகாயத்தின் குணமன்று வியஞ்சகப்பொருளின்
குணமென்பார் யாருமில்லை. அதுபோலக் கண்ணின்கண்ண
தாகிய ஒளியும் வியஞ்சகமுள்வழி விளங்கிஅல்வழி விளங்கா
மைமாத்திரையே பிறிதில்லையாகலான் அதனைக் கண்ணின்
குணமன்றென்றல் அறிவிலாதார் கூற்றேயாமெனவும், அக்க
ண்ணொளியாவது தன்னை விளக்குதற்குரிய வியஞ்சகப்பொ
ருள் ஏகதேசமாயின் ஏகதேசமாய்விளங்கியும் அது வியாபக
மாயின் வியாபகமாய் விளங்கியும் நிற்பதோரியல்பிற்றென
வும் உணர்க. அஃதங்ஙனமாக, "கண்ணொளி விளக்கின்
சோதி கலந்திடும்" என்றதற்குப் பிரமாணமெனை: ஒருவிட
யத்தின் வீழ்ந்த பலகண்ணொளிகட்குத் தம்முள் இயைபி
ல்லாதவாறுபோல ஒருவயிற்பட்ட கண்ணொளிவிளக்கொளி
கட்குந் தம்முள் இயைபில்லையென்றலே பொருத்தமுடைத்
துப்போலுமெனின்,—அஃதறியாதார் கூற்றேயாமென்றொ
ழிக. என்னை? ஒருவிடயத்தின் வீழ்ந்த கண்ணொளிகள் தம்
முள் ஒன்றனையொன்று காணுமாறுமில்லை காட்டுமாறுமில்லை
யாகலான் அவை தம்முட் கலத்தற்கு ஓரியைபின்றென்பது
ஒக்கும் அவ்வாறன்றிக் கண் விளக்கினைக் காண்டலும் விள
க்குக் கண்ணுக்குக் காட்டலுமாகிய இயைபுண்மையானும்,
இவ்வியைபு தம்முட் பெறப்படாத கண்ணொளி முதலாயின
ஈண்டைக்கு உவமையாதல் செல்லாமையானும், இந்திரியங்
கள் தத்தம்விடயத்தோடியைந்தன்றிச் சந்நிதிமாத்திரையான்

அவற்றையறிதல் செல்லாதென்பது ஆகமங்களுக்கெல்லாக் துணிபாகலானும் அத்தன்மையவாய கண்ணொளி விளக்கொளிகட்குத் தம்முட் கலப்பில்லையென்றல் காண்டல்விரோதமாகலின் இவ்வாறு உவமைக்கோதியனவெல்லாம் பொருட்கணுமாமாறுணர்ந்து உய்த்துரைத்துக்கொள்க. அஃதேல், ஈண்டெடுத்துக் காட்டிய கண்கள் தம்முள் ஒன்றனையொன்று காணுமாறின்மைபோல உயிர்களுந் தம்முள் ஒன்றனையொன்றறியுமாறில்லைபோலுமெனின், அறியாது கூறினாய்; கண்கள் தம்முள் ஒன்றுமொன்று காணப்படுமாறில்லையென்றது விளக்கும் விடயமுங் காணப்படுமாறுபோல வேறுவைத்துத் தனிப்பொருளாய்க் காணப்படுமாறில்லையென்ற துணையேயன்றிப் பிறிதின்மையின், விளக்கொளியைக் கண்காணுங்கால் அதுவதுவாய் நின்று காணும் பெற்றித்தாய்த் தன்னையும் அவ்விளக்கொளிவண்ணமாய்க் காண்டலுண்டென்பது கண்கூடாக அறியக்கிடத்தலின், ஏனைக்கண்களையும் அவ்வாறு காண்டலமையுமாகலான் அதுபோலத் தம்முட்டனித்தியைபில்லாத உயிர்களுஞ் சிவத்தோடியைந்து நின்று தம்மையும் பிறவுயிர்களையும் இவ்வாறுணர்தல் அமைவுடைமையானென்பது "நாடியரன்—றன்னாலே தன்னையுங் கண்டு தமைக்காணாரென்று மெனவறி வார்." எ-ம். * "தன்னாலே தன்னையறிந்தாற்—றன்னையுந் தானே காணுந் தானதுவாகி நின்றே." எ-ம். "அதி லறிவடங்கி—மன்னிட வியாபியாய வான்பயன்றோன்றும்" எ-ம். "என்னையுங் கண்டேன் பிறரையுங் கண்டே னின்னிலை யனைத்தையுங் கண்டேனென்னே—நின்னைக் காணு மாந்தர் தம்மையுங்காணுந் தன்மை யோரே"

---

* சிவப்பிரகாசம் உண்மை. ௨௨ தன்னறிவது.

எ-ம். பிறுண்டும் இவ்வாறேதும் அநுபவமுடைய தேசிகர் திருவாக்குககளானும இவ்வுண்மை யுணர்ந்துகொள்க.

முதலதிகாரணமுடிந்தது.

## இரண்டாமதிகரணம்.

இனி இறைபணி வழுவாது நிறகவென்றது.

எ-து. மே-ள். எ-னின் உடம்பு நிறகுஙகாறும் அது கொணட வினைபபயனும அதனையநுபவிததற்குத் துணைககாரணமாய் உடனிறகுமுயறசியும ஒருவாறறுனும் நீக்கலாகாமையின் அவை அவவழி யேகனுகி நிறறறகுத தடையாதலைக கடககுமாறிலலைபோலுமெனச சுததசைவரீருயினர் மதமபறறி நிகழுஙகடாவை யாசஙகித்துச சூததிரத்தின் இரணடாங் கூறறைக கணணழிததுரைதது மேறகோடனுதலிறறு. இ-ள. வெ-டை.

நிற்றலாவது சலியாது நிலைபெறுதலென்பார் வழுவாது நிறகவென்றா.

ஈணடிறைபணியென்றது யாதெனின்,—அஃது ஆசிரியர்தாமே முன்னர்தெரிததுரைககின்றமையின் இனிது விளக்கும்.

அவனருளாலல்லது ஒன்றையுஞ் செய்யானுகவே அஞ்ஞானகன்மம 'பிரவேசியா வாகலான.

எ-து. ஏது. எ-னின், ஏகனுகிநிற்றலேயமையும் இறைபணி நிற்றலெறறுகவென்பாரை நோககி மேற்கோளைச் சாதித்த னுதலிற்று. இ-ள் தன்செய்திக்கு முதல்வன் செய்தியை இன்றியமையாத ஆன்மாச் செய்வனவெல்லாம் அவனருளின்வழி நின்று செய்யுமாயின் மாயேயமுங் கன்மமும் ஏகனுகி நிற்றற்குத் தடையாய் வந்து தாக்கா ஆகலான், அவை தாக்கா

மைப்பொருட்டுச் செயயப்படுமுபாயமாதல்பற்றி இனி இறை பணி வழுவாது நிற்கவென மேற்கொண்டது. எ - று. அஞ்ஞான கன்மம உம்மைததொகை.

மலமின்றுதல மேற பெறப்பட்டமையின் ஈணடஞ்ஞானமென்றது மாயையின் காரியமாகிய மயககத்தையெனபது பெற்றும். உடம்பு நசிககுமளவும் அவை மாய்வனவனமையின அறுமென்னுது பிரவேசியாவெனருா.

நாமலல விந்திரிய நமவழியி னலலவழி
நாமலல நாமு மரனுடைமை—யாமெனனி
லெததனுவி னினறு மிறைபணியாக நிலலேவினை
முறசெயவினை யுநதருவான முனை.

எ-து உ-ம். எ-னின். உடமபொடு நிறபாா நுகாதற்கு வேணடபபடுமெ பிராரதததவினையும அதுபறறியேறும் ஆகாமியவினையும் ஒருதலையானுணமையின் இறைபணி நிறறலபறறி அவை பிரவேசியாவெனறல அமைவுடைததன்றுபோலுமெனபாரைநோககி ஏதுவை வலியுறுததுதனுதலிறறு இ - ள். இந்திரியம் நாம் அலல எ-து வினைகளை நுகாதறகும ஈட்டுதறகுங கருவியாகிய இநதிரியஙகள் மாயேயமாவனவனறி யாமாவனவல்ல—நம் வழியின் அலல எ-து அவை தொழிற்படுதலும் முதல்வன்வயததானன்றி நமவயததானலல—வழி நாம் அல்ல எ-து. வினைநிகழ்சசிககு வாயிலாகிய விடயாதிகளும் அவ்விநதிரியங்கள்போல மாயேயமாவனவன்றி யாமாவனவல்ல. அவை சேட்டித்தலும் முதல்வன்வயத்தனவன்றி நம்வயத்தனவல்ல—நாமும் அரன் உடைமை. எ-து. அடிற்றேடியையந்துநின்று வினைகளை யீட்டுதறகும் நுகர்தற்கும் வினைமுதலாகிய யாமும் ஞானசசெய்திகளை முதலவன் விளககியவழி விளங்கி அல்லுழி விளங்குமாறின்மையான் அம்மு

முதல்வன் வயத்தராவேமல்லது சுதந்திரராவேமல்லேம்—ஆம் என்னில். எ-து. என்றிங்ஙனம் பசுபாசங்களதியல்பை உள்ள வாறுணர்ந்து செய்வனவெல்லாம் அவனருளின்வழி நின்று செய்யுஞ் செயலாகக் கண்டுகொண்டிருப்பாராயின,—இறை பணியாகக்கு எத்தனுவின் நின்றும் வினை இல்லை எ-து. இவ வடிமைத் திறமுடையார் எவ்வுடம்பினின்று எவ்வினைகளைச் செய்யினும் அவர்க்கு அவை பந்தமாதலில்லை—முன் செய்வினையும தருவான் முன். எ-து அவ்வாகாமியவினையை அவிரூபாவமாய் உடன்கொண்டு வருவதாகிய பிராரத்தவினையுந் தன்னைக் கூட்டுவிக்கு முதல்வன் சந்நிதியின் உடனுழாயக் கழியும் எ-று

நம் வழியினல்லவென்பது வழியென்பதனோடு கூட்டியுரைத்துக்கொள்ளப்படும்

மகனன்று குற்றியென்றாற்போல அன்மைச்சொற்றழுவப்படும் பொருண்மேனின்றது. "அன்மைக் கிளவி வேறிடத் தானும" என்பதோத்தாகலின.

நின்றும் உம்மைசிறப்பு, ஏனையுமமைகள இறந்தது தழீஇயின

சஞ்சிதவினை தீக்கைசெயதமாத்திரையே எரிசேர்ந்த வித்துப்போலக் கெட்டொழிதலின ஈண்டு முற்செயவினையென்றது ஏறபுழிக்கோடலாற பிராரத்தவினை மேற்றாயிறறு.

தருதல் இடவழுவமைதி.

கழியுமென்பது சொல்லெச்சம் உடனுழாவென்பது அவாய்நிலையான் வந்தது

சார்ந்தாரைக் காத்த றலைவர் கடனாதல்
சார்ந்தாரைக் காத்துஞ்சலமிலனாய்ச—சார்ந்தடியார்

தாந்தானுச செயதுபிறர் தங்களவினை தானகொடுதத
லாயநதாமுன செயவினையு மாங்கு

எ-து. உ-ம் எ-னின். இறைபணியார்க்கு உளவாகிய முற்செய்வினை ஏனையோாகருப்போலன்றித தருவான்முன ருயொழியுமாயின அஙஙனம் இருவேறு வகைப்படச் செய யுமுதலவன் நடுவுநிலைமையினறிக் கோட்டமுடையனெனப பட்டு வழுவாம்போலுமென்பாரை நோக்கி வழுவன்மை கூறி அதனை வலியுறுததுதனுதலிறறு. இ-ள் சாாந்தாரைக் காததல தலைவர் கடன ஆதல சார்ந்தாரைக் காததும் எ-து. தமமாட்டு அடைககலமெனச சார்நதாரை அவர்க்கு வருமே ததனை நீககிக களைகணுய்நின்று காப்பது தலைமைக்குண முடையாராயினாககுக கடமையாகலான் முதலவன் ஏனை யோரையொழிததுத தனனைச சாாநதாரை அஙஙனம பாது காப்பானுகியும—சலம இலன் ஆய எ-து. அதுபறறிக கோட் டமுடையனல்லனுய—சார்நது அடியாா தாம் தான் ஆச செயது பிறா தஙகள வினை தான கொடுத்தல எ-து தன்னைச சாாந்து தனனடிததொழில் செயவாா தன்போல் ஆகாமியவி னைததொடககிலராகச் செயது பிறாககு வருமாகாமியவி னையை அவாககுக கொடுபபானுகலான,—ஆயநதார் முன் செய்வினையும் ஆங்கு எ-து அவ்விருதிறததோர் மாட்டும் நணுகி வந்து கூடுவதாய பிராரததவினையும அவ்வாறே செய் வோர் செய்திக்குத் தக்க பயனய் இருவேறுவகைப்படச் செய்வன். எ - று.

இறைபணியார்ககில்லை வினை முற்செய்வினையுந் தரு வான் முன்னென்றதுபறறி ஏனையோர்க்கு நியதி செய்தூட்டி இறைபணியார்ககு வினையின்றகச் செய்தல இறைவனுக்கு நடுவுநிலைமையன்றென்பாரை நோககி அதனை உடன்பட்டே அமைதிகூறிவாராய்ச சார்நதாரைக காத்தறலைவர் கடனெ

னப் பழமொழியெடுத்துக்காட்டி இஃதவ்வாறு நடுவன்மையு மன்றென வலியுறுத்துவார் சார்ந்தடியார் தாந்தாஞ்செய்து பிறர் தமக்கள் வினை தான் கொடுத்தலென வேறுவமையெடுத் துக்காட்டினார். சார்ந்தடியார் தாந்தாஞ்செய்து பிறர் தமகள் வினைதான் கொடுத்தலுணடெனபதூஉம், அது கோட்டமி னறு நடுவு நிலைமையே யாமெனபதூஉம ஏனைச் சமயத்தாாக கும ஒபபமுடிந்தமையின, அஃதிண்டைக் குவமையாயிறறு.

உம்மை சிறப்பின்கண் வந்தது.

சலம் வஞ்சனை; அஃது ஈண்டுக் கோட்டத்தின்மேனி ன்றது.

சார்ந்தென்னும் வினையெச்சம் அடியாரென்னும வினை க்குறிப்புமுற்றுபபெயா கொண்டது சார்ந்தவென்னும பெய ரெச்சத்தகரந் திரிந்துமுடிந்ததெனினுமமையும்.

பின்வந்த தாமுந் தானும அசை.

ஆதல் கொடுத்தலெனபுழி ஆனுருபு விரித்துரைகக

தாஞ்சசெய்தென்புழி ஆக்கம் உவமவுருபினபொருள் குறித்துநின்றது.

பிராரத்தவினை அதிருக்குமமாய் வருவதாகலின அதனி யல்பறிதல அரிதென்பாா ஆய்ந்தார் முன் செயவினையு மென்றார்.

உமமை இறந்தது தழீஇயிற்று

ஆர் வினைத்தொகை. ஆய்தல அப்பொருட்டாதல் மேற் காட்டிறும.

இக்குளி வாங்குங் கலம்போல ஞானிபான் [வினை
முன்செய வினைமாயை மூணடிடினும்—பின்செயவி

மாயையுட னில்லாது மற்றவன்றான் மெய்ப்பொரு
யாயவத னூரு மச்சு. [ளே

எ-து உ-ம். எ-னின இறைபணி நிற்பார்க்குப் பிராரத்த தவினை தாக்குதலுண்டென்பதற்குத "தினைத்துணையேனும் பொறேன் றுயராக்கையினை நினைவிலையே" என்றற்றொடக் கத்தான் அவர் கூறுந் திருவாக்குகளே சான்றாகலின், அஃத வர்க்குச் செயவோர்செய்திப் பயனு மொழியுமென்றல் அமை யாமையின் அஃதுண்டாகவே அதுபற்றி நிகழும ஆகாமிய மும பிறவிக்கு வித்தாய நிலைபெறுதலுண்டுபோலுமென்பாரை நோக்கி ஆண்டுப் பிராரத்தவினை தாக்குதற கேதுக கூறி அது பறறிச செயவோர் செய்திபபயனுமொழிதற்கு இழுக்கிலலை யென வலியுறுததுதனுதலிறறு இ-ள. இங்குளி வாங்கும கலமபோல. எ-து தனபால் வைததெடுக்கபபட்டொழிந்த பெருங்காயததினினறும் அதன்வாசத்தை வாங்கிக்கொள ளும பாசனததிலங்கள அவ்வாசம மங்கிபபோய் மெலிதாயக கந்திக்குமாறுபோல—ஞானிபால் முன் செய் வினை மாயை மூணடிடினும. எ-து இறை பணி நிறகுந தத்துவஞானிக குப் பயிற்சிவயததான் ஒரோவழி நாடுமுள முணடாதலும் உணமையின அதுபறறிப பிராரததவினையும அதறகுவாயிலா கிய உடமபுமுதலிய மாயேயமும் மங்கிபபோய வாசனைமாத திரையாய மெலிதாய வந்து மூளுமாயினும—பின்செய வினை மாயையுடன நிலலாது. எ-து. அமமூட்சிபற்றி ஒருதலையா னிகழுவதாகிய ஆகாமியவினை மேலைக்குவித்தாய் நிலைபெறறு முறுகுதலின்றித தனக்கு வாயிலாகிய மாயேயத்தோடு கெட் டொழியும்—அவன தான மெய்ப்பொருளே ஆயவதனால் மறறு அச்சு ஊரும். எ-து. இறை பணி நிற்கும் அவன் சத்தா யுள்ள சிவமேயாயவாற்றால ஒரோவழி அவ்வாசனைபற்றிப்

பிறழுவரினும் பிறழவொட்டாது அவ்வச்சினையே நோக்கிநி
பனுகலான். எ - று.

ஒளி இருளைத் துரக்குமாறுபோல அவ்வுணர்வு அவ்வ
காமியத்தைத் துரக்குமென்பதாம் *"தொலலையில் வருத
போத தோன்றிரு வினையதுண்டே—லல்லொளி புரை
ஞானத் தழலுற வழிந்துபோமே" எனப் புடைநூலாசி
யரோதியதூஉம் அது.

உளி ஐந்தாம்வேற்றுமையுருபுபட நின்றது "மந்தி
விதியின் மரபுளி வழாஅ—வந்தணர் வேள்வி" என்று
போல முற்றுகரகேடு இலேசாற்கொளக.

வாவகுதற்குச செயப்படுபொருள் அவாயநிலையாக
வ ந்தது.

மூணடிடினுமெனவே, மூளுதல ஒருதலையன்றென்பது
பெறறும.

மாயை ஆகுபெயர்

மறறு வினைமாற்றின்கண் வநதது.

தானென்பது அறுவதிததறகண வநத இடைசசொல்

பிறழுவிடாமைபற்றி மெயப்பொருளை அசசாக உருவகஞ்
செய்தார.

நண்ணனல் வேவாத நறறவா தமமினும
பண்ணமர மாசசெலுததும பாகரினு—மெண்ணி
யரனடி யோர்பவ ரைமபுலனிற் செனறு
மவர்திற நீங்கா ரதறகு.

* சிவப்பிரகாசம் உணமை. நகூ. எலலையிலபிறவி.

எ-து உ-ம் எ-னின். முன் செய்வினை மாயை மூண்ட வழியும் அந்நிலையிற் பிறழாத அவ்வச்சினையே யுணர்ந்து நிற்றல் யாங்ஙனமெனப் பாரா நோக்கி உவமைமுகத்தான் அதனை வலியுறுத்துதனுதலிற்று. இ-ள் நண் அனல் வேவாது நற்றவா தம்மினும் பண் அமர் மாச் செலுத்தும் பாகரினும் எ-து. அங்கித்தம்பனத்தால் நண்ணனல் வேவாமைக்கேதுவாகிய நற்றவமுடையார் அவ்வனலூட கிடப்பினுந் தந்திறனினீங்காதவாறுபோலவும் பண்ணுதலமரப் பரிமாவூர்தற்குரிய பாகரூ.ப கற்றவல்லார் அப்பரிமாவின் வேகத்துட்படினுந் தந்திறனினீங்காதவாறுபோலவும்—எண்ணி அரன் அடி ஓர்பவர் எ-து ஐம்புலன்களில் அகப்படாமைக்கு உபாயம் யாதென்றெண்ணி முதல்வன்றிருவடியாகிய அசைசயுணர்வல்லார்—ஐம்புலனிற் சென்றும் அதற்கு அவர் திறன் நீங்கார் எ-து. முன் செய்வினை மாயை மூட்டிப்பற்றி ஐவகைப்பட்ட விடயங்களிற் சென்றாராயினும் அதனால் அவர் தந்திறலிற்றீர்ந்து பந்தத்தொடக்குறுவாரல்லர் எ-று

பொருள்வினை உவமையினுஞ் சென்றியைந்தது

நண்ணனல் கீழ்நீர்போல முன்பின்றாகத் தொக்க அறுமவேற்றுமைத்தொகை நள்ளனல் நண்ணனலென மரீஇயிற்று, *"நீறுலகெலாம்" என்றாற்போல தம்மால் நண்ணப்படும் அனலென்றுரைப்பினுமமையும்

பண்ணுதல் கதிப்பித்தல்

இன்னிரண்டும் உவமவுருபுகள்

உம்மை எண்ணும்மை. சென்றுமென்னுமும்மை சிறப்பு.

அதற்கென்பது உருபுமயக்கம்

---

* திருநாவுக்கரசுநாயனார் கோயிற்குறுந்தொகை ௪

சத்தசத்தாம் மெய்கண்டான் சத்தருளிற் காணி
னித்தமித்தல் பாசத்தி லின்றிக—கத்தமிக்
கெரிகதிரின் முன்னிருள்போ லேலா வசத்தி
னருகணையார் சத்தணைவ ராங்கு

எ-து. உ-ம். எ-ளின். சார்ந்ததன் வண்ணமாய சத்தசத்தெனப்படுமியல்புடையார் அரனடியோரினும் ஐம்புலனிற் சென்றழி அவற்றிற் றொடக்குண்ணுந் திறனுடையராதல் யாங்ஙனமென்பாரை நோக்கிச் சார்ச்சிகைப்படும் விசேடங் கூறி அதனை வலியுறுத்துதனுதலிற்று. இ-ள். சத்தசத்து ஆம் மெய்கண்டான் சத்து அருளிற் காணின் எ-து தன்னாற் சாரப்படுவனவாகிய சத்தினும் அசத்தினும் அதுவதுவாதல்பற்றிச் சத்தசத்தென்னுந் தன்னுண்மையையுணர்ந்தோன் சத்தாகிய முதல்வன் றிருவருளாலல்லது ஒன்றையுங் காணானாய் அவ்வருளின்வழி நின்று காணுமாயின்—பாசத்தில் இத்தமித்தல் இன்றி எ-து அவ்வழிப் பாசமாகிய அசத்தினை இதஞ்செய்தலின்மையால்—சத்து அணைவார் சத்தம் மிக்கு எரி கதிரின் முன் இருள்போல ஆங்கு ஏலா அசத்தின் அருகு அணையார் எ-து சத்தாகிய முதல்வனைத் தலைப்பட்டு நிற்பார் சீற்றமிக்கெரியாநின்ற சுடரின்முன்னர் அந்தகாரம்போலச் சத்தெதிர் தனது சத்தியேற்கமாட்டாத அசத்தாய ஐம்புலனின்மாட்டெய்தி நிற்பரல்லர் எ-று.

வேறுமுடிபாகலின் ஒருமைப்பன்மைமயக்கமின்மையுணர்க.

அருளினென்னும் இன்னுருபு ஏதுப்பொருட்கண் வந்தது.

இத்தமித்தல் பெயரடியிற் பிறந்த வினைப்பெயர். இதஞ்செய்தல் பற்றுச்செய்தல்.

இன்றியென்னுஞ் செயவெனெசசக்குறிப்புக் காரணப் பொருட்டாயநின்றது.

இன்மைககேதுக்கூறுவார் கதமிககெரிகதிரின் முன்னிருள்போ லேலா வசததென்றார் கதமிககெரிகதிரெனறது ஒபபுமைபறறிய உபசாரவழககு "எலலை யிலலவ னெரிதுளளி னுலென வெகுணடான" என்பதனுனும ஒபபுமையாதலுணாக

இதனற போந்தது, சததும அசததுந தம்முட சமமலலவாகலான அரனடியோாபவா ஐமபுலனிற செனறாலும அது பறறி, அவா திறனீஙகாரென மேலது வலியுறுததவாறுமெனக.

ஏகனுகிநிறறலான் மலமினறாதலும இறைபணிநிறறலான மாயைவினைகளிலவாதலும பெறபபடடமையின, மலமாயை தனனெடு வலவினையினறே யெனபதனை வேறோரதிகரணமாக வைததோதாராயினா.

இரண்டாமதிகரணமுடிநதது

பத்தாஞ்சூத்திரமுடிந்தது.

# பதினொராஞ்சூத்திரம்

காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போற்
காணவுள் ளத்தைக் கண்டு காட்டலி
னயரா வன்பி னரன்கழல் செலுமே.

எ-து.ரு-ம். எ-னின் பரமேசுரனது சீபாதங்களை யினையுமா றுணாததுதனுதலிறறு.

எ-து க-ரை எ-னின். சூத்திரக்கருத்துணர்த்துதனுதலிற்று இ-ள் அங்ஙனம் ஏகனாகியிறைபணிநிற்பார்க்கு அறிவிச்சைசெயல்கள் விடயித்தற்குரியதோரியைபு ஆணவப்பெறப்படாமையின் விடயமாவதொன்றில்லைபோலும் என்னும் வாதிகளை நோக்கி விடயித்தலில்வழி ஆணவப்புத்தாக்கூறுமாலயவிஞ்ஞானம்போலச் சூனியமாமெனப்படுக் குணஞ்சூனியமாகவே குணியுஞ்சூனியமாய முடியுமாகலான் அஃதேலாமையின் ஆணவமவை யியைபுபற்றி விடயிக்குமாறுணர்த்தி முகத்தானே பயனிரண்டனுள் முடிவா யெஞ்சிநின்ற சிவப்பேறு கூறுதலாய சிட்டையினியல்புணர்த்துதல் இப்பதினொராஞ்சூத்திரத்தின் கருத்து. எ-று

இதனானே, சூத்திரவியைபும் இனிது விளங்கும்.

அற்றேல், ஏகனாகியிறைபணிநின்றார்க்கு இனிச் செய்யக்கடவதொன்றின்மையானும், இருணீக்கமும் ஒளிவிளக்கமும் உடனிகழ்ச்சியாயவாறுபோலப் பசுத்துவநீக்கமுஞ் சிவத்துவவிளக்கமும் இடையீடின்றி உடனிகழ்வனவாகலின் வேறொன்று வேண்டாமையானும், நூற்றுணிபுடைச் சுவாநுபூதியாகிய சிவப்பேற்றைப் பத்தாஞ்சூத்திரத்துட் பாசநீக்கத்தோடு ஒருங்குவைத்தே யோதலானும் அதனையினிப் வேறுவைத்தோதல் அமையாதுபோலுமெனின்,—அறியாது கடாயினாய் ஏகனாகியிறைபணி நிற்பது துரியநிலைக்கண்ணதாகிய அருணிலையேயாகலின் ஆணவமலநீங்கிய துணையானே சுகப்பிரமைமாத்திரையே விளங்குவதன்றி அதீதநிலைக்கண்ணதாகிய சிவத்துவவிளக்கமெனப்படும் பரமசுகம் விளங்காமையின் அது விளங்குதல் அவனருளாலல்லதொன்றையுஞ் செய்யாமைமாத்திரையால் அமையாமையின் அதற்கு வேறுமொன்றுசெய்யக்கடவதுண்டென்பது தானே போதருதலானும், இருணீக்கத்தின் ஒளிவிளக்கம்போலப் பசுத்துவநீக்கத்தின்

அருள்விளக்கமாத்திரையேயன்றி ஆனந்தவிளக்கமும் உடனிகழாமையானும், அவவிரண்டறகும் வேறுபாடு முனனாக காட்டபபடுமோகலானும். முதனூலிற பாசக்ஷயம பணணுமாறுணர்த்தியவழிப் பாசநீககமாததிரையே முததியெனககொணட வாதிகளை மறுததறபொருட்டுப் பாசநீககமபெறறோன சுவாநுபூதியுடையவனாவெனனப பதினொராஞசூததிரஞசெய்தறகுந தோறறுவாயாகததனையே பததாஞசூததிரததிற செய்துவைததுச சுவாநுபூதிநிகழசசிககண ஒதறபாலனவெலலாம பதினொராஞசூததிரத்துட் கூறுதலின் ஒன்பதாஞசூததிரத்தின எடுத்துககொணட ஆன்மசுததி பணணுமாறு பததாஞசூததிரததிற சென்றியைந்து முறறுப்பெறறாறபோலப் பததாஞசூததிரததின் எடுததுககொணட சுவாநுபூதிநிலை பதினொராஞசூததிரததிற சென்றியைந்து முறறுப்பெறுதலான அதன்கண மலையாமைபபொருட்டு ஆசிரியா சுவாநுபூதிமானாவெனனபதனையும் அரன்கழலசெலுமெனப பதினொராஞசூததிரததாலே ஒருஙகுவைததோதினாராகலின அது மாறன்மையானும், அவவாறின்றி மொழிபெயர்ததல யாப்பால நூலசெயதுரைப்பான் புகுந்த ஆசிரியா வேறுபடச செய்துரையாராகலானுமென்பது இதனானே, முதனூலிற சுவாநுபூதிமானெனன வாளாகூறியதனைப் பதினொராஞசூததிரததுப் பத்திசெயகவென்றதன் பின்னாகக கொணடுகூட்டி வைத்துரைத்தலே அதன்கருததென்பதூஉம,பெறப்பட்டது அறறாகலினன்றே, பததாஞசூததிரம பாசக்ஷயம்பணணுமாறுணாததிறறெனவும, பதினொராஞசூததிரம் பரமசிவனது சீபாதங்களையடையுமாறுணர்த்திற்றெனவுங கருததுரைசெய்ததூஉமென்க. இஃதறியாதார் தததமககு வேண்டியவாறேயுரைப்ப.

இச்சூத்திரததின் பிண்டப்பொழிப்பு. காட்டக் காணுந் தன்மையுடைய கண உருவததைக் காணும்படி அததனொடொ

ருவங்கியைந்து நின்று காட்டி அவ்வுருவத்தைக் காண்கின்ற ஆன்மாப்போல அறிவிக்க அறியுமியல்பையுடைய அவ்வான்மா விடயத்தையறியும்படி முதல்வன் அதனோடியைந்து நின்று அறிவித்து அறிந்து வருதலான் அவ்வத்துவிதநிலையை மறவாது கடைப்பிடித்துச் செய்யும் அன்பானே அம்முதல்வன் திருவடியாகிய சிவானந்தாநுபூதியைத் தலைப்படும் எ-று.

காணுமெனனும் உவமையடை பொருளினும், கண்டென்னும் பொருளவினை உவமையினும் சென்றியைந்தன காணுமெனபதனை ஈரிடத்துங் கூட்டுக

"வியாதது வெருளாா விழுமியோர்" எனபதுபோலக் கண்டு காட்டலென்பது மாறிவைத்துரைக்கப்பட்டது.

இக்கருத்ததுநோக்கியன்றே, இதனைவிரித்துக் கூறுவான் புகுந்த வழிநூலாசிரியர் * "காட்டிக்கண் டிடுமா போலக் காட்டிக் கண்டிடுவன்" என்றதூஉமென்க

அயராமைக்குச் செயப்படுபொருள் அதனையென்றெடுத்துக்கொள்க அயராவன்பென்றது அயராமையானாகிய அன்பென "ஆறுசென்ற வியர்" போல நின்றது அது †"இதனை யாயு மறிவுடையனாயன்புசெய்ய" என வழிநூலாசிரியர் கூறியதனானுமுணர்க.

உள்ளத்தையென்பது உருபுமயக்கம்.

அறிவிச்சைசெயல்களினிகழ்ச்சியாகிய அயராமையும் அன்பும் செலவும் முறையே காரணகாரியங்களாய் அவ்வொருபொருண்மேல ஒருங்கு நிகழுமென்பார் அயராவன்பினரன்கழல்செலுமேயென்றார்.

---

* சிவஞானசித்தி, பதினொராஞ்சூத்திரம். க. காய மொழி † ,, ,, க.

இஃதென்சொல்லியவாறோவெனின்,—உயிரையின்றியமையாதகண் உருவத்தைக் காணுங்கால் உயிரினதுணர்வு கண்ணொளியெனத் தானென வேற்றுமையின்றி உடனாய் விரவி நின்று கண்ணுக்குக் காட்டியவதனைக் கண்கண்டதென்றுங் கண்ணையதிட்டித்து நின்ற உயிர் கண்டதென்றும் பகுத்தறிய வாராது இரண்டன் காட்சியும் ஒன்றனையொன்று விடாது அத்துவிதமாகி ஒருங்கே நிகழுமாறுபோல, முதல்வனையின்றியமையாத உயிர் ஒருவிடயத்தை யறியுங்காலும் முதல்வனது சிற்சத்தி ஆன்மசிற்சத்தியெனத் தானென வேற்றுமையின்றி உடனாய் விரவி நிற்ப முதல்வனும் அவ்வாறு விரவி நின்று ஆன்மாவிற்கு அறிவித்ததென்றனை அவ்வான்மா அறிந்ததென்றும், அதனையதிட்டித்து நின்ற தானறிந்தானென்றும் பகுத்தறிய வாராது இருவகையறிவும் ஒன்றனையொன்று விடாது அத்துவிதமாய் ஒருங்கே நிகழுமாறு செய்தருளும் இவ்வுபகாரம் பெத்தமுத்தியிரண்டினும் ஒருபெற்றித்தாய உண்மையின் ஏகனாகியிறைபணிநிற்குமுயிர் முதல்வன் அங்ஙனம் அத்துவிதமாய் உபகரித்து நிற்குமுரிமையை நோக்குமாயின் நோக்குந்தோறும் நோக்குந்தோறும் அப்பொருட்கட் செல்லுமிச்சை அடங்காது மீதூருமாகலின் அவ்வழி அவ்விச்சையே தானாகவிளங்கித் தோன்றும் பேரானந்தத்தை அநுபவிக்கப்படுமென அறிவிச்சைசெயல்கள் மூன்றுங்கண்டு விடயிக்குமாறுணர்த்தி அதீதநிலையியல்பு கூறியவாறுமென்க. அத்துவிதமாவது பேதப்பொருளிரண்டு தம்முள் அபேதமாதற்குரிய சம்பந்தவிசேடம். இக்கருத்தேபற்றி *"அறிவொளி போற் பிறிவருமத்துவிதம்" என்றார் புடைநூலாசிரியரும். அங்கியும் ஒன்றிற் றங்கிநின்றல்லது தன்றொழிலுடைத்தாதாகலின், அதுபோல முதல்வனும் உயிரையதிட்டித்து நின்று

*சிவப்பிரகாசம், பாயிரம். எ. புறச்சமயத்தவர்.

எத்தொழிலுஞ் செய்வனென்றுணர்க. உயிர் ஒன்றனையறிதல் முதலவன் உடனின்றறிதலேயின்றி அறிவித்தன்மாத்திரையான் அமையாதென்பது * "தொண்டனேனினையுமாறினையே" "விரும்புமாவிரும்பே" "தொடருமாதொடரே" "நுகருமாநுகரே" என்றிவ்வாறு முத்திநிலைபற்றியோதிய திருவாசகங்களானுமறிக. இவ்வியல்புநோக்கியன்றே "அறிவானுந் தானே யறிவிப்பானுந் தானே" என்றோதிய அம்மை † "அறிவாயறிகின்றானே" எனவுமோதியதூஉமென்க. முன்னறிதல் அறிவித்தற்பொருட்டெனவும் பின் அறிவாயறிதல் விடயத்தில் அழுந்துவித்தற்பொருட்டெனவுங் கொள்க. இதனையீண்டு வைத்தார் அத்துவிதநிலை இனிது விளங்குதற்கு.

இவ்வாறன்றிக் காணுங் கண்ணுக்குக் காட்டுமுள்ளம் போற் காணவுள்ளத்தைக் கண்டு காட்டலென்பதற்குக் காட்டுமுபகாரமுணர்த்தன் மாத்திரையே கருத்தென்றுரைப்பாருமுளர். இதனைக் கண்ணொழித்துரைப்புழி அவனும் அவற்றது விடயத்தையுணருமெனக் காணுமுபகாரமாத்திரையே எடுத்துக்கொண்டுரைத்த ஆசிரியர் கருத்தன்றாகலானும், காணுமுபகாரங் காட்டுமுபகாரத்தின் பின்னர்த்தாய் நிகழுமென்பது உணர்ந்துகோடற்பொருட்டு அதுவும் உடன்கூறப்பட்டதன்றி வேறின்மையானும், அவ்வாறன்றென்பார்க்கு ஐந்தாஞ் சூத்திரத்துட் பெறப்பட்டதனை ஈண்டுக் கூறுதல் புநருத்தியாய் முடியுமாகலானும், அவருரைப்பனவெல்லாம் போலியுரையென்றொழிக. அற்றேல், முதனூலிற் பதினொராஞ் சூத்திரத்துட் காட்டுவனென்பது மாத்திரையேயன்றிக் காண்பனென்பது கூறிற்றிலையாலெனின்;—அறியாது வினவி

---

திருமாளிகைத்தேவர் திருவிசைப்பா, கோயில். ௧௧ ௧௦, ௯. ௭.

† காரைக்காலம்மையார், அற்புதத்திருவந்தாதி. ௨௦.

னாய் ஆண்டுக் காட்டுவானுமென்றவும்மை காண்பானுமாமென எதிரது தழீஇநிற்றலின், கூறாமை யானடையதென்றொழிக அவ்வும்மைக்குப் பொருள் காணமாட்டாதார் பாடம் வேறாக ஓதுப.

இதனுள், காணுங்கண்ணுக்குக் காட்டுமுளம்போற் காண உள்ளத்தைக் கண்டு காட்டலென்றது ஓரதிகரணம், அதனையயராவன்பி னரன்கழல் செலுமேயென்றது ஓரதிகரணம்; ஆக இரண்டதிகரணத்தது இச்சூத்திரமென்றுணர்க.

## முதலதிகரணம்.

ஈண்டு அவனும் அவற்றது விடயத்தை யுணருமென்றது

எ-து. மே-ள் எ-னின் முதல்வன் உயிர்க்குக் காட்டு முபகாரமாத்திரையே யுள்ளதெனினும் வாதிகளை நோக்கி அத்துவித நிலையுணர்த்துதற் கெடுத்துக்கொண்ட சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இ-ள் முதல்வனும் உயிர்களானுணரப்படும் விடயத்தை உடனின்றுணருவன் எ-று.

உம்மை உயிர்களுணர்தலேயன்றியென இறந்தது தழீஇயிற்று.

இஃதறியாதார் ஈண்டுணருமென்றது அறிவித்தற்கேதுவாயறியுமென்றுரைப்பாருமுளர் அவ்வாறுரைப்பிற் சித்தசாதனமாமாகலானும், ஈண்டைக்கியைபின்மையானும் அதுபோலியென்றொழிக.

அவையே தானேயாயெனவும் தாந்தமுணர்வின்றமியருளெனவும் மேற்பொதுவகையாற் கூறிப்போந்த அத்துவிதத்தை ஈண்டுக் காணுமுபகாரத்தின் வைத்துணர்த்தி இனிது விளக்கியவாறு.

இவ்வான்மாககள் அவனையின்றியமைந்து ஒன்றையும விடயியாவாகலான.

எ-து ஏது எ-னின் கண சடமாகலானும் காண்டற்ப யன் உயிரககேயாகலானும கண காணபுழி உயிரும உடனி னறு காணடல பெறப்படும கணபோல உயிர் சடமன்மையா னும உணர்தறபயன் உயிரககேயாகலானும அதனையெடுதது ககாட்டி அவனும அவறறது விடயததையுணருமென்றல அமையாதென்பாரைநோககி மேறகோளைச சாதிததனுதலி றறு இ-ள. விளககொளி கணணொளியோடு கலநது கண ணொளியோடு கூட உருவததினுங கலநதாலனறி அஃதவ்வுரு வததைக காணடலின்றியவாறுபோல அறிவிககவறியும இய லபினவாய உயிாகளும முதலவனறுணாவு தமமோடு விரவி நின்று தமமோடு கூடசசென்று விடயததினும விரவிநின்றால அறிவு விளஙகி அதனையறியும இயல்பினவனறித தனிததமை யவுமாட்டா தனிதடதான்றனை விடயிககவுமாட்டாவாகலான் அறிவு விளஙகுதன்மாததிரைககேயனறி விடயததைப்பறறுத றகணணும் முதலவன் உடனின்றறிதல ஒருதலையான வேண டப்படுதலான ஈணடு அவனும அவறறது விடயததையுணரு மென மேறகொண்டது. எ-று.

அவனையின்றியமையாமையிற் காட்டுமுபகாரம் விளங்கி ஹற்போல அவனையின்றி ஒன்றையும் விடயியாமையிற் காணு முபகாரமும் இனிது விளங்குமெனபார் அவனையின்றியமை நதொன்றையும விடயியாவாகலானென்றார்

அமைந்து விடயியாவென்றதனைக "கந்தித்துச சுழலும்" என்றாற்போலககொள்க,

உம்மை முற்றும்மை.

விடயியா என்றது பெயரடியிற பிறநத எதிர்மறைவினை. "எவவிடததது மிறையடியை யின்றியமைந தொன்றை யறிநதியறறி யிடாவுயிாக ளீசன ருனுரு—செவ்விதினி னுளம்புகுநது செயதியெலா முணாந்து சேடடிபபித தெஙகுமாயச செறிநது நிற்ப—னிவவுயிர்க டோற்றுமபோ தவனையினறித தோற்ரு விவறறினுககம முதலெழுததுக கெல்லாமாய் நிற்கு—மவ்வுயிாபோ லினறிவெ ஞுத லாஞு மரனடியை யக னறுநிறப தெஙகே யாமே" என வழிநூலாசிரியர் இதனை விரித்தோதியவாறுமுணாக எவவிடததுமெனறது பெதமுததியிரணடினு மென்பதாம இதனுள, 'இறையடியை யினறியமைந தொனறையறிந தியற்றிடாவுயிாகள' எனவும, 'ஈசனருனெஙகுமாயச செறிநது நிறபன' எனவுங கூறியது விடயததினகட்படு நிகழசசிககெனவும, 'இவவுயிாகடோறறும்போதவனையினறித தோறரு' எனவும 'அவவுயிாபோனினறிடுவன' எனவுங கூறியது உயிரினகட்படு நிகழசசிககெனவுங கொளக. அவவாறு கொளளாககால இருகாறகூறுதல புனருததியாயமுடியுமெனறொழிக இனி விளககொளி கலததலானிடத்தும் வேணடபபடுமெனபதூஉம, "விளககொளிகலந் தவறறை" எ-ம * "விளககினசோதி கலநதிடும" எ-ம் புடைநூலாசிரியர் வகுததோதியவாறறுனுணாக. அஃதஙஙனமாக, பாமுததியில் உயிாககு விடயமாவது ஒனறின்மையின் வழிநூலாசிரியா எவ்விடததுமெனறது அமையுமாறெனனையெனின,—அறியாதுகூறினுய † "சுததவநு போகததைதது யததலனு" எ-ம ० "ஒனறினை றுணாரு முண்மை." எ-ம. பிறுணடும இவ்வாறே யோதுப வாகலின, பாமுததியில

* சிவஞானசிததி, சுபககம, பதினொராஞ்சூததிரம எ.

† சிவபபிரகாசம, உணமை. அ கணெறுளி.

‡ உணமைவிளக்கம ருக. முததிநிலை.

० சிவப்பிரகாசம, உணமை. நஎ. ஒன்றிரண்டாகி.

ஆறுருபு உடனிகழ்ச்சிப்பொருட்கண் வந்தது. ஓகாரம் எதிர்மறை.

ஆன்மாக்கள் முதல்வனை விடயிக்குங்கால் அவற்றது விடயமாகிய அவன் தன்னாலும் உடனின்றுணரப்படுவன, உள்குவாருளகிய பொருளாகலின்

மேலைவெண்பாவிற் கூறிப்போந்த ஐம்புலன்போலவென்று அனுமானவளவை காட்டுவார் உள்குவாருளகிற்றையுள்ளத்தானுற்றுக் காணுரென்றும், உள்குவாருளகிற்றுதல் ஈரிடத்துமொக்குமென்பார் ஏகமாய்நின்றே யிணையடிகளொன்றுணரப் போகமாய்த் தானவிளைந்த பொற்பினனை என விடயித்தற்கட்படுமியல்பும் ஏகமாயுள்ளத்தின்கண்ணானென அறிவு விளங்குதற்கட்படுமியல்பும் எடுத்தோதினார்.

பரபோகமாயென்னாது போகமாயென்றதும் ஒப்புமையிணங்குதற்பொருட்டு. சேற்றுநிலமிதித்துச் சென்றானுக்கு அந்நிலம்போலப் பரபோகவிளைவு செயற்கைப்பொருளாய் நிற்றலின், ஆக்கமுங் காரணமும் அடுத்து வந்தது. இணையடிகளுணருந்தோறும் போகம் மேன்மேல் விளைதல் * "புணர்ந்தாற் புணருந்தொறும்பெரும் போகம்பின்னும் புதிதாய்— மணந்தாழ் புரிகுழ லாளல்குல் போல வளர்கின்றதே." எனவும் அப்பொருண்மேல் வைத்தோதிய திருவாக்கானுமறிக.

தெளிவுபற்றி விளைந்தவென இறந்தகாலத்தாற் கூறினார்.

கண் கண்ணாடியினின்றுந் தன்னை விடயித்தாற்போல முதல்வன் ஆன்மாவுடனின்று தன்னை விடயித்தல் பொருந்தமுடைமையின், ஆன்மாசிரயமென்னுங் குற்றம் இன்றெ

* திருச்சிற்றம்பலக்கோவையார். கூ. உணர்ந்தாரக.

அன்னவற்றிற் கெய்தாதென்றுணர்க. கண்ணாடிக்குள்ளாகத் தோன்றுவதுபோலும் எதிர்விம்பமாவது விம்பமேயன்றி வேறன்றென்பது சிவாகமநூற்றுணிபென்க.

இதனுள் அவனும் அவற்றத் விடயத்தையுணருமென உணர்வேபற்றியோதினரேனும் *"எத்திற ஞானமுள்ளத் தத்திற மிச்சை செய்தி" என்பவாகலின், அவற்றிற்கும் இஃ தொக்கும் ஒக்கவே, பெத்தமுத்தியிரண்டினும் ஆன்மா விட யிக்கப்படும் விடயங்களை முதல்வன் உடனின்று விடயிப்ப னென்பதூஉம் பெத்தத்தின் அவனிவனாய நின்று விடயித்த லின் விடயங்கள் அவனுக்கன்றி இவனுக்காயின முத்தியின் இவனவனாய நின்று விடயித்தலின் அவனொழிந்த விடயங்க ளெல்லாம் இவனுக்கின்றி அவனுக்காயினவென்பதூஉம் இனிதுவிளங்கும் இம்முறைமை நோக்கியன்றே உலகத்துள் ஒன்றனை யாவரும் ஏற்பாருஞ் சிவார்ப்பணமெனக் கருதாத வழிக் குற்றமென்று ஆகமங்களோதியதூஉம், † "யாதொரு தெய்வங்கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே—மாதொரு பாகர் தாம் வருவர்" என்றதூஉம், அவ்வுண்மையறிந்தவழி "எத் தனுவி னின்று மிறைபணியார்க் கில்லைவினை—முற்செய்வினை யுந்தருவான் முன்" எ-ம் "பெற்றசிற் றின்பமே பேரின்ப மாய்." எ-ம் "உடம்புடைய யோகிகடா முற்றசிற் றின்ப—மடங்கத்தம் பேரின்பத் தாக்கி" எ-ம். "காணுங் கரணங்க ளெல்லாம்பே ரின்பமெனப்—பேணு மடியார்" எ-ம் "எல் லாஞ் சிவமாயிருந்ததே" எ-ம் இவ்வாறோதியதூஉமெனக்

முதலதிகரணமுடிந்தது

* சிவஞானசித்தி, முதற்சூத்திரம் ௬௨ சத்திதனஅடி.
† சிவஞானசித்தி, இரண்டாஞ்சூத்திரம், ௨௫

## இரண்டாமதிகரணம்.

இனிப பததியினுன் மறவாதேதத அவனது சேபாதத்தை யணையுமென்றது.

எ-து மே-ள எ-னின். ஏகனுகி நின்றாகரு அவவியை பபறறி அறிவிசசைசெயலசணமூனறும ஆணவ விடயிகரு மாறு யாஙஙனமெனபாலை நோககி நிட்டையினியலபுணாத துரறகெடுததுககொணட இரணடாவகூறறைக கணணழித துரைதது மேறகோடலுதலிறறு இ-ள. சூததிரததுரைத தவாறுபறறி யுரைததுககொளக.

"இதனைதயாயு மறிவுடையனுயன்புசெயய" என வழிநூலாசிரியருமோததலின ஈணடுமறவாது பததியினுலேததவெனச சூததிரபபொருட்கேறப மாறிவைததுரைததுககொளக. ஏததவெனறது உபசாரவழககு

அனபு பததி காதலெனறுறபோலவன இசசை மீதூாதற பொருளவாகலான், அது பாமுததியினுமுணடென்பதுணரா தாா பததியாவது சீவன்முததிநிலைககே செயயபபடுவதொரு சாதனமபோலுமெனமயஙகித தததமககு வேணடியவாறே யுரைபப பரமுததியினகண இசசை நிகழாதவழிச சிவபோகம அநுபவமாதல செலலாமையானும், சீவன்முத்திநிலைககே கூறுவதொன்றுயிற "செமமலர் நோனறுள" என னுஞ சூத்திரதது ஒருஙகுவைததோதவமையும சூததிரம வேறுசெயய வேணடாமையானும, அவவுரை போலியென்றெழிக.

அவன் அன்னியமின்றிச் செயவோர் செய்திப்பயன் விளைதது நிறறலான

எ-து ஏது எ-ன்ின. பத்தியினுன் மறவாதேத்தினும் அவனது சேபாததை யணைதல பாமுததியினன்றி முடியா

தென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று இ-ள். அம்முதல்வன் வேறு நில்லாது செய்வோர் செயவனவற்றை யறிந்து அவ்வச்செயதிககுத தகக பயனை மிகச செய்யலாயின அவ்வபபொழுதே விளைவிததும் அலலுழிக காலாநதாததின் விளைவிததும் உடனாய் நிற்பனாகலான இனிப பத்தியினை மறவாதேததவே அமமுதலவனது சீபாததைதயணையுமென மேறகொணடது எ - று

அருககனோ நிறபினு மலவிருளே காணாக
கிருட்கணணே பாசததாக கீச—னருட்கணணாற்
பாசததை நீககும பகலலாததுந தாமரைபோ
னேசததிற றனனுணாநதாா நோ.

எ-து. உ-ம எ-னின. அரன் கழல் சேறல் உடம்பினீ ஙகிய பினனன்றி உடமபுடையவழியுங கூடுமாயின அது ஞாயிறறினொளிபோல மருங்குள்ளாாககுப் புலனாதலவேணடு மென்பாரை நோககி அது கூடாமையுங கூடுமாறும உவமை முகததானுணர்ததி ஏதுவைவ வலியுறுததுதனுதலிறறு. இ-ள். அருககன் நோ நிறபினும காணாககு அல இருளே. எ-து ஞாயிறு எலலார்க்கும் ஒப்ப நிறபினும அது காட்சியுடையாாகண ணுக்கன்றி அஃதிலலாதார்கணணுககு இரவின் கணணதாகிய இருளேயாம் அதுபோல—ஈசன பாசத்தாாககு இருட்க ணணே. எ-து முதலவன் எங்கணும் ஒப்ப நிறபினும் மலநீ ஙகிய முத்தர்க்கன்றி அஃதுடையாாககு அவன் அமமலத்தின் கணணே யாவன். சீவன்முததரும் ஏனையோாபோல உடலு டைமையிற் பாசத்தாராகலின வேறறுமையின்றாலெனின்,— பகல் அலர்த்துந் தாமரைபோல். எ-து. ஏனைத் தாமரைக ளோடொப்ப ஒருங்கு நிற்பினும் பக்குவமுடைய தாமரை யைக் கூம்புதலை நீக்கி அலர்த்து ஞாயிறுபோல—நேசததில

தன உணர்ந்தார் நேர் அருட்கணணால் பாசத்தை நீக்கும் எ-று ஏனையோாபோல் உடமபோடு நிறபினும பருவமுடையராயப பததியினறறன்னை மறவாதுணர்வாாகரு முதலவன தனது திருவருட்பாாவையாற பாசததை நீககி அறிவையலர் ததும் ஆகலான் உடம்புளவழியும அவா பாசததாரலலா எ-று.

ஆகலான் உடமபுளவழியும அவர் பாசததாரலலரென்பது குறிபபெசசம்

ஏகாரந் தேற்றம்.

திணிநதவிருளையென்பார் அலலிருளெனறா

மலததிறகுக கணணாவது அறியாமை

காணாரும பகலும் ஆகுபெயா.

அருககன் எடுததுககாட்டுவமை.

தன்னையென்னும இரணடனுருபு விகாரததாற றொககது.

ஏழாமவேறறுமைப்பொருட்கண வருநேரெனபது உருபுமயககமாய நானகாவதுணாததிறறு.

நீககுதலும அலாததுதலும் ஏனையிடததுஞ் செனறியைதலின், ஈரிடததுஞ் செயப்படுபொரு ளேறபன வருவிககபபட்டன

மனனு மிருளை மதிதுரநத வாறனபின
மனனு மரனே மலந்துரநது —தனனின
வலிததிருமபைக காநதம வசஞ்செயவான செயதல
சலிபபில விகாரியலன றுன.

எ-து. உ-ம். எ-னின். நேசததிற றன்னுணருஞ் சிவன் முத்தாககுப பாசததை நீககி அறிவை யலர்ததுதல பாமுததியினனறி இலலையென முரணிக்கூறும வாதிகளைநோககிப் பாச

த்தை நீக்கி அறிவை யலர்த்து முறைமை இவ்வாறென்றுணர்த்தி அதனை வலியுறுத்துதனுதலிற்று இ-ள். அன்பின மன்றும் அரனே மன்னும் இருளை மதி தூர்ந்தவாறு மலம் தூர்ந்து எ-து. உயிரைத் தானாகக் கோட்டற்கணுளதாகிய இச்சைமிகுதியான் அவ்வுயிரோடுமே அநாதியே நிலைபெறூஉ முதல்வன் கண்ணினகணிலைபெறும் இருளைப் பிறைமதி நாடோறுஞ் சிறிது சிறிதாக நீக்கியோட்டுமாறுபோல அவ்வுயிரினைச் சண்ணதாகிய மலசத்தியை அவ்வப்பருவந்தோறுஞ் சிறிது சிறிதாகச் சோபானமுறையி னீக்கிப் பற்றறத் தூர்ந்து—காந்தம் இரும்பைத் தன்னின் வலித்து வசஞ்செய்வான் செய்தல் சலிப்பு இல் எ-து காந்தக்கல் இரும்பைத் தன்கணீர்த்துத் தன்வசமாகச் செய்தல்போல மலம் அங்ஙனந் தூர்க்கப்படுந்தோறும் அம்முறையே அச்சத்தி பதிவித்து உயிரைத் தன்கண் வலித்துக்கொண்டு தன்வசமாகச் செய்து வருஞ்செய்கையின் அவனுக்கு ஒருஞான்றுஞ் சலிப்பில்லை—விகாரி அலன் தான். எ-து. அங்ஙனஞ் சலியாது செய்து வருதல் பற்றி விகாரியாவானுமல்லன் காந்தம்போலத் தனது சந்நிதிமாத்திரையிற் செய்யும் அம்முதல்வன் எ-று.

மதியென்றது ஏற்புழிக்கோடலான் ஈண்டு வளர்பக்கத் திங்களின்மேற்று. "அந்த வருணனகிய சாகார மாயலவி—னிந்து வெனவெறித்திட்டு" என்றதும் அது.

மலந் தூர்த்தல் உயிரின் செயலானுவதன்றென்பதுபட நின்றமையின் ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது.

வான் பான் பாக்குக்கள் தொழிற்பெயர் விகுதியுமாமென்பது "கரப்பாக்கறிந்து" என்பதனானுணர்க.

உவமவுருபு விரித்துரைக்க.

சலித்தல் வேசறுதல்.

செய்தற்கண்ணெனை எழனுருபு விரித்துரைகக.

மதிதூரநதவாறு மலநதூரநதென்றவிதனுனே மலநீஙகு வது பின்னென்பார்மதம மறுககப்பட்டவாறு காண்க.

சோபானமுறையி னீக்குதலானன்றே, சததிநிபாதநு சிவபுண்ணியமுதலாயின நாலவேறுவகைப்பட்டதூஉம், அவ றறுளளுமொரோவொன்று நநான்காயப் பதினறுவகைபப டடதூஉம, அவறறுள்ளுமொரோவொன்று பலவேறுவகைப படடு விரிநததூஉமெனக

நசிதஒன்றி னுள்ள நசித்தலா லொன்று
நசிநதிலதே லொன்றாவ திலலை—நசிததுமல
மபபணைநத வுபபி னுளமணைநது சேடமாங
கபபினறு மீசன கழல

எ-து உ-ம எ-னின், உயிருககுக குணமபோல அநா தியாயுள்ள சககசமலம் அவவுயிரின் வேறாய்த் தூரக்கற்பாலத னறாகலின மலக் தூரந்தென்றது அமையாதென்னும் பாடா ணவாதசைவரை நோககி அருததாபததியளவையான் அதனை வலியுறுத்துதனுதலிறறு. இ - ள நசிதது ஒன்றின் உளளம நசிததலால ஒன்று நசிததிலதேல ஒனறு ஆவது இலலை எ-து அரன்கழல் செலலுஙகால அதனை ஆனமாக கெட் டொன்றுமோ கெடாதொன்றுமோவெனக் கடாயினார்க்குக் கெட்டொன்றுமெனின், ஆன்மாககெட்டுப்போகலான ஒன் றமாட்டாது கெடாதொன்றுமெனிற் கெடாதவழி இருபொ ருளாய நிறறலின் ஒன்றுமாறில்லை ஆகலான் அருததாபததிய ளவையானே எ—அப்பு அணைநத உப்பின மலம நசித்து உளம ஈசன் கழல் அணைந்து சேடம் ஆம். எ-து. உப்புத் தனது கணடிப்பு நீஙகி நீரின் ஒன்றுமாறுபோலத் தனது சககசமலங் கெட்டொழிய ஆன்மா அரன்கழலையொன்றி அவ்வரன்கழற

குச் சேடமாம—கப்பு இன்று ஆம். எ-து அங்ஙனஞ் சேடமாகிய ஆன்மாவுக்கு மீளக் கவர்ச்சியில்லை. எ - று.

ஒன்றுதென்னுந் துவவிகுதி விகாரத்தாற் றொக்கது
பின வந்த நசித்தென்பது செயவெனெச்சத் திரிபு

யாதொன்று யாதொன்றனைப் பொருட்டேயாய்த் தனக்கெனச் சுதந்திரமின்றி நிற்கும் அஃததற்குச் சேடமென்பதறிக "அவையுடைமை யாளரா மகற்கு" எனவோதுதலின், ஏனைப் பசுபாசங்கள் முதல்வனுக்குப் பொதுவகையாற் சேடமாமாயினும் இதுபோலச் சிறப்புவகையாற் சேடமாதலின்மையின் இதனை வேறெடுத்தோதினார்.

முத்திநிலை கூறி முடிந்தமையின் இறுதிக்கட் கப்பின்றாமென அவிநுவிருத்தியுங் கூறினார்

பொனவாண்முனை கொணமூவிற புகவொடுங்கிப்போ
யகலத்,தனவாளே யெங்குமாந் தன்மைபோன—மு
னவாண, மலத்தின மறைந்துள்ள மற்றுலகை யுண
ணு, மலந்திரிந்துச செலலும வரத்து.

எ-து உ-ம் எ-னின் நான்காஞ்சூத்திரமுதல இதுவரையிற் கூறிப்போந்த கேவலசகல சுத்தமென்னும மூதிறத்தவத்தைகளினும் ஆன்மாத் தன்னியல்பிற்குக் கேடின்றியே நிற்குமென்பது உவமையின் வைத்துக்காட்டி மேலதனை வலியுறுத்துதனுதலிற்று இ - ள. பொன் வாள முன் கொணமூவில புக்கு. எ-து ஞாயிறு காலைப்போதின் முகிற்படலத்துண் மறைந்து—ஒடுங்கி. எ-து. அம்முகிற்படலம் ஒருபுடை நீங்கியவழித் தன்னொளி ஏகதேசமாய் ஒடுங்கித்தோன்றி—போய் அகல எங்கும தன் வாளே ஆம தன்மைபோல. எ-து. அம்முகிற்படலம் பெருங்காற்றானடியுண்டு முழுவதும விட்டொழிந்தவழி எங்கணுந் தன்னொளியேயாய்த் தோன்றும்

பெற்றிபோல—உள்ளம் முன் வாள் மலத்துள் மறைந்து எ-து. ஆன்மா அநாதியே தன்னறிவு மலத்துள் மறைபட்டு கேவலப்பட்டு—மற்று உலகை உண்ணும் எ-து பின்பு கருவிகளோடு கூடி ஏகதேசமாய அறிவு விளங்கி ஐம்புலன்களை விடயிக்கும்—மலந்து இரிந்து வரத்துச் செல்லும் எ-து. பின்பு அம்மலத்தை முதல்வனருளாற் பற்றறக் களைந்து வியாபகமாய அறிவு விளங்கி அவனது சீபாதத்தையணைந்து சுத்தப்படும் எ-று

தன்மையெனனுர் கொண்மூவிற் புக்குழியுங் கேடின்மையின

ஏகாரந் தேற்றத்தின்கண் வந்தது

பின் வந்த வாள ஆகுபெயர்.

வினைமாற்றின்கண் வந்த மற்றென்னுமிடைச்சொல் மலத்திரிந்தெனபதனோடியைந்தது சாரியையுளவழித் தன்னுருபு நிலையாதல் இலேசாற் கொள்க

உவமைவினைகள் பொருளினுஞ் சென்றியைந்தன

அறிவு மறைந்தும் ஒடுங்கியும் மறைப்பு நீங்கியே எங்குமாய் நிகழ்தன்மாத்திரைக்கே பொன்வாளுவமையெனபார், உலகையுண்ணும் வரத்துச் செல்லுமென வேற்றுமையும் உடன் கூறினார்.

மலந்சித்தயாவது தனது மறைத்தற் சத்தி மடங்கிக் கீழ்ப்படுதன்மாத்திரையே பிறிதன்றெனபதூஉம் உவமையாற் பெறுதும்.

இரண்டாமதிகரணமுடிந்தது.

பதினொராஞ்சூத்திரமுடிந்தது

# பன்னிரண்டாஞ்சூத்திரம்.

செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
வம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமு
மாலயந் தானு மரனெனத் தொழுமே.

எ-து சூ-ம் எ-னின் அசிநதிதனைய நின்ற பதியைச சிந்திதனைகக கணடு வழிபடுமாறுணாததுகணுதலிறறு

எ-து. க-ரை எ-னின் சூததிரககருததுணர்ததுதனுதலிற்று இ-ள் அயராவன்பினரன்கழலசெனற முததாககுச சீவன் முத்திநிலைககண அவவறிவிசசை செயலகள் ஒரோவழிப் புறததுச செலலுஙகால அவை செலலுமிடம இவையெனபதுணர்ததுமுகததான வாககுமனதீதமாயப பதியினைன் மறவாதேதத நின்றமுதலவனை வாககுமனக கோசரமாமபடி தெளியக கணடு வழிபடுமாறுணர்ததுதல இபபன்னிரண டாஞ சூததிரததின் கருதது. எ - று

சூததிரவியையும இனிதுவிளங்கும்.

இசசூததிரததின் பிணடப்பொழிப்பு அயராவன்பினரன்கழலிணைநத சீவன்முததருவான செஙகமலமலாபோல விரிநது விளஙகிய முதல்வனது நோன்றாளை அணையவொட டாது அபர்த்தலைச் செயவிககும அவ்வியலபினையுடைய மும் மலவழுககை ஞானநீராற் கழுவி அஙஙனம அயராவன்பு செயயுமெயஞஞானிகளோடு கலந்து கூடி மலமயககநீஙகுத லான் அன்புமிக்குடைய அவரதுதிருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் முதலவனெனவே கணடு வழிபட்டு வாழுமம எ-று.

எழுவாய் மேலைச்சூத்திரத்தினின்றும் வருவிக்கப்பட்டது சீவன்முத்தனென்பது ஏற்புழிக்கோடலாற் பெறுதும்.

நோன்றாள் வினைத்தொகை நோன்றல் பொறுத்தல. "எடுத்துச் சுமப்பானை" என்றார் புடைநூலாசிரியரும.

கழீஇயென்றது குறிப்புருவகம்.

மாலறநேய மலிந்தவரென்றது அம்மலங்கழீஇ யன்பரோடு மரீஇயினாரெனனும் பொருடந்து சுட்டுப்பெயர் மாத்திரையாய் நின்றது.

நேயமலிதல் கூறவே, வழிபாடும் பெறப்படும்.

தான் அசை.

அமமலங்கழீஇயென்றதனால அறிவு வியாபரிக்குமிடமும், அன்பரொடு மரீஇயென்றதனால இசசை வியாபரிககுமிடமும, தொழுமெனறதனாற செயல் வியாபரிககுமிடமும், பெறப்பட்டன. படவே, சீவன்முத்தர்க்கு அறிவிசசைசெயலகள ஏனைவிடயங்களிற் செல்லாவென்பதூஉம் பெறப்பட்டது இமமூன்றும பிரிப்பின்றி ஓரிடததொருஙகு நிகழ்வனவாகலின, விடயவேற்றுமையின்மையு முணர்க.

தொழுகவென்னாது தொழுமென்றமையின், இஃ்தவினைக் தோரது தன்மையென்பது பெற்றாம். அற்றாகலினன்றே இதனைச சாதனவோத்தின் வையாது ஈண்டு வைத்தாரென்பது இனித் தொழுமென்றதனை இரட்டுறமொழிந்துகொண்டு விகுதிப்பொருள்பட நின்ற முன்னிலையேவலாக்கியு முரைத்துக் கொள்க. என்னை? செலவப்பெருக்கமுடையார்க்கு உணவாகிய ஆன்பால் உடம்புநோயின்றி வளரச்செய்யும் மருந்துமாதல்போல, இவ்வழிபாடு மலவாசனை சிறிதுந் தாககுதலின்றிச் சிவானந்தம் மேன்மேல் வளரச்செய்யுஞ் சாதனமாதலுமுடைமையின், கண்ணழித்துரைபற்றி விதியா

கலைத்துரைத்தலும் அதுபற்றி இதனுள், செம்மலர் நோன்றாள சேரலொட்டா வமமலஙகழீஇயென்றது ஓரதிகரணம, அன்பரொடு மரீஇயென்றது ஓரதிகரணம், மாலறநேய மலிநதவர்வேடமு மாலயநதானு மரனெனததொழுமேயென்றது ஓரதிகரணம்; ஆக மூன்றதிகரணத்தது இசசூத்திரமென்றுணர்க.

## முதலதிகரணம்.

ஈண்டு ஆணவமாயைகான்மியமென்னு மலஙகளைக களைகவென்றது

எ-து. மே-ள். எ-னின். சிவன்முததாக்கு ஒருதலையான் முன்னர்ச் செய்யககடவதிதுவெனச் சூததிரததின முதறகூற்றைக் கண்ணழித்துரைதது மேறகோடனுதலிற்று இ-ள வெ-டை

கன்மமலமே தன் மூலத்தை நோககிக் கான்மியமெனவும்படும். காமியமெனப் பாடமோதி, ஆகாமியங் காமியமெனத் தலைக்குறையென்றுரைப்பாருமுளர்.

அவைதாம் ஞானத்தை யுணர்ததாது அஞ்ஞானத்தையுணர்த்துமாகலான்.

எ-து ஏது. எ-னின். "மலமாயை தன்னொடு வல்வினையின்றே" எனப் பாசநீக்கம் மேலே பெறப்பட்டமையின், மெய்யுணர்ந்து கிட்டைகூடியபின் அவை களையகிடந்தலயாங்ஙனமென்பாரை நோக்கிச சூத்திரத்தின் உடம்பொடுபுணர்த்தோதிய பொருளைத் தெரித்துணர்ததி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று. இ-ள். அம்மூலங்கண்மூன்றும் மெய்யுணர்ந்து கிட்டைகூடினார் மாட்டும யாதானுமோராற்றானுழைந்து தம்மெய்யுணர்வைக் கீழ்ப்படுத்துப் பிறவிக்கு வித்தாகிய

பண்டை விபரீதவுணர்வை மேற்படுத்துவனவாம் ஆகலான் அஃதவர்க்காகாமையின் ஈண்டு ஆணவமாயை கான்மியமென்னு மலங்களைக் களைகவென மேற்கொண்டது எ - று.

உணர்த்துதல் உணர்விற்கேதுவாதல்
ஈண்டு அஞ்ஞானமென்றது விபரீதவுணர்வை

புண்ணிய பாவம் பொருந்துமிக் கான்மியமு
மண்முதன் மாயைகாண் மாயையுங்—கண்ணிய
வஞ்ஞானங் காட்டுமிவ் வாணவமு மிம்மூன்று
மெய்ஞ்ஞானிக் காகா விடு

எ-து உ-ம். எ-னின் அவை அஞ்ஞானத்திற் கேதுவாய் வந்து நுழையுமாறும் அஃது அவர்க்காகாமையுந் தெரித்துணர்த்தி ஏதுவை வலியுறுத்துதனுதலிற்று இ - ள். புண்ணிய பாவம் பொருந்தும் இக்கான்மியமும் எ-து புண்ணிய பாவப்பயனும் புண்ணியபாவகாரணமாயும் பொருந்துகின்ற இக்கன்மமலமும்—மண் முதல் மாயை காண் மாயையும். எ-து. நிலமுதல் மோகினியீறாகக் காணப்படுகின்ற இம்மாயாமலமும்—கண்ணிய அஞ்ஞானங் காட்டும் இவ்வாணவமும். எ-து சுட்டியறிவதாகிய விபரீதவுணர்வைப் பயக்கும் இவ்வாணவமலமும்—இம்மூன்றும் மெய்ஞ்ஞானிக்கு ஆகா விடு. எ-து. இம்மலங்கண் மூன்றும் மெய்யுணர்வுடைய உனக்காகாமையான் அவற்றை விடுத்தொழிவாயாக. எ - று.

எல்லாமலங்களும் பற்றறத்துடைத்து மெய்யுணர்ந்து நிட்டைகூடினார்க்கு உடம்பு நிற்குமளவும் பிராரத்தவினை அவ்வுடம்பைப் பற்றி நிற்றலான், அஃது அவர்க்கு ஒரோவழி வாசனைவயத்தான் இங்குளி வாங்குங் கலம்போல வந்து

தாக்கும், அவ்வழிப், *"பிறசெயாததுபவிப்பதின்று" ஆக லின் அது சாராவாக விருப்பு வெறுப்புக்கள் உளவாம்; அவை உளவாகவே, பரமே பார்த்திருப்பார்க்கு நிலமுதலிய ஏகதேசப்பொருள் காட்சிப்படும், படவே, அவற்றைச் சுட்டியறிவ தாகிய விபரீதவுணர்வு மேற்பட்டு மெய்யுணர்வைக் கீழ்ப்படுத்துப் பிறவிக்கு வித்தாம். இவ்வாறிம்மூன்றும் அறிவற்றம் பார்த்து இம்முறையானே வந்து தலைப்படுமெனக் காட்டிக் கூறுவார் சன்மமாயை யாணவமென்றிம்முறையின் வைத்து அவ்வக்காரிய நிகழ்ச்சிகளையெடுத்தோதிச் சுட்டிக் கூறினார் இகரச்சுட்டு இடையினும் வந்தியையும்.

புண்ணியபாவமென்றது உபசாரம்.

மூன் வந்த மாயை முப்பத்தோராமெண்ணு முறைமைக் கணின்ற தத்துவத்தையுணர்த்தி விடாதவாகுபெயராயத் தன் னையிருக்கவுடைய ஏனைத் தத்துவங்களையுந் தழீஇயிற்று.

காணமாயை செயப்படுபொருளோடு முடிந்த வினைத் தொகை.

இவை சிவபோகப் பெருவாழ்வையிழப்பித்தலின் மெய்ஞ்ஞானிக்கிகாகாவாயின. மேன்மேன் முறுகுவனவாய இவற்றைத் தோன்றும்பொழுதே துடையாக்கால "களைகுநர் கைகொல்லுங் காழ்த்த விடத்து" என்னு முறைமைத்தாய் முடியுமென்பதுபற்றி விடுவென எண்மே வலியுறுத்தப்பட்டது. விடுதலாவது, அவை அம்முறையானிகழ்ந்தவழி இவ்வஞ்ஞானம் ஏகதேசக்காட்சியானுயதெனவும், அக்காட்சி விருப்பு வெறுப்புக்களது தோற்றத்தானுயதெனவும், அத்தோற்றமும் பிராரத்த வினை நுகர்ச்சிக்கட்சென்ற தற்போதத்தாலாயதென

---

*சிவஞானசித்தி, இரண்டாஞ்சூத்திரம். கக. முற்செயல்விதியை.

வும, அறிந்து அங்ஙனஞ் செல்வதாகிய தற்போதம் மூளையாத வாறு பரிகரித்துச் சிவஞானத்துளடங்கிச சுவாநுபவம சுவாநுபூதியாம்படி ஞானநிலையில் உறைத்துநிற்றல்.

மாயைகன்மங்கள் அஞ்ஞானங்காட்டுதல் ஆணவமலச் சார்வானெய் செயறகையென்பதுணர்த்துதறகு, மூன்றற்கும் பொதுவாக எதுவுட் கூறிய போந்தவதனை ஈண்டாணவமாத் திரைக்கே சிறநதெடுததோதினர்.

முதலதிகரணமுடிநதது.

## இரண்டாமதிகரணம்.

இனிச் சிவபத்தர்களோடிணஙகுகவென்றது.

எ-து. மே-ள. எ-னின. அமமலங் கழீஇயினார்க்கு அதனை நிலைபெறுததுவதாய அதனபின்னர்ச செயயபககடவது இதுவெனச சூததிரததின் இரணடாங்கூறறைக் கணணழிததுரைதது மேறகோடனுதலிற்று. இ-ள். வெ-ளிடை.

ஈணடுச் சிவபத்தரென்றது பத்தியினுன் மறவாதேததி முதல்வனது சீபாததததையணைநத சீவன்முததர்மேற்று.

இணங்குதல் நட்புச்செய்தல். சிவபத்தர்களோடிணங்குகவெனவே, எதிர்மறைமுகத்தான் ஏனையரோடிணங்கற்கவென்பதூஉம் பெறப்பட்டது.

அலலாதார் அஞ்ஞானத்தை யுணர்த்துவராகலான்.

எ-து. ஏது. எ-னின், உறவும் பகையுமொழிந்த மெய்ஞ்ஞானிகள் சிலர்மாட்டு நட்புஞ் சிலர்மாட்டு நட்பின்மையுமுடையராதல் சால்பன்றென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று. இ-ன். வெ-ளிடை.

அல்லாதார் அஞ்ஞானத்தையுணர்த்துமாறு "தெய்வமென்பதோர் சித்தமுண்டாகி—முனிவிலாததோர் பொருளது கருதலும்—ஆறு கோடி மாயா சத்திகள்—வேறு வேறு தம் மாயைகள் தொடங்கின—ஆத்தமானார் அயலவர் கூடி—நாத்திகம் பேசி நாத்தழும்பேறினர்—சுற்றமென்னுந் தொல் பசுக் குழாங்கள்—பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்—விரத மேபர மாகவே தியருஞ்—சரதமாகவே சாத்திரங் காட்டினர்—சமயவாதிக டத்த மதங்களே—யமைவ தாக வரற்றிமலைந்தனர்" என்ற ஞெருடகத்துத் திருவாசகத்தானறிக. மும்மலங்களே அஞ்ஞானத்தை யுணர்த்துதல் இலக்கு வாய்த்தமுழி ஏதுவாதன்மாத்திரையே சிவபத்தரல்லாதார் அவ்வாற்றின்றி இலக்குவாயாதவழியும் வாய்க்குமாறு செய்துகொண்டு பலவகையுபாயங்களானுந் தமமோடொப்ப விபரீதவுணர்வைச் செலுத்தியே விடுவாராகலான் அம்மலங்களினுங் கொடியராகிய இவரை அவற்றினுமஞ்சிவிட்டொழிதலே அறிவுடைமைக்குச் சாலபென்பதாம்

மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ்
சிறப்பில்லார் தந்திறத்துச் சேர்வை—யறப்பித்துப்
பத்த ரினத்தாய்ப் பரனுணர்வி னாலுணரு
மெய்த்தவரை மேவா வினை.

எ-து உ-ம் எ-னின் அஞ்ஞானத்தை யுணர்த்துமவரோடு இணங்காமைமாத்திரையேயமையும் சிவபத்தர்களோடிணங்குதல் எற்றுக்கென்பாரை நோக்கி அதனை வலியுறுத்துதனுதலிற்று இ-ள். தம்மை மறப்பித்து மலங்களின் வீழ்க்கும் சிறப்பு இலார் தம் திறத்துச் சேர்வை அற. எ-று. முதல்வன் தோட்டியுங் கண்டும் உபகரித்து நிற்கும் அத்துவிதநிலையை மறவாது கடைப்பிடிக்குந் தமது ஞானக்கண்ணையிழ

ப்பித்துத் தீய நெறிக்கட் கொண்டு சென்று மலங்களாகிய பிறவிக்குழியில் வீழ்வித்தலைத் துயருறுத்துவாராகிய அன்பில்லார் கூற்றிலே தோன்றுதொட்டுப் பயின்று வந்த சோசியறும்படி—பத்தா இனத்துப் பித்து ஆய்ப் பரன் உணர்வினால உணரும் மெய்த்தவரை எ-து. அம்மறவியை மாற்றி ஞானக் கண்ணை யுதவிப் பிறவிக்குழியினின்று மெடுத்து நன்னெறிக்கட் செலுத்தி வாழ்விக்குஞ் சிவபத்தராது கூற்றிலே பேரன்புடையாராய அவ்வன்பு சார்பாக விளங்குஞ் சிவஞானக்கண்ணால அந்நிலை கடைப்பிடித்துணரப் பெற்ற மெய்த்தவராயினாரை—வினை மேவா எ-து எல்லாவநர்த்தங்கட்கும் மூலமாய் வந்து சிறப்பில்லாதந்திறத்துச் சோனவையைப் பயப்பிக்கும் பிராரத்தவினைகள் வாதியா எ-று.

மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ் சிறப்பில்லாரென மேற்சொல்லியபொருளையே அநுவதித்து விரித்தோதினார், அதனெதிர்மறை முகத்தாற் சிவபத்தராது பெருந்தகைமையுணர்ந்துகோடற்பயன்றோக்கி.

மலம் ஆகுபெயர்.

வீழ்க்குமென்றது உருவகங்குறித்து நிற்றலின், அவ்வாறுரைக்கப் பட்டது.

எல்லாவற்றினும் அன்பு சிறந்தமையின் அதனைச் சிறப்பென்றார் பித்துப்போறலின், அன்பு பித்தெனப்பட்டது.

ஏனைத் தவங்களெல்லாம் மெய்யாதலின்றி மலந்தடையாய்ப் போதலின், பரனுணர்வினாலுணருந் தவமொன்றே மெய்த்தவமெனப்பட்டது.

வினை பால்பகாவஃறிணைப்பெயர். சிவபத்தர்மாட்டன்புடையாராய் மனஞ் சொற்செயல்களான் அவர்வழி நிற்பார்க்கு உலகியலுணர்வு மாறிச் சிவாநுபூதியுணர்வே மேம்பட்டு

நிகழும் அது நிகழவே பௌதிக வுடம்பைப்பற்றி வரும் பிராரத்த வினைகள் அவர்க்கு நுகர்ச்சியாதல் செல்லாமையின் வாதிக்கமாட்டா. மாட்டாதொழியவே, அவை பற்றுக்கோடாக நிகழுஞ் சிறப்பில்லாத் தந்திறத்துச் சோர்வை பற்றக் கெடுமென்பார் சோர்வையறப் பித்துப் பத்தரினத்தாய்ப் பரனுணர்வினா லுணரு மெய்த்தவரை மேவா வினைவென்றார் எனவே, வீட்டுணர்வை நிலைபெறுத்துஞ் சிவபத்தர்களோடிணங்கினாலன்றி வினை பற்றுக்கோடாகத் தோன்றுதொட்டுப் பயின்று வந்த சிறப்பில்லாத்திணக்கம் அருமையின், அவ்விணக்கம் ஒருதலையான் வேண்டுமென வலியுறுத்தவாறாயிற்று.

இரண்டாமதிகரணமுடிந்தது

## மூன்றாமதிகரணம்.

இனிப் பத்தரது திருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் பரமேசுரனெனக் கண்டு வழிபடுகவென்றது

எ-து மே-ள். எ-னின் அன்பரொடு மரீஇயினார்க்கு அம்மருவுதலை நிலைபெறுத்துவதாய அதன்பின்னாச் செய்யக்கடவதிதுவெனச் சூத்திரத்தின் மூன்றாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடலுதலிற்று இ-ள் வெ-டை

காண்டல ஐயுறவின்றித் தெளிதல.

காமக்கிழத்தியா வடிவிற் காணப்படும் ஆடை சாந்தணிகலன் முதலாயின காமுகரை வசீகரித்து இன்பஞ்செய்யுமாறு போல மெய்யுணர்வுடையாரைக் காட்சிமாத்திரையின் வசீகரித்து இன்பஞ்செய்தலபற்றித் திருவேடத்தையுஞ் சிவாலயத்தையுமென்றுபசரித்தார். அது *"சேலுங்கயலுந் திளைக்கும்

திருப்பல்லாண்டு.

கணுறரிளங் கொங்கையிற் செங்குஙகுமம்—போலும் பொடி யணி மார்பிலங்குமென்று புணணியர் போறறிசைப்ப" என் னுந் திருவாககானுமறிக. திருவேடததினியலபு "நூய வெ ணணீறு துதைநதபொன் மேனியுந் தாழ்வடமு—நாயகன் சேவடி டீதவரு சிக்தையு ணொநதுருகிப்—பாயவது போல னபி னிர்பொழி கணணும் பதிகச செஞ்சொன்—மேயசெவ வாயு முடையார் புகுநதனர் வீதி யுள்ளே." "சிநதை யிடை யறு வன்புக் திருமேனி தனனி லசைவுங—கந்தை மிசை யாங கருததுங கையுழ வாரப் படையும—வநதிழி கணணீர் மழையும் வடிவிற பொலி திருநீறு—மந்தமி லாததிரு வேடத தரசு மெதிரவந் தணைய" "கணட கவுணியக கன்றுங கருத திற பரவு மெய்க காதற்—றொணடர் திருவேட நேரே தோன்றிய தெனறு தொழுதே" என்றற்றொடககததுத திரு வாககுக்களானுமறிக.

அவன் மற்றிவ்விடஙகளிற பிரகாசமாய் நின்றே அல்லா தவிடத்து அப்பிரகாசமாய நிற்றலான.

எ-து எது எ-னின். மெய்யுணர்வுடையார்க்குப் பகுப் பின்றி எஙகணும் பரமேசுரனெனக் காணடலே பொருதத முடைமையானும் நின்ற திருததாண்டகமுதலியவற்றுள் அவ வாறோதுதலானும் திருவுருத்திரத்துட் பகுப்பின்றி உயிரப் பொருள் உயிரிலிபொருளெல்லாவற்றையுந் தனித்தனியெடுத் தோதி வழிபாடு கூறுதலானும் ஈண்டிவற்றை மாத்திரையே விதந்துகொண்டோதிய தென்னையென்பாரை நோக்கி மேற் கோளைச் சாதித்தனுதலிற்று. இ-ள். அம்முதல்வன் யாங்க ணும் வியாபகமாய் நிற்பினும் இவ்விரணடிடத்துமாத்தி ரையே தயிரினெய்போல விளங்கி நிலைபெற்று அல்லுழியெல் லாம் பாலினெய்போல வெளிப்படாது நிற்றலான் இனிப் பத

தரத திருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் பரமேசுரனெ னக கணடு வழிபடுகவென மேறகொணடது எ - று.

மற்று உரையசை.

எப்பொருட்கணணுமிறைவன் கலந்துளனென்பது தெ ளிந்துகோடறபொருட்டுத திருவுருத்திரததின் அவஸாரோத ப்பட்டதெனக கொளக

தன்னுணர வேண்டித் தனதுருவைத தான்கொடுத
தனனுணரததனனுளிருததலாற—றன்னுணரு [துத
நேசததா தமபா னிகழுந ததிநெயபோற
பாசததார்க கினறும பதி.

எ-து உ-ம். எ-னின். திருவேடத்தின் இறைவன் பிர காசமாய் நிறகுமாறு யாஙஙனமென்பாரை நோககி அதனை வலியுறுத்துதனுதலிறறு. இ - ள் பதி எ-து. அசிநதிதனுய் நின்ற பரம்பொருளே—தன உணர வேணடி. எ-து. உலக த்துள்ளார் தனனை யறிதற்பொருட்டு—தனது உருவைத தான் கொடுத்து எ-து. திருநீறு கணடிகை முதலிய திருவே டமாகிய தனது திருவடிவததைத் தன்னனபாககுக கொடுதத லானும்—தன் உணர. எ-து. அவ்வன்பர் தன்னைச சிவோக மபாவனையால் அறியச் செய்தலானும்—தன்னுள் இருத்த லால். எ-து. அங்ஙனம் ஒருகுறியின்கணின்றுணருமவரைத் தனது வியாபகத்துளளாக இருத்துதலானும—தன உணரும நேசத்தர் தம்பால் ததி நெயபோல நிகழும. எ-து. குறியுமிற ந்துநின்று தன்னை யுள்ளவாறுணருமவர்மாட்டுத தயிரின்கண ணதாகிய நெய்போல விளங்கித தோன்றும்—பாசத்தார்க்கு இன்று ஆம். எ-து. அவ்வியலபில்லாத பாசககட்டுடையார் மாட்டுப்பாலின்கண்ணதாகிய நெய்போல் விளங்காது நிற் கும். எ - று.

செய்தென்பது சொல்லெச்சம்

இருத்தல அலலீறறுப் பிறவினைத்தொழிறபெயர்.

கொடுதது செய்திருத்தலானிகழுமென வினையும்

தன்னுணருநேசததரெனப் பெயரடையானும ஒரேதுக கூறப்பட்டது. தனனையெனனுமிரணடனுருபு விகாரததாற றொக்கது.

உணாதலே மூவிடத்தோதுதலின் இஃதக்ஙனம வேறு வேறுரைககபபட்டது

பாசததார்கசெகன்பது உருபுமயககம்.

இனமை ஈணடு விளஙகாலமகுறிதது நின்றது.

கண்டதொரு மநதிரததாற காட்டததி லங்கிவே
றுணடலபோ னினறங் குளதாமாற—கண்டவுருத
தானதுவா யனறுனன றனதுவாயத தோனறுஞே
தானதுவாயக காணுந தவாககு

எ-து. உ-ம். எ-னின். சங்கமவடிவிற்குக் கூறிப்போநத இயல்பிலலாத தாவரவடிவின் மநதிரசாநநித்தியமுளவழிய னறிப் பிரகாசமாய் நிறறல் பெறப்படாதென்பாரை நோககிச சிவாலயததினிடத்தும இறைவன் பிரகாசமாய நிறறலே (வலி யுறுத்ததனுதலிற்று. இ-ள். காட்டத்தின் அங்கி வேறு உண டல்போல. எ-து விறகிறறீ கடைகோலாற் கடைந்துழி வேறாய் விளங்கும் அலலுழி விளங்குவதன்றுனறுபோல— கணட உருந் தான் அது ஆய் அன்று ஆனுன். எ-து. உயிாக ட்குப் புததிமுததி யளிததறபொருட்டுக காணப்பட்ட தாவா வடிவின்கட் கலப்பினுல், அதுவே தானுய் அதுவன்றி வேறு பொருளுமாமியல்புடைய முதல்வன்—கணடது ஒருமநதிரத் தான் நின்று அங்கு உளது ஆம் ஆல். எ-து. அதுவே தானுகக

காணுதார்கருத் தம்மாலறியப்பட்டதொரு மந்திரசாந்நித்திய மிலவழி அவ்வடிவின்கண் விளங்காது நின்று அஃதுளவழி விளங்கித்தோன்றும்பொருளாம — அது தான் ஆயக் காணும் தவர்க்கு அது தான் ஆயத் தோன்றுமே. எ-து அவ்வாற னறி அவ்வடிவே அவனாகக் காணப்பெறும் உண்மைத்தவமு டையார்க்கு அப்பெற்றியனேயாய் விளங்கித் தோன்றுன் கொல்லோ. எ - று.

காணுதார்கவென்பது சொல்லெச்சம்.

மந்திரத்தாலென்னும் பொருளடைக்கேற்ப உவமையி னும் வருவித்துரைக்கப்பட்டது.

உண்டாதல் ஈண்டு விளங்குதன்மேற்று.

ஆல அசை. ஆனுனென்பது பெயர் ஓகாரம் எதிர்மறை பொருண்மைபற்றி உளதெனவும் அன்றெனவும் கூறினர்.

தானதுவாயன்றானென்னும் பெயரடையான அவர வர் பாவனைக்கேற்ப விளங்குதற்கேதுக்கூறியது. தானதுவா யன்றுதல சங்கமவடிவிற்குமொக்குமேனும், தாவரவடிவின் கண் நிகழுங் கடாவை இதனானறி நீக்கலாகாமையின ஈண்டுக் கூறினர். இஃதீரிடத்து மொக்குமென்பது முன்ன ரப் பெறப்படும்.

மூன்றுமதிகரணமுடிந்தது.

## நான்காமதிகரணம்.

இனி இவ்விடங்களின் வழிபடுகவென்றது.

எ-து. மே-ள். எ-னின். மேற்கூறிப் போந்த மூன்றுஞ் சிவன்முத்தர்க்குத் தாமேயுளவாம் இலக்கணமாகலின் அநு வாதமாக வைத்துணர்த்தற்பாலனவாகிய இவற்றைக் களைக

இணங்குக வழிபடுகவென விதியாக வைத்தோதிய தெற்றுக் கென்பாரை நோக்கி அதனை அவற்றதொழிபாகக்கொண்டு சாதித்தற்கு மேற்கோடனுதலிற்று இ-ள் வெ-ளிடை.

இவ்விடங்களென்றது மேற்கூறிய இரண்டனையும்.

வழிபடுகவென்னும் எடுத்தலோசையான் அநுவதித்து ணர்ந்துவதே யமையுமென்பாரை நோக்கி விதித்தலே வலியுறுத்தவாறு இனம்பற்றிக் களைதல இணங்குதல்கட்கும இஃ தொக்கும.

நரம்பு நாடி முதலானவற்றைத் தானதுவாய் வரும புருடன் அவையாகாவாறு அப்புருடனுமாகலான்.

எ-து. எது. எ-னின். எய்தியதனை விதித்தல் பயனுடைத்தன்றுபோலுமெனபாரை நோக்கி மேற்கோளைச் சாதித்தனுதலிறறு இ-ள. நரம்புமுதலிய தாதுக்களின்கண் வேற்றுமையின்றி அதுவது தானுய வருகின்ற உயிா நாடியோ என்போ நரமபுசிக்கோழையோவெனறு இஙஙனம் பைமறியாயப் பார்ப்பார்க்கு அந்நரம்பு நாடிமுதலியவையாகாது அவற்றின் வேறுமாயினாற்போல உயிர்க்குயிராகிய அம்முதல்வனும் உயிர்ப்பொருள் உயிரிலபொருளெலலாவறறினுங் கலப்பான் அதுவது தானுகியும பொருண்மையான் அல்லனுகியும நிற்பனுகலான் அதுவதுதானுய்க காணுங் காட்சிபறறி யெய்திய வழிபாடு அலலனுய் நிற்றலைக காணுங்காலெய்தாதாகலின் அவ்வழியுமெய்துவிக்கவேண்டுதலான் இனி இவ்விடங்களின வழிபடுகவென விதித்தோதியது. எ - று.

அவையாகாவாறப்புருடனுமெனவே அவ்விடத்தெய்து வித்தல ஒருதலையான் வேண்டுமென்பது தாற்பரியமாயிற்று.

மேற்கோளின் இவ்விடங்களையென்றது இவ்விடங்களினென வேற்றுமைப்படுத்தோதியதூஉம இஃதுணர்த்துகோ

டற்பொருட்டு. இதனானே, எய்தாத தெய்துவிப்பதூஉம், எய்தியதிகந்துபடாமற்காப்பதூஉம், எய்தியதனை யொருமருங்கு மறுப்பதூஉம் என்னும் விதிமூன்றனுள், இஃதெய்தியதிகந்துபடாமற் காத்ததெனபது போந்தவாறுணர்க.

வாறு உவமவுருப்புபட நின்றது.

முதலானவற்றையென்பது உருபுமயக்கம்

அதுவிது வெனற தநுவல்லான் கண்டார்க
கதுவிது வென்றதையு மலலான்—பொதுவதனி
லத்துவித மாத லகண்டமுந் தைவமே
யத்துவிதி யன்பிற ரெழு.

எ-து உ-ம். எ-னின். முதல்வனுக்கு அவ்வியல்பு எலலாப்பொருட்கணணு முண்மையின் அவற்றுள இவவிடங்களின்மாத்திரையே வழிபாடு விதித்ததெனனையென்பாரை நோக்கி அதனை வலியுறுத்துதனுதலிற்று. இ-ள். கண்டார்க்கு. எ-து. முதலவன் உயிர்ப்பொருள் உயிரில்பொருளெல்லாவற்றினும் நிறகுநிலைமை யறியப்பெறறோர்க்கு—அது இது என்றது அலலான். எ-து. கண் அருக்கன்போல் அதுவும் இதுவுமெனப் பக்கிசைத்தோதப்பட்ட பேதநிலைமையனுமல்லனாய்—அது என்றது அல்லான். எ-து. உடலுயிர்போல் அது வேயென்றோதப்பட்ட அபேதநிலைமையனுமல்லனாய்—அது இது என்றதையும் அல்லான். எ-து. குணகுணிபோல் அதுவாகிய இதுவென்று பக்கிசையாமலோதப்பட்ட பேதாபேத நிலைமையனுமல்லனாய்—பொதுவதனில் அத்துவிதம் ஆதல் அகண்டமுந் தைவமே. எ-து. அறிவொளிபோல் அம்மூன்றறகும் பொதுமையான் அத்துவிதநிலைமையனாதலான் எலலாப்பொருளுமு அவன்வடிவேயாமாயினும்—அத்துவிதி அன்பின் தொழு. எ-து. அவற்றுளளும் அன்பு விளையுமிடத்தின்

வழிபடுவாயாக அவவத்துவித சித்தாந்ததைதப் பெற்றுடை யோய். எ - று.

அது விதுவென்றது முன்னையது உம்மைதொகை, பின்னையது இருபெயரொட்டுப் பணபுதொகை.

அல்லானென்பதனை மேலுங் கூட்டி, எனறதென்பதனை அதுவென்றதனோடுங் கூட்டியுரைகக அலலானெனபது முறறெசசககுறிபபு

என்றதை ஐயீற்றுடைக்குற்றுகரம் உம்மை இறந்தது தழீஇயிறறு பொதுவதென்னுமது பகுதிபபொருள விகுதி தைவமென்னுஞ்சொல்லியலபு மேலேயுரைததாம ஏகாரந் தேறறம. ஆயினுமென்பது சொலலெச்சம். அன்பு ஆகுபெ யா எழாவதுவிரிததுரைகக.

“திருக்கோயிலுள்ளிருக்குந் திருமேனி” யினன்றி “எங் குமுருககாணவொண்ணாத பரன் மூலைப்பால விம்மியொழுகு வதுபோல வெளிப்பட்டருளுவ”தாகி அடிபபட்டுவருமன்பு விளையாமையின் ஆண்டுச்செயயும் வழிபாடே அத்துவிதஞா னத்தை நிலைபெறுததற் பயநததென்பார் அத்துவிதமாதலக ணடமுந் தைவமேயென அநுவதிதது அத்துவிதியன்பிறரு மூவென்றார். அத்துவிதியென்னும் அண்மைவிளி பயனுணர நின்ற குறிப்புப்பெயர். இதனானே விதிகளுப் பயன்கூறிய தூஉமாயிற்று. இனி அது இதுவென்பன அருவுருவாகிய திரு மேனியெனககொண்டு அதறகியையவுரைப்பாருமுளா அவா, அன்பினென்றதனை ஏதுபபொருட்கண வரும் ஐந்தனுருபே றற இயற்பெயராக வைத்துரைப்ப.

வினையா லசத்து விளைதலான் ஞானம்
வினைதீரி னன்றி விளையா—வினைதீர

ஞானத்தை நாடித் தொழவே யதுங்கழு
மானத்தா லன்பிற் றொழு

எ-து உ-ம். எ-னின் அசத்தாயுள்ள வன்னபேதங்களை அசத்தென்று கண்டொருவவே ஞானசொரூபம் உளதாய அத்துவிதத்தையுணர்த்துமாகலான் அதன்பொருட்டு வழிபாடு வேறுவிதித்தல் என்னுக்கெனபாரை நோக்கி அதனை வலியுறுத்துதனுதலிற்று இ-ள். வினையால் அசத்து விளைதலான் ஞானம் வினைதீரின் அன்றி விளையா எ-து. உடம்பின்கண்ணதாகிய பிராரத்தவாசனை உயிர்க்குத் தாக்குவதாயுள்ள துணையும் அதனான் வரும் விருப்புவெறுப்புக்களும் அவை பற்றிக் காட்சிப்படும் மண்முதன் மாயைகளும் அவைபற்றி நிகழும் விபரீதவுணர்வுமாகிய அசத்துக்கள் ஒருவியவழியும் வந்துகூடி மேம்படுவனவாகலான் அவ்வளவிற்கெல்லாம் மூலமாகிய பிராரத்தவாசனை பற்றறக் கழிந்தாலன்றி அவ்வசத்தைக் கீழ்ப்படுத்து மெய்யுணர்வு மேம்படுதல் கூடாதாகலின்—வினை தீர ஞானத்தை நாடித் தொழவே அது நிகழும் எ-து அவ்வாசனை பற்றறக் கழிதற்பொருட்டு அம்மெய்யுணர்வுடையாரை நாடி வழிபடவே அவ்வினை நீங்கி மெய்யுணர்வு மேம்பட்டு நிகழும்—ஆனத்தால் அன்பின் தொழு எ-து. ஆகலான் அன்பினால் அவரை வழிபடுவாயாக எ-று.

அசத்தையொருவியவழி உளதாகிய ஞானசொரூபம் நிலைபெறுதல் அவ்வசத்தினது விளைவிற்கு வேராகிய வினைத் தீர்வின்கண்ணதாகலான், அவ்வினை வேரறுத்து மெய்யுணர்வை நிலைபெறுத்துதற்பொருட்டு அதனை அங்ஙனம் நிலைபெறுத்தினார்மாட்டுச் செய்யும் வழிபாடு ஒருதலையான வேண்டப்படுமென்பதாம். அற்றேல், அதன்பொருட்டு ஸ்ரீ பஞ்சாக்கரத்தை விதிப்படியுச்சரிக்கவென்றவதுவே அமையுமெனின்,— வஃதொக்கும். அவ்வுச்சரிப்பும் இவ்வழிபாட்டைப்

றியமையாதென்க. அற்றாகலினன்றே, ஆண்டஞ்செழுத்தாலெனவும், மணமுதனுளமெனவும், அகதது வழிபாட்டை உடன் கூறியதூஉமென்பது.

விளையாதென்னுந் துவ்விகுதி விகாரத்தாறறொக்கது.
பின்வந்த ஞானம் ஆகுபெயர்
ஆன்தனுலென்பது ஆனத்தாலென மரீஇயிற்று.

தன்னை யறிவிதததுத தான்றனச் செய்தானைப்
பினனை மறததல பிழையலது—முன்னவனே
தானேதா னசசெயதுந தைவமெனறுந தைவமே
மானே தொழுகை வலி.

எ-து உ-ம். எ-னின் அங்ஙனம் பயன்பற்றி விதிக்கப்படும் வழிபாடு வேள்வி முதலியனபோலப் பயன வேண்டாமையானுதல பின்னாச செய்து பெறுதுமென்றுதல் ஒரோவழியொழியவும் படுங்கொலலோவென்பாரை நோககி அது செய்யாவழிப்படுங் குறறமும் செய்தல் கடமையாமாறும் உணர்த்தி விதிததலை வலியுறுத்துதனுதலிறறு இ-ள். தன்னை அறிவிததுத் தான் தான் ஆச செயதானைப் பின்னை மறத்தல பிழை அலது. எ-து தன்னுண்மையை அறியமாட்டாது குருடாய்க கிடந்த உயிர்க்குப் பலவாறறானும் அதனைத் தெரித்துணர்தநி எத்தனையுமெளிய அவ்வுயிரை எததனையுமரிய தானுமவண்ணஞ் செயதளிதத பெரியதோருதவியை அதன்பின்னர்மறககுமாயின் அஃது இதறகுமுன் அறியாமையான் மறந்த குற்றம்போலத் தீர்திறனுடையதோர் குற்றமன்றாகலானும்—முன்னவனே தானே தானச் செய்தும்தைவம் என்றும் தைவமே மானே தொழுகை வலி. எ-து. முதல்வன் அங்ஙனர் தான்றானேயாகச் செய்தலும் இதுகாறுந் தனக்குச் சுத

ந்திரமின்றி முதல்வனது உபகாரத்தையின்றியமையாதாய அடிமையாகிய உயிர் எக்காலத்தும் அவ்வாறடிமையேயாமா கலானும் தான்றுணைச் செய்தளித்த அப்பெரியோனை வழிபடு தலே அவ்வுயிர்க்கு வலியாவது எ - று

தமது முதல்வனே குருவாகலிற் றன்றுணைச் செய்தானை யென்றும், முன்னை மறந்த குற்றம் அறியாது நிகழ்ந்ததாக லிற் கழுவப்படும் இஃததுபோறக் கழுவப்படுவ தன்றென்பார் பின்னை மறத்தல் பிழையலதென்றுங் கூறினார். பின்னை மறந் தலென்பதனால் முன்னை மறத்தல் பெறப்பட்டது. "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்னுங் கருத்து நோக்கிக் கூறியதூஉமாம்.

அலதுமெனப் பாடமோதி இது பிழையாதலன்றியுமெ ன்றுரைப்பாருமுளர்.

ஏகாரம் முன்னையது அசைநிலை, பின்னையன தேற்றம்.

செய்தாலென்பது செய்தெனத் திரிந்தது.

உம்மை சிறப்பின்கண் வந்தது.

தான்றுணைச்செய்தல் எதனையெதனைப் பற்றினும் அதுவ துவாமுயிர் தன்னையறிந்தவழி எண்குணங்களானிறைந்து தன்வண்ணமாகச்செய்தல் அங்ஙனஞ்செய்தவழியும் *"உயி ர்தானுஞ் சிவானுபவ மொன்றினுக்கே யுரித்து" என்பார் தைவமென்றுந் தைவமேயென்றார் தைவமென்னுஞ் சொல லியல்பு மேலே யுரைத்தாம்.

மானையென்னும் இரண்டனுருபு விகாரத்தாற் றொக் கது. மானென்பது வடசொற்றிரிபு சுட்டு வருவிக்க.

வலிதருவதனை வலியென்றுபசரிக்கார்.

---

*சிவஞானசித்தி, பதி[illegible]ஞ்சூத்திரம். ௧௦. செம்[illegible].

இவ்வுதாரணங்களைமூன்றனும், வழிபாட்டிற்கும இடத்து நிகழ்பொருண்மாத்திரையேயன்றி இடவிசேடமும பெறல்வேண்டுமென அதனை வலியுறுத்துமுகத்தானே, முறையே சிவலிங்கத்தையுஞ் சிவபத்தாவேடத்தையுஞ் சிவதேசிகர்களையும அறிந்து வழிபடுமாறு கூறப்பட்டது.

சிவமென்னு மந்தர சிந்தைநேர் நோக்கப
பவமின்றாங் கண்வா சகத்திற—சிவமுண்டா
மொன்று மிரண்டு மலத்தாக்கிங் கொண்குருவா
லின்றிந்நூன மும்மை மலர்க்கு.

எ-து. செ-ள் எ-னின். இங்ஙனஞ் சிவாகமத்துண் ஞானபாதப்பொருளெல்லாவற்றையும பொது உண்மையென்றிருவகைப்படுத்துப் பிரமாணவியல இலக்கணவியல் சாதனவியல பயனியலென நானகியலாக வைத்துப் போதிப்பதாகிய இச்சிவஞானபோதநூலைக் கோடற்குரிய அதிகாரிகளாவார் இவரென்பதுணர்த்துதனுதலிற்று இ-ள். சிவம் என்னும அந்த தர எ-து. தான்றானாச்செய்தவாற்றாற் சீவனென்னு மியல்பினீங்கிச் சிவமெனவேறதப்படும வேதாந்தத் தெளிவாகிய சித்தாந்தத்தையுடைய மாணவகனே, ஒன்றும் இரண்டும மலத்தாக்கு எ-து. ஒன்றுமிரண்டுமாய மலங்களையுடைய விஞ்ஞானகலர்க்கும் பிரளயாகலர்க்கும்—சிந்தை நேர் நோக்கக கண வாசகத்தின பவம் இன்று ஆம். எ-து. முறையே அறிவின்கணின்று அருட்பார்வையானோக்குதலானுந் தேவகுருவாய் முன்னின்று செய்யுந் திருநோக்கம் பரிசம் வாசகமெனப்படுந் தீக்கையானும் பிறவிக்கேதுவாய பசுத்துவநீங்கிச் சிவத்துவம் விளங்குமாகலான்—மும்மை மலர்க்கு இங்கு ஒண்குருவால இன்று இந்நூல் எ-து—அவரின் வேறாகிய மும்மலமுடையவாக்கே ஈரித்து இவ்வுலகத்தநுபவமு

டைய தேசிகராற் போதிக்கப்படுமெ இச்சிவஞானபோத நூல எ - று

அநதம வேதாநதம, அந்தத்தாகு சித்தாந்தமாகலின், அத ஊைப் பெறறுரது பெருமைகூறுவாா சிவமெனனுமநததரவெ ணறுர்

என்னுமென்புழிப் படுசொற றெக்குநின்றது இநதை அறிவு கணணுருபு விரிததுரைகக

நேர் நோககுதல முனனை மருட்பார்வையை மாறறி அரு ட்பாாவையாலுேககுதல நோகக நோககுதலாளென்க

கண வாசகஙகளைக கூறவே இனம பறறிய பரிசமும் உடன் கொளளப்படும்

பவம் ஆகுபெயா.

இநநூல அநுபவமுடைய தேசிகனலன்றி விளஙகாதெ ன்பார் ஒணகுருவாலென்றுர்.

போதிககப்படுமெனபது அவாயநிலையான் வநதது

இனறிநநூலென்பது இநநூலெனனும பொருட்டு இக காலததுரைககபபடு நூலெனினுமமையும. அது "தானுரை ததாளின்று" என வருகின்ற வெணபாவாற கூறியவாறறுணு மறிக.

மும்மையென்றது ஈணடெணணின் மேனின்றது, "தெரி மாண் டமிழமும்மைத தென்னம பொருப்பன" எனபுழி ப்போல

நான்காமதிகரணமுடிநதது
பன்னிரணடாஞ்சூததிரமுடிநதது.

பயனியல முறறிறறு

சிறப்பியல்பு முற்றுப்பெற்றது.

## நூலாசிரியர் பெயர்.

எநதை சனற்குமர னேநதித தொழவியலபாய
நநதி யுரைததருளு ஞானநூல்—சிநதைசெயது
தானுரைததான் மெயகண்டான ருரணியோதாமுண
வேதுஇருட் டாநததது லினறு.

சிவஞானபோதச் சிற்றுரை

முற்றுப்பெற்றது.

# முதற்குறிப்பகராதி.


பக்கம்

அகாரவுகார ௯0
அசததறி ௧௧௯
அஞசெழு ௧௮௮
அதுவிது ௨௪௫
அதுவென் ௧௩0
அநதககர ௮௨
அரகொடு ௩௮
அரவுதன ௫௨
அருககனேர் ௨௨௫
அருவுருவ ௧௪௩
அருளுணடா ௧௧௩
அவனவளது ௧௧
அவனேதா ௧௯௪
அலையே ௩௧
அவ்விளையை ௬௩
அவவுடலி ௭0
அறிந்துமறி ௭௬
அறியவிர ௧௨௮
அறிவிகக ௧௬0
அன்றன் ௬௩
அன்னியமிலா ௧௩௭

—

இங்குளி ௨[illegible]
இகலவிர் ௧௮௯
இலயித்த ௧௯
இலாடத்தே ௧0௧

பக்கம்.

இலலாமூலை ௧௬௧

—

உணருரு ௧௧௪
உணாபவ ௧௨௬
உளதில ௬0
உளளதே ௪௨

—

ஊனககண ௧௭௨

—

எஙகுமுள ௫௫
எணணிய ௧௨௪
எணணில ௯௨
எநதைசன ௨௫௨
எவவுருவு ௧௬௮
எனதேன் ௬௬

—

ஏகமாய ௨௨௧

—

ஐந்தையு ௨௨0
ஐம்புல ௧௪௯
ஐம்பொறியை ௧0௭
ஐம்பொறியின ௧௰0

—

ஒன்றணையா ௯௯
ஒன்றலா ௨௭
ஒன்றறி ௬௭

பக்கம்

ஒன்றெனற ௩௬

—

கடமுறு ௩௯
கணடதை ௧௮௩
கணடதொரு ௨௪௨
கணடநன ௪௯
கணடறியு ௭௩
கலையாதி ௭௯
கலலாணிழ ௬

—

காட்டிய ௧௭௭
காணுஙகண ௨௧௧

—

சதசதநா ௨௧0

—

சார்ந்தாரை ௨0௪

—

சிந்திததாய ௮௯
சிவமென்னு ௨௫0
சிறைசெய்ய ௧௬௭

—

சுட்டியுணர் ௧௮௨

—

செம்மலர் ௨௩௧

—

தம்மையுணா ௭[illegible]
தவஞசெய் ௧௫௩